aj Foundation C

புதுச்சேரி மாநில வரலாறு. சு.தில்லைவனம்

n. Gurukul Kan

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதுச்சேரி மாநில வரலாறு

சு.தில்லைவனம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

UNION TERRITORY OF PONDICHERRY



Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri
CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7478



	AREA IN SQ.KM.	POPULATION 1981 CS
PONDICHERRY	293	4,44,417
KARAIKAL	160	1,20,01[illegible]
MAHE	9	28,4[illegible]
YANAM	30	11,63[illegible]
TOTAL	492	6,04,47[illegible]

Forwarded free of cost and with the compliments of the Dept. of Education Govt. of India New Delhi

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதுச்சேரி மாநில வரலாறு

(தமிழக அரசு பரிசுபெற்ற நூல்)

DONATION

சு. தில்லைவனம்
தமிழ்த்துறை
தாகூர் கலைக் கல்லூரி
புதுச்சேரி-605 008

007478

Forwarded free of cost and with the compliments of the Dept. of Education Govt. of India New Delhi

நன்மொழிப் பதிப்பகம்
53, அரவிந்தர் வீதி,
புதுச்சேரி—605 001

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	:	PUDHUCCHĒRRY MĀNILA VARALĀRU
Author	:	S. THILLAIVANAM
Puplisher	:	NANMOZHI PADHIPPAGAM 53, Aravindar Street, Pondicherry-1.
Copy right	:	T. Subramaniya Siva
Language	:	Tamil
Edition	:	Second
Date of Publication	:	February, 1990
Paper Used	:	11.6 kg. (TNPL)
Size of the book	:	Crown 1 × 8
Printing Type used	:	10 Point.
No. of Pages	:	276
No. of Copies	:	1200
Price	:	Rs. **28-00** (Twenty eight)
Printer	:	Sabanayagam Printers Chidambaram
Artist	.	Jayaprahash (Meera)
Subject	:	History

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அணிந்துரை

பி. சிரில் அங்தோனி, எம் ஏ.,
முன்னாள் துணைச்செயலர் - கல்வித்துறை,
இந்தியக் கலை மற்றும் பண்பாட்டிற்கான தேசிய
அறக்கட்டளையின் புதுவை மைய அமைப்பாளர்,
(INTACH - CONVENOR)
புதுச்சேரி – 12.

இந்தியத் துணைக் கண்டத்தின் (32,68,090 ச.கி.மீ. பரப்பளவு கொண்டது) ஓர் அங்கமாக விளங்குகின்ற புதுச்சேரி (492 ச.கி.மீ. அளவினதாய) மாநிலம் புதுவை, காரைக்கால், மாகி, ஏனம் ஆகிய நான்கு பகுதிகளை உள்ளடக்கியதாகும். இவற்றுள் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகள் தமிழகத்தின் எல்லைக்குள்ளும் மாகி, ஏனம் பகுதிகள் முறையே கேரளம், ஆந்திரம் ஆகியவற்றின் எல்லைகட்குள்ளும் இடம் பெற்றுள்ளன. 1981ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி ஆறுலட்சம் மக்கள் தொகை கொண்ட, பல நூறு கிலோ மீட்டர்களுக்கப்பால் சிதறுண்டவாறு கிடக்கும் இந்நான்கு பகுதிகளின் வரலாற்றினை ஒருங்கிணைத்து எழுதுவது என்பது எளிதன்று.

வரலாற்று விற்பன்னர்களின் ஆற்றலையே சோதிக்கின்ற இப்பணியில் தாகூர் கலைக் கல்லூரி. தமிழ்த் துறையில் பணியாற்றுகின்ற இளவல் திரு. சு. தில்லைவனம் அவர்களின் முயற்சியால் முகிழ்ந்துள்ள ‘புதுச்சேரி மாநில வரலாறு’ எனும் இந்நூல் இதுகாறும் தமிழில் வெளிவந்துள்ள (புதுவை பற்றிய) வரலாற்று நூல்களில் முதன்மையானதும், பாராட்டுக்குரியதும் ஆகும்.

தொன்றுதொட்டே பரிணாம வளர்ச்சியடைந்து வருகின்ற மனித இனம் கூடி வாழத் துவங்கி பற்பல சமூகங்களாகப் பிளவுபட்டுள்ளன. இந்நிலையில் ஒருமைப் பண்புகளைப் புறக்கணித்து வேற்றுமைகளை மிகைப்படுத்தி, மனிதகுலத்தைத் துண்டாடுகின்ற போக்குகளை வரலாற்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எழுத்தாளர்கள் நியாயப்படுத்துகின்ற நிலை ஒரு பக்கம். மனித மதி நுட்பத்தால் உருவான அறிவியல் சாதனைகள் கடலாலும், மலைகளாலும், எல்லைகளாலும், சமயத்தாலும், வலிமைபெற்ற ஆட்சியாளர்களாலும், மொழியாலும், இனத்தாலும், ஏற்றத்தாழ்வுகளாலும் பிளவுற்றிருக்கின்ற மனித இனத்தை மீண்டும் ஒன்றிணைக்கத் துணைபுரிந்து வருகின்ற நிலை மற்றொரு பக்கம்.

இவ்வெதிரிடையான சூழலில் வரலாற்று அறிஞர்கள் இதுகாறும் கடைப்பிடித்து வந்துள்ள நெறிமுறைகளை மறு பரிசீலனை செய்துகொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளனர். இதன் விளைவாகவே மனிதகுல வரலாறுகளை எழுதுகின்ற பல முயற்சிகள் இந்நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதே கால கட்டத்தில் மனித குலத்திடையே தோன்றிய எத்தனையோ வகையான ஆதிக்கங்களின் பிடியிலிருந்து விடுபட்ட பலங்குன்றிய பிரிவினர் தங்கள் தனித்தன்மைகளைத் தீவிரமாக உணரத் தலைப்பட்டனர். இதற்குப் புதிதாக சுதந்திரம் அடைந்துள்ள நாடுகளின் வரலாற்று எழுத்தாளர்களும் துணை புரிந்துள்ளனர். நாட்டுப்பற்றினை வளர்க்கின்ற – உறுதிப் படுத்துகின்ற வரலாற்று நூல்கள் இன்றைக்கு மிகுதியாக எழுதப்பட்டாலும் மனிதநேயத்தை வளர்க்கின்ற வரலாற்று நூல்கள் தமிழில் மிகவும் அரிதாகவே வெளிவந்துள்ளன.

வரலாறு எழுதும் முயற்சியானது ஒரு நகரின் மத்தியிலுள்ள பல அடுக்குகள் கொண்ட கோபுரத்தின் உச்சிக்குச் சென்று அந்நகரைப் பார்வையிடும் பணியோடு ஒப்பிடப் படுகின்றது. கோபுரத்தின் தரைமட்டத்திலுள்ள வாசலில் நுழைவதற்கு முன்னர் கோபுரத்தைச் சுற்றியுள்ள சிறிய, பெரிய வீடுகள், மாளிகைகள், குறுக்கு நெடுக்காகச் செல்லும் தெருக்கள், செழுமையும் வறட்சியும் கொண்ட தோப்புகள், வயல்கள், நாற்றமெடுக்கும் சாக்கடை வாய்க்கால்கள், பள்ளிகள், கோவில்கள் அனைத்தும் முழுமையாகப் பார்வையில் புலப்படுவதில்லை. வாசலைக் கடந்து உள்ளே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சென்றதும் இவையனைத்தும் பார்வையிலிருந்து மறைந்து விடுகின்றன. அதே போன்று குறுகிய நோக்குகள் அனைத்தும் வரலாற்று அறிஞனின் பார்வையிலிருந்து மறைந்துவிட வேண்டும்; அல்லது அந்த நினைவுகள் அகற்றப்பட வேண்டும்.

ஒவ்வொரு அடுக்காக மேலே செல்கையில் சாக்கடையின் நாற்றம் குறைந்து கொண்டே போகின்றது. மக்களின் சண்டை சச்சரவுகள், வாகனங்களின் பேரிரைச்சல்கள் போன்றன குறைந்து கொண்டே வருகின்றன. கோபுரத்தின் உச்சியில் சென்று மீண்டும் கீழே பார்வையைச் செலுத்திடும் போது நகரம் முழுமையும் மற்றொரு பாங்காக பன்மடங்கு ஒழுங்குடனும் அமைதியுடனும் காட்சியளிக்கின்றது. அதே சமயம் அந்நகரிலிருந்து முற்றிலும் விடுபட்ட நிலையில் வேறொரு கோளிலிருந்து பார்ப்பது போன்ற ஓர் உணர்வு மேலிடுகின்றது. இதைப் போலவே வரலாற்று அறிஞனும் வேறொரு கோளில் இருந்து வந்து அந்த நகரைப் பற்றி எழுதப் போவதாகப் பாவித்துக் கொண்டு அந்நகரில் வசிக்கும் மக்களின் சமயம், மொழி, நிறம், இனம் ஆகியவற்றிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு தனது எழுத்துப் பணியினை மேற்கொள்ள வேண்டும்.

இத்தகைய நிலையிலிருந்து எழுதப்படுகின்ற வரலாறுகள் தான் நாடு, சமய, மொழி, இன, நிற வேற்றுமைகளைக் கடந்த நிலையில் மனித நேயத்தை வளர்ப்பவையாக அமைய முடியும். இத்தகைய வரலாற்று நூல்களே இன்று மனிதகுலத்திற்கும் இளைய தலைமுறையினருக்கும் தேவை. அப்போதுதான் உற்றார் உறவினர்களுக்காகக் கண்ணீர் உகுக்கும் மனிதன் அண்மையிலுள்ள இலங்கை வாழ் மக்களுக்காகவும் நெடுந்தொலைவில் உள்ள நிக்கரகுவா, எத்தியோப்பியா, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் அவதிக்குள்ளாகியுள்ள மக்களுக்காகவும் இரக்கம்கொள்ள முடியும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனம் பகுதிகளில் வாழ்ந்துவரும் மக்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri
அனைவரும் உள்நாட்டு மக்கள் மட்டுமல்லர். உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்துள்ள, பல்வேறுபட்ட சாதி சமயங்களைச் சேர்ந்த, பலதரப்பட்ட மொழி பேசுகின்ற, பலரின் ஆட்சி ஆக்கிரமிப்புக்குள்ளான மக்களும் இங்கு வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு காலங் காலமாகவே பல்வேறு சமயத்தவரும், இனத்தவரும், மொழியினரும் இங்குவந்து கலந்துறவாடி ஒன்றாக வாழ்ந்து வருகின்றனர்.

உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து யவனர்களும், வியட்நாமியர்களும், அராபியர்களும் ஆர்மீனியர்களும் இங்கு வந்து வணிகம் செய்துள்ளனர். இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும், நேபாளம், திபெத் ஆகிய அண்டை நாடுகளிலிருந்தும் மக்கள் இடம் பெயர்ந்து இங்கே வந்துள்ளனர். எனவே, ஒருலக சமுதாயம் உருவாவதற்கான வித்துக்கள் இந்த பூமியில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே விதைக்கப்பட்டு விட்டன.

புதுச்சேரி மாநிலம் அளவிலே சிறியதாயினும் அதன் வரலாற்றால் உலகில் ஓர் உன்னத இடத்தைப் பெற்று உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. மேலே கூறப்பட்டுள்ள வரலாற்றுக் கருத்துக்கள் யாவும் 'புதுச்சேரி மாநில வரலாறு' எனும் இந்நூலில் உறுதி செய்யப் பெற்றுள்ளன. மேலும் பல வரலாற்று உண்மைகள் எழுத்து வடிவமாவதற்கு இந்நூல் ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது. இந்நூலுக்குத் தமிழக அரசின் பரிசு கிடைக்கப் பெற்றுள்ளமை வரலாற்றின்பால் விருப்பமுள்ளவர்களுக்கும், இந்நூலைப் படிப்பவர்கட்கும் மன நிறைவு அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

வரலாற்று அறிவினை 'உண்மையைத் தேடும் பணி' யாகவே கொள்ள வேண்டும். இப்பணியில் ஈடுபட்டிருக்கும் திரு சு. தில்லைவனம் அவர்கள் கோபுரத்தின் உச்சிக்குச் செல்லும் முயற்சியினை விடாது தொடர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

19—12—90,
புதுச்சேரி–12.

இவண்,
பி. சிரில் அந்தோனி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முகவுரை

புரட்சியாளர்களுக்குப் புகலிடம்தந்து, புதுமைகள் பல முகிழ்த்திடச் செய்யும் புண்ணிய பூமி புதுச்சேரி! இந்தியாவின் செல்லக் குழந்தையாய்த் திகழ்ந்து வரும் புதுச்சேரி, பிரஞ்சுப் பண்பாட்டின் நிலைக்களனாகவும் விளங்கி வருகின்றது. புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனம் ஆகிய நான்கு பகுதிகளை உள்ளடக்கியது புதுவை மாநிலம் ஆகும். சந்திரநாகூர் மேற்கு வங்க மாநிலத்துடன் இணைந்து விட்டதால் இந்நூலில் அதன் வரலாறு விடப்பட்டு விட்டது. புதுவை மாநில வரலாறு முழுமையும் புகலும் நூல் இதுவரை வெளி வரவில்லை. அக்குறையைப் போக்கும் வகையில் இந்நூல் எழுதப் பெற்றுள்ளது. தெளிவு கருதி, சுருங்கச் சொல்லி விளக்கவைக்குந் திறனே இந்நூலின் சிறப்புக் கூறாகும்.

இந்நூலுக்குத் தமிழக அரசு பரிசு வழங்கிச் சிறப்பித்தமைக்கு நன்றி. இரண்டாம் பதிப்பாக வெளிவரும் இவ்வரலாற்று நூலில் கூடுதலாகச் சில பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. நூலை மேலும் பொலிவு பெறச் செய்யும் வகையில் அணிந்துரை வழங்கியருளிய வரலாற்று வித்தகர் பி. சிரில் அந்தோனி அவர்கட்கு நெஞ்சார்ந்த நன்றி. புதுவை மாநிலக் கல்லூரிகளில் வரலாற்றுப் பாடம் பயிலும் மாணவர்கட்குப் பார்வை நூலாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளமை இந்நூலின் சிறப்புக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். நூலைச் சிறப்புற அச்சிட்டு உதவிய சிதம்பரம் சபாநாயகம் அச்சகத்தாருக்கும் நன்றி. மேலும் நூலாக்கத்திற்கு உதவிய அனைத்து நண்பர்கட்கும் அன்பான நன்றி!

23—2—'90, அன்புடன்,
பாகூர். சு. தில்லைவனம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூற் பொருள்

1. புதுச்சேரி மாநிலம் ... 9
2. பொதுகேயும் புதுவையும் ... 12
3. பிரஞ்சியருக்கு முற்பட்ட புதுச்சேரி ... 20
4. பிரஞ்சியர் காலத்தில் புதுச்சேரி ... 55
5. விடுதலைக்குப்பின் புதுச்சேரி ... 132
6. காரைக்கால் வரலாறு ... 164
7. 'மய்யழி' என்னும் மாகி வரலாறு ... 217
8. ஏனம் வரலாறு ... 240
9. பின்னிணைப்புகள் ... 266

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. புதுச்சேரி மாநிலம்

தென்னிந்தியாவின் சோழமண்டலக் கரையில் அமைந்துள்ள புதுச்சேரி, காரைக்கால், ஏனம் பகுதிகளும், மலபார் கடற்கரையில் அமைந்துள்ள மாகியும் புதுவை மாநிலத்தைச் சேர்ந்தனவாகும். புதுச்சேரி, காரைக்கால் பகுதிகள் தமிழ்நாட்டிலும், மாகி கேரளாவிலும், ஏனம் ஆந்திர மாநிலத்திலும் அமைந்துள்ளன. இவை ஒன்றோடொன்று தொடர்பற்று இருப்பினும், பிரஞ்சியராட்சிக்கு உட்பட்டிருந்த காரணத்தால், இப் பகுதிகள் அரசியல் அடிப்படையில் இணைக்கப்பட்டு, 'புதுவை மாநிலம்' எனப் பெயரிடப்பட்டது. இந்திய யூனியன் பிரதேசங்களுள் ஒன்றாகத் திகழும் புதுவை மாநிலத்தின் தலைநகரம் புதுச்சேரி நகரமாகும்.

எல்லையும் பரப்பளவும்

புதுச்சேரி: கிழக்கில் வங்காள விரிகுடாவும், மேற்கு, தெற்கு, வடக்கு எல்லையாகத் தென்னார்க்காடு மாவட்டமும் அமைந்துள்ளன. இது, 11°—45'=12° வடக்கு அட்சரேகையிலும், 79°—37'=79°—50' கிழக்கு தீர்க்க ரேகையிலும் இடம் கொண்டுள்ளது. புதுச்சேரியின் பரப்பளவு 293 ச.கி.மீ. ஆகும். இதன் எல்லைக்குள் 213 கிராமங்கள் அடங்கியுள்ளன. 1981-ஆம் ஆண்டுக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 4,44,417 பேர்களாகும். கோடையில் வெப்பநிலை 17° குறைந்த பட்ச அளவாகவும் 38° உயர்ந்த பட்ச அளவாகவும் இருக்கும். ஓர் ஆண்டின் மழை அளவு 1174 மி.மீ. ஆகும்.

காரைக்கால்: தஞ்சை மாவட்டத்தின் ஒரு பகுதியாகத் திகழ்ந்த காரைக்கால், கிழக்கில் வங்காளவிரிகுடாவையும், மேற்கு, தெற்கு, வடக்குப் பகுதிகளில் தஞ்சை மாவட்டத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளன. 160 ச. கி. மீ. பரப்பளவுள்ள இப்பகுதியில் மொத்தம் 117 கிராமங்கள் அடங்கியுள்ளள. புதுச்சேரியைப் போலவே, சமமான பருவநிலைக் காலத்தைக் கொண்டுள்ளது. 1981-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 1,20,010 பேர்களாகும். ஓராண்டின் மழை அளவு 1143 மி.மீ. ஆகும்.

மாகி: வடக்கில் மூலக்கடவார் ஆறும், மேற்கில் அரபிக்கடலும், கிழக்கு, தெற்குத் திசைகளில் மலைகளும் எல்லைகளாக அமைந்துள்ளன. 9 ச. கி. மீ. பரப்பளவுள்ள இப்பகுதியில் மூன்று கிராமங்கள் உள்ளன. கோடையில் வெப்பம் குறைந்த அளவு 19° ஆகவும், அதிக அளவு 35° ஆகவும் உள்ளது. ஆண்டின் மழை அளவு 3743 மி.மீ. ஆகும். 1981-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 28,413 பேர்களாகும்.

ஏனம்: தெற்கில் கோரிங்கா நதியும், வடக்கிலும், கிழக்கிலும் கோதாவரி நதியும், மேற்கில் ஆந்திர மாநிலமும் எல்லைகளாக உள்ளன. சுமார் 30 ச. கி. மீ. பரப்பளவுள்ள இப்பகுதியில் மொத்தம் எட்டு கிராமங்கள் அடங்கியுள்ளன. வெப்பநிலை 15° குறையாமலும், 40° மிகாமலும் இருக்கும். ஆண்டின் மழை அளவு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1249 மி.மீ. ஆகும். 1981-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின் படி மக்கள் தொகை 11,631 பேர்களாகும்.

நகராட்சி - கொம்யூன்கள்

புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனம் ஆகிய நான்கும் நகராட்சிகளாகவும், பாகூர், அரியாங்குப்பம், ஒழுகரை, வில்லியனூர், மண்ணாடிப் பட்டு, நெட்டப்பாக்கம், முதலியார்ப் பேட்டை, நெடுங்காடு, திருமலைராஜன் பட்டினம், திருநள்ளாறு, நிரவி, கோட்டுச்சேரி ஆகிய பன்னிரண்டும் கொம்யூன் பஞ்சாயத்துகளாகவும் பிரிக்கப் பட்டு நிர்வாகம் செய்யப்பட்டு வருகின்றன.

புதுவை விடுதலை

1673 முதல் 1954 வரை பிரஞ்சியர் பிடியிலிருந்த புதுவை மாநிலம் 1954, நவம்பர் 1 முதல் விடுதலையடைந்து இந்தியாவுடன் இணைந்தது. இதனையே 'இணைப்புத் தீர்மான ஒப்பந்தம்' (De - facto settlements) என்று கூறுவர். பின்னர் 1962, ஆகஸ்டு 16 இல் 'நடைமுறை அதிகார மாற்ற' ஒப்பந்தத்தில் (De-jure transfer) இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவும், பிரஞ்சுத் தூதுவரும் கையெழுத்திட்டனர். அந்நாளே புதுவையின் விடுதலை நாளாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. விடுதலைக்குப் பின்னர் புதுவைப் பகுதிகள் முப்பது (சட்ட சபைத்) தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. இந்தியாவின் மக்களவைக்கு ஓர் உறுப்பினரும், மாநிலங்கள் அவைக்கு ஓர் உறுப்பினரும் தேர்ந்தெடுத்தும் அனுப்பும் உரிமை புதுச்சேரி மாநிலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. பொதுகேயும் புதுவையும்

புதுச்சேரி—பெயர்கள்

புதுச்சேரி தொடர்பான வரலாறு, இலக்கியம், புராணக்கூறுகள். நாட்டுப்புற வழக்காறுகள் ஆகியவற்றின் அடிப்படையில் பண்டைக் காலந்தொட்டே புதுச்சேரிக்குப் பல்வேறு பெயர்கள் வழங்கி வந்துள்ளமை புலனாகும். அவையாவன: பொதுகே, பொதுகா, அகத்தீசுவரம், வேதபுரம், வேதபுரி, சண்முகாபுரம், பொலெசெரே, புதேஷேயிரா, புதிஷேரி, புதுச்சேரி (புதுவை), பொந்திஷேரி, பாண்டிச்சேரி என்பனவாகும். இப்பெயர்கள் புதுச்சேரியின் வரலாற்றில் பல்வேறுபட்ட காலக்கட்டத்தில் வழங்கி வந்துள்ளன. புதுச்சேரியின் பழைய பெயரான 'பொதுகே' என்பதன் மூலவடிவத்தை, வரலாற்றுண்மைகளின் அடிப்படையில் ஆராய்ந்து அறிவது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

புதுச்சேரி – பாண்டிச்சேரி

கி.பி. 1664–இல் தான் பிரஞ்சுக் கிழக்கிந்திய வணிக நிறுவனம் தோற்றம் பெற்றது[1]. பிரஞ்சியராட்சிக் காலத்தில் தான் தற்போதைய புதுச்சேரி விரிவு படுத்தப்பட்டு அழகுற, நிர்மாணிக்கப்பட்டது. அதற்கு முன்பு இப்பகுதி 'புதுச்சேரி மேடு' என்றழைக்கப்பட்டு, கடற்கரை ஓரமாக,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறிய கிராமமாகவே இருந்து வந்துள்ளது. 1635-இல் புதுச்சேரி டேனிஷ்காரர் வசமிருந்தபோது 'பொலெசெரே' என்றழைக்கப்பட்டது. 1693-இல் டச்சுக்காரர் புதுச்சேரியைக் கைப்பற்றிய போது, அவர்களால் 'புதேஷேயிரா' என்று குறிப்பிடப்பட்டுள்ளது[2]. இவ்வாறு, புதுச்சேரியைக் கைப்பற்றியவர்களும், ஆட்சி செய்தவர்களும், வந்துபோனவர்களும் தம் விருப்பத்திற்கேற்ப, புதுச்சேரியைப் பெயர் மாற்றம் செய்துள்ளனர். பிரஞ்சியராட்சிக் காலத்தில் புதுச்சேரிக்கும் பாரிசுக்கும் இடையே நடந்த கடிதப் போக்குவரத்து காரணமாக, 'POUDOUCHERI' யில் உள்ள U>N ஆகத் திரிந்து (மாற்றம் செய்யப்பட்டு) 'பொந்திஷேரி' ஆனது[3]. அதன்பின் புதுச்சேரி ஆங்கிலேயர் ஆளுகைக்கு உட்பட்டிருந்த காலத்தில் 'பொந்திஷேரி' > 'பாண்டிச்சேரி' என்று பேச்சு வழக்கில் பயன்படுத்தப்பட்டு, பின் அப்பெயரே நிலைத்துவிட்டது.

வேதபுரம் – வேதபுரி

பல்லவர் காலத்திலும், பிற்காலச் சோழர் காலத்திலும் 'புதுச்சேரி' பற்றிய வரலாற்றுச் செய்திகளை அறிய இயலவில்லை. ஆனால் பாகூர், திருபுவனை, திருவாண்டார் கோவில், முத்தரையர் பாளையம், ஒழுகரை முதலிய ஊர்களைப் பற்றிய வரலாற்றுண்மைகள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. பிற்காலச் சோழர் காலத்தில் பாகூர், 'அழகிய சோழச் சதுர்வேதி மங்கலம்' என்றும், திருபுவனை, 'திருபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலம்' என்றும் அழைக்கப்பட்டு வந்திருக்கின்றன. இடைக்காலத்தில் இவ்வூர்களோடு கொண்ட தொடர்பின் காரணமாக, புதுச்சேரி 'வேதபுரம்' அல்லது 'வேதபுரி' என்னும் பெயரைப் பெற்றிருக்கலாம். நாயக்கர் காலத்தில் வில்லியனூர். ஒழுகரை போலும் ஊர்கள் வரலாற்றில் இடம்பெற்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அளவிற்குக்கூட புதுச்சேரி சிறப்புறவில்லை. எனவே, பிரஞ்சியரின் கால்கோளே தற்காலப் புதுச்சேரியை ஒளி பெறச் செய்தது எனலாம்.

பொதுகாவும் டிமிரிகாவும்

'பொதுகே' பற்றி நமக்குக் கிடைத்திருக்கும் வரலாற்று மூலங்கள் அனைத்தும் அயல் நாட்டார் பயணக் குறிப்புகளே. கி.பி. முதல், இரண்டாம் நூற்றாண்டுகளில் இந்தியாவின் கிழக்குக் கடற்கரை ஓரமாகப் பயணம் செய்த பெரிப்ளுஸ், தாலமி இருவரும் புதுவையை முறையே, 'பொதுகே' என்றும் 'பொதுகா' என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

பெரிப்ளுஸ் தம் பயண நூலில் குறிப்பிடும்போது, "இந்தப் பிரதேசத்தின் (கிழக்குக் கடற்கரை) வாணிகச் சந்தை கூடும் நகரங்களில் டிமிரிகாவிலிருந்தும், வடக்கிலிருந்தும் உள்ள துறைமுகங்களிலிருந்து வரும் கப்பல்கள் தங்குவதற்கு வசதியான இடங்களில் முதன்மைத்தானம் வகிப்பது 'காமரா' என்பதாகும். அதற்கடுத்தது 'பொதுகே' என்பதாகும். அதற்கடுத்தது 'சோபட்மா' ஆகும். இவற்றில் அந்நாட்டுக் கப்பல்கள் கரையோரமாக டிமிரிகா வரையிலும் தங்குகின்றன"[4] என்கிறார். இதில் 'டிமிரிகா' என்பது 'தமிழகம்' என்பதன் திரிபாகும். இக்குறிப்பில், காமரா' என்பதைக் காவிரிப் பூம்பட்டினமாகவும், 'சோபட்மா' என்பதை மரக்காணமாகவும் கொள்ளும் போது, 'பொதுகே' என்பதைப் 'புதுவை என்று ஏற்றுக் கொள்வதில் ஐயமில்லை. தாலமியும் தம் பயணக் குறிப்பில் மிளகு ஏற்றிச் செல்ல வரும் கப்பல்கள் தங்குமிடமாக உள்ள தமிழகத் துறைமுகங்களில் 'பொதுகா'வும் ஒன்று என்று குறிப்பிட்டுள்ளார். 'யவனர் தந்த வினைமான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நன்கலம், பொன்னொடு வந்து கறியொடு பெயரும்' (அகம்-பா:48) என்னும் சங்க இலக்கியப் பாடல் அடிகள் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. பெரிப்ளுஸ், தாலமி ஆகிய இருவருக்கும் மாறாக, ஏ. எச். வார்மிங்டன் (A.H. Warmington) என்பவர் தம் நூலில் பொதுகே என்பதனைப் 'பொதுஸ்' (Podus) என்று குறிப்பிட்டுள்ளார்.[6]

பொதுக்கம்—பொதுகே

இனி பொதுகே அல்லது பொதுகாவின் மூல வடிவம் எது என்று ஆராயும்போது, சங்க இலக்கியத்தில் அதனோடு ஒப்புடைய இரண்டு சொற்களைத் தொடர்புபடுத்திக் காட்டலாம். அவை 1. புதுவை, 2. பொதுக்கம் என்பனவாகும். 'புதுவை' என்னும் சொல் சங்க இலக்கியத்தில் 'புது வைக்கோல்' என்ற பொருளிலும், 'புதுமை', 'புதியவன்' என்ற பொருளிலும் கையாளப்பட்டுள்ளது. கி.பி. 16-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு வரை புதுச்சேரியைப் 'புதுவை' என அழைக்கும் சொல்லாட்சி வரலாற்றில் எங்கும் காணப்படவில்லை. அது மட்டுமின்றி, புதுச்சேரியின் சுருக்கப் பெயராக, 'புதுவை' என்பதைக் கொள்ள வாய்ப்புண்டு. சங்க இலக்கியச் சொல்லான (புதுமை என்னும் பொருள் தரும்) 'புதுவை' என்ற சொல்லைப் பொதுகேயின் மூலவடிவமாகக் கொண்டால் மொழியியல் சிக்கல் ஏற்படுகின்றது. மேலும் புதுவை என்பதை இடப்பெயராக, சங்க இலக்கியத்துள் எங்கும் குறிப்பிடப்படவில்லை. பெரியாழ்வார் தம் பாடலில் (பெரியாழ்வார்—திருமொழி—II) 'புதுவை' என்று குறிப்பிடுவது ஸ்ரீவில்லிபுத்தூரே யன்றிப் புதுச்சேரி எனப்படும், புதுவையை அன்று. எனவே பொதுகே என்பதன் மூல வடிவம் 'புதுவை' என்பதேயாகும் என்று குறிப்பிடும் மு. த. வேலாயுதனாரின் கூற்று[7] முற்றிலும் பொருந்தாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஐராவதம் மகாதேவன் அவர்கள் பொதுகே என்பதைப் 'பொதிகை' எனும் சொல்லோடு தொடர்புபடுத்திக் காட்டுகின்றார். அகத்தியர் வாழ்ந்த இடம் பொதிகை மலையாகும். இதன் அடிப்படையில் முற்காலத்தில் அகத்தியர் இங்கு வாழ்ந்து வந்ததாலேயே புதுச்சேரிக்கு 'அகத்தீசுவரம்' எனும் பெயர் வழங்கப்பட்டது. மேலும் முதலாம் இராசேந்திரன் காலத்தில் (கி. பி. 1012 — 1044) ஒழுகரையில் இருந்த சிவன் கோவில் ஒன்று 'அகத்தீசுவரம்' என்றழைக்கப் பட்டதாகக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. பழங்காலத்தில் மலைப்பகுதியாக இருந்த ஒழுகரை - கோரிமேட்டுப் பகுதிகள் பிரஞ்சியராட்சிக் காலத்திலும் 'செம்மண் குன்று' என்றே அழைக்கப்பட்டன. எனவே அகத்தியரோடு கொண்ட தொடர்பின் காரணமாகப் புதுவைப்பகுதி அகத்தீசுவரம் என்றும், பொதிகை என்றும் பெயர் பெற்றிருக்கலாம். 'பொதிகை' எனும் பெயரே கிரேக்கர்களால் 'பொதுகே' என்று உச்சரிக்கப்பட்டிருக்கலாம்.

சங்க இலக்கியத்தில், 'புள்ளிக் கள்வன் புனல் சேர் பொதுக்கம்' (கலித்தொகை. பா: 88) என்னும் பாடல் தொடரில் 'பொதுக்கம்' என்பது நெய்தல்நிலக் கடற்கரைப் பகுதியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. இங்கே குறிப்பிடப்படும் 'பொதுக்கம்' என்னும் சொல்லுக்குத் 'தங்குமிடம்' அல்லது மறைவிடம்' என்பது பொருளாகும். தாலமியும் தம் பயண நூலில், கப்பல்கள் வந்துத் தங்கிச் செல்லும் இடமாகத் தான் பொதுக்கேயைக் குறிப்பிட்டுள்ளார். எனவே பொதுக்கேயின் மூல வடிவமாக, சங்க இலக்கியச் சொல்லான, 'பொதுக்கம்' எனக் கொள்வதே பொருத்தமாகும். 'பொதுக்கு' என்னும் வேர்ச் சொல்லுடன் 'அம்' விகுதி சேரும் போது பொதுக்கம்' என்று ஆகும். அங்கு >அங்கே, இங்கு>இங்கே, போன்று பொதுக்கு>பொதுக்கே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று மாறும். பொதுக்கம் என்பதனையே 'பொதுக்கே' என்றும், 'பொதுகா' என்றும் கிரேக்கர்கள் உச்சரித்திருக்க வேண்டும்.

பொதுகே -அரிக்கமேடு:

கி.பி. 1937, 1945ஆம் ஆண்டுகளில் அரிக்கமேட்டில் முவேோ துய்ப்ராய், மார்ட்டிமர் வீலர் போன்றோர் முயற்சியால் அகழ் வாய்வு நடத்தப் பெற்றது.[8] இவ்வகழ்வாய்வில் ரோமானிய நாட்டைச் சேர்ந்த மதுக்குடங்கள், ரௌலெடெட் பானை ஓடுகள், யவனக் குடியிருப்புப் பகுதிகள், கிடங்குகள், ரோமானிய நாணயங்கள், கண்ணாடி மணிகள், பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் முதலியன கிடைத்துள்ளன. இவற்றின் காலம் கி.மு. 200 முதல் கி.பி. 200 வரையிலான பகுதியாகும். மார்ட்டிமர் வீலர் என்னும் வரலாற்றறிஞர் அரிக்கமேடு கண்டுபிடிப்புகள் பற்றிக் கூறும்போது 'கி.பி. முதல் இரண்டாம் நூற்றாண்டுகளில் யவனக் குடியிருப்புகள் அடங்கிய இப்பகுதி மிகச் சிறந்த துறைமுகமாக விளங்கியிருத்தல் வேண்டும்'[9] என்று குறிப்பிட்டுள்ளார்.

கரிகால் பெருவளத்தான் காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் சிறந்த துறைமுகமாக விளங்கியிருத்தலைப் பட்டினப்பாலை மூலம் அறியலாம். காவிரி கடலோடு கலக்குமிடத்து காவிரிப்பூம்பட்டினம் சிறந்த துறைமுகமாகச் செயல்பட்டதைப் போன்றே 'பொதுகே' என்றழைக்கப்பட்ட பொதுக்கமும் செஞ்சியாறு கடலோடு கலக்குமிடத்தில் சிறந்த துறைமுகமாக விளங்கியிருக்கலாம். ஏறக்குறைய காவிரிப்பூம்பட்டினத்தோடு இணையாக வைத்துப் பேசப்படும் 'பொதுகே' களப்பிரர் இடையீட்டின் காரணமாகச் சிதைக்கப்பட்டுப் புதையுண்ட நகரமாகி விட்டது. புதையுண்ட நகரின் மாதிரி வரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படம் மூவோ துய்ப்ராய் அவர்களால் வரையப்பட்டு, புதுவை அருங்காட்சியகத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

களப்பிரர்களோடு தமிழகத்தில் நுழைந்த 'அருகன் வழிபாடு' இப்பகுதியில் நிலைபெற்று, 'அருகன்மேடு' என்று வழங்கப்பெற்று காலப்போக்கில் மருவி 'அரிக்கமேடு' என்று ஆயிற்று. புத்தர் வழிபாடு காரணமாக (அரிங்கன்—புத்தன்) இப்பகுதி அரிங்க(ன்) மேடு > அரிக்கமேடு ஆனது என்று கூறுவாரும் உளர்.[10] ஆனால் அக்கூற்று பொருந்தாது. யவனக் குடியிருப்புகள் அழிக்கப்பட்டாலும் அவர்களோடு கொண்ட தொடர்பின் காரணமாக ஒரு சில நூற்றாண்டுகள்வரை இப்பகுதியில் கிரேக்க மொழியும் பேசப்பட்டு வந்துள்ளது.

மேற்கூறிய வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையில் நான்கு உண்மைகள் பெறப்படுகின்றன. அவை யாவன — 1. பெரிப்ளுஸ், தாலமி போன்ற கிரேக்கக் கடற்பயணிகள் தம் பயணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ள 'பொதுகே' அல்லது 'பொதுகா'வின் மூலவடிவம் 'பொதுக்கம்' என்பதேயாகும். 2. கி.பி. முதல், இரண்டாம் நூற்றாண்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள 'பொதுகே' என்பது தற்காலப் புதுச்சேரி அன்று. புதுவைக்குத் தெற்கே 5 கி.மீ. தொலைவில் உள்ள அரிக்கமேடும் அதனைச் சுற்றியுள்ள பகுதியுமே பொதுகேயாகும். 3. களப்பிரர் இடையீட்டின் காரணமாக பொதுகே அழிந்து பின் அருகதேவன் வழிபாடு காரணமாக அருகன் மேடு—அரிக்கமேடு என இப்பொழுது வழங்கி வருகிறது. 4. மிகப்பிற்காலத்தே தோன்றிய 'புதுச்சேரி', பிரஞ்சியரிடையே நிகழ்ந்த கடிதத் தொடர்பு காரணமாகவும், ஆங்கிலேயராட்சி காரணமாகவும் 'பாண்டிச்சேரி' என்று பெயர் மாற்றம் பெற்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சான்றெண் விளக்கம்

1. தில்லைவனம், சு., 'புதுவை மாநிலத் தமிழ் வளர்ச்சி', ப. 12:
2. Raja, P., 'A Concise History of Pondicherry,' P-5.
3. தேசிகம் பிள்ளை, ரா., 'வரலாற்றில் புதுவை' ப-2.
4. இராகவன் வி.எஸ்.வி., 'பெரிப்ளுஸ்' ப-264.
5. இராகவன், வி.எஸ்.வி., 'தாலமி' (கி.பி. 119-161) பக். 83-84.
6. George Moses, "The Greek-Roman Link with Pondicherry" — Mother India, March, 1970, P-184.
7. வேலாயுதனார், மு. த., 'வையம் புகழ் புதுவை' ப-6.
8. ஸ்ரீதரன், K., "தமிழகமும் யவனமும்" — வரலாற்றுச் சுவடுகள் (தொ—1), 1980, ப - 35.
9. Ramasamy, A., 'History of Pondicherry,' pp. 4-5.
10. 'Mother India,' March-1970., p. 184.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. பிரஞ்சியருக்கு முற்பட்ட புதுச்சேரி

1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

தமிழகத்தின் ஒரு பகுதி

வரலாற்று நோக்கில் கிறிஸ்து பிறப்பதற்கு முற்பட்ட காலத்தை வரலாற்றுக்கு முற்பட்ட காலம் அல்லது கி.மு., என்றழைப்பர். பிரஞ்சியர் வருகைக்கு முன்பு புதுச்சேரி தமிழகத்துடன் இணைந்த ஒரு பகுதியாகவே இருந்தது. சங்க காலத்திலிருந்து இக்காலம் வரை புதுச்சேரியைப் பற்றிய வரலாற்றுச் சான்றுகள் கிடைத்து இருப்பினும், சங்க காலத்திற்கு முற்பட்ட புதுச்சேரி வரலாற்றில் தெளிவில்லை. பொதுவாக, பிரஞ்சியர் வருகைக்கு முன்பு புதுச்சேரியின் வரலாறு தமிழக வரலாற்றுடன் இணைத்துப் பார்க்கப்பட வேண்டிய ஒன்று. தமிழகம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் 'லெமூரியா' கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் 'லெமூரியர்' அல்லது 'லெமூர்' என்றும் அழைக்கப்பட்டனர். இவர்தம் பரம்பரையில் வந்தவர்களே திராவிடர்கள் என்றும் பல கடல்கோள்கள் மற்றும் இயற்கை மாற்றங்கட்குப் பின்னர் அவர்கள் தமிழராயினர் என்றும், அவர்கள் பேசிய மொழியே 'தாமிளி' அல்லது 'திராவடி' என்றும் கூறப்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பிரிவுகள்

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைப் பழங் கற்காலம், புதிய கற்காலம், பழங்கற் புதைவுக் காலம் எனப் பாகுபாடு செய்யலாம். இக்காலப் பிரிவுகளைச் சேர்ந்தவையாக, பல புதைபொருட் சின்னங்கள், அரிக்கமேட்டிலும் புதுச்சேரியின் பிற கிராமப்புறங்களிலும் கிடைத்துள்ளன. ஊசுடு ஏரியில் கிடைத்துள்ள 25 செ. மீ. நீளமுள்ள கற்கோடரி, பெல்லாரி மாவட்டத்திலும் பிரம்மகிரியிலும் கிடைத்துள்ள கற்கோடரியுடன் பலவிதத்திலும் ஒத்துள்ளது. இக்கருவி இன்றைக்கு ஏறக்குறைய 500000 ஆண்டுகட்கு முற்பட்டதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது[1]. ஊசுடு கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட ஈமத்தாழி ஒன்றில் 50 செ. மீ. நீளமும் 3 செ. மீ. அகலமும் உள்ள இரும்புக் கத்தி, எலும்புகள், கருப்பு - சிவப்பு மட்பாண்டங்கள் முதலியன கிடைத்துள்ளன. இக்கத்தியின் அமைப்பை நோக்குகையில் கிறிஸ்து சகாப்த தொடக்கத்தில் ரோமானியர் பயன்படுத்திய வாளின் அமைப்பைப் பெரிதும் ஒத்திருக்கின்றது.[2]

007478

இறந்தவரைத் தாழியில் புதைக்கும் வழக்கம் தென்னிந்தியாவில் பரவிய காலம் கி. மு. 1000 — கி. மு. 400 வரையிலான பகுதியாகும். இக்காலக்கட்டத்தைச் சேர்ந்தவையாக பல ஈமத்தாழிகள் சுற்றுக்கேணி, முத்தரையர் பாளையம், வீராம்பட்டினம், பாகூர், கோரிமேடு, மங்கலம், பிள்ளையார்குப்பம் போன்ற ஊர்களில் கிடைத்துள்ளன. புதுச்சேரி கிராமங்களில் கிடைத்துள்ளவை போன்றே அதே அமைப்புடைய ஈமத்தாழி, கற்புதைவுகள் முதலியன மைசூர் மாநிலத்திலும் கிடைத்துள்ளதால் தென்னிந்தியா முழுவதும் இப்பழக்கம் பரவியிருந்ததாக மதாம் கெப்ளே அவர்கள் விளக்குகின்றார்[3]. இறந்தவர்களைக் கற்புதைவு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களிலும் தாழிகளிலும் புதைக்கப்பட்டு வந்த காலத்தைக் கற்புதைவுக் காலம் என்பர். கி. மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 12-ஆம் நூற்றாண்டு வரையிலான தமிழ் இலக்கியங்கள் ஈமத்தாழி பற்றியும், கற்புதைவுகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளன. மணிமேகலை இவற்றைப் பற்றிக் குறிப்பிடுகையில் "சுடுவோர், இடுவோர், தொடுகுழிப் படுப்போர், தாழ்வயின் அடைப்போர், தாழியிற் கவிப் போர்"[4] என்று குறிப்பிட்டுள்ளது. பாகூர் ஈமத்தாழி பற்றிக் குறிப்பிடும் சு. குப்புசாமி அவர்கள், அதில் கிடைத்த எலும்புகள், மணிகள், மட்பாண்டங்கள், கற்கருவிகள் ஆகியவற்றின் அடிப்படையில் கி.மு. 200க்கும் கி.பி.200க்கும் இடைப்பட்ட காலத்ததாக மதிப்பிடுகின்றார். அரிக்கமேடு அகழ்வாய்வில் கண்டெடுத்த பானை ஓடுகளில் பல ஓவிய எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவை திராவிட எழுத்தாக இருக்கலாம் என்று அகழ்வாய்வாளர் கருதுகின்றனர்.

2. சங்க காலப் புதுச்சேரி

சங்க காலத்தில் புதுச்சேரி சோழர் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக விளங்கிற்று. சங்க காலச் சோழநாடு தெற்கே வெள்ளாற்றுப் பகுதியையும், வடக்கே வேங்கட மலையையும் (தொண்டை மண்டலப் பகுதியாகிய புதுச்சேரி உள்ளிட்டது) எல்லையாகக் கொண்டிருந்தது. வணிகத் தொடர்பின் காரணமாக சாதவாகன நாணயங்களும் ரோமனிய நாணயங்களும் புதுச்சேரி — கடலூர் பகுதிகளில் கிடைத்துள்ளன. சங்க காலத்தில் அரிக்கமேடு தலைசிறந்த வணிகத் துறைமுகமாக விளங்கி வந்தது. பிளினி, தாலமி போலும் யவன நாட்டுக் கடற்பயணிகள் தம் பயண நூலில் இந்தியாவின் கிழக்கு, மேற்குக் கடற்கரை நகரங்களைப் பற்றிக் குறிப்பிடும் போது, "தொண்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டியை—திண்டிஸ் என்றும், முசிறியை—முசிறிஸ் என்றும் குமரிமுனையை — கொமாரி என்றும், கொற்கையை — கொல்சாய் என்றும், நாகப்பட்டினத்தை — நகாமா என்றும், காவிரி பூம்பட்டினத்தை — காமரா என்றும், புதுச்சேரியைப் 'பொதுகே' என்றும் மரக்காணத்தை— சோபட்மா'' என்றும் வழங்கியுள்ளனர். பெரிப்ளூஸ் நூல் புதுச்சேரியைப் பொதுகா என்று குறிப்பிட்டுள்ளது. கரிகால் சோழன் காலத்தில் புதுச்சேரி தொண்டைமண் டலத்தின் ஒருகூறாக இருந்துவந்தது. புதுவை உள்ளிட்ட தொண்டை மண்டலம் பல கோட்டங்களாகப் பிரிக்கப் பட்டு நிர்வாகம் புரியப்பட்டது. தொண்டை மண்டலத் தின் நிர்வாகியாக, சோழ வமிசத்தைச் சேர்ந்த இளந்தி ரையர்கள் பணியாற்றி வந்தனர்.

அரிக்கமேடு அகழ்வாய்வு

கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் அரிக்கமேடு அகழ் வாய்வை முதன் முதலில் தொடங்கி வைத்தவர். லெ ழாந்தீய் (Le Gentil) என்பவராவார். அவருக்குப் பின், 1937 இல் ழுவோ துய்ப்ராய் இவ்வாய்வில் ஈடுபட் டார். அதன் பின்னர் கி. பி. 1941-இல் ஃபாசெஸ், சுர்லியூ (L. Faucheux, R. Surleau) என்னும் இருவரும் அகழ்வாய்வைத் தொடர்ந்தனர். சற்று விரிவான அளவில் ஆய்வு நடத்தி கி.பி. 1945-இல் மார்ட்டிமர் வீலர் (R. E. Martimer Wheeler) அரிக்கமேடுபற்றிப் பல அரிய வரலாற்று உண்மைகளை வெளிக் கொணர்ந்தார்.[5] இவ்வாய்வின் போது ரோமப் பேரரசர் மணிமுடியில் இருந்ததைப் போன்ற முத்திரைச் சின்னம் (Gem) கண்டெடுக்கப்பட்டது. பின்னர் அது வியட்நாமில் உள்ள ஹனாய்க்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட 'ரௌலெடெட்' பானை ஓடுகளில் உள்ள எழுத்துக்கள் அக்காலத் தமிழ் வரி வடிவங்களைப் புலப்படுத்துகின்றன. இங்கு நிலையான யவனக் குடியிருப்புகளும், கண்ணாடி மணி தயாரிக்கும் தொழிற் சாலைகளும் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. பல்வேறு வடிவமுள்ள யவன மதுக் குடுவைகள் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது பற்றிப் புறநானூறு (பா:56) "யவனர் நன்கலந் தந்த தண்கமழ் தேறல்" என்று குறிப்பிட்டுள்ளமை ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

இத்தாலியில் 'அரிஸ்ஸோ' (Arezzo) நகரத்துக் குயவர்களால் வனையப்பட்ட சிவப்பு நிறமுடைய 'அரிட்டைன்' பானை ஓடுகள் அரிக்கமேட்டில் நிறைய கிடைத்துள்ளன. சங்க காலத்தே அரிக்கமேட்டில் மஸ்லீன் துணிகள் சாயம் தோய்க்கப்பெற்று அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தமையை அகழ்வாய்வில் கிடைத்த சாயத் தொட்டிகள் மூலம் அறியலாம். கீழே கூரான அமைப்புள்ளதும், அளவில் பெரியதுமான உள்நாட்டு மதுச்சாடிகளும் இங்கு கிடைத்துள்ளன. மதுவை ஒரு குறிப்பிட்ட காலம் பூமிக்கடியில் புதைத்து வைத்துப் பின்னர் பயன்படுத்துவதற்காக இத்தகைய மதுச்சாடிகள் கையாளப்பட்டன.

யவனர் இருக்கையில் அமைந்துள்ள பண்டகசாலையை ஒட்டி, கழிவுநீர் செல்வதற்காகச் சாக்கடை வழி அமைக்கப்பட்டிருக்கின்றது. பூமியின் மட்டத்திற்கேற்ப கழிவுநீர் செல்லும் சாக்கடையின் வாட்டம் சாய்வாக, கணித வியலார் வியக்கும்படி கட்டப்பட்டுள்ளது. சங்கினால் செய்யப்பெற்ற மோதிரமும், முற்றுப் பெறாத வளையல்ளும் இங்கே கிடைத்துள்ளன. சோழமண்டலக் கடற்கரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யோரத்தில் நெல்லூரிலிருந்து கடலூர் வரையுள்ள பகுதி களில் ரோமானிய நாணயங்கள் (தங்கம், வெள்ளி) கிடைத் துள்ளன. முதலாம் இராசராச சோழன் காலத்திய (கி.பி. 985 – 1017) இரண்டு நாணயங்கள் அரிக்கமேட்டில் கிடைத் துள்ளன. இதனால் கி.பி. 10 ஆம் நூற்றாண்டு வரையில் அரிக்கமேடு வணிக அளவில் வளர்ச்சிபெற்ற நகரமாக இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

இவை தவிர உறைகிணறுகள், சுடுமண்ணால் செய்யப் பெற்ற பல விளையாட்டுப் பொருட்கள், தந்தத்தால் செய்யப்பெற்ற பல கலைப்பொருட்கள் களிமண்ணால் செய்யப்பெற்ற காதணிகள், மேல்மூடிகள், துளையிடப் பெற்ற தட்டுகள், ரோமானிய நாட்டு விளக்கின் ஒரு பகுதி, முதுமக்கள் தாழிகள், செப்புக் கருவிகள், இரும்பு வளையங் கள், மரச்சுத்தி போன்றனவும் அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

1990ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் விமலா பெக்லி (Vimala Begly), ஸ்டீவ் (Steeve), எலிசபெத் (Elizabeth) என்னும் மூன்று அமெரிக்கரால், இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறை உதவியுடன் அரிக்கமேட்டில் மீண்டும் அகழ்வாய்வு நடத்தப் பெற்றது. அமெரிக்காவில் உள்ள பென்சில்வேனியா பல்கலைக் கழகம் இவ்வகழ்வாய் விற்கு நிதிவுதவி அளித்தது. சென்னைப் பல்கலைக் கழகத்தைச்சேர்ந்த தொல்பொருள் ஆய்வுத் துறையினரும் இந்த அகழ்வாய்வில் பங்கெடுத்துக் கொண்டனர். இவ்வகழ்வாய்வில் சாயத் தொட்டி, உறை கிணறுகள், அரிட்டைன் ஓடுகள், ரௌலெடெட் ஓடுகள், மதுச்சாடிப் பகுதிகள், பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், பலதரப்பட்ட மணிகள் முதலியன கிடைத்துள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வீரை—வீராம்பட்டினம்

சங்க இலக்கியத்தில் 'வீரை' பற்றி மூன்று குறிப்புக்கள் உள்ளன. வீரை வெளியனாரும் (புறம்—320) வீரை வெளியன் தித்தனாரும் (அகம்—188) 'வீரை' என்னும் ஊரில் வாழ்ந்த புலவராவார். இவ்வூர் 'அடுபோர் வேளிர் வீரை மூன்றுறை'[6] என்று சிறப்பிக்கப்படுகின்றது. சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் வீரையே, தற்காலத்திய வீராம்பட்டினமாக இருக்கலாம் எனக் கருதுகின்றனர். ஆனால் பி. எல். சாமி போன்றோர் வீராம்பட்டினத்தின் பழைய பெயராக 'வீரப்பட்டினம்' என்பதையே அறுதி யிட்டுக் கூறுகின்றனர். யவனரும் பிற வெளிநாட்டவரும் கி.பி. 1-2-ஆம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியக் கடற்கரைப் பகுதிகளில் தங்கி வணிகம் செய்தபோது, அவர்களுள் ஒரு பிரிவினரே, சோழ மண்டலக் கரையிலுள்ள வீராம்பட் டினத்திலும் தங்கி வணிகம் புரிந்தனர். அக்காலத்தில் வெளிநாடு சென்று வணிகம்புரியும் வணிகக் குழுக்களின் கடற்கரை நகரங்களாக 'வீரப்பட்டினங்கள்' திகழ்ந்தன. வணிகக் குழுக்கள் சில ஊர்களை விலை கொடுத்து வாங்கி அவ்வூர்களுக்கு 'எறிவீரப்பட்டினம்' என்று பெயர் சூட்டித் தனியரசு பண்ணுவது வழக்கமாக இருந்திருக்கின்றது. புதுவை மாநிலத்தில் உள்ள 'வீராம்பட்டினம்' பிற்காலத்தில் தோன்றிய பல வீரப்பட்டினங்களில் ஒன்றாக இருந்திருக்க லாம் என்பர் பி. எல். சாமி.[7] ஆனால் கல்வெட்டு அறிஞர் சு. குப்புசாமியோ, 'யவனர்கள் வணிகத்தின் பொருட்டு, தமது படையுடன் தங்கி வாழ்ந்த வீரப்பட்டினமே, வீராம் பட்டினமாகும்' என்று குறிப்பிட்டுள்ளார்[8]. நாகப்பட்டினம் 'நாகை', என மருவி வழங்குதல் போன்று, வீரப்பட்டினம் 'வீரை' எனச் சங்க காலத்தில் மருவி வழங்கி இருக்கலாம். 'வீரை' என்னும் பெயர் பிற்காலச் சோழர் காலத்திலும் வழக்கில் இருந்து வந்துள்ளது. திருப்பாதிரிப்புலியூர் பாடலீசுவரர் கோயிலில் உள்ள முதலாம் குலோத்துங்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சோழன் காலத்து இரண்டு சாசனங்கள், 'வீரைத் தலைவன் பரசமயக் கோளரி மாமுனி' என்னும் புலவர் பற்றியும் அவரியற்றிய நூல்களைப் பற்றியும் கூறுகின்றன.[9]

அரிக்கமேடு—உலகச்சந்தை

அரிக்கமேட்டில் நடந்த உலகச் சந்தையில் தமிழர் வணிகத்தின் மூலமாகவே, 6,00,000 பவுண்டு தங்கத்தை ஆண்டு வருமானமாகப் பெற்று வந்துள்ளனர். தமிழகத்தின் ஆண்டு வருமானத்தைப் பற்றியும், ரோமானிய நாட்டிலிருந்து தங்கம், தமிழகத்திற்குக் கொண்டு சென்றது பற்றியும் ரோமானிய அரசப் பேரவை உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதற்கு ஆதாரமாகப் புகார் நகரில் ஏற்றுமதியாகிய பொருட்களைப்பற்றிக் கூறும்போது, "யவனர் தந்த வினைமாண் நன்கலம், பொன்னொடு வந்து கறியொடு பெயரும்" என்று அகநானூறு (பா: 48) பாடுகின்றது. அரிக்கமேட்டிலும் இத்தகைய பொருட்களே ஏற்றுமதி செய்யப்பட்டன. அரிக்கமேட்டிற்கு அருகிலுள்ள முருங்கைப்பாக்கம் என்னும் ஊர்ப்பெயர், 'மருங்கைப் பாக்கம்' என்பதன் திரிபாக இருந்திருக்க வேண்டும்.[10] சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் மருவூர்ப்பாக்கம் போன்றே, சங்ககாலத்தில் அரிக்கமேடு அருகிலுள்ள மருங்கைப்பாக்கமும் சிறப்புடன் திகழ்ந்திருக்க வேண்டும். இலங்கை, மற்றும் கிழக்கு நாடுகளுக்குத் தமிழகத்தின் பல பொருட்கள், 'பொதுக்கே' (அரிக்கமேடு)யிலிருந்து ஏற்றுமதி ஆகியுள்ளன.

சமயச் செல்வாக்கு

அசோகர் காலத்திலேயே தமிழகத்தில் சமண, பௌத்த சமயங்கள் செல்வாக்கு பெறத் தொடங்கி விட்டன. அரிக்கமேட்டில் (அருகன்மேடு) பல சமணத் துறவிகளின் சிலைகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்டெடுக்கப்பட்டுள்ளன. இன்றைக்கும் ஒரு சமணத் தீர்த்தங்கரரின் சிலையை, புத்தர் சிலையாகவே கருதி, மக்கள் வழிபட்டு வருகின்றனர். கருவடிகுப்பம், புதுவைப் பொதுப் பணித்துறை அலுவலகம், கிருமாம்பாக்கம் ஆகிய இடங்களில் புத்தர் சிலைகள் கிடைத்துள்ளன. கிருமாம் பாக்கத்தில் 40செ.மீ. உயரமுள்ள புத்தர் (சிலையின்) தலை மட்டும் கிடைத்துள்ளது. இச்சிலையின் சதுரவடிவமுகம், எடுப்பான நாசி, மற்றும் உதடுகள் ஆகியவற்றைக் காணும் போது இது முற்காலச் சோழர் காலத்தைச் சேர்ந்ததாகக் கருதலாம்[11].

களப்பிரர் வருகை—இருண்டகாலம்

கடைச்சங்க காலத்தில் வடக்கேயிருந்து வந்த களப் பிரர்கள், தொண்டை மண்டலம் வழியாக ஊடுருவி மதுரையைக் கைப்பற்றி, முன்னூறு ஆண்டுக்காலம் தமிழகத்தை ஆட்சி புரிந்தனர். இந்த இருண்டகாலப் பகுதி யில் தமிழகத்தின் வரலாற்றை போலவே, புதுச்சேரியின் வரலாறும் இருட்டடிப்பு செய்யப்பட்டுவிட்டது. ஆனால் தற்போது இருண்ட கால வரலாறுகள் மெல்ல, மெல்ல வெளிச்சத்திற்கு வரத்தொடங்கியுள்ளன.

3. பல்லவர் காலத்தில் புதுச்சேரி

கி.பி. 600 இலிருந்து புதுச்சேரி உள்ளிட்ட தொண்டை மண்டலம் காஞ்சிப் பல்லவராட்சியின் கீழ் இருந்து வந் துள்ளது. பல்லவர் காலத்தில் தொண்டை மண்டலம் தென்பெண்ணையாற்றுக்கும், வடபெண்ணையாற்றுக்கும் இடைப்பட்ட பகுதியாக இருந்து வந்தது. இப்பகுதி, அருவா நாடு, அருவா வடதலை நாடு என இருபிரிவாகப் பிரிக்கப் பட்டிருந்தது. காஞ்சியின் வடபகுதி முதல் தென்பெண்ணை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரையில் அருவா வடதலை நாடாகவும், காஞ்சியிலிருந்து தென்பெண்ணை வரையில் (புதுச்சேரி உள்ளிட்ட பகுதி) அருவா நாடாகவும் விளங்கிற்று.

முற்காலப் பல்லவர் காலத்தில் சமண, பௌத்த சமயங்களே புதுச்சேரியில் மேலோங்கியிருந்தன. மகேந்திர வர்மனுக்குப் பின் இடைக்கால, பிற்காலப் பல்லவர் காலத்தில் சைவம் தழைத்தோங்கியது. பிற்காலப் பல்லவர் காலத்திய (செப்பேடுகள், கல்வெட்டுகள்) சாசனங்களே புதுச்சேரிப் பகுதிகளில் மிகுதியாகக் கிடைத்துள்ளன.

நிருபதுங்க வர்மன் (850-882) கி.பி.

தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் மகனாகிய நிருபதுங்க வர்மனின் எட்டாவது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட செப்பேடுகளும், கல்வெட்டுகளும், பாகூரைப் பற்றிய வரலாற்று உண்மைகளை அறிய உதவுகின்றன. பாகூரின் பழைய பெயர் 'வாகூர்' (வாகு + ஊர் = அழகிய ஊர்), அல்லது 'வாகூர் நாடு' என்பதாகும் தொண்டை மண்டலத்தில் 'வேசாலிப்பாடி' நாட்டைச் சேர்ந்ததாக வாகூர் குறிப்பிடப்பட்டுள்ளது. பாகூரில் உள்ள ஏரி (கடம்பேரி), பல்லவர் காலத்திலேயே வெட்டப்பட்டதாகும்; ஏரி ஆயமாக மா ஒன்றுக்குப் பதக்கு நெல்வீதம் வசூலிக்கப் பட்டு வந்தது.

காஞ்சிக் கடிகையினைப் போன்றே, பாகூர் வட மொழிக் கல்லூரியும் பல்லவர் காலத்தில் சிறப்புற்றிருந்தது இக்கல்லூரி பற்றிய செய்திகளை நிருபதுங்கனின் செப்பேடு களால் அறியலாம்.[12] வாகூரின் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றிய மார்த்தாண்டம் என்பவன் நிருபதுங்க வர்மனின் அனுமதியுடன் பாகூர் வடமொழிக் கல்லூரிக்கு, சேட்டுப்பாக்கம், விளாங்காட்டக் கடுவனூர், இறைபுனைச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேரி என்னும் மூன்று ஊர்களையும் வித்யானுபோகமாக அளித்தான். கல்லூரியில் பாடம் கற்பித்த ஆசிரியரும், பயின்ற மாணவரும் பிராமணர்களே. நால்வகை வேதங்களும், மீமாம்சா, நையாயிகம், தர்மசாஸ்த்ரா, புராணங்கள், ஆயுர்வேதம், கந்தர்வம். அர்த்தசாத்திரம் முதலியன பாடப் பொருள்களாகப் போதிக்கப்பட்டன. 'நாகாயஸ்' என்னும் புகழ் பெற்ற பேராசிரியர் இக் கல்லூரியில் பணியாற்றியவராகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

குருவி மேடு (குருவி நத்தம்,) கிறிமான் பாத்தி (கிருமாம்பாக்கம்), நெல்மலிப்பாக்கம் முதலியன பாகூரைச் சுற்றியுள்ள கிராமங்களாகக் கல்வெட்டு கூறுகின்றது[13]. பாகூர் சிவன் கோவிலில் ஆய்வு நடத்திய மூவோ துய்ப்ராய், "இக்கோயில் பல்லவரின் கலைப் பாணிக்கும், சோழரின் கலைப்பாணிக்கும், இடைப் பட்ட காலத்தது" என்று குறிப்பிட்டுள்ளார்.[14] பல்லவர் காலத்துத் தூணின் அமைப்பைப் பற்றிக் கூறும் நடன காசிநாதன், "அடிப்பகுதி வட்டமாகவும், மேற்பகுதி எண்பட்டை வடிவத்திலும், தூணின் மேல் தாமரைமலர் விரிந்த நிலையில் உள்ள பலகை அமைந்திருப்பதும் பல்லவர் கலைப் பாணி" என்று கூறுகின்றார்.[15] எண் பட்டை வடிவமுள்ள தூண்களே இக்கோவிலில் காணப் படுகின்றன.

நிருபதுங்கனுக்கும் அவன் மாற்றாந்தாய் வயிற்றில் பிறந்த சகோதரன் அபாரஜித வர்மனுக்கும் பல்லவ நாட்டு அரசுக் கட்டில் தொடர்பாகப் போர்மூண்டது. நிருபதுங்கன் பாண்டியர் கூட்டுறவுடனும், அபராஜிதன் சோழர்–கங்கர்கூட்டுறவுடனும் திருப்புறம்பியம் என்னும் இடத்தில் போர் புரிந்தனர். இப்போரில் நிருபதங்கன் தோற்கடிக்கப்பட்டான். அதன் பின்னர் அபராஜித

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வர்மன் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றி கி.பி. 913 வரை ஆட்சி புரிந்தான். சில ஆண்டுகள் கழித்து சோழருடன் ஏற்பட்ட போரில் அபராஜிதன், ஆதித்த சோழனால் கொல்லப்பட்டான். பின்பு தொண்டை மண்டலம் பிற்காலச் சோழராட்சிக்கு உட்பட்ட பகுதியாக மாறியது.

பல்லவராட்சியில் தொண்டை மண்டலம் 24 கோட்டங்களாகப் பாகுபாடு செய்யப்பட்டு, ஒவ்வொரு கோட்டமும் பல நாடுகளாகவும், ஒவ்வொரு நாடும் பல ஊர்களாகவும் பிரிக்கப்பட்டு நிர்வாகம் செய்யப்பட்டு வந்தது. நாட்டார், ஊரார் என்போர் முறையே நாட்டிற்கும், ஊருக்கும் தலைவர்களாக இருந்து செயலாற்றி வந்தனர். கிராம சபையில் ஊர்ப் பெருமக்கள் தலைவர்களாக விளங்கினர். அப்பெரு மக்களுள் சிலர் குடிநீர் வாரியப் பெருமக்களாகவும் பணியாற்றி வந்துள்ளனர். பல்லவர் காலத்தில் வில்லியனூர் 'விடேல் விடுகு சதுர்வேதி மங்கலம்' எனப்பெயரிடப்பட்டு, அந்தணர்க்குப் பிரமதேயமாக வழங்கப்பட்டிருந்தது. பல்லவ மன்னரின் ஆணைக்கு 'விடேல் விடுகு' என்பது பெயராகும். பல்லவராட்சிக்குட்பட்ட சிற்றரசாய் விளங்கிய முத்தரையர் 'விடேல் விடுகு முத்தரையர்' என்றழைக்கப் பட்டனர். இக்காலத்தில் வடமொழி கலந்த தமிழ் நடையே தமிழிலக்கியங்களில் பயன் படுத்தப்பட்டு வந்தது. இந்துக்களிடையே சாதிப் பிரிவுகள் தழைத்து வளர லாயிற்று. பல்லவராட்சியில் அரிக்கமேடு தன் பழம் பெருமையை இழந்து சாதாரண கிராமமாகவே விளங்கியது.

இராட்டிர கூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணன் (கன்னர தேவன்)

கன்னர தேவனின் இருபத்தியேழாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு பாகூர் சிவன் கோவிலில் காணப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விஜயாலய சோழன் மகன் முதலாம் ஆதித்தனுக்கும், இரண்டாம் கிருஷ்ணனின் மகள் இளங்கோப்பிச்சிக்கும் பிறந்தவனே கன்னர தேவன் என்றழைக்கப்படும் மூன்றாம் கிருஷ்ணன் ஆவான். கி.பி. 949-ல் தொண்டை மண்டலப் பிரதிநிதியாகிய இராஜாதித்த சோழனுக்கும், கன்னர தேவனுக்கும், தக்கோலத்தில் நடந்தபோரில்இராஜாதித்தன் கொல்லப்பட்டான். அதன் பின் தொண்டை மண்டலம் பதினைந்து ஆண்டுகள் (949–964) இராட்டிர கூட மன்ன ராட்சிக்குட்பட்ட பகுதியாகத் திகழ்ந்தது. கன்னர தேவன் காலத்திய பாகூர் சிவன் கோயில் கல்வெட்டு, உமாதேவியை, 'கழுவேறி மேட்டு உமாப்பிடாரி' எனக் குறிப்பிடுகின்றது. மற்றொரு கல்வெட்டு, 'ஸ்ரீ கன்னர தேவர்க்குயாண்டு இறுபத்தாறாவது நமிந(க்)கன் சங்கர(ன்) இப்படைக்கு வைச்ச கல்லு நாலு' என்று கோவில் திருப்பணி வேலை குறித்துக் கூறுகின்றது.[16] இத்திருப்பணி வேலைகள் முதலாம் பராந்தகன் காலத்தில் தொடங்கப்பட்டு, கன்னர தேவன் காலத்தில் நிறைவு பெற்றிருக்கலாம். இக்கோயிலுக்குத் தேவரடியார்கள் பணிபுரிந்த செய்தி பற்றி இம்மன்னனின் இருபத்திரண்டாவது ஆட்சியாண்டு கல்வெட்டுகூறுகின்றது.

4. *பிற்காலச் சோழராட்சியில் புதுச்சேரி*

முதலாம் பராந்தகன் (907-953)

திருபுவனை, திருவாண்டார்கோயில் கல்வெட்டுகள் இவன் காலத்திய செய்திகளைக் கூறுகின்றன. பாகூர் சிவன் கோயிலும், திருவாண்டார் (சிவன்) கோயிலும் இவன் காலத்தில் கட்டப்பட்டனவே. இவனுடைய முதல் மனைவியின் பெயரில், திருபுவனையில் 'கோக்கிழானடிப் பேரேரி' என்னும் ஏரியைக் கட்டுவித்தான். மற்றொரு மனைவியாகிய திருபுவன மாதேவியின் பெயரில் ஒரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஊரையே அந்தணர்க்குப் பிரமதேயமாக வழங்கியதால் அவ்வூர் 'திரிபுவன மாதேவிச் சதுர் வேதி மங்கலம்' என்னும் பெயருடையதாயிற்று.[17] இப் பெயரே காலப் போக்கில் பேச்சு வழக்கின் அடிப்படையில் திரணமாதி—திருபுவனை என்று வழங்கப்பட்டு வருகின்றது.

முதலாம் பராந்தகன் காலத்தில் திருபுவனையும், திருவாண்டார் கோவிலும் இணைந்து ஒரே ஊராகவே இருந்தது. திருவாண்டார் கோயில் என்னும் பெயர் தோன்றுவதற்கு முன்பு இவ்வூர் ஞானசம்பந்தர் குறிப்பிடும் (வடுகூர் அடிகள்) வடுகூராக இருக்கலாம் என்பர்.[18] சம்பந்தர் காலத்தில் பேரூராக இருந்த வடுகூர் காலப் போக்கில் சிறு சிறு பகுதிகளாகப் பிரிந்து, தனித்தனி பெயர் பெற்று விளங்கலாயிற்று. பிற்காலத்தில் அதில் ஒரு சிறு பகுதி மட்டும் வடுகூர் என்னும் பெயர் பெற்றிருந்தது. 'திருவடுவூர் மகாதேவனும்' என்று மதகடிப்பட்டுக் கல் வெட்டு இவ்வூர் இறைவனைச் சிறப்பிக்கின்றது. முதலாம் பராந்தகன் இப்பகுதியின் பழைமையும், சிறப்பையும் கருதி அனைத்தையும் ஒருங்கிணைத்து, தன் மனைவியின் பெயரால் 'திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலம்' என்னும் பெயரிட்டு அந்தணர்க்கு வழங்கினான். திருபுவனை யில் உள்ள வீரநாராயணன் வாய்க்கால், வீரசோழன் வாய்க்கால் போன்றவை இம்மன்னனால் வெட்டப் பட்டவையே. திருபுவனையில் வீரநாராயண விண்ணக ராழ்வார் கோயில் எனப்படும் 'வரதராஜப் பெருமாள் கோயில்' இவனால் கட்டப்பட்டதாகும்.

சுந்தர சோழன் (இரண்டாம் பராந்தகன்) (957-973)

முதலாம் பராந்தகனுக்குப் பின்னர் அரிஞ்சயன் சோழ மன்னனானான். இரண்டாண்டிற்குப் பிறகு அரிஞ்சயன் இறந்து போனதால், அவன் தம்பி சுந்தர சோழன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இரண்டாம் பராந்தகன் என்னும் பட்டப் பெயருடன் முடி சூட்டிக் கொண்டான். சுந்தர சோழன் காலத்தில் அவன் மகன் ஆதித்த கரிகாலனே தொண்டை மண்டல நிர்வாகி யாக, காஞ்சியில் இருந்துகொண்டு, ஆட்சி செய்து வந்தான். சுந்தர சோழனுக்குப் பின் சோழ நாட்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உத்தம சோழன் (974-985) காலத்தில், விழுப்பரையன் என்பவன் திருபுவனையின் காவல் அதிகாரி யாக நியமிக்கப்பட்டிருந்தான்.

முதலாம் இராசராச சோழன் (985 – 1017)

முதலாம் இராசராசன் தன்னுடைய பன்னிரண்டாவது ஆட்சியாண்டில் தந்தை சுந்தர சோழன் நினைவாக, பாகூருக்கு 'அழகிய சோழச் சதுர்வேதி மங்கலம்' என்று பெயரிட்டு அவ்வூரை அந்தணருக்கு வழங்கியுள்ளான். தொண்டை மண்டலத்தை வென்ற பின்பு அப்பகுதிக்கு, 'ஜெயங்கொண்ட சோழ மண்டலம்' என்று பெயரிட்டு தன் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக ஆக்கிக் கொண்டான். கி.பி. 997 இல் இவன் காலத்து அரசு அதிகாரியான 'இருமடி சோழ மூவேந்த வேளான்' என்பவன் திருவாண்டார் கோயில் இறைவனுக்கு முண்டியன் வள்ளைப் பாக்கம் (முண்டியம் பாக்கம்) என்னும் ஊரைத் தேவதானமாக அளித்தான். இவ்வூரைத் தேவதானமாக ஏற்றுக்கொண்ட திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்துச் சபையினர் அவ்வூருக்குக் கட்ட வேண்டிய சிற்றாயம், பஞ்சவாரம் முதலிய வரிகளைக் கட்டினர் என்று கல்வெட்டு கூறு கின்றது[19]. இராசராச சோழன் காலத்தில் மதகடிப்பட்டு 'குண்டாங்குழி' என்றழைக்கப்பட்டது. இவ்வூர் இறைவனின் பெயர் 'ஸ்ரீ குண்டாங்குழி மகாதேவர்' என்றழைக்கப் பட்டார். தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டுமுன்பே இராசராசன் இக்கோயிலைக் கட்டியுள்ளான். இவனுடைய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருபத்தெட்டாவது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட திருவாமாத்தூர் கல்வெட்டு, ஒழுகரையின் பழைய பெயரை 'ஒழுக்கை வடகரை' என்று குறிப்பிடுகின்றது.

முதலாம் இராசேந்திரன் (1012—1044)

இவன் காலத்தில் வாகூர் நாட்டை உள்ளடக்கிய வள நாடு 'இராசந்திர சோழ வளநாடு' என்று பெயர் பெற்றிருந்தது. பாகூர் சிவன் கோவிலில் உள்ள நந்தவனங்கள் கங்கைகொண்ட சோழன் திருநந்தவனம், மதுராந்தகன் திருநந்தவனம் என்று இம்மன்னன் பெயராலேயே அழைக்கப் பட்டன. இராசேந்திரனின் ஏழாவது ஆட்சியாண்டில் திருபுவனை வீரசோழ விண்ணகராழ்வார் கோவில் வழி பாட்டுத் தேவைக்கு என்று திருவிடையாட்டமாக (தேவ தானம்) நிலம் வழங்கப்பட்டிருந்தது. மதுரையை வெற்றி கொண்ட இராசேந்திரன் அங்கு புதிதாக ஓர் அரண்மனை யைக் கட்டி அதில் தன் மகனைச் 'சோழ பாண்டியன்' என்னும் பெயரிட்டுச் சோழப் பிரதிநிதியாக இருந்து ஆண்டுவரச் செய்தான்.

இவன் காலத்திய மதகடிப்பட்டுக் கல்வெட்டு, அவ்வூர்க் கோவிலுக்கு விளக்குத் தானமாகக் கொடுக்கப்பட்டு வந்த 'சாவா மூவாப் பேராடுகள்' பற்றித் தெரிவிக்கின்றன. இராசேந்திரன் காலமுதல் 'ஒழுக்கை வடகரை' என்னும் பெயர் மாறி 'ஒழுகரை' என்ற பெயரே வழங்கலாயிற்று. இடையறாது நீர் ஒழுகும் கரை பெற்றிருந்த காரணத்தால் இவ்வூருக்கு இப்பெயர் ஏற்பட்டது. தென்னார்க்காடு மாவட்டம் திருப்பாலப்பந்தல் கல்வெட்டு. 'ஒழுகரை அகத்தீசுவரமுடைய மகாதேவர்க்கு விளக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட 95 ஆடுகளை வழுதாவூர் இடையன் பூமி நக்கன் பெற்றுக்கொண்டான்' என்னும் செய்தியைத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெரிவிக்கின்றது.[20] இன்று ஒழுகரையில் உள்ள சிவன் கோவில் இராசேந்திரன் காலத்து அகத்தீசுவரம் அன்று. அக்கோவில் அழிந்துவிட்டது.

இராசாதிராசன் (1018 – 1054)

இம்மன்னனின் முப்பதாவது ஆட்சியாண்டில் திருபுவனையில் வீற்றிருந்த பெருமாளாகிய அழகிய மணவாளர், நரசிங்க ஆழ்வார் ஆகியோருக்கு உத்தராயண நாள், தட்சணாயண நாள், மாசிப் புனர்ப்பூசம், மார்கழி ஏகாதசி, ஐப்பசி, சித்திரை விஷு ஆகிய நாட்களில் விழா எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ் விழாக் காலங்களில் அன்ன தானத்திற்கென்று 2475 கலம் நெல் இராசாதிராசனால் கொடையாக அளிக்கப்பட்டிருந்தது.[21] இம் மன்னனின் படைத் தலைவன் இராசேந்திர சோழ மாவலி வாணரையன் என்பவன் திருபுவனையில் உள்ள வீரசோழ விண்ணகராழ்வார் கோவிலுக்கும், திருபுவனை வடமொழிக் கல்லூரிக்கும் நிவந்தங்கள் பல அளித்துள்ளான். பல்லவர் காலத்தில் பாகூர் வடமொழிக் கல்லூரி பெற்றிருந்த சிறப்பைப் போலவே, திருபுவனைக் கல்லூரியும் சோழர் காலத்தில் சிறப்புற்றிருந்தது.

முதலாம் குலோத்துங்கன் (1070 – 1120)

பாகூர் சிவன் கோவிலில் இம் மன்னன் பெயரில் 'குலோத்துங்கன் சந்தி' என்று சிறப்பு வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நந்தா விளக்கெரிக்கப் பல நிவந்தங்கள் அளிக்கப்பட்டிருந்தன. (30 நாழிகை விளக்கெரிக்க 45 ஆடுகளும் 60 நாழிகை விளக்கெரிக்க 90 ஆடுகளும் என்ற கணக்கில் பெறப்பட்டன) திருபுவனையில் உள்ள 'உத்தம சோழ விழுப்பரையன் மண்டபம்' இம் மன்னன் காலத்தில் கட்டப்பட்டதாகும். திருபுவனைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிஞர் கவிகுமுத சந்திர பண்டிதனான திருநாராயண பட்டர், கி.பி. 1097 இல் 'குலோத்துங்க சோழ சரிதை' என்னும் காவியத்தை இயற்றியுள்ளார். குலோத்துங்கனின் சிறப்புகளைப் பாடு பொருளாகக் கொண்ட இக் காவியம் திருபுவனை வீரநாரயண விண்ணகராழ்வார் கோவிலில் அரங்கேற்றப்பட்டது. இக்காவியம் இயற்றியமைக்காக, அப்புலவர்க்கு அரைவேலி இரண்டு மா அளவுள்ள நிலம் இம்மன்னனால் பரிசாக அளிக்கப்பட்டது[22].

கி.பி. 1086 இல் குலோத்துங்கன் சோழநாடு முழுமையும் அளக்க உத்தரவிட்டான். நிலம் அளக்கப் பட்ட இச்செயலை மேற்கொண்டோர், திருவேகம்ப முடையனான உலகளந்த சோழ பல்லவரையன், குன்றத்தூரான் உலகளந்தானான திருவரங்க தேவன் என்னும் இருவராவார். இம்மன்னனின் படைத்தலைவன் 'புத்த மங்கலமுடையான் ஒற்றியூரன் பூபால சுந்தரனான சோழ கோனார்' என்பவன் ஆவான். கங்கர், கலிங்கர் போன்றோருடன் போர் புரிந்து சோழ நாட்டிற்கு வெற்றி தேடித் தந்த பெருமையினால், குலோத்துங்கன் நெட்டைப் பாக்கத்திற்கு 'பூபால சுந்தர நல்லூர்' என்று இவன் பெயரைச் சூட்டினான்[23]. பூபால சுந்தர சோழ கோனார் போன்றே, 'அருளாகரன்' என்பவனும் சோழரின் சிறந்த படைத்தலைவனாக இக்காலத்தே விளங்கினான். இம்மன்னனின் ஆட்சிக் காலத்தில் திரு புவனை ஏரி செப்பனிடப்பட்டது.

விக்கிரமசோழன் (1120 – 1135)

விக்கிரம சோழன் ஆட்சிக் காலத்தில் திருபுவனை வரதராஜப் பெருமாள் கோவிலின் திருச்சுற்றாலை, திருநந்தவனம் அமைப்பதற்கு ஊர்ச்சபையினரால் நிலம் கொடுக்கப்பட்டது. இக்காலத்தில் அரச மகளிர்க்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வைசியர்க்கும் பிறந்த 'ஆயோகவன்' என்னும் இனத்தவர் இறைவன். அரசன் ஆகியோர்க்கு ஆடை நெய்து அளிக்கும் உரிமையைப் பெற்றிருந்தனர். திருபுவனையில் வாழ்ந்த 'ஆயோகவன்' இனத்தார்க்கு இறையிலியாக நிலம் அளிக்கப்பட்டிருந்தது. மதகடிப்பட்டு ஊரும், கோவிலும் அக்காலத்தில் திரிபுவன மாதேவிச் சதுர்வேதிமங்கலத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது. மதகடிப்பட்டின் நிர்வாகமும், திரிபுவன மாதேவிச் சதுர்வேதிமங்கலத்துச் சபையி னராலேயே நடத்தப்பட்டு வந்தது.

முதலாம் குலோத்துங்கனின் மகனான விக்கிரமசோழன் காலத்தில் (கி. பி. 1134) ஒழுகரைக்கு, குலோத்துங்கசோழ நல்லூர் என்னும் பெயர் வழங்கப்பட்டு வந்தது. ஒழிந்தியாப்பட்டுக் கல்வெட்டு, ஒழுகரையை 'மாத்தூர் நாட்டு ஒழுகரையான குலோத்துங்கசோழ நல்லூர்' என்றே குறிப்பிடுகின்றது. அக்காலத்தில் திருவக்கரைக்குத் தெற்கும், திருபுவனைக்கு வடக்கும், விழுப்புரத்திற்கு கிழக்கும், புதுசேரிக்கு மேற்கும் உள்ள பகுதியே 'மாத்தூர் நாடு' என்று பெயர் பெற்றிருந்தது. குலோத்துங்கன் காலத்திலும் விக்கிரமசோழன் காலத்திலும் பண்டசோழ நல்லூர் 'திருமுடவன் பள்ளி' என்றழைக்கப்பட்டு வந்தது. மதகடிப்பட்டுக் கல்வெட்டு, 'சந்திரசேகரன் திருமுடவன்' என்னும் சிவபிராமணனைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.[24] இப்பிராமணனின் நினைவாகக் கட்டப்பட்ட பள்ளிப்படைக் கோயிலே, 'திருமுடவன் பள்ளி' ஆகும். கோயிலுக்கு வழங்கப்பட்ட இப்பெயர் நாளடைவில் அதைச் சார்ந்த ஊருக்கும் பெயராக வழங்கி வரலாயிற்று. இப்பெயர் விக்கிரம சோழன் காலம் வரைதான் வழக்கில் இருந்து வந்தது. பின்னர் இரண்டாம் இராசராசன் காலத்தில் அவன் பட்டப் பெயரால் (பண்டித சோழன்) 'பண்டித சோழ நல்லூர்' என்று வழங்கலாயிற்று. காலப்போக்கில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்பெயரே பண்ட சோழநல்லூர் — பண்ட சோழனூர் என்று மருவி வழங்கி வரலாயிற்று.

மூன்றாம் குலோத்துங்க சோழன் (1178-1216)

முதலாம் இராசராசன் காலத்தில் நல்லாற்றூர் எல்லைக் குட்பட்ட வில்லியனூர் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் மாத்தூர் நாட்டு எல்லைக்குட்பட்ட பகுதியாக விளங்கியது. குலோத்துங்கனின் பட்டப்பெயருள் ஒன்றே 'திருநீற்றுச் சோழன்' என்பதாகும். இப்பெயரால் மூன்றாம் குலோத் துங்கன் காலத்தில் வில்லியனூர் 'திருநீற்றுச் சோழநல்லூர்' என்று வழங்கப்பட்டு வந்தது. மூன்றாம் குலோத்துங்கனின் முப்பத்தேழாவது ஆட்சியாண்டு (1215) முதல் கோப்பெருஞ் சிங்கனின் பதினோராவது ஆட்சியாண்டு (1243) வரை வில்லியனூர் கோவில் கணக்குகள் தணிக்கை செய்யப் பட்டுள்ளன. தணிக்கை செய்த அதிகாரியின் பெயர், 'பெருமங்கலமுடையன் உடைய பெருமாளான காடு வெட்டிகள்' என்பதாகும்.[25] இம்மன்னன் காலத்தில் இருந்த ஊர்க்கரணத்தானாக, 'ஒழுகரை உடையான்' என்பவனைப் பற்றி வில்லியனூர்க் கல்வெட்டு கூறுகின்றது.

வில்லியனூருக்கு வடமேற்கே ஐந்து கி.மீ. தொலைவில் உள்ள 'கோனேரி' என்னும் ஊர் மூன்றாம் குலோத்துங் கனின் பட்டப் பெயரால் வழங்கப்பட்ட ஊரேயாகும். 'ஒழுகரையான குலோத்துங்க சோழ நல்லூர்' என்பது இம்மன்னன் காலத்தில் 'ஒழுகரை' என்னும் பெயர் பெரும்பான்மை வழக்காகவும், 'குலோத்துங்க சோழ நல்லூர்' என்னும் பெயர் சிறுபான்மை வழக்காகவும் வழங்கப்பட்டு வந்துள்ளது. மூலைக்குளம் அக்காலத்தில் ஒழுகரையின் ஒரு பகுதியாகவே இருந்தது. இம்மன்னனின் மூன்றாவது ஆட்சியாண்டில் (கி. பி. 1181) தீர்த்தனகிரி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 'பூபால சுந்தரநல்லூர்' இவனுடைய முப்பத்துநான்காவது ஆட்சியாண்டில் (கி.பி. 1212) திருமாணிக்குழி சாசனத்தில் 'நெட்டைப் பாக்கம்' என்று பொறிக்கப்பட்டுள்ளது. எனவே 'நெட்டைப் பாக்கம்' என்னும் பழைய பெயரே காலப்போக்கில் அவ்வூருக்கே திரும்பவும் வழங்கப்பட்டு வந்துள்ளது.

பிற்காலச் சோழராட்சியின் வீழ்ச்சி
கோப்பெருஞ்சிங்கன் (1232—1243)

தென்னார்க்காடு மாவட்டம் சேந்தமங்கலத்திலிருந்து தொண்டைமண்டலப் பகுதியை அரசாண்ட கோப்பெருஞ் சிங்கன் பல்லவர் சந்ததியில் வந்தவனாவான். மூன்றாம் இராசராச சோழனின் ஆட்சிக்குட்பட்ட குறுநில மன்னனாக இருந்த கோப்பெருஞ்சிங்கன், மூன்றாம் இராசராசனையே தெள்ளாற்றுப் போரில் வெற்றி கொண்டு, தொண்டைமண்டலத்தைக் கைப்பற்றினான். திருவக்கரை, திருபுவனை, வில்லியனூர் கோயில்களில் இவன் காலத்திய கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் 'கோக்கிழானடிப் பேரேரி' என்னும் பெயர் மாறி, 'திரிபுவன மாதேவி ஏரி' என்னும் பெயரே வழங்கப் பட்டு வந்தது. இம்மன்னனின் திருவக்கரை சாசனம் ஒழுகரை ஏரியின் மதகு, வாய்க்கால் போன்றவை சீர் செய்யப்பட்ட செய்தியைக் கூறுகின்றது. பிற்காலத்தில் ஒழுகரை ஏரியே ஊசுட்டேரியாக பெயர் மாற்றம் பெற்றிருக்கலாம்.

கோப்பெருஞ்சிங்கனின் மூன்று கல்வெட்டுகளில் வில்லியனூரின் பெயர் 'வில்லியநல்லூர்' என்றே பொறிக்கப் பட்டுள்ளன. கி. பி. 5-ஆம் நூற்றாண்டிற்கு முன்பு வில்லியர் என்னும் இனத்தவர் சேர்ந்து வாழும் பகுதியாக இது விளங்கியதால் இவ்வூருக்கு வில்லிய(ர்) நல்லூர்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னும் பெயர் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். சங்க காலத்தில் இருந்த 'வில்லோர் குறும்பும்' ஈண்டு நினைவு கூரத்தக்கது. தலபுராணத்தின் அடிப்படையில் பிற்காலத்தே தான் வில்லியனூர் 'வில்வநல்லூர்' என்றழைக்கப்பட்டது. கி.பி. 13ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பிற்காலப் பாண்டியனான சடையவர்மன் சுந்தரபாண்டியன் சேந்த மங்கலத்தை முற்றுகையிட்டு, கோப்பெருஞ்சிங்கனைத் தோற்கடித்து, தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிக் கொண்டான்.

பிற்காலச் சோழர் சமுதாய நிலை

சோழர் ஆட்சிக்குட்பட்ட நிலத்தை எல்லாம் அளந்த செயல் முதலாம் இராசராசன் காலத்தில்தான் முதன் முதலில் நடைபெற்றது. நிலம் அளக்கப் பயன்படுத்தப் பட்ட கோல் 'உலகளந்த கோல்' என்றழைக்கப்பட்டது. சோழராட்சியில் 1. ஊர்ச்சபை 2. புண்ணிய கணப் பெருமக்கள் சபை என்னும் இரண்டு வகையான சபையினர் ஊராட்சி நிர்வாகத்தைக் கவனித்து வந்தனர். சம்வத்சர வாரியம், கலிங்கு வாரியம், ஏரி வாரியம், தோட்ட வாரியம் என்று பல வாரியப் பிரிவுகளாக இச்சபை செய லாற்றி வந்தது. சுப்பிரமணியப் பட்டன், திருநீலகண்ட னான தட்சிணாமூர்த்தி பட்டன், சதாசிவப் பட்டன், ரிஷப வாகனப் பட்டன், திருச்சிற்றம்பலப் பட்டன் போன்றோர் புண்ணிய கணப் பெருமக்களுள் குறிப்பிடத் தக்கோராவார். ஊர்ச்சபை முடிவிற்குக் கட்டுப்படாதவ ரிடத்தும், மறுத்துரைப்போரிடத்தும் இருபத்தைந்து பொன் தண்டமாக வசூலிக்கப்பட்டது.

முதலாம் இராசராசச் சோழனின் காலத்தில் வரையப் பட்ட திருபுவனைக் கல்வெட்டு ஒன்றில், புதுச்சேரிப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதி கிராமங்களின் பழைய பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. குண்டாங்குழி (மதகடிப்பட்டு), அழகிய சோழ நல்லூர் (பாக்கம்), மோகசு குளத்தூர் (மோட்ச குளம்), திருபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலம் (திருபுவனை), திருமுடவன் பள்ளி (பண்ட சோழனூர்), நேரிய நல்லூர் (பள்ளி நேலியனூர்), கோவிந்தசேரி (ஆழியூர்), அருகூர் (அரியூர்), நல்லாற்றூர் (நல்லாத்தூர்), ஏமலம் (ஏம்பலம்), கழுக்குளான் பாக்கம் (கரிக்கலாம் பாக்கம்), அழிசுப் பாக்கம் (அபிஷேகப் பாக்கம்), அயிற்றூர் (சிங்கிரி கோயில்), கோக்காட்டூர் (கோர்க்காடு) உருவாற்றூர் (உருவையாறு), தெங்கம்பாக்கம் (தென்னம்பாக்கம்), வழுதலூர் (வழுதாவூர்), ஒழுக்கை வடகரை (ஒழுகரை) முதலிய ஊர்கள் அக்கல்வெட்டில் இடம் பெற்றுள்ளன.

பிற்காலச் சோழராட்சியில் விசயாலயன் காலமுதல், முதலாம் இராசராசன் காலம் வரை பல்லவர் காலக் கோவில் கட்டிடக் கலை அமைப்பே பின்பற்றப்பட்டு வந்துள்ளது. முதலாம் இராசராசன் காலத்தில்தான் புதிய முயற்சிகளும், சாதனைகளும் கோவில் கலைப் பணியில் மேற்கொள்ளப்பட்டன. கோவிலில் தேவாரம் ஓதியவர்கள் 'பிடாரர்கள்' என்றழைக்கப்பட்டனர். முதலாம் இராசேந்திர சோழன் காலத்திய முகத்தல் அளவைக் கருவிகள், "திருமூலன் மரக்கால்" "திருமூலன் நாழி" என்று இறைவன் பெயராலேயே அழைக்கப்பட்டு வந்தன.

சோழராட்சியில் திருபுவனை உயர்ந்த நிலையில் சிறப்புற்று விளங்கியது. திருபுவனை, திருவாண்டார் கோயில், மதகடிப்பட்டு ஆகிய இடங்களில் இருந்து மூவோ துய்ப்ராய் அவர்களால் கொண்டு வரப்பட்டு, புதுவை ராஜ் நிவாஸ், பாரதி பூங்கா, பிரஞ்சிந்தியப் பண்பாட்டுக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கழகம், பொது மருத்துவமனை ஆகிய இடங்களில் வைக்கப் பட்டுள்ள சிலைகள் அனைத்தும் பிற்காலச் சோழர் காலத்தனவே. முதலாம் இராசாதிராசன் காலத்தில் திருபுவனையில் செயல்பட்டு வந்த வடமொழிக் கல்லூரியில் பன்னிரண்டு ஆசிரியர்களும், நூற்றுத்தொண்ணூறு மாணவர்களும் இருந்தனர் இக் கல்லூரியில் கற்பிக்கப் பட்டவை, ரிக் வேதம், யசூர் வேதம், சந்தேக சாமம், தலவிகார சாமம், அபூர்வம், வாஜசநேயம். போதாயனீயம், போன்றவையாகும். ஸ்ரீ பாரதம், மனுசாத்திரம், இராமா யணமும் போதிக்கப்பட்டன.[26] கல்லூரி ஆசிரியர்க்கு ஊதியமாக நாள்தோறும் நான்கு கலம் நெல் அளிக்கப் பட்டது. நூற்றுத்தொண்ணூறு மாணவர்கட்க்கும் கலனே குறுணி நானாழி நெல் அளித்தனர். கல்லூரி நிர்வாகத் திற்காக ஏழுவேலி நிலம் மானியமாக அளிக்கப்பட்டிருந்தது. அந்நிலத்திலிருந்து ஆண்டுதோறும் கிடைத்து வந்த ஆயிரத்தி இருநூறு கலம் நெல் கல்லூரிக்கு ஆகும் செலவை ஈடுகட்டப் போதுமானதாக இருந்தது.

அக்காலத்தில் ஊர்க்கட்டுப்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. திரிபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலத்துக் கிராமங்களில் பணியாற்றிய பட்டர், உபாத் தியாயர், கணக்கர், தச்சர், கொல்லர் முதலானோர் தத்தம் தொழிலைத் தத்தமது ஊரிலேயே செய்தல் வேண்டுமென்றும், வேற்றூர் சென்று தொழில் செய்தால் சபைக்குக் குற்றம் இழைத்தோராகக் கருதப்பட்டு தண்டம் விதிக்கப்பட்டனர்.[27] கி.பி. 1018–இல் திருபுவனை வீர நாராயண விண்ணகராழ்வார் கோயில் முற்றத்தில் அரசு அதிகாரியான 'கச்சின முடையார்' முன்னிலையில் ஊர்ச் சபை கூடி, திருபுவன மாதேவிச் சதுர் வேதி மங்கலத்தில் உள்ள ஏரியைப் பராமரிக்கும் பொருட்டு, 'ஏரி ஆயம்' என்னும் வரியினை விதிக்கச் சபையினரால் முடிவெடுக்கப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பட்டது. கோவிலுக்குச் சொந்தமான அணிகலன்கள், பொற்காசுகள், நெல் போன்றவற்றைப் பாதுகாப்பாகச் சேமிக்கும் இடம் 'பண்டாரம்' என்றழைக்கப்பட்டது. முதலாம் குலோத்துங்கன் காலத்தில் ஆண்டுதோறும் கோயிற் கணக்குகள் தணிக்கை செய்யப்படும் முறை இருந்து வந்துள்ளது.

சோழர் காலத்தில் ஏரி ஆழப்படுத்தும் பணிபற்றிக் குறிப்பிடும்போது, ''வாகூரிலேயே வழிவழியாகக் குடியிருப்பவர்கள், புதிதாகக் குடியேறியவர்கள் ஆகிய இருதரப்பினருள்ளும் தீண்டத்தகாதவர்களை நீக்கி எஞ்சியுள்ளவர்களில் பதினாறு வயதுக்குமேலும் எண்பதுவயதுக்கு உள்ளும் உள்ள ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் ஒருகுழி அளவுள்ள மண்ணை அப்புறப்படுத்தி ஏரியை ஆழப்படுத்த வேண்டும்'' என்று பாகூர்க் கல்வெட்டு கூறுகின்றது.[28] மணமக்கள் திருமண நாளில் செலுத்தும் வரி 'கண்ணாலக் காணம்' என்றழைக்கப்பட்டது. வாகூர் நாட்டு எல்லைக்குள் இருக்கும் 'மன்றாடிகள்' (மணமக்கள்) தமது திருமணத்தின் போது ஓர் ஆடு வரியாகக் கொடுக்க வேண்டும். வாகூர் நாட்டு எல்லையிலிருந்து அப்பால் இந்நாடு வந்து திருமணம் செய்து கொள்ளும் மன்றாடிகளும் இவ்வாணைக்கு உட்பட்டவரேயாவார். இவ்வாறு செலுத்தத் தவறியவரிடமிருந்து இரண்டு ஆடுகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை அறங்காவலரும், தேவரடியாரும் பெற்றிருந்தனர்.

சோழர் காலத்தில் ஊர்ச்சபை அதிகாரிகள், நிர்வாகிகள் போன்றோர் குடவோலை முறையில் தேர்வு செய்யப்பட்டனர். குடவோலைத் தேர்தல் முறை பற்றித் உத்திரமேரூர்க் கல்வெட்டு, விரிவாகக் கூறுகின்றது.[29] ஒவ்வொரு தொகுதியிலிருந்தும், தகுதி வாய்ந்தவர்களின் பெயர்களை ஓலை நறுக்குக்கு ஒரு பெயராக எழுதி அந்நறுக்குகளைத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திரட்டிக் கட்டி அதன் நடுவில் வேறு ஓலை நறுக்கு நுழையாதபடி கட்டிவிடுவர். இவ்வாறு ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியே கட்டுகள் தயாரித்து, அவற்றைக் குடத்திலிடுவர். சபையில்ஊரார் அனைவர் முன்னிலையில் முதியவர் ஒருவர் ஒரு ஓலைக் கட்டின் நூல்களை நீக்கி ஓலைகளை உதிரியாக்கிக் குடத்திலிடுவார். பின்னர் விவரம் அறியாத சிறுவன் ஒருவன் குடத்திலிட்ட ஓலை நறுக்குகளில் ஒன்றை எடுத்துச் சபையோரிடம் கொடுப்பான். சபையோர் அதனைப்பெற்று அனைவரும் அறியும்படி உரக்கப் படிப்பர். இவ்வாறு ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் உறுப்பினரைத் தேர்வு செய்வர். இவர்களின் பதவிக் காலம் ஓர் ஆண்டு தான். பதவிக்காலத்தில் குற்றமிழைப்போர் காலதாமதமின்றி நீக்கப்படுவார். தேர்தலில் போட்டியிடுவதற்குரிய தகுதிகள் – (1) கால் நிலத்திற்கு மேல் அரை நிலம் உடையவராய் இருத்தல் வேண்டும். (2) வயது வரம்பு – முப்பத்தைந்துக்கு மேலும் எழுபதுக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். (3) வேதம் அறிந்தவனாகவும் ஆசாரம் உடையவனாகவும் இருத்தல் வேண்டும். (4) அர்த்த சௌசமும் (பொருள் சுத்தம்), ஆன்ம சௌசமும் (மனத்தூய்மை) உடையவராய் இருத்தல் வேண்டும்.

5. பிற்காலப் பாண்டியரின் எழுச்சியும் வீழ்ச்சியும்

மூன்றாம் குலோத்துங்கனுக்குப் பிறகு வந்த சோழ மன்னர்களான மூன்றாம் இராசராசன், மூன்றாம் இராசேந்திரன் போன்றோர் வலிமையற்றவராய் ஆட்சி புரிந்தனர். கி.பி. 1216இல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் விடுதலை வேட்கையோடு வீறுகொண்டு மதுரையை மீட்டு, பிற்காலப் பாண்டியப் பேரரசுக்கு அடிக்கல் நாட்டினான். கி.பி. 1231க்குப் பின்னர், மூன்றாம் இராசராசன், மூன்றாம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இராசேந்திரன் போன்ற சோழ மன்னர்கள் பாண்டியருக்கு அடங்கித் திறை செலுத்தும் சிற்றரசராக மாறினர்.

சடையவர்மன் சுந்தர பாண்டியன் (1251—1268)

கி. பி. 1251இல் அரியணை ஏறிய சடையவர்வன் சுந்தரபாண்டியன் சோழரையும் போசளரையும் வென்று வடக்கே கிருஷ்ணா நதி வரை, பாண்டியராட்சிப் பரப்பை விரிவு செய்தான். சேந்தமங்கலத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த கோப்பெருஞ்சிங்கனைத் தோற்கடித்து, தொண்டை மண்டலத்தைப் பாண்டிய ராட்சிக்கு உட்படுத்திக் கொண்டான். இவன் பிரதிநிதி யாகத் தொண்டை மண்டலத்தை ஆட்சி புரிந்தவன், சடையவர்மன் வீரபாண்டியன் ஆவான்.

இவன் காலத்தில் திருவந்திபுரம் தேவநாயகப் பெருமாள் கோவிலுக்கு அளிக்கப்பட்டிருந்த நிவந்தத்தில் கையெழுத்திட்டுள்ள அரசியல் அதிகாரி, "ஒழுகரை பனைப்பாங்கிழான் வெளான் ஆபரணமிட்டானான அரிந்தமன் மூவேந்த வெளான் எழுத்து" என்று குறிக்கப் பட்டுள்ளான்.[30] இதனால் அக்காலத்து ஒழுகரை, அரசியல் அதிகாரிகள் வாழ்விடமாக இருந்து வந்துள்ளமை புல னாகும். மற்றொரு அரசியல் அதிகாரியான 'ஒழுகரை மகாதேவ பூரிபட்டன்' என்பவன் திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்து ரிஷிகேசவச்சேரியில் இருந்து பணியாற்றியவனாக மதகடிப்பட்டு சாசனம் கூறுகின்றது.[31] மூன்றாம் குலோத்துங்கன் காலத்தவனான அபிமான சோழ மூவேந்த வேளாண் என்ற அதிகாரியும், இப்பாண்டிய மன்னன் காலத்தவனான தில்லை நாயக மூவேந்த வேளாண் என்ற அதிகாரியும், நெட்டைப் பாக்கத்தைச் சேர்ந்தோ ராவார். இவர்கள் பேரரசின் பெருத்தனத்து அதிகாரிகள் அல்லர். சிறுபாடிக் காவல் பொறுப்பை மேற்கொண்டிருந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதிகாரிகளாவார். முதலாம் குலோத்துங்கன் காலத்தில் நெட்டைப் பாக்கத்திற்குச் சூட்டப்பட்டிருந்த பூபால சுந்தரநல்லூர் என்னும் பெயர் அவன் காலத்திற்குப் பிறகு நிலைக்கவில்லை. பாண்டியர் காலத்தில் இதன் பழைய பெயரான நெட்டைப் பாக்கமே மீண்டும் வழங்கலாயிற்று.

மாறவர்மன் விக்கிரமபாண்டியன் (1268–1281)

'இராசாக்கள் நாயகன்' எனப் போற்றப்பட்ட மாறவர்மன் விக்கிரம பாண்டியன் நடுநாடு, தொண்டை நாடு ஆகிய பகுதிகளுக்குப் பாண்டிய நாட்டின் பிரதி நிதியாக இருந்து அரசாண்டு வந்தான். மாறவர்மன் குல சேகர பாண்டியனின் இளவலான விக்கிரம பாண்டியன் காலத்தில் ஒழுகரை அருகே உள்ள பூங்குன்றம் கிராமவாசி 'கோட்டூர் குமரன் அம்பல தேவன் சேதிராயன்' என்பவன் திருவதிகை சிவன் கோவிலுக்குப் பல சிறப்புகளைச் செய்துள்ளான். இம்மன்னனின் ஆட்சியில் தொண்டை மண்டல அதிகாரிகளாக விளங்கிய அரிந்தம மூவேந்த வேளாண் (ஒழுகரை), தில்லைநாயக மூவேந்த வேளாண் (நெட்டைப்பாக்கம்), கனகநாடு உடையான் (ஏரிப்பாக்கம்), வானவன் பல்லவரையன், அரையன் பேசும் பெருமாள் (அழிசுப்பாக்கம்) போன்றோர் குறிப்பிடத்தக்கோராவார்.

மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் (1333-1334)

பராக்கிரம பாண்டியனது இரண்டு சாசனங்கள் வில்லியனூர் கோவிலில் கிடைத்துள்ளன. 'ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மாத்தூர் நாட்டு ஒழுகரையான குலோத்துங்க சோழ நல்லூர் பிடாகை வில்லியநல்லூர்'[32] என்று கல்வெட்டு குறிப்பிடுவதால் இக்காலத்தில் வில்லியனூர் ஒழுகரைக்கு உட்பட்ட பகுதியாகவே விளங் கியது. இம்மன்னனின் ஆட்சிக் காலத்தில் வ்ல்லியனூர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இறைவன் திருக்காமீசுரமுடையார்க்கு ஆண்டுதோறும் வைகாசித் திங்களில் விழா எடுக்கப்பட்டு வந்தது.

பிற்காலப்பாண்டியர் சந்ததிகளுக்குள் (வீரபாண்டியன், சுந்தரபாண்டியன்) ஏற்பட்ட அரியணைச் சண்டையில் இடையீடு செய்த மாலிக்காபூரின் படையெடுப்பு தமிழகத்தின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இப்படையெடுப்பின் பின்னர் தமிழ்வேந்தர் யாரும் தலையெடுக்க முடியாமற் போயிற்று.

சம்புவரையர் ஆட்சி (1339 - 1363)

பிற்காலச் சோழர்க்கு அடங்கியவராகவும், அவர்க்கு உறுதுணையாகவும் விளங்கிய சம்புவரையர் சோழரின் வீழ்ச்சிக்குப் பின்னர், பாண்டியராட்சிக்குட்பட்டு, கப்பம் செலுத்தும் சிற்றரசராக விளங்கினர். இவ்வகையில் குலசேகரச் சம்புவரையன் (1317—1318) பாண்டியர்க்கு அடங்கிய சிற்றரசாய் விளங்கியவருள் குறிப்பிடத்தக்கவனாவான். இசுலாமியர் ஊடுருவலால் பிற்காலப் பாண்டியர் வீழ்ச்சியுற்றனர். இசுலாமியரின் ஆட்சிப்பிடியிலிருந்து தொண்டை மண்டலத்தின் ஒரு பகுதியை மீட்டு, சுதந்திர ஆட்சியை நிறுவியவன் ஏகாம்பரநாதச் சம்பு வரையன் (1321--1339) ஆவான். இவன் முகமதுபின் துக்ளக்கின் ஆட்சியதிகாரிகளை விரட்டியடித்துவிட்டு, 'சகலோகச் சக்கரவர்த்தி' என்று முடிசூட்டிக் கொண்டான்.

ஏகாம்பரநாதச் சம்புவரையன் மகனான இராச நாராயணச் சம்புவரையன் (1339—1363) காலத்தனவாக மூன்று கல்வெட்டுகள் வில்லியனூர் கோவிலில் கிடைத்துள்ளன. சம்புவரையருள் இவன் ஆட்சிக் காலத்தில் தான் தொண்டை மண்டலம் சிறப்புற்று விளங்கியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வடக்கே வேலூர் வரையும், தெற்கே கடலூர் (புதுச்சேரி உள்ளிட்ட பகுதி) வரையிலும் இம்மன்னனின் ஆட்சி எல்லை விரிந்திருந்தது. 'ராஜ கம்பீர' என்னும் சிறப்பு பட்டத்தையும் இம்மன்னன் பெற்றிருந்தான். இவன் ஆட்சிக்காலத்தில் வில்லியனூர் இறைவனுக்கு எண்ணூற்று முப்பத்தைந்து குழி நிலம் தேவதானமாக விடப்பட்டிருந்தது. இந்நிலம் பரியனேரிக்குப் பக்கத்தில் இருந்ததாகக் குறிப்புள்ளது. கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் ஒழுகரை ஏரியாகவும் சம்புவரையர் காலத்தில் பரியனேரியாகவும் பெயர்பெற்றிருந்த ஏரியே பிற்காலத்தில் நாயக்க மன்னராட்சியில் ஆழப்படுத்தும்போது 'ஊசுடு ஏரி' என்னும் பெயர் பெற்றது. கர்நாடகப் போரின்போது பாதுகாப்பிற்காக நாசர்ஜங்கு தமது படைகளுடன் இவ்வேரியில் வந்து தங்கியிருந்ததாக 'கர்நாடக ராசாக்கள் சரித்திரம்' நூல் செப்புகின்றது.[33]

6. விசயநகர வேந்தராட்சி

கி. பி. 1363இல் விசயநகர வேந்தன் முதலாம் புக்கரின் மகன் குமார கம்பண்ணன், தெற்கே படையெடுத்து வருகையில், இராச நாராயணச் சம்புவரையனைத் தோற்கடித்து, தொண்டை மண்டலத்தை விசயநகர வேந்தராட்சிக்கு உட்படுத்திக் கொண்டான். விசயநகர வேந்தன் இரண்டாம் கம்பண்ணனின் படைத்தலைவருள் ஒருவனான சாளுவ மங்கு தேவனின் (கி. பி. 1370) கல்வெட்டும் முதலாம் புக்கரின் மகன் அரியன உடையார் (1377 - 1404) காலத்து மூன்று கல்வெட்டுகளும் வில்லியனூர் கோவிலில் கிடைத்துள்ளன. இவை அக்காலத்தில். சிவன் கோவிலுக்கு அளிக்கப்பட்ட நிவந்தங்கள் பற்றியே கூறுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிருஷ்ண தேவராயர் காலத்தில் அவர் பிரதிநிதியாக வேலூரில் வையப்ப நாயக்கர் என்பவர் ஆட்சி புரிந்து வந்தார். தொண்டை மண்டலமும் இவர் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. பின்னர் செஞ்சியைத் தலைநகராகக் கொண்டு, தொண்டை மண்டலம் முழுவதும் வையப்ப நாயக்கர் (1526-1541) ஆட்சி செலுத்தும் காலத்தில்தான் கிருஷ்ணதேவராயர் தென்னாட்டிற்கு வருகை புரிந்தார். நாயக்கப் பிரதிநிதியருள் இரண்டாம் விருப்பாட்சராயர் (1465—1485), அச்சுத தேவர் (1530—1542), சதாசிவ தேவ மகராயர் (1550), ஸ்ரீ ரங்க தேவர் (1575) ஆகியோரின் கல்வெட்டுகள் வில்லியனூர் சிவன் கோயிலில் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் யாவும் வில்லியனூர் சிவன் கோயிலின் கிழக்கு, தெற்குக் கோபுரங்கள் கட்டப்பட்ட செய்தியைத் தெரிவிக்கின்றன. பிற்காலத்தில் இக் கோபுரங்கள், பிரான்சுவா மர்த்தேன், துய்ப்ளேக்சு ஆகியோர் ஆளுநராயிருந்தபோது போர்க்கண்காணிப்பு நிலையங்களாகச் செயல்பட்டு வந்துள்ளன. அச்சுத தேவராயர் (1530—1542) காலத்தில் வில்லியனூர் 'வில்லை நல்லூர்' என்று அழைக்கப்பட்டு வந்தது. கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வீரராகவ கவியால் இயற்றப்பட்ட வில்லைப் புராணத்தின் அடிப்படையில் இவ்வூருக்கு இப்பெயர் வழங்கப்பட்டிருக்க வேண்டும். 'வில்வ நல்லூர்' என்னும் பெயரும் இக்காலத்தே வழங்கப்பட்டு வந்துள்ளது. அச்சுத (தேவ)ராயர் கால முதலே இவ்வூருக்கு வில்லியனூர் என்னும் பெயர் வழங்கப்பட்டு வந்திருக்கின்றது. விசய ராயர் காலத்தில், 'வில்லை முத்துக்குமாரர் பிள்ளைத் தமிழ்' என்னும் நூல் அருணாசலக் கவி என்பவரால் இயற்றப்பட்டு, அரங்கேற்றப்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாயக்கராட்சியின் வீழ்ச்சி

வையப்ப நாயக்கருக்குப் பின் அவரது மகன் துபசி கிருஷ்ணப்ப நாயக்கரும் (1544—1554), அவருக்குப்பின் அவரது மகன் சூரப்ப நாயக்கரும் செஞ்சிப் பிரதிநிதியாய் இருந்து அரசாண்டனர். இவர்களுள் துபசி கிருஷ்ணப்ப நாயக்கரின் ஆட்சியே சிறப்புடையதாயிருந்தது. கி. பி. 1649 இல் பீஜப்பூர் சுல்தான் படையெடுப்பினால் விசய நகரம் வீழ்ச்சியுற்றது. அதைத் தொடர்ந்து செஞ்சியிலும் நாயக்கராட்சி முடிவுக்கு வந்தது. பீஜப்பூர் சுல்தான் ஆக்கிரமிப்பினால் செஞ்சியின் முதல் கில்லேதாராக சையத் நாசிர் கான் என்பவன் பொறுப்பேற்றான். இவனுக்குப் பின் நாசிர் முகமதுகான் செஞ்சி கில்லேதாராக வந்தான். இவன் காலத்தில் தான் தமிழகத்திற்கு ஆங்கிலேயரும், பிரஞ்சியரும் வருகை தரத் தொடங்கினர். நாசிர் முகமது கானிடம் கி. பி. 1673 இல் பிரஞ்சியர் வணிக ஒப்பந்தம் செய்து கொண்டு, புதுச்சேரியில் பிரஞ்சுக் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தை ஆரம்பித்தனர். பின்னர் 1677 இல் சத்ரபதி சிவாஜி செஞ்சியைக் கைப்பற்றினார். முகமதிய சுல்தான்களின் ஆட்சியில் செஞ்சியும் புதுச்சேரியும் சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாயின, என்று 'பிரான்சிஸ் ஆந்த்ராஃபிரேயர்' (Fr. Andra Frerire) கூறுகின்றார்.[34]

நாயக்கர் காலப் புதுச்சேரி சமுதாயம்

வில்லியனூர் சிவன்கோவிலின் கோபுரங்கள் மட்டுமின்றி அக்கோவில் தூண்கள் பலவும், நாயக்கர் காலத்தைச் சேர்ந்தனவாகும். பெரும்பாலும் சோழர் காலத் தூண்களின் அமைப்பை அடியொற்றியே இத் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. அச்சுத தேவராயர் காலத்தில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(கி. பி. 1542) வில்லியனூரில் நடைபெற்ற 'உரிமைக் கிளர்ச்சி' ஒன்று அக்காலத்திய முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்பட்டது.[35] கைக்கோளர்க்குரிய விருதுப் பெயர்களான கண்டியதேவன், காலிங்கராயன், பட்ட மானங் காத்தான், உலகெலாம் வென்றான் போன்ற பெயர் களை வேறுயாரும் பயன்படுத்தலாகாது என்று செப்புப் பட்டயத்தில் 'உரிமைப் பட்டயம்' எழுதித் தரப்பட்டது. இப்பட்டயத்தின் உண்மைப் பிரதி காஞ்சிபுரத்திலும், நகல் வில்லியனூர் கோவிலிலும் பாதுகாக்கப் பட்டன. ஆனால் சில நாட்களில் கைக் கோளர்க்குரிய விருதுப் பெயர்களை வெற்றிலை வணிகரும் புனைந்து கொள்ளத் தொடங்கினர். அரசு அதிகாரிகள் சிலர் கைக்கூலி பெற்றுக் கொண்டு இச் செயலைக் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டனர். கைக் கோளரின் முயற்சியால் உயர் அதிகாரி விசயராயன் முன்னிலையில் விசாரணை நடத்தப் பட்டு நீதி வழங்கப்பட்டது.

கிருஷ்ண தேவராயரும், அப்பாஜியும் தென்னாட்டு விஜயத்தின் போது ஒழுகரையில் உள்ள உய்யக்கொண்ட விசுவராய முதலியாரின் உள்ளங்காலில் முடிவளர்ந்திருப் பதாகக் கேள்விப்பட்டு, ஒழுகரைக்கு வந்தனர். ஒழுகரைக்கு அருகில் உள்ள முத்தரையர் பாளையத்தில் ஆயி மாளிகையைப் பார்த்து அதிசயித்து விட்டு, ஆலயமாக இருக்கலாம் என்றெண்ணித் தொழுதனர். தாசி வீட்டை மன்னன் தொழ நேர்ந்த பாவத்திற்குப் பரிகாரமாக 'ஆயி' தன் பெயரால் குடிநீர்க் குளம் ஒன்று வெட்டினாள். இந் நிகழ்ச்சி கி. பி. 16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நடந்தது. இக்குளத்திலிருந்து தான் பின்னாளில் புதுவைக்குக் குடிநீர் கொண்டு வரப்பட்டது. பிரான்சில் மூன்றாம் நெப்போலியன் (1852—1870) காலத்தில் புதுச் சேரி ஆளுநர் அலெக்சாண்டர் டியுரான்டு துய்ப்ராய்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆணையால், (ஆயி) குடிநீர்க் கொடையின் நினைவாக புதுச்சேரி, ஆளுநர் மாளிகை முன்பு ஜலமாளிகை அமைக்கப் பட்டது. அதன் பின்னரே அங்கு மண்டபம் கட்டப்பட்டு, 'ஆயிமண்டபம்' என்று வழங்கப்படலாயிற்று.

சான்றெண் விளக்கம்

1. இராஜாராம், கி, புதுவைப் பகுதியில் பழைய கற்காலக் கோடரி கண்டுபிடிப்பு, 'வரலாற்றுச் சுவடுகள், தொகுதி-1., ப-93.
2. மே. நூல், ப-94.
3. Ramasamy, A., History of pondicherry, p-8.
4. குப்புசாமி, சு. "பாகூர் ஈமத்தாழி," Revue Historique De Pondicherry, Vol-12, 1974-75.P-9.
5. Ancient India, No. 2. July 1946, P-19.
6. அகநானூறு, பா-206.
7. Revue Historique De pondicherry Vol.11, 1973, P-84.
8. Revue Historique De Pondicherry Vol. 10, 1972, PP-41.42.
9. மே. நூல். ப-42
10. Ramasamy, A., History of Pondicherry, p-20.
11. இராஜாராம், கி. 'கிருமாம்பாக்கம் புத்தர் சிலை,' வரலாற்றுச் சுவடுகள், தொ-1, ப-95.
12. 'Epigraphia Indica,' Vol 18, No, 2.
13. குப்புசாமி, சு., 'கல்வெட்டுகளில் புதுவைப் பகுதிகள்' ப-18.
14. மே. நூல், ப-25.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

15. காசிநாதன், நடன., 'காலச் சுவடுகள்' ப–29.
16. குப்புசாமி, சு., 'கல்வெட்டுகளில் புதுவைப் பகுதி கள்', ப–24.
17. மே. நூல், ப–45.
18. மே. நூல், ப-80.
19. மே. நூல், ப-89.
20. மே. நூல், ப-160.
21. A. R. E. 1919, No. 176. Part-II, para-18.
22. A. R. E. 1919, No. 198.
23. குப்புசாமி, சு., 'கல்வெட்டுகளில் புதுவைப் பகுதி கள்', ப-167.
24. 'Temple de Madagadipattou', p-66.
25. A. R. E. 1936-37, No. 186.
26. குப்புசாமி, சு., 'கல்வெட்டுகளில் புதுவைப் பகுதி கள்', ப-73.
27. மே. நூல், ப-76.
28. 'வரலாற்றுச் சுவடுகள்', தொ. 1, ப-82.
29. மே. நூல், ப-83.
30. குப்புசாமி, சு., 'கல்வெட்டுகளில் புதுவைப் பகுதி கள்', ப-162.
31. 'Temple de Madagadipattou', p. 65.
32. குப்புசாமி, சு., 'கல்வெட்டுகளில் புதுவைப் பகுதி கள்', ப. 130.
33. மே. நூல். ப. 164.
34. Srinivasa Chari, C. S., 'A History of Gingee and its Rulers', p. 186.
35. குப்புசாமி, சு., 'கல்வெட்டுகளில் புதுவைப் பகுதி கள்', ப. 151.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. பிரஞ்சியராட்சியில் புதுச்சேரி

பிரெஞ்சுக் கிழக்கிந்திய வணிக நிறுவனம்.

கி.பி. 16ஆம் நூற்றாண்டிற்கு முன்பு புதுச்சேரி ஒரு கிராமம் போலவே இருந்து வந்துள்ளது. 'கொத்தியே ஷுத்தேன்' (Gauthier Choutain) என்னும் பிரஞ்சுக்காரர் தாம் எழுதிய பயண நூலில் சோழ மண்டலக் கரையைக் குறிப்பிட்டுள்ளார். 'தென்றிசையிலிருந்து வடக்கு நோக்கிச் சென்றால் சோழ மண்டலக் கரையில் தரங்கம்பாடி, திருமுல்லைவாயில். பரங்கிப்பேட்டை, தேவனாம்பட்டினம், புதுச்சேரி முதலிய ஊர்களைக் காணலாம்' என்கிறார்.'[1]

கி.பி. 1498இல் வாஸ்கோடகாமா நன்னம்பிக்கை முனை வழியாக இந்து மகா சமுத்திரத்தைக் கடந்து சென்ற நிகழ்ச்சி ஐரோப்பியர் வருகைக்கு வித்திட்டது. அதன் பின்னர் போர்த்துக்கீசியர் இந்தியாவிற்கு வந்து சென்றனர். பின்னர் 1595இல் டச்சுக்காரர்கள் வரத் தொடங்கினர். கி.பி. 1608 இல் செஞ்சி நாயக்கரிடம் அனுமதி பெற்று. டச்சுக்காரர்கள் தேவனாம் பட்டினத் தில் வணிக நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தினர். பின்னாளில் இதுவே செயிண்ட் டேவிட் கோட்டையாக மாற்றம் பெற்றது. டேனிஷ்காரர் 1616 இல் தரங்கம் பாடியில் ஒரு வணிக நிறுவனத்தைத் தொடங்கிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின் புதுச்சேரிக்கு வந்தனர். டேனிஷ்காரருக்குப் பொறுப்பாளராயிருந்த ழீன் பெப்பைன் (Jean Pepin) என்பவர் 1617இல் புதுச்சேரியில் வணிகம் புரிய ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தினார். ஆனால் பிரான்சில் முப்பது ஆண்டுப் போர் தொடங்கியதால் டேனிஷ்காரர் புதுச்சேரியை விட்டுப்போகும் கட்டாயம் ஏற்பட்டது. முப்பதாண்டுப் போர் பிரஞ்சியருக்கு ஒரு திருப்பத்தை மட்டுமின்றி, கடல் வணிகம் செய்ய பெரும் ஊக்கத்தையும் விளைவித்தது.

கி.பி. 1600 இல் தோற்றுவிக்கப்பட்ட ஆங்கிலேயக் கிழக்கிந்திய நிறுவனம், 1616 இல் இந்தியாவிற்கு வந்து மொகலாய மன்னர் ஜஹாங்கீரிடம் அனுமதி பெற்று வங்காளத்தில் ஹூக்லி நதிக்கரையில் ஒரு வணிக நிலையத்தைத் தொடங்கியது. ஐரோப்பியருள் இந்தியாவிற்கு இறுதியாக வந்தவர்கள் பிரஞ்சுக்காரர்களே! கி.பி. 1601 இல் செயின்ட் மாலோ (St. Malo) என்னும் பிரஞ்சு நிறுவனத்தார் வணிக நோக்கில் பிரான்சுவா பிராபர்ட் தெ லாவல், பிரான்சுவா மாத்தேன் என்னும் இரண்டு கப்பல்களை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தனர். நிதிப் பற்றாக்குறை காரணமாக 1611, மார்ச் 2 இல் காலதாமதமாக இரண்டாவது நிறுவனம் தொடங்கப் பட்டது. 1615 இல் மொலுக்கா நிறுவனம் (The Company of Moluccas) என்ற பெயரில் மூன்றாவது நிறுவனம் தோற்றுவிக்கப் பட்டது. 1642 இல் மற்றொரு கிழக்கிந்திய நிறுவனத்தைத் தோற்றுவித்தனர். இந் நிறுவனமும் முந்தைய பிரஞ்சு நிறுவனங்களைப்போலவே தோல்வியைத் தழுவியது. அதே ஆண்டு மடகாஸ்கருடன் பிரஞ்சியர் செய்து கொண்ட வணிக ஒப்பந்தமும் தோல்வியுற்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னர், பிரஞ்சு மன்னர் பதினான்காம் லூயி, நிதி அமைச்சர் 'கொல் பேர்' (Colbert) ஆகிய இருவருடைய கூட்டு முயற்சியால் பிரஞ்சிந்திய வணிக நிறுவனம் (Cla Compagnie Des Indes Orientals) தோற்றம் பெற்றது. இந்நிறுவனத்தின் முதலீடு 15,000 பங்குகளாகும். ஒரு பங்குத் தொகையின் மதிப்பு 1000 லிவர்களாகும் ($2\frac{1}{2}$ லிவர் = 1 ரூபாய்). தொடக்கத்தில் நிறைய பணத்தைச் செலவு செய்து மடகாஸ்கரில் தங்களுடைய குடியேற்றத்தை நிலை நிறுத்திக் கொண்ட பின்னர், பிரான்சின் கவனம் இந்தியாவின் பக்கம் திரும்பியது.

முதல் வணிக நிறுவனம்

கப்புய்சேன் பாதிரிமார்களில் ஒருவரான 'அம்புருவாஸ் தெ பிரேயிலி' (Ambrosie De Preuilly) என்பவர் சூரத்திற்கு நான்கு கல் தொலைவில் உள்ள சுயாலி (Soualy) என்ற ஊரில் வணிக நிறுவனம் ஒன்றைப் பிரஞ்சுக்காரர் அமைத்துக் கொள்ள ஓரிடம் தருமாறு மொகலாயப் பேரரசர் ஔரங்க சீப்பிடம் அனுமதி வேண்டினார். 1666, செம்டம்பர் 4-இல் பெப்பர் – ஔரங்க சீப் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன் அடிப்படையில் சுயாலியில் முதல் பிரஞ்சிந்திய வணிக நிறுவனம் 1666-இல் தோற்றுவிக்கப் பட்டது.[3] பிரஞ்சிந்திய வணிக நிறுவனத்தின் இயக்குநரான கரோன் (Caron) சுயாலி வணிக நிறுவனத்தைச் சூரத்திற்கு மாற்றினார். 1669-இல் கோல்கொண்டா மன்னரிடம் அனுமதி பெற்று, மசூலிப்பட்டனத்தில் ஒரு வணிக நிறுவனம் தொடங்கப்பட்டது. 1670-இல் கண்ணனூர் மன்னரிடம் அனுமதி பெற்று, தெள்ளிச்சேரி, மீர்ஜெவு, ராஜப்பூர் ஆகிய இடங்களை வணிகத்திற்காகப்பெற்றனர். ஆனால் மீர்ஜெவு 1673-இல் பிரஞ்சியரால் கைவிடப் பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதுச்சேரி பிரஞ்சியர் வசமாதல்

1672, ஜுலை 25-இல் பிரஞ்சுத் தளபதி பிளான்கெ தெலா ஹாயே (Blonquet de la Haye) என்பவன் சென்னை சாந்தோமை முற்றுகையிட்டுக் கைப்பற்றினான். இச் செய்தியைக் கேள்விப் பட்டவுடன், ஹைதராபாத் நிசாமின் செஞ்சிப் பிரதிநிதியாகப் பணியாற்றிய நாசிர் முகமது கான் தம்மிடத்தில் வணிகம் புரிய பிரஞ்சிந்திய வணிக நிறுவனத்திற்கு அழைப்பு விடுத்தான்.[4] இவ்வழைப்பை ஏற்றுக் கொண்ட பிளான்கெ தெலா ஹாயே, தன் உதவியாளன் பெல்லான்ழே தெலெஸ்பினே' (Bellenger dc Lespinay) என்பவனைப் புதுச்சேரியைப் பெற்றுக் கொள்ள அனுப்பி வைத்தான். லெஸ்பினே, நாசிர் முகமது கானின் உதவியாளனாகிய ஷெர்கான் லோடியைச் (வலி கொண்டாபுரம் ஆளுநர்) சந்தித்துச் பிரஞ்சிந்திய வணிக நிறுவனத்திற்காக, 1673 பிப்பிரவரி 4இல் புதுச்சேரியைப் பெற்றான்.

பிரான்சுவா மர்த்தேன் Francois Martin (1675—1706)

பிரஞ்சிந்தியாவின் முதல் ஆளுநராக புதுச்சேரியில் 1675, மே 15 இல் பிரான்சுவா மர்த்தேன் பொறுப்பேற்றுக் கொண்டார். 1665இல் பிரஞ்சுக் கிழக்கிந்திய நிறுவனத்தில் ஆண்டொன்றுக்கு 600 பவுன் சம்பளத்தில் வியாபாரியாக நியமிக்கப் பெற்ற மர்த்தேன் மடகாஸ்கர் தீவுக்கு அனுப்பப்பட்டார். அங்கு மூன்றாண்டுகள் தங்கியிருந்த பின்னர் 1664இல்சூரத்திற்குப் பிரஞ்சு நிறுவனத்தின் வணிகராக வந்து சேர்ந்தார். பின்பு தெலாஹாயேயின் உதவியாளராய்ப் பணியாற்றிக் கொண்டிருக்கையில் புதுச்சேரியில் பெல்லான்ழே தெலெஸ்பினேவுக்கு உதவ, அறுபது படை வீரர்களுடன் அனுப்பப்பட்டார். பெல்லான்ழே தெலெஸ்பினேவுக்குப் பின் புதுச்சேரி வணிக நிலையத்தின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நெறியாளராய்ப் பணியாற்றியவர், 'பரோன்' (Baron) 1674, ஜனவரி 15இல் 'கரோன்' (Coron) இறந்த பின்னர், பரோன் (Baron) சூரத்திலுள்ள பிரஞ்சிந்திய வணிக நிறுவனத்தின் இயக்குநராக மாற்றப்பட்டார். பரோனுக்குப் பதிலாக, புதுச்சேரி நிறுவனத்தின் இயக்குநராக, 1675, மே 15இல் பிரான்சுவா மர்த்தேன் பொறுப்பேற்றுக் கொண்டார். புதுச்சேரியில் இப்போதுள்ள பொது மருத்துவமனை, பாரதி பூங்கா, சட்டமன்றம், மகப்பேறு மருத்துவமனை முதலிய பகுதிகள் அக்காலத்தில் பிரஞ்சு வணிக நிறுவனத்திற்கு உட்பட்ட இடங்களாயிருந்தன.

1676, செப்டம்பர் 25இல் ஷெர்கான் லோடிக்காக பிரான்சுவா மர்த்தேன் வழுதாவூர்க் கோட்டையைக் கைப்பற்றிக் கொடுத்தார். அடுத்த ஆண்டே சத்ரபதி சிவாஜி செஞ்சியைக் கைப்பற்றினார். திருவதிகையில் ஷெர்கான் லோடி மராட்டியப் படையால் கொல்லப் பட்டான். மராட்டியரோடு பிரஞ்சியர் நட்பேற்படுத்திக் கொள்ள பிரான்சுவாமர்த்தேன், 50,000 பகோடாக்களை அன்பளிப்பாக சிவாஜியிடம் அனுப்பி வைத்தார். அத் தொகையினைப் பெற்றுக் கொண்ட சிவாஜி தான் கைப்பற்றிய இடங்களில் எல்லாம் (செஞ்சி, புதுச்சேரி உட்பட) மராட்டிய ஹவில்தாரரை நியமித்து ஆண்டு வரச் செய்தான்.

பிரஞ்சு ஆதிக்கத்தை மெல்ல, மெல்ல இந்தியாவில் பரவச் செய்யும் முயற்சியில் மர்த்தேன் தன்னை ஐக்கியப் படுத்திக் கொண்டார். இதில் முதல் முயற்சியாக 1688 அக்டோபர் 17இல் செஞ்சி ஹவில்தார் ஹரிராஜாவிடம் ரூபாய் 11,760 கொடுத்து புதுச்சேரியில் கோட்டை கட்டிக் கொள்ள அனுமதி பெற்றார். மராட்டியர் காலத்தில் செஞ்சி ஹவில்தாரர்களாக இரகுநாத ஹனுமந்தா, ஹர்ஜி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மகதிக், இராஜாராம் போன்றோர் குறிப்பிடத்தக்கோராய் விளங்கினர். இக்கால கட்டத்தில் மார்த்தேன் பிரஞ்சு மன்னர்க்கு எழுதிய கடிதத்தில், ''நம் எதிரிகளான ஆங்கிலேயரும், டச்சுக்காரரும், இந்தியாவில் பலமிழந்து வருகின்றனர். கூடிய விரைவில் அவர்களை விரட்டிவிட்டு நம் ஆட்சியைப் பரவச் செய்வோம்''[5] என்று குறிப்பிட்டுள்ளார்.

புதுச்சேரியைத் தோற்றுவித்து அதனைப் பிரஞ்சியரின் பலம் பொருந்திய நகராக்கியதற்காகவும், 1689இல் சயாம் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட பிரஞ்சுப் படைகளுக்குச் சேவை செய்ததற்காகவும், கோல்கொண்டாவில் மசூலிப் பட்டினத்திலும், வங்காளத்தில் சந்திரநாகூரிலும் வணிக நிறுவனங்களைத் தோற்றுவித்ததற்காகவும் 1692இல் பிரான்சு மன்னர் பதினைந்தாம் லூயி பிரான்சுவா மார்த்தேனை, சோழ மண்டலக்கரை, வங்காளம் இவற்றிலுள்ள வணிக நிறுவனங்களின் நெறியாளராக உயர்த்தினார்.

செஞ்சியின் மராட்டிய ஹவில்தார் ராஜாராமுக்குப் பண நெருக்கடி ஏற்பட்டதால், புதுச்சேரியை விற்க முனைந்தார். அப்போது மார்த்தேனிடம் புதுச்சேரியை வாங்குமளவிற்குப் போதிய பணவசதி இல்லை. இடையில் நுழைந்த டச்சுக்காரர் புதுச்சேரியை விலைக்கு வாங்கினர். தமக்குச் சொந்தமான புதுச்சேரியிலிருந்து, பிரஞ்சியரை விரட்டும் முயற்சியில் 1693, ஆகஸ்டு 30இல் டச்சுக்காரர் முற்றுகையிட்டனர். இப்போரில் பிரஞ்சியர் தோல்வியுற நேரிட்டதால், புதுச்சேரியை விட்டுச்செல்லும் நிலை ஏற்பட்டது. இத்தோல்வியினால், புதுச்சேரியில் பிரஞ்சியரின் இருபது ஆண்டுக்கால முயற்சியும் வீணாயிற்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கி.பி. 1697இல் ஏற்பட்ட ரிஸ்விக் (Ryswick) ஒப்பந்தத்தின் அடிப்படையில் புதுச்சேரி மீண்டும் பிரஞ்சியரிடமே ஒப்படைக்கப்பட்டது. 1699, அக்டோபரில் டச்சுக்காரர் புதுச்சேரியைப் பிரஞ்சியரிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றனர். தொடர்ந்து, மர்த்தேன் புதுச்சேரியைப் பல்வேறு நிலையிலும் முன்னேற்றும் முயற்சிகளில் ஈடுபட்டார். கி. பி. 1700இல் புதுச்சேரியில் நாணயக்கூடம் ஒன்றைக் கட்டி, அரைப்பணம், ஒருபணம், இரண்டுபணம் நாணயங்களை அச்சடித்தார். 1706இல் பிரஞ்சிந்திய நிறுவனத்திற்காக, 10000 பகோடாக்களை அச்சிட்டார். மர்த்தேன் காலத்தில் சூரத்தைக் காட்டிலும் புதுச்சேரி பல துறைகளிலும் வேகமாக வளர்ந்து வரலாயிற்று.

கி.பி. 1703இல் கர்நாடக நவாப் தாவூத்கான் வசமிருந்து காலாப்பட்டும் 1706இல் பாக்க முடையான்பட்டு, முருங்கைப்பாக்கம், ஒழுகரை, உழந்தை, கருவடிக்குப்பம் ஆகிய ஊர்களையும் நிறுவனத்தின் வளர்ச்சிக்காகப் பெற்றார். மர்த்தேன் தம் நினைவுக் குறிப்பில் புதுச்சேரி மணக்குள விநாயகர் கோவில் இடிக்கப்பட்ட நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.[6] இந்நிகழ்ச்சியை அடியொற்றி எழுதப்பட்ட நாட்டுப்புறக்கதை ஒன்றும் இச்செய்திக்கு ஆதாரமாக விளங்குகின்றது [7]

புதுவையின் பாதுகாப்பிற்காகக் கட்டத் தொடங்கப்பட்ட செயின்ட் லூயி கோட்டை 1706 ஆகஸ்டு 25இல் கட்டி முடிக்கப்பட்டது. புதுச்சேரியில் பிரான்சுவாமர்த்தேனின் இறுதிச் சாதனையாக இக்கோட்டை விளங்கிற்று (பிற்காலத்தில் ஆங்கிலேயர் புதுச்சேரியைக் கைப்பற்றிய போது இக்கோட்டை தரைமட்டமாக்கப்பட்டது). கி. பி. 1706 டிசம்பர் 31இல் பிரான்சுவாமர்த்தேன் மரணமுற்றார். 1670க்கு முன்பு துணி வர்த்தக நிலையமாகவும், சாதாரண

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துறை முகப்பகுதியாகவும் விளங்கிய புதுச்சேரியைப் பிரஞ் சிந்தியாவின் தலைமையிடமாக உயர்த்திய பெருமை பிரான்சுவா மார்த்தேனையே சாரும். எனவே, புதுச்சேரியை உருவாக்கியவர் (Founder of Pondicherry) என்று மார்த்தேனைச் சொன்னால் அது மிகையாகாது. ஆனால் மதாம் கெப்ளே அவர்களோ 'மார்த்தேன் புதுச்சேரி முழுவதையுமே வளர்த்து உருவாக்கவில்லை, புதுவையில் ஐரோப்பியர் வசிக்கும் பகுதியை மட்டுமே உருவாக்கினார்'' என்று கூறுவது ஆராயத்தக்கது.

லெனுவார் பியேர் கிறிஸ்தோப்
Le Noir Pierre Christhope (1721—1735)

பிரான்சுவா மார்த்தேனுக்குப் பின் பதினான்கு ஆண்டுகள் (1707—1720) புதுச்சேரி திறமையற்ற ஐந்து ஆளுநர்களால் ஆட்சி செலுத்தப்பட்டது. கி.பி. 1721இல் லெனுவார் ஆளுநராக நியமிக்கப்பட்டபின் பழைய நிலையில் சிறித முன்னேற்றம் ஏற்பட்டது. 1728இல் புதுச்சேரியில் ஐரோப்பியர்க்கு என்று ஒரு நீதிமன்றம் அமைக்கப்பட்டது. 1723இல் ஏனமும் 1725இல் மாகியும் பிரஞ்சியரால் வசப் படுத்தப்பட்டன. 1731இல் ஆங்கிலேயர்க்கும் பிரஞ்சியர்க் கும் இடையே ஏனம் ஒப்பந்தம் ஏற்பட்டது.

பெனோ துய்மா (Benoist Duma 1735—1741)

1735 இல் புதுவையின் ஆளுநராகப் பதவியேற்ற துய்மா, நவாப் தோஸ்த் அலிகானின் ஒப்புதலோடு புதுச் சேரியில் வெள்ளி நாணயங்கள் அச்சடித்தார். 1738 ஜூலை மாதத்தில் தஞ்சை மன்னரிடமிருந்து காரைக்கா லைப் பிரஞ்சியர் பெற்றனர். 1740இல் ராகுஜி ஃபோன்ஸ்லே ஃபெட்டாசிங் ஆகிய இருவர் தலைமையில் மராட்டியர் தென்னகத்தே படையெடுத்து வந்தனர். இப்படையெடுப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பில் கர்நாடக நவாப் தோஸ்த் அலிகான் கொல்லப்பட்டான். நவாப்பின் எஞ்சிய குடும்ப உறுப்பினர்கள் புதுச்சேரியில் தஞ்சம் புகுந்தனர். தங்கள் சந்ததியருக்கு அடைக்கலம் அளித்ததற்காக புதிய நவாப் சப்தர் அலி ஆராய்ச்சிக்குப்பம், தேடுவார் நத்தம் வழுதாவூர் ஆகிய கிராமங்களைப் பிரஞ்சியருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தான்.[9]

ழோசப் பிரான்சுவா துய்ப்ளேக்சு
(Joseph Francois Dupleix 1742—1761)

கி.பி. 1697 இல் விவசாயக் குடியில் பிறந்த துய்ப்ளேக்சு, 1722 ஆகஸ்டு 16, இல் மசூலிப்பட்டினத்தில் பிரஞ்சிந்திய வணிகராக நியமிக்கப்பட்டார். அதன் பின் 1731 இல் சந்திரநாகூர் வணிக நிறுவனத்தின் இயக்குநராகப் பதவி உயர்வு பெற்றார். 1746, ஏப்பிரல் 7இல் தன் நண்பனின் (விதவை) மனைவியாகிய ழென்னி ஆல்பர்ட்டை (Jenny Albert) மணந்தார். துய்மாவுக்குப் பின் 1742, ஜனவரி 14இல் புதுச்சேரி ஆளுநராகப் பதவியேற்றார். ஆனந்தரங்கப் பிள்ளை தம் நாட்குறிப்பில் துய்ப்ளேக்சின் பதவியேற்பு விழாவினைக் கோலாகலமாகப் புகழ்ந்துள்ளார்.[10] ஆர்க்காட்டு நவாப் அன்வருதி கானுடன் துய்ப்ளேக்சு நட்புறவு கொண்டதன் காரணமாக, 1745, செப்டம்பர் 11இல் அன்வருதிகான் புதுச்சேரிக்கு வருகை புரிந்தான். அச்சமயம் ஆர்க்காட்டு நவாப்பிற்காக துய்ப்ளேக்சு சென்னையைப் பிடித்துக் கொடுப்பதாகச் சம்மதம் தெரிவித்தார்.

கி. பி. 1699 இல் பிறந்த லபூர் தொனே 1719 இல் பிரஞ்சுக் கிழக்கிந்திய நிறுவனத்தில், படைவீரனாகச் சேர்ந்தான். 1725இல் கப்பற் படைக்கு தலைமை தாங்கி மாகியைப் பிரஞ்சியர் வசப்படுத்தியதில் பெரும் பங்காற்றிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாகிலபூர் தொனே, துய்ப்ளேக்சின் ஆலோசனையின் பேரில் 1746, செப்டம்பர் 15இல் சென்னைத் துறைமுகத்தை முற்றுகையிடத் தொடங்கினான். ஆறுநாட்கள் தொடர்ந்து முற்றுகையிட்டு, 1746 செப்டம்பர் 21இல் சென்னையைக் கைப்பற்றினான். எதிர் காலத்தில் ஆங்கிலேய எதேச் சதிகாரத்தை இந்தியாவில் நிறுவக் காரணமாயிருந்த ராபர்ட் கிளைவ் லபூர் தொனேயிடம் சரணடைந்தான். அச்சமயம் துய்ப்ளேக்சு அன்வருதிகானிடம் சென்னையை ஒப்படைத்து விட்டு, பின்னர் தாமே மீட்டுக் கொள்வது என்ற எண்ணம் கொண்டிருந்தார். ஆனால், லபூர் தொனே, தன்னால் முடிந்த மட்டும் சென்னையைச் சூறையாடி விட்டு, 400000 பவுண்டுகளைப் பெற்றுக் கொண்டு ஆங்கிலேயர்க்கே விட்டுக் கொடுத்ததால், துய்ப்ளேக்சின் (எதிர்கால) பிரஞ்சிந்திய சாம்ராஜியக் கனவு அழிக்கப்பட்டது.

ரங்கப்பிள்ளையின் வேண்டுகோளுக்கிணங்கி, இரண்டாவது கருநாடகப் போரில் (1749-1754) துய்ப்ளேக்சு ஆர்க்காட்டு நவாப் சந்தாசாகிப்பிற்கு உதவியதால் பிரஞ்சிந்திய நிறுவனத்திற்குப் பலபயன்கள் ஏற்பட்டன. இவ்வுதவிக்கு நன்றிக்கடனாக பாகூர், வில்லியனூர் பகுதிகளை சந்தாசாகிபு பிரஞ்சிந்திய நிறுவனத்திற்கு அளித்தான். மேலும் பரங்கிப்பேட்டையை மதாம் துய்ப்ளேக்சுக்கும், ஆலம்பரவையை தெஅவுதேவீலுக்கும் (D' Autevil) அன்பளிப்பாகக் கொடுத்தான். காரைக்காலைச் சுற்றியுள்ள எண்பத்தொரு கிராமங்களையும், முசாபர்ஜங்கு பிரஞ்சியருக்கு அளித்தான். இக்காலத்தில் ஏனம், மசூலிப் பட்டினம், தீவி முதலிய இடங்களிலும் பிரஞ்சு நிறுவனங்களுக்குப் பூரண உரிமைகள் அளிக்கப்பட்டிருந்தன. கிருஷ்ணாநதியின் தென்பகுதி முதல், குமரி முனை வரையுள்ள (மைசூர் - கருநாடகம் உள்ளிட்ட) பகுதிக்கு,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துய்ப்ளேக்சு தன்னை ஆளுநராகப் பிரகடனப்படுத்திக் கொண்டார்.[11]

ரங்கப்பிள்ளையும் துய்ப்ளேக்சும்

பிரஞ்சுக் காலத்தில் 25 ஆண்டுகளுக்கான (1736–1761) வரலாற்றுச் செய்திகளை அறிந்துகொள்ள ஆனந்த ரங்கப் பிள்ளையின் நாட்குறிப்பு மிகவும் பயனுள்ள விதத்தில் எழுதப்பட்டுள்ளது. கி.பி. 1709 பங்குனி 21ஆம் நாள் சென்னை பெரம்பூரில் பிறந்த ரங்கப்பிள்ளை, தன் தந்தை திருவேங்கடம்பிள்ளை ஆதரவில் புகையிலை வணிகம் புரிய புதுச்சேரிக்கு வந்தார். பிரஞ்சிந்திய அரசாங்கத்தில், கனகராய முதலியாருக்குப்பின், ரங்கப்பிள்ளை துபாஷாகப் பதவியேற்றார். புதுச்சேரியில் வணிக முகவராகவும், மொழி பெயர்ப்பாளராகவும் செயல்பட்ட ரங்கப்பிள்ளை, தம் வாழ்நாளில் பெற்ற அரசியல் அனுபவங்களை, நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார். நாட்குறிப்பு எழுதிய அனுபவத்தைப் பற்றிக் குறிக்கும்போது, "காதால் கேட்டவைகளையும், கண்ணால் பார்த்தவைகளையும், கப்பல்கள் வருவதையும், கப்பல்கள் போவதையும், ஆச்சரியங்களும், புதுமைகளும் நிகழ்ந்தால் அவற்றையும் இத்தினசரியில் குறிக்க இருக்கி றேன்" என்று முன்னுரையிலேயே கூறிவிடுகின்றார். "அவர் எழுதி வைத்திருக்கும் குறிப்புகளைப் படிக்கும்போது, அக் காலத்துத் தமிழ்நாட்டைச் சலனப்படக் காட்சியில் பார்ப்பது போன்ற உணர்ச்சி நமக்குண்டாகிறது. அத்தினசரி யாகிய புகைப்படச் சுருள் அவிழ, அவிழ எத்தனை வித மான உருவங்கள் தோன்றி மறைகின்றன. ஒவ்வோர் உருவமும் உயிரோடிருப்பது போலத் தோன்றுகின்றன"[12] என்கிறார் வ.வே.சு. ஐயர்.

தினசரியில் அனைத்துச் செய்திகளையும் ரங்கப்பிள்ளை வெளிப்படையாக எழுதிக் கொண்டு செல்லவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"அப்பால் துரையவர்கள் என்னை அழைத்துக் கூடலூர் சேதி கேட்டதும் அதற்கு நான் சொன்னதும் சூட்சுமமாக எழுதினேன். அந்தப் பக்கத்திலே பார்க்கிற பேர் பார்த்துக் கொள்ளவும்'' என்று எழுதும் முறையினையும் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார். அது மட்டுமின்றி, எதிர்காலச் சந்ததியினர் இந்நாட்குறிப்பைப் படிப்பர் என்ற நம்பிக்கையுடனேயே அவர்தம் மொழி நடையும் அமைந்துள்ளது. 'இந்தியாவில் பிறந்த பிரஞ்சுக்காரன் இந்தியனின் குணத்தைக் கொண்டு இழிவாகவே நடந்து கொள்வான்' என்பது துய்ப்ளேக்சின் கணிப்பு. ஆனால் ரங்கப்பிள்ளையோ, "வெள்ளைக் காரரிலே அநேகம் பேர் தமிழரைப் பார்க்கிலும் மடையராகவும், கழுதையாகவும் இருக்கிறார்கள்''[13] என்று கணித்துள்ளார்.

ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளில் (1736-1761) புதுவைக்கு வருகை தந்த அரசப் பிரதிநிதிகளும், ஆர்க்காட்டு நவாபுகள்—குறிப்பாக தோஸ்த் அலி, சப்தர் அலி, சந்தா சாகிபு, முசாபர் ஜங்கு முதலியோர் ரங்கப் பிள்ளையின் வாயிலாகத்தான் துய்ப்ளேக்சுடன் தொடர்பு கொண்டனர். அரசியலில் பெண்களின் தலையீடு (மதாம் துய்ப்ளேக்சு) அவதிக்குள்ளாக்கும் என்பதை, "இது பெண்டுகள் மூலமாக நடப்பித்த காரியமான படியினாலே, கடுதாசியிலே பெண்டுகள் தொட்டுத் தானே காரியம் வெளியாகிக் கெட்டுப்போய் கேடு வந்தது. புருஷன் மூலமாய் நடந்துதானால் அதற்கேற்ற பந்தோபஸ்து நடக்குமே யல்லாமல் இப்படி வெளிக்கு வராது''[14] என்று குறிப்பிட்டுள்ளார். துய்ப்ளேக்சு ரங்கப்பிள்ளையிடம் கொண்டிருந்த மதிப்பு பற்றிக் குறிப்பிடும்போது, "ரங்கப்பிள்ளை! நீர் விரும்பினால் ஆங்கிலேயர் நம்மை வேவு பார்ப்பதினின்றும் தடுக்க முடியும், புதுவைக்கு வெளியில் வசிக்கும் மக்களும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆங்கிலேயரிடம் வேலைக்குப் போகாமல் தடுக்கவும் முடியும்''[15] என்று தினப்படி சேதிக்குறிப்பு கூறுகின்றது.

கர்நாடகப் போரும் துய்ப்ளேக்சும்:

1748-ஆம் ஆண்டு நிஜாம் உல்-முல்க் இறப்பினால் நிஜாம் பதவிக்குப் போட்டி ஏற்படுகின்றது. நிஜாமின் இளைய மகனான நாசர் ஜங்கும், மகள் வயிற்றுப் பேரனான முசாபர் ஜங்கும் கர்நாடக நவாபு பதவிக்குப் போட்டியிட்டனர். நாசர் ஜங்கு இறுதியில் (ஆங்கிலேயரின் உதவியுடன்) அன்வருதீனையே நவாபு பதவிக்கு நியமித்தான். முசாபர் ஜங்கு பிரஞ்சியரின் உதவியை நாடினான். இந்நிலையில் நவாபாக இருக்கும் அன்வருதீனை ஒழித்துக் கட்டிவிட்டு, அதற்குப் பதிலாக சந்தா சாகிபைக் கொண்டு வருவதன் மூலமே பிரஞ்சியரின் ஆதிக்கத்தைக் கர்நாடகத்தில் பரப்ப முடியும் என்று நம்பிய துய்ப்ளேக்சு ஏழு லட்ச ரூபாயை மராட்டியர்க்குக் கொடுத்து, பணயக் கைதியாக இருந்த சந்தாசாகிபை மீட்டார்.

கர்நாடகப் போரின் முதல் கட்டமாக துய்ப்ளேக்சு அனுப்பிய படையுதவியுடன் சந்தா சாகிபும், முசாபர் ஜங்கும் ஒன்று சேர்ந்து கர்நாடகத்தைத் தாக்கினர். ஆம்பூரில் நடந்த இந்தப் போரில் அன்வருதீன் கொல்லப்பட்டார். பிரஞ்சியரின் ஆதரவில் சந்தாசாகிபு கர்நாடகத்தின் நவாபாக ஆனார். இதற்கிடையே நாசர் ஜங்கு ஆங்கிலேயரின் உதவியால் மீண்டும் கர்நாடகத்தைக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபடலானான். நாசர் ஜங்கை வீழ்த்த சந்தாசாகிபும், துய்ப்ளேக்சும் புதுச்சேரியில் சதித்திட்டம் தீட்டினார்கள். இத்திட்டத்தின் முடிவில் நாசர் ஜங்கின் அமைச்சர் ஷாநவாஸ்கான் பிரஞ்சியருக்காக விலை பேசப்பட்டான். 1750, செப்டம்பரில் பிரஞ்சுப் படை செஞ்சியைத் தாக்கியது. யாருமே அணுக முடியாது என்று கூறப்பட்டு வந்த செஞ்சிக் கோட்டையை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரஞ்சுத் தளபதி புஸ்ஸி கைப்பற்றினான். நாசர் ஜங்கின் படைத்தலைவருள் ஒருவனான கடப்பா நவாபு என்பவனே நாசரைச் சுட்டுக் கொன்றான். நாசர் ஜங்கு இறந்தவுடன் அவன் தலையை வெட்டி ஒரு கழியில் செருகி படை முகாமைச் சுற்றி எடுத்து வரச்செய்தான். போரின் முடிவில் புதிய நிஜாமாக முசாபர் ஜங்கு அறிவிக்கப்பட்டான். கர்நாடகப் போரில் ஆம்பூரிலும், செஞ்சியிலும் பிரஞ்சியர் பெற்ற வெற்றியை நினைவு கூரவேண்டியே புதுச்சேரியில் இரண்டு வீதிகளுக்கு 'ஆம்பூர் சாலை' என்றும் 'செஞ்சி சாலை' என்றும் பெயர்கள் சூட்டப்பட்டன.

கி. பி. 1751-இல் பிரஞ்சியர் திருச்சியை முற்றுகையிட்டபோது, ராபர்ட்கிளைவ் பிரஞ்சியரின் கருத்தினை வேறுபக்கம் செலுத்தி அம்முற்றுகையைத் தளர்த்தினார். கி.பி. 1752-இல் பிரஞ்சுப் படைத்தலைவன் லாவும், சந்தா சாகிபுவும் சரணடைந்தனர். 1752-இல் சென்னை மீண்டும் பிரஞ்சியரால் கைப்பற்ற முயற்சிக்கப்பட்டு, தோல்வியில் முடிவடைந்தது. ஆனால் திருவதிகை, சிதம்பரம் போன்ற ஊர்களை ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றினர். 1753-இல் கர்நாடக நவாப்பதவி தொடர்பாக, திருச்சியில் ஆங்கிலேயர்க்கும் பிரஞ்சியர்க்கும், ஏற்பட்ட போர் பிரஞ்சியர்க்குத் தோல்வியைத் தேடித்தந்தது. நவாப்பதவி யாருக்கு வழங்கப்படவேண்டும் என்பது தொடர்பாக, 1754, ஜனவரி 21, 24 ஆகிய தேதிகளில் நடைபெற்ற ஆங்கிலேய—பிரஞ்சியர் பேச்சுவார்த்தை எத்தரப்பினர்க்கும் பயனின்றி முடிந்தது.

துய்ப்ளேக்சின் இறுதிக்காலம்

துய்ப்ளேக்சின் இறுதிக்காலத்தில் ஆங்கிலேயர்க்கும் பிரஞ்சியர்க்கும் போர் நடந்த வண்ணம் இருந்தது. கி.பி. 1750-க்கு பின்னர் பிரஞ்சுப்படைகள் தொடர்ந்து அடைந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தோல்வியின் காரணமாக, துய்ப்ளேக்சின் ஆளுநர்பதவி பறிக்கப்பட்டு பிரான்சுக்குத் திருப்பி அழைக்கப்பட்டார். தென்னிந்தியாவின் 'கிங்மேக்கர்' (King Maker) எனப் புகழப்பட்ட துய்ப்ளேக்சு, இறுதிக் காலத்தில் (1763, நவம்பர் 10) வறுமையின் காரணமாக நோய்வாய்ப்பட்டு இறந்தார். துய்ப்ளேக்சு உயிர்துறப்பதற்கு மூன்று நாட்கள் முன்னதாக, "எனது பணிகள் கட்டுக்கதைகளாகக் கருதப் படுகின்றன. நான் உரிமையோடு கேட்பது கேவலத்துக் கிடமான குற்றச்சாட்டாகக் கொள்ளப்படுகிறது. மனித குலத்திலேயே நான் மிகமிக இழிந்தவனாக நடத்தப்படு கின்றேன். என்னிடம் சிறிதளவாக இருந்த பொருளும் பறிமுதல் செய்யப்பட்டுவிட்டது. சிறைவாசத்திற்கு இழுத்துச் செல்லப்படாதிருக்கக் கோர்ட்டின் முடிவைத் தள்ளிப் போடும்படி, கேட்கும்படியான கட்டாயத்தில் உள்ளேன்"[16] என்று தம் நினைவுக் குறிப்பில் எழுதி யுள்ளார்.

கோதே (Godeheu 1754 – 1755)

நிலைமையை ஆராய்ந்து இழந்த புகழை மீண்டும் பெறுவதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதற்காகப் பிரஞ்சு அரசாங்கம் கோதேவை அனுப்பி வைத்தது. 1754, ஆகஸ்டு 7-இல் புதுச்சேரி வந்திறங்கிய கோதே துய்ப்ளேக்சுக்குப் பதிலாகப் பதவியேற்று, அவரது அரசியல் கொள்கைகளை மாற்றினார். ஆங்கிலேயருடன் பேச்சு வார்த்தை ஆரம்பித்து ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டார்.[17] ஆங்கிலேயரும், பிரஞ்சியரும் சுதேச மன்னர்களின் போரில் தலையிடுவதில்லை என்றும், உடன் படிக்கை ஏற்பட்ட போது, அவரவர்களிடம் இருந்த இடத்தை அப்படியே வைத்துக்கொள்வது என்றும் ஒப்புக் கொண்டனர். இவ்வுடன்படிக்கையினால் துய்ப்ளேக்சு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரஞ்சியருக்காகப் பெற்ற எல்லா ஆதாயங்களையும் அவர்கள் இழக்க நேரிட்டது. தம் பதவிக்காலம் முடிந்ததும், கோதே 1755, பிப்ரவரி 25இல் பாரிசுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

துவல் தெ லெய்ரித் (Duval De Lyrit)

கோதேயுக்குப் பின் புதுச்சேரி ஆளுநராக 1755 ஏப்ரல் 2-இல் துவல் தெ லெய்ரித் (Duval De Lyrit) புதுச்சேரி ஆளுநராகப் பொறுப்பேற்றுக் கொண்டார் இவர் காலத்தில் தான் 'லல்லி தொலாந்தல்' என்னும் சிறந்த பிரஞ்சுப் படைத்தலைவன், புதுச்சேரிக்கு வருகை புரிந்தான்.

தோமஸ் ஆர்தர் கோன் தெ லல்லி தொலாந்தல் (Thomas Artur Count De Lally Tollendal)

ஐரிஷ் குடியைச் சேர்ந்த லல்லி தொலாந்தல் சாதாரண படைவீரனாகப் பிரஞ்சுப் படையில் சேர்ந்தான். திறமையும், அறிவுக்கூர்மையும் காரணமாக மெல்ல, மெல்ல பிரஞ்சுப் படைத்தலைவன் ஆனான். 1758 இல் ஆங்கிலேய ஆதிக்கத்தை அடக்கி ஒடுக்க, லல்லி மூன்று விதமான திட்டங்களைப் பிரஞ்சுத்தலைமையின் முன் வைத்தான்.[18]

(1) இங்கிலாந்தில் பிரஞ்சுப் படைகளை இறக்குவது (2) கனடா நாட்டு ஆங்கிலேயர் மீது படையெடுப்பது. (3) இந்தியாவிலிருந்து ஆங்கிலேயரை உடனடியாக விரட்டியடிப்பது-என்பதே அம்மூன்று திட்டங்களாகும். பிரஞ்சு அரசு லல்லியின் மூன்றாவது திட்டத்திற்குச் செவிமடுத்து, பிரஞ்சுப் படைகளை அவன் தலைமையில் புதுச்சேரிக்கு அனுப்பி வைத்தது. பிரஞ்சு அரசாங்கம் ஆறு லட்சம் பவுன் தருவதாகச் சொல்லிவிட்டு, இரண்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லட்சம் பவுனே தந்தது. மேலும் ஆறு படையணிகளுக்குப் பதிலாக நான்கு படையணிகளையே அனுப்பி வைத்தது. அது மட்டு மின்றி, இப்படையணிகளும் ஒரே சமயத்தில் புதுச்சேரிக்கு வந்து சேரவில்லை,

மூன்றாவது கருநாடகப் போர் (1756–1763)

'வாட்சன்' என்னும் ஆங்கிலேயப் படைத் தலைவனும், இராபர்ட் கிளைவும் கூட்டு சேர்ந்து, பிரஞ்சியருடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தை முறியடிக்கும் விதத்தில் 1757 மார்ச் 23இல் சந்திரநாகூர் மீது படையெடுத்துக் கைப்பற்றினர். 1757 இல் பிளாசியுத்த முடிவில் வங்காளம் முழுவதுமே ஆங்கிலேயர் வசமாயிற்று. லல்லி தொலாந்தல் புதுச்சேரி வந்ததுமே, 1758 மே 16 இல் கடலூர் செயின்ட் டேவிட் கோட்டையைப் (Fort Saint David) பிடித்தார். கடலூர் வெற்றிக்குப் பின் சென்னையைக் கைப்பற்ற விரும்பிய லல்லிக்கு புதுவை ஆலோசனை சபை பணவுதவி செய்ய மறுத்து விட்டது. மேலும் லல்லியின் கப்பற்படைத் தளபதி 'தெ ஆஷே' என்பவனும், லல்லியோ ஒத்துழைக்க மறுத்துத் தனது கப்பற் படையை இலங்கை பக்கமாக நடத்திச் சென்றுவிட்டான். இதனால் லல்லி தன் உதவிக்காக வேண்டி தக்காணத்திலிருந்து புஸ்ஸியை உடனடியாக புதுவை வரும்படி உத்திரவிட்டான். ஏழாண்டுக் காலமாக புஸ்ஸி தக்காணத்தில் அரும்பாடுபட்டு நிலைநிறுத்திய பிரஞ்சு ஆதிக்கத்தைக் குலைப்பதற்கு லல்லியின் அழைப்பு வழிகோலியது. தக்காணத்தில் பிரஞ்சியரின் கூட்டாளியாயிருந்த சலபத்ஜங்கு, புஸ்ஸி தக்காணத்திலிருந்து புறப்பட்டவுடனே. பிரஞ்சியருடன் தனக்கிருந்த 'நல்லுறவைத் துண்டித்து விட்டு ஆங்கிலேயருடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டான்'[19] 1758, மே 14-இல் ஏற்பட்ட இவ்வுடன் படிக்கையின்படி, தன்னுடைய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதியில் பிரஞ்சுப் படைகளை அனுமதிப்பதில்லை என்று சலபத்ஜங்கு ஆங்கிலேயருக்கு வாக்குறுதி அளித்திருந்தான்.

கி.பி. 1758 அக்டோபர் மாதத்தில் லல்லி சென்னையை முற்றுகையிடத் தொடங்கினான். வெகு எளிதாக சென்னை முழுவதும் வெற்றி கொண்டு விடலாம் என நினைத்து, 1758 டிசம்பர் 14இல் செயின்ட் ஜார்ஜ் கோட்டையைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டான். 1759, ஜனவரி 2 வரை, கோட்டை மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தாமல் முற்றுகையிலேயே போரை நீட்டித்தான். சென்னை முற்றுகையை அறிந்ததும், திருச்சியிலிருந்த ஆங்கிலேயப் படை செங்கற்பட்டு படையுடன் சேர்ந்து கொண்டு பிரஞ்சியரை எதிர்க்க விரைந்தது. செயின்ட் தாமஸ் மவுண்ட் அருகே இருதரப் பினருக்கும் கடும் போர் நடைபெற்றது. மேலும் ஓர் ஆங்கிலேயப் படையின் தாக்குதலை எதிர்பார்க்காத லல்லி புதுச்சேரிக்குப் பின் வாங்க நேர்ந்தது. புதுச்சேரிக்குத் திரும்புகையில், ஆங்கிலேய படைத்தலைவன் சர் அயர் கூட் ஆளுநராயிருக்கையில், தாங்கள் முன்பே இழந்த வந்தவாசிக் கோட்டையை மீட்க வேண்டி, பிரஞ்சியர் முற்றுகையிட்டனர். ஆனால் வலிமை நிறைந்த சர் அயர் கூட்டின் ஆங்கிலேயப் படை லல்லியைத் தோற்கடித்தது, புஸ்ஸியைக் கைது செய்தது.

சென்னைப் படையெடுப்பில் லல்லிக்கு ஏற்பட்ட சோதனையைப் பற்றிக் குறிப்பிடும் போது, "(புதுச்சேரி) ஆலோசனை சபையினர் வியாபாரிகளாக இருக்க விரும்பித் தங்களுடைய கடமைகளை மறந்து விட்டனர். கட்டுப் படுத்த முடியாத செலவு, ஒழுங்கீனம் கொள்ளை, நம்பிக்கையின்மை ஆகிய யாவும் இப்படையெடுப்பில் காணப்படுகின்றன. இத்தகைய நிலைமை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யில் நமது படையணிகள் எவ்வாறு எதிரிகளை அழிக்க முடியும்?[20] என்று கூறியுள்ளமை எண்ணத்தக்கது. மேலும் ஆளுநராக இருந்த தெ லெய்ரித் (De Lyrit) என்பவரும், லல்லியும் கட்டளையிடுகின்ற பதவியிலிருந்தமையால், அவர்கட்குள் அடிக்கடி பூசல்கள் ஏற்பட்டுக் கொண் டிருந்தன. இதன் காரணமாக, தெ லெய்ரித், லல்லியைப் பற்றி பிரஞ்சு தேசத் தலைமைக்குப் புகார் எழுதிய வண்ணமிருந்தார்.

பிரஞ்சியரின் படைவலிக் குறைவறிந்த ஆங்கிலேயர், பிரஞ்சுப் பகுதிகளைச் சிறிது சிறிதாகக் கைப்பற்றிக் கொண்டேவந்து, இறுதியில் புதுச்சேரியையும் முற்றுகை யிடத் தொடங்கினர். இதற்கிடையில் புதுச்சேரியின் பொருளாதாரம் ஆங்கிலேயப் படை முற்றுகையின் காரண மாக வெகுவாகச் சரியத் தொடங்கியது. இக்காலத்தில் நாய்கறியின் விலை கிலோ ஒன்று 24 ரூபாய்க்கும், ஒரு எலியின் விலை இரண்டு ரூபாய்க்கும் விற்கப்பட்டது.லல்லி தன் இயலாமையை நொந்து கொண்டு, இன்னலுற்ற நிலையில் காலம் கழித்துக் கொண்டிருந்தான்.

சர் அயர் கூட் தலைமையிலான ஆங்கிலேயப் படை 1760, டிசம்பரில் புதுச்சேரியைக் கைப்பற்றியது. லல்லி 1761 ஜனவரி 16 இல் ஆங்கிலேயரிடம் சரணடைந் தான். 1761, பிப்ரவரி 9 இல் மாகியையும் ஆங்கிலேயர் கைப்பற்றினர். 1761, ஏப்ரல் 5 இல் செஞ்சியும் ஆங்கிலேயரிடம் வீழ்ச்சியுற்றது. 1761 மே மாதத்தில் பிரஞ் சியர்க்கு இந்தியாவில் ஓர் அடி நிலம் கூட உரிமையாக இல்லை. கர்னல் சர் அயர்கூட் தான் ஒரு போர் வீரன் என்ற முறையில் புதுவை நகரத்தையும் கோட்டையையும் அழிக்க விரும்பவில்லை. ஆனால் சென்னையின் அப்போ தைய ஆங்கிலேய ஆளுநர் பைகாட் பழிக்குப் பழி வபங்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முடிவு செய்து நகரை அழிப்பதில் தீவிரம் காட்டினார். நகரில் குடியிருந்தவர்கட்கு புதுவையை விட்டு வெளியேற மூன்று மாத காலம் அவகாசம் அளிக்கப்பட்டது. பின்னர், புதுவை நகரில் பிரஞ்சியரால் கட்டப்பட்டிருந்த கோட்டை, மடாலயம், துய்ப்ளேக்சின் மாளிகை, மற்றும் பிரஞ்சியர் வாழ்ந்த பொதுக்கட்டிடங்கள் முதலியன முற்றிலுமாக அழிக்கப்பட்டன. கைது செய்யப்பட்ட லல்லி தொலாந்தல் இங்கிலாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டான். பின்னர் 1763இல் பிரான்சுக்கு கொண்டுவரப்பட்ட லல்லி இராஜ துரோகக் குற்றச்சாட்டின் பேரில் பாஸ்டைல் (Bastile) கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தான். 1766 மே 6-ஆந் தேதி, நீதி விசாரணைக்குப் பின் லல்லி தூக்கிலிடப்பட்டான்.[21] புதுச்சேரியை உன்னத நிலைக்கு உயர்த்த அரும்பாடுபட்ட துய்ப்ளேக்சும், லல்லி தொலாந்தலும் ஒரே மாதிரியான அநீதிக்குப் பலியாகி உயிர் நீத்தனர்.

1763, பிப்ரவரி 10-இல் ஆங்கிலேயர்க்கும் பிரஞ்சியர்க்கும் ஏற்பட்ட பாரிசு ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1749-இல் இந்தியாவில் (போருக்கு முன்பு) தமக்குச் சொந்தமான இடங்களைப் பிரஞ்சியர் திரும்பப் பெற்றனர். கையெழுத்தாகி இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னரே இவ்வொப்பந்தம் நடைமுறைக்கு வந்தது. காரைக்கால் 1765 பிப்ரவரி 15-இலும், புதுச்சேரி 1765 ஏப்ரல் 11-இலும் ஏனம் 1765 மே 15-இலும், மாகி 1765 அக்டோபர் 20-இலும் சந்திரநாகூர் 1765ஜூன் 25-இலும் பிரஞ்சியரால் திரும்பவும் பெறப்பட்டன.[22]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருநாடகப் போரில் பிரஞ்சியரின் தோல்விக்கான காரணங்கள்:

(1) தாய் நாட்டிலிருந்து பிரஞ்சியர்க்குத் தேவையான நேரத்தில் நிதி உதவி, ஆயுத உதவி கிடைக்காத நிலைமை. (2) பிரஞ்சுப் படைகளுக்குள் ஒற்றுமையின்மையும், படைத் தலைவர்களுக்குள் பொறாமையும், லல்லி தொலாந்தல் போலும் தலைவர்கட்குப் புஸ்ஸி போலும் படைத்தளபதியரின் ஒத்துழையாமையும் (துய்ப்ளேக்சுXலபூர் தொனே, தெலெய்ரீத்X லல்லிX புஸ்ஸி) (3) இறுதி வீழ்ச்சிக்குக் காரணம் பிரஞ்சுப் படை வீரர்களிடம் ஒட்டு மொத்தமான ஒற்றுமையின்மையும் பிரஞ்சுப் படைத்தளபதிகளின் தகுதியின்மையும், (4) லல்லியின் முன்கோபம், ஆத்திரம், தன்கீழ் அதிகாரிகளிடம் எரிந்து விழல் போன்றவை; இதற்கு மாறாக ஆங்கிலேயரின் ஒற்றுமையும் திறமையான தலைவர்களான சர்அயர்கூட், லாரன்ஸ் போன்றோரின் ஒத்துழைப்பும் ஆகும்.

பிரஞ்சியர் ஆதிக்கம் – புதுப்பித்தல்

ழீன் லா தெ லோரிஸ்தொன்
Jean Law de Lauriston (1765—1777)

1763இல் ஏற்பட்ட பாரிசு ஒப்பந்தத்தின் அடிப்படையில், பிரஞ்சியர் திரும்பப் பெற்ற இந்தியப் பகுதிகளைப் புதுப்பித்து நிர்வகித்திட, பிரஞ்சுத் தலைமை 1765, பிப்ரவரி 18–இல் லோரிஸ்தொனைப் பிரஞ்சிந்தியாவின் ஆளுநராக அனுப்பி வைத்தது. முதலில் ஆங்கிலேயரிடமிருந்து காரைக்காலைப் பெற்று, ஃபிளேரின் (Fleurin) என்பவரை நிர்வாகியாக நியமித்தார். 1765, ஏப்ரலில் புதுச்சேரியைப் பெற்ற லோரிஸ்தொன் அதைப் பார்த்ததும் முதலில் திகைத்துவிட்டார். ஒரு சிறு இடம் கூட இல்லாமல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆலயம், ஆளுநர் மாளிகை, கோட்டை என்று பிரஞ்சியர் வாழ்ந்த இடங்களெல்லாம் தரை மட்டமாக்கப்பட்டிருந் தன.

புதிய வடிவில் நகரை நிர்மானிக்கும் பொருட்டு லோரிஸ்தொன் ஒழுகரையிலும், பிற பிரஞ்சிந்திய அதிகாரிகள் சுற்றியுள்ள கிராமங்களிலும் தங்கினர். பூர்செ (Bourcet) என்னும் பிரஞ்சுப் பொறியாளரின் மேற்பார்வை யில் புதுச்சேரி நகரின் புதிய வடிவமைப்பு தயார் செய்யப் பட்டது. சாலைகள் நேர்கோடுகள் வரையப்பெற்று உருவாக்கப்பட்டன. எல்லா வீதிகளும் நேர் நேராக உருவாக்கப்பட்டு, தெற்கு வடக்காகவும், கிழக்கு மேற்காக வும் அமைக்கப்பட்டன. 'புதுச்சேரி நகரை அரியாங்குப்பம் ஆற்றுக்கு அருகே மாற்றியமைத்து, தேங்காய்த்திட்டைப் பயன்படுத்திக் கொள்ளலாம்' என்னும் புதிய திட்டம் தீட்டப்பட்டது.[23] பின்னர் அப்புதிய திட்டம் நிராகரிக்கப் பட்டு பழைய இடத்திலேயே புதுச்சேரி நகரைப் புதிதாக உருவாக்கினர். பிரஞ்சிந்தியாவின் ஆளுநர் 1765, மே 15இல் ழீன் ழாக்கெ பரோன் (Jean Jaques Paron) என்பவனை ஏனம் நிர்வாகியாக நியமித்தார். 1765, ஜூன் 25இல் லோரிஸ் தொன் தானே நேரில் வங்காளம் சென்று சந்தி நாகூரின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். பின்னர் 1765, அக்டோபர் 20இல் கப்பிதான் பிளஸ்கெலா (Captain plusquellac) என்பவர் மாகி நிர்வாகியா அனுப்பி வைக்கப்பட்டார்.

பிரஞ்சியரும் ஹைதர் அலியும்

1760இல் பிரஞ்சியருடன் ஹைதர் அலி நட்புறவுபூண் லல்லி தொலாந்தலுடன் ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டான். இவ்வொப்பந்தத்தின் அடிப்படையில் லல்லி ஆயுதங்களையும், காவல் வீரர்களையும் பெற்றுக்கொண்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஹைதர் அலிக்கு மாதம் ஒன்றுக்கு இரண்டு லட்சம் ரூபாய் வழங்குவதாக ஒப்புக் கொண்டான்.

ஆனால் ஹைதரால் அனுப்பப்பட்ட அவன் மைத்துனன் தலைமையிலான படையணி ஒரு மாதத்திற்குள்ளேயே புதுச்சேரியை விட்டு நீங்கிற்று. 1761-இல் பிரஞ்சுப்படை ஆங்கிலேயரிடம் தோல்வியுற்ற போது, 300 சிப்பாய்களை ஹைதர்அலி தன் படைப்பிரிவில் சேர்த்துக் கொண்டான். மாகியின் பிரஞ்சு நிர்வாகியாயிருந்த துய்ப்ரா (Duprat) என்னும் ஏமாற்றுக்காரனால், கோழிக்கோட்டைப் பெற வேண்டி ஹைதர்அலி பலமுறை அலைகழிக்கப்பட்டான். 1774 இல் தெ ரெப்பென்டிஞே (De Repentigny), மாகி நிர்வாகியாக நியமிக்கப்பட்டார். பின்னர், துய்ப்ரா ஒரு முறை பிரஞ்சுப் படைகளுடன் மைசூரைக் கடக்கையில் ஹைதரால் கைது செய்யப்பட்டு, லோரிஸ்தொன் முயற்சி யால் விடுவிக்கப்பட்டார்.

பெல்லா கோம்ப் (Bella Combe)

லோரிஸ்தொனுக்கு பின் 1777 ஜனவரியில் பெல்லா கோம்ப் புதுச்சேரி ஆளுநராகப் பொறுப்பேற்றார். ஏறக் குறைய இக்காலகட்டத்தில் இங்கிலாந்து, அமெரிக்காவின் சுதந்திரப் போராட்டத்தில் தன் முழுக் கவனத்தையும் செலுத்தியிருந்தது. இத்தருணமே, இந்தியாவில் தன் ஆதிக்கத்தை மேம்படுத்திக் கொள்ள பிரஞ்சியர்க்குச் சாதகமாக அமைந்திருந்தது. 1778, மார்ச் 13-இல் அமெரிக்கா சுதந்திரம் பெற்றபின் இங்கிலாந்தின் மீது பிரான்சு போர் தொடுத்தது. ஆனால் புதுச்சேரி தன்னைப் போருக்கு ஆயத்தப்படுத்திக் கொள்ளவில்லை. இம்முறையும் தாய்நாட்டிலிருந்து ஆயுத உதவி கிடைக்கவில்லை. அது மட்டுமின்றி, பாதுகாப்பு வேண்டி, முந்தைய போரில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆங்கிலேயரால் இழக்கப்பட்ட காரைக்கால் கோட்டையும் புதுப்பிக்கப்படவில்லை.

மீண்டும் புதுச்சேரி இழப்பு

1778, ஆகஸ்டு 8-இல் ஆங்கிலேயப் படைத்தலைவர் 'சர் ஹெக்டர் மன்ரோ (Sir. Hector Mundro), புதுச்சேரிக்கு மேற்கே பெரம்பையில் படைவீடு அமைத்துக் கொண்டு புதுவையை முற்றுகையிடத் தொடங்கினார். செப்டம்பர் 8வரை புதுச்சேரி நகரின் மூன்று பக்கங்களிலும் தொடர்ந்த துப்பாக்கிச் சூட்டுடன் முற்றுகை நீடித்தது. புதுவை ஆளுநர் பெல்லா கோம்ப் மனிதாபிமான அடிப்படையில் அக்டோபர் 18-இல் ஆங்கிலேயரிடம் சரணடைந்தார். சந்திரநாகூர் 1778, ஜூலை 10-இல் ஆங்கிலேயர் வசமாயிற்று. ஹைதர் அலியின் பாதுகாப்பு காரணமாக, மாகியை நெருங்க ஆங்கிலேயர் முதலில் அஞ்சினர். இறுதியில் 1779 மார்ச் 19-இல் மாகியும் வீழ்ச்சியுற்றது.

காரைக்கால் நிர்வாகியான தெ போய்ஸ்தோல் (De Boistol) 1778 ஆகஸ்ட் 9-இல் காரைக்காலைக் காலி செய்துகொண்டு, பாதுகாப்பாகப் புதுச்சேரி வந்து சேர்ந்தார்.

மறுபடியும் இந்தியாவில் இருந்த பிரஞ்சுப் பகுதிகள் ஆங்கிலேயர் வசத்தில் ஆறு ஆண்டுகள் (1779—1785) வரை இன்னலுற்றன. 1783-இல் ஏற்பட்ட வர்செலே ஒப்பந்தத்தின் (Treaty of Varsailles) அடிப்படையில், 1785-இல் பிரஞ்சிந்தியப் பகுதிகள் மீண்டும் பிரஞ்சியர்க்கே வழங்கப்பட்டன.[24]

1780 முதற்கொண்டு ஹைதர் அலி தன் படை வலிமையை மெய்ப்பிக்கும் வகையில், தென்னகத்தே ஒவ்வொரு இடமாகப் பிடித்துக்கொண்டே வரத் தொடங்கினான். ஆங்கிலேயப் படைத்தலைவன் கர்னல் பெய்லியைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(Col. Baillie) கைது செய்து திருவண்ணாமலை, ஆரணி, சேத்துப்பட்டு, பாலூர், ஆம்பூர், தியாகதுருகம், செஞ்சி, பெருமாள்கோவில், வந்தவாசி, பரங்கிப்பேட்டை முதலிய ஊர்களைக் கைப்பற்றினான். ஏறக்குறைய சென்னையைத் தவிர்த்து எஞ்சிய தமிழகப் பகுதிகள் அனைத்தும் கருநாடகத்தின் பிடியிலிருந்தன. ஆங்கிலேயரை எதிர்க்க இப்படிப்பட்டதொரு அரிய வாய்ப்பு கிடைத்தும் பிரஞ்சியர் ஹைதருடன் கூட்டுச் சேரவில்லை. மேலும் மராட்டியரும், ஹைதராபாத் நிசாமும் அப்பொழுது ஆங்கிலேயரின் எதிரிகளாயிருந்தனர். அவர்களையும் பயன்படுத்திக் கொள்ள பிரஞ்சியர் தவறி விட்டனர்.

சுயிலாக் (Souillac)

1768 டிசம்பரில் பிரான்சிலிருந்து தெஓர்வே (D'Orves) தலைமையில் நான்கு கப்பல்கள் புதுச்சேரிக்கு வந்தன. இத்தருணத்தில் பிரஞ்சிந்தியப் பகுதியின் ஆளுநராக சுயிலாக் பொறுப்பேற்றிருந்தார். 1780 - இன் தொடக்கத்தில் தெ ஷென்னேவீல் (De Chenneville) தலைமையில் மேலும் ஆறு கப்பல்கள் தாய்நாட்டிலிருந்து அனுப்பப்பட்டன. ஆனால் இவ்வுதவிப் படை உரிய நேரத்தில் வந்து சேராமையால் 1779-இலேயே ஆங்கிலேயர் புதுச்சேரியைச் சூழ்ந்து கொண்டனர். இத்தருணத்தில் சுயிலாக் ஹைதர் அலியுடன் கூட்டுறவு ஏற்படுத்திக் கொண்டார். 1782 பிப்ரவரியில் சுஃப்ரேன் (Suffren) கப்பற்படையுடன் புதுவைக்கு வருகை புரிந்தான்.

சுஃப்ரேன் (Suffren)

1726-ஆம் ஆண்டு ஜூலை 13-இல் பிறந்த சுஃப்ரேன் 1743-ஆம் ஆண்டில் பிரஞ்சுக் கப்பற்படையில் சேர்ந்தான். ஏழாண்டுப் போரில் கலந்துகொண்டு மேஹன் துறை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முகத்தை முற்றுகை இடுவதில் பெரும்பங்காற்றினான். ஹைதர் அலியை நண்பராக்கிக் கொண்டு, அவருடைய படைவீரர்களையும் பிரஞ்சுப் படையில் இணைத்துக் கொண்டு ஆங்கிலேயரை ஒடுக்குவதில் தீவிரங் காட்டினான்.

தன் வருகையை ஹைதர் அலிக்குத் தெரியப்படுத்தி விட்டு, 1782 பிப்ரவரி 12-இல் ஒற்றாராய சென்னையை நோக்கிப் புறப்பட்டான். அச்சமயம், சென்னைத் துறைமுகத்தில் ஆங்கிலேயக் கடற்படைத் தலைவன் சர் எட்வர்ட் ஹக்ஸ் (Sir Edward Hughes) போருக்குத் தயாராய் இருப்பதைக் கவனித்து விட்டுத் திரும்பிவிட நினைத்தான். ஆனால், எட்வர்ட் ஹக்ஸோ பின் தொடரவே, இடைவழியிலேயே போர் மூண்டது. பிரஞ்சுப் படைத் தளபதிகளின் ஒத்துழையாமையினால் சுஃப்ரேன் தோல்வியுற்று புதுச்சேரிக்குத் திரும்ப நேர்ந்தது.

அடுத்து, நாகப்பட்டினத்தைக் கைப்பற்றலாம் என்று சுஃப்ரேன் பிரஞ்சிந்தியத் தலைமைக்கு ஆலோசனை வழங்கினான். பிரஞ்சு அதிகாரிகளோ இவனது யோசனையை மறுத்து விட்டு, திரிகோண மலையைக் கைப்பற்று மாறு கூறி அனுப்பினர். ஆனால் அங்கும் ஆங்கிலேயர் எதிர்ப்படவே, வேறு வழியின்றி சுஃப்ரேன் நாகப்பட்டனம் நோக்கி வரவேண்டிய தாயிற்று. நாகூர்—நாகப்பட்டினம் இடையே ஆங்கிலேயக் கப்பல்கள் நங்ரகூம் பாய்ச்சி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தயார் நிலையில் பிரஞ்சியர் போரை எதிர் கொள்ள வேண்டிய தாயிற்று. இருதரப்பிலும் பெருத்த சேதம் ஏற்பட்ட பின், பிரஞ்சியர் பின் வாங்க வேண்டியதாயிற்று. முதல் நாள் காரைக்காலில் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டு, மறுநாள் பிரஞ்சியர் கடற்படை கடலூரை வந்தடைந்தது. அங்கே சுஃப்ரேன் தன் கீழ் பணியாற்றும் படையதி காரிகளான, தெ மோர்வீல் De Maurvile) தெ ஃபோர்பின் (De Forbin) தெ சில்லார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(De Cillart) ஆகிய மூவரையும் கீழ்ப் படியாமைக் குற்றத்திற்காக கைது செய்து பிரான்சுக்கு அனுப்பி வைத்தான்[25] 1784 இல் சுஃப்ரேன் பிரான்சுக்குத் திரும்பிச் சென்றார். அங்கே, தமது அறுபத்திரண்டாவது வயதில் மற்றொரு பிரஞ்சுக் காரருடன் சண்டையிட்டபோது கொல்லப் பட்டான்.

தலைநகர் மாற்றம்

1785 இல் புதுச்சேரி வெறும் வணிக நிறுவனமாகவே இயங்கி வந்தது. பிரான்சிலுள்ள லூரியிதுறைமுகத்துடன் சந்திரநாகூர் கொண்ட நேரடித் தொடர்பு போன்று புதுச்சேரியால் உடனுக்குடன் தொடர்பு கொள்ள இயல வில்லை. எனவே அரசியல் தொடர்பைப் பொறுத்தவரை சந்திரநாகூரே இக்காலத்தில் பிரஞ்சியரின் முக்கிய இருப் பிடமாகத்திகழ்ந்தது. ஆங்கிலேயரின் பிடியிலிருந்து மாகியை மீட்ட பின்னர், 1785 ஆகஸ்டு 15 இல் மரின் (Marin) என்னும் பிரஞ்சுத் தளபதி மாகியின் நிர்வாகியாக நியமிக்கப் பட்டார். பொறுப்பேற்றவுடனேயே, இவர் ஆங்கிலேயர் எதிர்ப்பைச் சமாளிக்கும் விதத்தில் மாகியைப் பலப்படுத்தினார். இதனைக் கேள்வியுற்ற பிரஞ்சுக் குடியிருப்பு அமைச்சர் மர்கெ தெ காஸ்த்ரே (Marquis De Castries) என்பவர், மாகியைப் பிரஞ்சிந்தியாவின் தலைமை யிடமாக மாற்றுமாறு ஆணை பிறப்பித்தார்[26]. ஆனால் புஸ்ஸியோ எக்காரணத்தை முன்னிட்டும் புதுச்சேரியி லிருந்து தலைநகர் மாற்றப்படக் கூடாது என மறுத்து விட்டான்.

தே கோசிஞீ, தெ கோன்வாய் (De Cosigny De Conway)

புதுச்சேரி ஆளுநர் தெ கோசிஞீ 1787, செப்டம்பரில் புதுவையைவிட்டுப் புறப்பட்டதும், புதிய ஆளுநராக தெ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோன்வாய் நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் தான் காரைக்கால் விவசாயிகள் நிலவரியை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார்கள். ஆளுநர் தெ கோன்வாய் அவர்கள், தெ பிரெஸ்னே (De Fresne) என்பவரைக் காரைக்காலுக்கு அனுப்பி, விவசாயிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தச் செய்து போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

பிரஞ்சுப் புரட்சியின் தாக்கம்

1989 அக்டோபரில் தெ கோன்வாய் பிரான்சுக்குப் புறப்பட்டுச் சென்ற பின்பு, புதிய ஆளுநராக தெ பிரெஸ்னே (De Fresne) பொறுப்பேற்றுக் கொண்டார். 1790 பிப்பிரவரி 22-இலிருந்து பிரஞ்சுப் புரட்சி பற்றிய செய்திகள் புதுச்சேரிக்கு வந்த வண்ணமிருந்தன. பிரான்சுக்குச் சென்ற தெ கோன்வாய் புதுச்சேரியில் உள்ள ஐரோப்பியத் துருப்புகளை எல்லாம் பிரான்சுக்கு வர உத்திரவிட்டார். தெ பிராஸ்னேயும் உடனடியாக புதுச்சேரியில் உள்ள படையணிகளை எல்லாம் பிரான்சுக்கு அனுப்பி வைத்தார். பாதுகாப்புகள் நீங்கி விட்ட இத் தருணத்தில் புதுச்சேரி எவ்வித அரசியல் தலையீடுகளிலும் பங்கு கொள்ளாமல், வெறும் வணிகத் தளமாகவே இயங்கி வந்தது. இந்தியாவில் பிரஞ்சுப் புரட்சியின் பாதிப்புகளை மதிப்பிடும் வரலாற்றறிஞர் S.P.சென், 'பிரஞ்சுப் புரட்சியின் கொள்கைகளான, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்றவற்றைப் புதுச்சேரி மக்கள் முதலில் ஏற்றுக் கொள்ளவில்லை. அதிலுள்ள நன்மையறிந்த பின்னரே அக்கொள்கைகளை ஏற்றனர். ஆரம்ப முதல் முடிவுவரை பிரஞ்சுப் புரட்சியை புதுச்சேரியிலுள்ள பிரஞ்சுக் குடிகள் ஆதரித்தனரே ஒழிய (புதுவை வாழ்) இந்திய மக்கள் ஆதரிக்கவில்லை'[27] என்று குறிப்பிடுவது ஆராயத்தக்கது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லாஸ்கலியே (Lascallier)

1791, ஜூலை 5-இல் புதுச்சேரியில் 21 உறுப்பினர்கள் அடங்கிய "குடியேற்ற சபை (Colonial Assembly)" ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்த அவைக்காக, புதுவையில்—15, சந்திரநாகூரில் — 3, காரைக்காலில் - 1, ஏனத்தில்—1 மாகியில்—1 என்று உறுப்பினர்கள் தேர்வு செய்யப் பட்டனர். 1792-இல் லாஸ்கலியே என்பவரைப், பிரஞ்சிந்தியப் பகுதிகளை மேற்பார்வையிட பிரஞ்சு அரசு, புதுச்சேரிக்கு அனுப்பி வைத்தது.

இவர் காலத்தில்தான் பிரஞ்சுக் குடியுரிமை பற்றிய அடிப்படைத் தகுதிகளை பிரஞ்சிந்திய அரசு நிர்ணயம் செய்தது. பிறப்பின் அடிப்படையிலோ, சட்டத்தின் அடிப்படையிலோ இருபத்தைந்து வயது நிரம்பியவராகவும், சொந்தமாக ஐந்நூறு ரூபாய் (சொத்து) உடையவராகவும், பிரஞ்சிந்தியப் பகுதியில் குறைந்தது ஓராண்டுக்காலம் குடியிருந்தவராகவோ, அல்லது ஐந்து ரூபாய் வாடகைக்கு ஈராண்டுக்காலம் குடியிருந்தவராகவோ இருப்பின் அவர் பிரஞ்சுக் குடியுரிமை பெறும் தகுதி உடையோராவார். 1793-இல் தெபிரெஸ்னே பிரான்சுக்குப் புறப்பட்டதும், லாஸ்கலியே எல்லா அதிகாரங்களையும், பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்டு புதுச்சேரி ஆளுநரானார். இவர் ஆளுநராகப் பொறுப்பேற்றதும், முதல் காரியமாக புதுச்சேரியைப் பலமுள்ள ஒரு இராணுவத்தளமாக மாற்றினார். அதுவரை பிரஞ்சிந்தியப் பகுதியில் நடை பெற்று வந்த அடிமை வணிகத்தைத் தடை செய்தது இவராட்சியில் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாகும்.

காரன் வாலிஸ்—திப்பு சுல்தான் ஒப்பந்தம்

ஹைதராபாத் நிசாம், மராட்டியர் ஆகியோர் உதவியுடன் ஆங்கிலேயப் படைத்தலைவன் காரன்வாலிஸ்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீரங்கப்பட்டினக் கோட்டையை முற்றுகையிட்டான். எதிர்த்துப் போரிடுவதால் எவ்விதப் பயனும் இல்லாமற் போகும் என்பதை உணர்ந்த திப்பு சுல்தான் 1792-இல் ஆங்கிலேயருடன் அமைதி ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டிய கட்டாயத்திற்குள்ளானான்.[33] அடுத்த ஒன்றரை யாண்டுக்கால இடைவெளியில் ஆங்கிலேயர் பிரஞ்சிய ரோடு போரிடத் தம்மை ஆயத்தப் படுத்திக் கொண்ட னர். இதற்கிடையில் புதுச்சேரி ஆளுநர் ஷெர்மோன் (Chermont)போர்க்குழு ஒன்றைநியமித்து ஆலோசனைகளில் ஈடுபட்டார். ஆலோசனையின் முடிவில் திப்புசுல்தானிடம் படையுதவி அளிக்குமாறு ஷெர்மோன் விண்ணப்பித்து கொண்டார். ஆனால் திப்புவோ ஆங்கிலேயருடன் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டு விட்டதால் மறுத்து விடுகின்றான்.

இதற்கிடையில் 1793 ஜுன், 11 இல் சந்திர நாகூரும் 1793 ஜுலை, 16 இல் மாகியும் ஆங்கிலேயரால் கைப் பற்றப்பட்டன. ஏறக்குறைய இதே சமயத்தில் ஏனமும் ஆங்கிலேயர் வசமானது. அதே ஆண்டு ஆகஸ்டு 23 இல் புதுச்சேரியும் ஆங்கிலேயர் வசமாயிற்று. பிரஞ்சிந்தியாவில் உள்துறை ஆணையராயிருந்த லாஸ்கலியே ஆங்கிலேயரிடம் அனுமதி பெற்று, பிரான்சுக்குப் பயணப்பட்டார். ஷெர்மோன் மட்டும் தான் சாகும் வரை (1798) புதுச்சேரி யிலேயே காலங் கழித்தார். இப்போருக்குப் பின்னர் 1793 முதல் 1816 வரை ஏறக்குறைய 23 ஆண்டுகள் புதுச்சேரி ஆங்கிலேயர் பிடியிலேயே இருந்து வந்தது.

திப்புவின் இறப்பு

1799, பிப்ரவரியில் ஆங்கிலேயர் திப்புவின் மீது படையெடுப்பதாக அறிவிப்பு செய்தனர். ஸ்ரீ ரங்கப் பட்டினத்தை நோக்கி ஆங்கிலேயப் படைகள் நெருங்கிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போது திப்பு நோய்வாய்ப்பட்டிருந்தான். 1799, மே 4 இல் திப்பு சுல்தான் மரணத்தைத் தழுவினான். திப்புவின் இறப்புக்குப் பின் பிரஞ்சியர்க்கு இருந்த இந்திய மண்ணாசை மெல்ல, மெல்ல குறையத் தொடங்கியது.

ஆங்கிலேயே — பிரஞ்சு ஒப்பந்தம்

1814 இல் நெப்போலியன் தோல்வியுற்று எல்பா (Elba) தீவிற்கு ஓடிவிட்ட பின்பு, பதினாறாம் லூயினுடைய சகோதரன் பதினெட்டாம் லூயி பதவிக்கு தந்தான். இம் மன்னன் காலத்தில் தான் ஆங்கிலேய பிரஞ்சு ஒப்பந்தம் 1814, மே 30 இல் வணிக நோக்கிற்காக ஏற்படுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் ஆங்கிலேயர் இந்தியாவில் கைப் பற்றிய பிரஞ்சுப் பகுதிகளைத் திரும்பவும் பிரஞ்சியரிடமே ஒப்படைக்கச் சம்மதித்தனர். பிரஞ்சிந்தியப் பகுதிகளைப் பெற்றதும், 1815, மார்ச் 7 இல் வணிக ஒப்பந்தக் குழு புதுப்பிக்கப்பட்டது. 1815, மே 6 இல் பிரஞ்சிந்தியாவின் தலைமை ஆட்சியாளராக துய்ப்ளேக்சின் உறவினரான, ழோசப் தெஸ்னோ தெ கர்ழேன் (Joseph Desnos de Karjlan) என்பவர் பொறுப்பேற்றுக் கொண்டார். (இக் காலத்தில் நெப்போலியன் பாரிசில் கைது செய்யப்பட்டு, செயின்ட் ஹெலனா (Saint Helana) தீவுக்குக் கொண்டு செல்லப்பட்டான். அங்கே ஆறு ஆண்டுகாலச் சிறைக் கொடுமைக்குப் பின் 1821, மே 5 இல் இறந்து விட்டான்)

1815, நவம்பர் 20-இல் ஆங்கிலேயர் - பிரஞ்சியர்க்கு மிடையே இரண்டாவது ஒப்பந்தம் பாரிசில் கையெழுத் தாயிற்று. பிரஞ்சிந்தியப் பகுதியின் ஆளுநராக கோம்தே துய்ப்புய் (Comte Dupuy) என்பவரும், அவருக்கு உதவியாக, ழோசப் தயோ (Joseph Dayot) என்பவரை யும் நியமித்த, பிரஞ்சுத் தலைமை 1816, செப்டம்பர் 27 இல் அவர்களைப் புதுச்சேரிக்கு அனுப்பி வைத்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1816, டிசம்பர் 4-இல் புதுச்சேரியைப் பிரஞ்சியர் பெற்றனர். சந்திரநாகூர் 1816 டிசம்பர் 16-இலும். காரைக்கால் 1817 ஜனவரி 14 இலும், மாகியும் ஏனமும் 1817 ஜனவரி 22-இலும் பிரஞ்சியர் வசமாயிற்று. 1792-இல் பிரஞ்சியர் இந்தியாவில் எந்தெந்தப் பகுதிகளைப் பெற்றிருந்தனரோ அவற்றையே ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகள் கழித்து (துய்ப்ளேக்சு, லல்லி தொலாந்தல் ஆகியோருடைய கனவுகள் சிதைந்த நிலையில்) ஆங்கிலேயரிடமிருந்து பெற்றனர்.[28]

பிரஞ்சியராட்சி-புதுப்பித்தல்

1840-இல் பிரஞ்சு அரசு, பிரஞ்சிந்தியப் பகுதிகளை ஆட்சி செய்ய ஒரு சட்டம் இயற்றியது. அதன்படி அனைத்து உரிமைகளும், அதிகாரங்களும் ஆளுநர்க்கே அளிக்கப்பட்டன. புதுச்சேரியில் ஆளுநர் இருப்பார். அவரது ஆணைக்கு அடங்கிய ஆட்சியாளராக காரைக்கால், மாகி, ஏனம், சந்திரநாகூர் ஆகியபகுதிகளில் ஒவ்வொருவர் இருந்து கொண்டு நிர்வாகம் புரிந்து வருவர். பிரஞ்சுப் புரட்சியின் விளைவால் கி. பி. 1848-இல் பிரான்சில் குடியாட்சி தோற்றம் பெற்றது. 1852-இல் பிரஞ்சு மன்னன் லூயினுடைய பதவி பறிக்கப்பட்டது. பிரான்சில் ஏற்பட்ட இம் மாற்றத்தினாலும், வளர்ச்சியினாலும் புதுச்சேரியில் எவ்வித பாதிப்பும் மாற்றமும் ஏற்படவில்லை.

நூறாண்டு ஆட்சி (1854-1954)

ஆங்கிலேய ஆளுநர் வெல்லெஸ்லியின் முயற்சியால், போருக்கு முன்பே எல்லா ஆயுதங்களையும், அதிகாரங்களையும் பிரஞ்சியரிடமிருந்து கைப்பற்றி விட்டதால், புதிதாக எந்தப் போர் முயற்சியிலும் பிரஞ்சியர் இறங்கவில்லை. இதே நேரத்தில் பிரான்சில் 1871, பிப்ரவரி 12-இல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மூன்றாவது குடியாட்சி பொறுப்பேற்றது. இதற்காகப் பிரஞ்சிந்தியப் பகுதியிலிருந்து ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்துமாறு, ஆணை பிறப்பிக்கப்பட்டது. அப்போது புதுச்சேரியில் தற்காலிக ஆளுநராகப் பதவி வகித்து வந்த மிஷான் (Michan) இத்தேர்தலை நடத்தும் பொறுப்பினை ஏற்றார். பிரஞ்சுக் குடியுரிமை பெற்ற வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு, 1871, மே 28-இல் தேர்தல் நடத்தப் பெற்றது. மூவாயிரம் பேர் இத்தேர்தலில் வாக்களித்தனர். பிரஞ்சியரின் சார்பில் நின்ற ரிஷ்மோன் (Richmont) என்பவர், 13,597 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.[29] சாந்தோன் ஓதியே (Santon Odear) என்பவர், 974 வாக்குகளே பெற்றுத் தோல்வியடைந்தாலும், பிரஞ்சிந்தியாவின் தேர்தலில் நின்ற முதல் இந்தியர் என்னும் பெயரைப் பெற்றார்.

பிரான்சில் 'தேசியசபை' (National Assembly) என்ற பெயரில் புதிய அமைச்சரவை ஒன்று தோற்றுவிக்கப் பட்டது. 1875-இல் ஒரு சட்டசபையையும் உள்ளடக்கியதாக இச்சபை விளங்கிற்று. இதில் பங்கு பெறும் ஆட்சிக்குழு உறுப்பினராக பிரஞ்சிநதியப் பகுதியில் வசிக்கும் பிரஞ்சுக் குடியுரிமை பெற்ற மக்களுக்கு ஓர் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. இதே போன்று ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் உள்ள பிரஞ்சுக் குடியிருப்புப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கும் இவ்வுரிமை வழங்கப்பட்டிருந்தது. எனவே, பிரஞ்சு நாட்டு மக்களைப் போன்றே ஏனைய பகுதி பிரஞ்சுக் குடியுரிமை பெற்ற மக்களையும் சமமாகப் பாவிக்கும் உரிமையினைப் பிரஞ்சு அரசு வழங்கியிருந்தது,

நாடு சண்முக வேலாயுத முதலியார்

1875-இல் பிரஞ்சிந்திய ஆளுநராயிருந்த துய்ரான்—துய்ப்ராய் (Durand–Dubraye) காலத்தில் திரௌபதிஅம்மன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோவில் திருவிழாவில் ஒரு பக்தர் தம் குழந்தையை நெருப்பில் தவறவிட்டதால் துடிதுடித்து இறந்துபோனது. அதனால் இனி தீமிதித்தல் கூடாதுஎன்று ஆளுநர் உத்திரவிட்டிருந்தார். 1879-இல் லொழியே (Laugier) ஆளுநராயிருந்தபோது தெய்வ வழிபாட்டுச் சுதந்திரம் வேண்டுமென்று தமிழர் கேட்டுக் கொண்டனர். நாடு சண்முக வேலாயுத முதலியார் தம் செல்வாக்கைப் பயன்படுத்தித் தீமிதி விழாவை நடத்த உத்திரவளிக்கச் செய்தார்[30]. 1873-இல் இவர் புதுவை ஆலோசனை சபை உறுப்பினராய்த் திகழ்ந்தார். 1887 – 1892 ஆகிய காலங்களில் நகராட்சி மன்ற உறுப்பினராகவும், பொது ஆலோசனை சபை துணைத் தலைவராகவும் பொறுப்பேற்றிருந்தார்.

கொம்யூன் அமைப்புகள்

1880-இல் புதுச்சேரியில் நகராட்சி - கொம்யூன் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. ஒழுகரை வில்லியனூர் பாகூர், காரைக்கால், திருமலைராஜன் பட்டினம் (Grand Aldee), நெடுங்காடு, சந்திரநாகூர், மாகி, ஏனம் முதலியன கொம்யூன்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. 1878 ஜூன் 12-இல் ஆங்கிலேயருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆங்கிலேயருடைய ரயில்வே முறையை (Railway Method) பிரஞ்சியரும் ஏற்றுக் கொண்டனர் இதன் அடிப்படையில் பிரஞ்சிந்தியாவில் முதல் ரயில் 1879 அக்டோபர் 14-இல் காரைக்கால்—பேரளம் தடத்தில் ஓடத்துவங்கியது.

1892-இல் மைசூர் மகாராஜா புதுச்சேரிக்கு வந்த போது சின்னக்கடை மணிக்கூண்டு அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டார். இம்மணிக்கூண்டு சௌ. இலட்சுமணசாமி செட்டியார் என்பவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகும். 1921 மார்ச் 16-இல் இம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மணிக்கூண்டு திறப்பு விழா புதுவை ஆளுநர் ழெர்பினி (Gerbini), மேயர் ஹென்றி கெப்ளே (Hendri Gaebele) ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. 1887-இல் ஒவ்வொரு கொம்யூனிலும் நிலம் அளவை செய்யப்பட்டு, இந்தோ சீன வங்கி உதவியுடன் தொலைபேசி இணைப்பகம் தொடங்கப்பட்டது.

புதுச்சேரியில் 1920-24-ஆம் ஆண்டுகளில் மிகுதியான பஞ்சம் ஏற்பட்டது. இதற்குரிய காரணத்தைப் பற்றிக் கூறுகையில் "நமதூருக்குச் சுற்றிலுமுள்ள இங்கிலீஷ் ஊர்களில் பெரும்பாலும் பஞ்சம் தோன்றாதிருக்கவும் நமதூருக்கு மட்டும் பஞ்சம் மிகுந்துத் தோன்றுவதற்குரிய காரணம், நமக்கருகிலுள்ள அகநாட்டு விலைக்கும், நம தூரிலுள்ள அகவிலைக்கும் வித்தியாசம் இருப்பதேயாகும்[31] என்று புதுவையில் வெளிவந்த சுஜனரஞ்சனி இதழ் மதிப்பிட்டுள்ளது.

முதல் உலகப்போர்

ஆஸ்திரிய இளவரசன் கொலை செய்யப்பட்டதும். செரீபியன் விடுதலையடைய வேண்டி ரஷ்யாவுடன் கூட்டு சேர்ந்து கொண்டது. இவர்கட்கு உதவியாக பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா போன்ற நாடுகள் துணை நின்றன. எதிரணியில் ஆஸ்திரியாவிற்கு உதவியாக ஜெர்மனி விளங்கியது. உலகப் போருக்காக புதுச்சேரியில் தரைப் படைக்கும் கடற்படைக்கும் ஆள் சேர்க்கும் முயற்சியில் பிரஞ்சிந்திய அரசு ஈடுபட்டது. 1914 ஆகஸ்டு மாதத்தில் பதினேழு வயதுக்கு மேற்பட்டவர்கள் படைவீரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். புதுச்சேரி, முதல் உலகப் போர்ச் செலவுக்காக ரூ. 1,20,000 பிரான்சுக்கு அனுப்பி வைத்தது. போரில் காயமடைந்தவர்க்காக மேலும் 10000 ரூபாயைவழங்கியது. 1916 நவம்பர்22இல் புதுச்சேரியில்வீசிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புயற்காற்று பெருத்த சேதத்தை, விளைவித்தது. இ காலத்தில் புதுச்சேரியில் தங்கியிருந்த பாரதியார் புய காற்றால் விளைந்த சேதத்தைத் தம் பாடல்களி குறிப்பிட்டுள்ளார். நிவாரணச் செலவுக்காகப் பிரஞ்சிந்தி அரசு ரூ. 90,000 ஐ வழங்கி இழப்பினை ஈடு கட்டியது.

இரண்டாவது உலகப் போர்

1918 நவம்பரில் போர்நிறுத்த ஒப்பந்தம் கையெழு தாகி முதல் உலகப்போர் முடிவுக்கு வந்தது. மீண்டு இருபது ஆண்டுகள் கழித்துப் போர் நிறுத்த ஒப்பந்த மீறப்பட்டது. ஜெர்மனி அதிபர் அடால்ஃப் ஹிட்லர் 193 இல் செக்கோஸ்லோவியா நாட்டின்மீது போர்தொடுத் இரண்டாம் உலகப்போருக்கு வழிவகுத்தார். இப்போரி பிரான்சு, பிரிட்டன், ரஷ்யா, அமெரிக்கா போன்றவை ஓரணியிலும் ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், ஆஸ்திரிய போன்றவை எதிரணியிலும் பங்கு கொண்டன. 1940 இ ஜெர்மன் பிரான்சைத் தோற்கடித்துக் கைப்பற்றியத பிரான்சைக் காப்பாற்ற சர்ச்சில் எல்லாவித நடவடிக்கை களையும் பின்பற்றினார். பிரான்சுக்கு வெளியே இருந் கொண்டே பலமான முற்றுகையிட்டு ஜெர்மனியி பிடியினைத் தளர்த்தினார். இறுதியில் 1945இல் ஜெர்மன யும் ஜப்பானும் சரணடைந்தன. இரண்டாவது உலக போரில் பிரான்சைக் காப்பாற்ற புதுச்சேரியும் தன் பங்குக்குப் படை வீரர்களையும் உதவிப் பொருட்களையு ஜெனரால் தெகலே (Gen. de Gaulle) தலைமையில் அனுப் வைத்தது.

புதிய ஆட்சி அமைப்பு

1945 ஆகஸ்டு 23இல் பிரஞ்சிந்தியப் பகுதியில் புதி வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு பிரஞ்சு தேசி சபை உறுப்பினர் பதவிக்குத் தேர்தல் நடத்தப் பெற்றத

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இத்நேர்தலில் தெ. ஜீவரத்தினம் (D. Zivarathiname) என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, பிரான்சு தேசியசபைக்கு அனுப்பப்பட்டார். 1947இல் ஆளுநர்க்குப் பதிலாக, பிரஞ்சுக் குடியாட்சி ஆணையர் (Commissionor of French Republic) என்னும் பதவி தோற்றுவிக்கப்பட்டது. இவரது கண்காணிப்பில் அரசாட்சிக் குழு ஒன்று ஏற்படுத்தப் பட்டது. இக்குழுவில் பணியாற்ற ஆறு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் மூன்று உறுப்பினர்கள் பிரதிநிதி அவையினரால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எஞ்சிய மூவரோ, பிரஞ்சிந்திய ஆணையரால் நியமிக்கப்பட்டனர். முதல் உலகப்போருக்கும், இரண்டாம் உலகப்போருக்கும் இடைப்பட்ட காலத்தில் புதுச்சேரி இந்திய விடுதலைப் போராட்டத்தில் முக்கியக் களமாகச் செயல்பட்டது.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் புதுச்சேரியின் பங்கு:

இந்திய விடுதலைப் போராட்டத்தில், ஆங்கிலேயரால், விரட்டப்பட்ட, ஒடுக்கப்பட்ட பலர் புதுச்சேரியைப் புகலிடமாக நாடினார்கள். 1888இல் பாலகங்காதர திலகர் தென்னிந்தியாவிற்கு வருகை தந்த போது, புதுச்சேரிக்கும் வந்து சென்றுள்ளார். கலவை சங்கரஞ் செட்டியார், திருமுடி நடராஜ செட்டியார், நாடு சண்முகவேலாயுத முதலியார் ஆகிய மூவரும் திலகருக்குப் புதுவையில் பாராட்டு விழா நடத்தினார்கள். அவ்விழாவில் திலகர் பேசும் போது, பிரஞ்சு ஆட்சியின் தாரக மந்திரங்களான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய கொள்கை களைப் பாராட்டிப் பேசினார்.[32]

பாரதியின் ''இந்தியா''

1906இல் எஸ்.என். திருமுலாச்சாரியரால் சென்னையில் தொடங்கப்பட்ட இந்தியா வார இதழுக்குப் பாரதியாரே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியராக இருந்து பணியாற்றினார். முதல் இதழ் 1906 மே 9-இல் வெளியாயிற்று. ஆங்கிலேயரின் அடக்குமுறைக்கும் பத்திரிகைத் தடைக்கும் அஞ்சி, பாரதியார் 1908, செப்டம்பரில் புதுச்சேரிக்கு வருகை புரிந்தார். பொன்னு, முருகேசம்பிள்ளை, ஆறுமுகச் செட்டியார், சுந்தரேச ஐயர், குவளை கிருஷ்ணமாச்சாரி ஆகியோரால் பாரதிக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. புதுச்சேரியிலும் 'இந்தியா' இதழ் தொடர்ந்து நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. புதுச்சேரியில் அச்சடிக்கப்பட்டு, சென்னைக்கு அனுப்பப்பட்ட இந்தியா இதழ் சின்னபாபு சமுத்திரம் தணிக்கைச் சாவடியில் பிடிக்கப்பட்டு, சென்னைக் காவல்துறை ஆணையரால் அத்தனை இதழ்களும் அழிக்கப்பட்டன.[33] ஆங்கிலேயரின் தொல்லைகளைத் தாண்டி, தொடர்ந்து 'இந்தியா' இதழ் நடத்த [இயலாத சூழ்நிலை ஏற்பட்டதால் 1910, மார்ச்சில் நிறுத்த வேண்டியதாயிற்று.

அரவிந்தர்

கல்கத்தாவில் 1872, ஆகஸ்டு 16இ அரவிந்தர் பிறந்தார். வங்காளத்தில் 'வந்தே மாதரம்' போராட்டத்தில் ஈடுபாடு கொண்டு அரவிந்தர், விடுதலை இயக்கத்தில் பங்கு பெறலானார். கடவுளிடமிருந்து தோன்றிய மதமாகவே அரவிந்தர் தேசியத்தை நேசித்தார். ஆங்கிலேய அரசுக்கு எதிராக மாணிக் தோலாவில் (Manick tola) வெடிகுண்டு தொழிற்சாலை தொடங்கப்பட்டதாகவும், அதில் அரவிந்தர் சம்பந்தப்பட்டிருந்தார் என்றும் கைதாகிப் பின்னர் விடுவிக்கப்பட்டார். புதுச்சேரியில் வெளியான 'இந்தியா' இதழில் அரவிந்தர் விடுதலையைக் கேலிச் சித்திரமாக "ராகு என்னும் பாம்பு (ஆங்கிலேயர்) சூரியனை (அரவிந்தர்) விட்டு விலகுவதைப் போன்று" சித்திரித்து பாரதியார் வெளியிட்டிருந்தார்,[34] 1910, ஏப்ரல் 4-இல் அரவிந்தர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதுச்சேரிக்கு வந்தார். பாரதியார், வ. வே. சு. ஐயர், கலவை சங்கரஞ் செட்டியார் மூவரும் அரவிந்தரை வரவேற்றனர். இவர்கள் மூவரோடும் மதம், இலக்கியம், தேச விடுதலை போன்றவற்றை விவாதித்துக் கொண்டு அரவிந்தர் காலங் கழித்தார். பிற்காலத்தில் யோகம், வழிபாடு, தத்துவம் இவற்றிலேயே தன்னை ஐக்கியப் படுத்திக் கொண்டார்.

அரவிந்தரின் சுயராஜ்ய நோக்கம் அரசியல் சார்புடையது மட்டுமன்று; கடவுள் அரசாட்சியை மண்ணில் நிலைநாட்ட வேண்டியுமாகும். இது குறித்து 'வந்தே மாதரம்' கட்டுரையில் அரவிந்தர் விரிவாக எழுதி யுள்ளார். 1904-இல் பரோடாவில் தங்கியிருந்த போது யோகப் பயிற்சிகளில் ஈடுபடத் தொடங்கினார். பின்னர் அலிப்பூர் வெடிகுண்டு வழக்கில் கைதாகி, சிறையிலிருந்த போது உள்மன யோகத்தில் (Internal yoga) முழுமையாக, தன்னைத் ஈடுபடுத்திக் கொண்டார். யோகத்தின் மூன்று அடிப்படைக் கொள்கைகளாக, அரவிந்தர் கூறுவன— (1) பிராணாயாமம் (Aspiration) (2) சரணாகதி (Surrender), (3) மறுத்தல் (Rejection) என்பனவாகும். 'கர்மயோகம்' பற்றி ஆங்கிலத்திலும் 'தர்மயோகம்' பற்றி வங்காளத் திலும் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

1914, மார்ச் 29-இல் மீரா ரிச்சர்ட் (Mira Richeard) என்னும் பிரஞ்சுப் பெண்மணி அரவிந்தரால் ஆட்கொள்ளப் பெற்றார். அன்று முதல் அரவிந்தரைக் கண்ணனாக எண்ணி இன்புற்று அன்னை வழிபாடு புரிந்து வந்தார். 1914, ஆகஸ்டு 15-இல் அரவிந்தர் 'ஆர்யா' என்னும் ஆங்கில இதழைத் தொடங்கி, அதில் 'The Life of Divine', 'The Secret of the Veda' போலும் பல ஆன்மீகத் தொடர் களை எழுதி வந்தார். 1926, நவம்பர் 24-இல் அரவிந்தர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சித்தி அடைந்ததாக அறிவிக்கப்பட்டது.[56] இந்நாள் முதற் கொண்டு அன்னையே ஆசிரமத்து அனைத்துப் பொறுப்பு களையும் நிர்வகித்து வந்தார். இதன்பின்னர், அரவிந்தர் ஆண்டுகளுக்கு மூன்று முறையே, (பிப்ரவரி 21, ஆகஸ்டு 15, நவம்பர்-24) மக்களுக்குத் தரிசனம் வழங்கி வந்தார். 1950, டிசம்பர் 5-இல் அரவிந்தர் காலமானார்.

அரவிந்த ஆசிரம வாழ்வில் ஈடுபாடு கொண்டு அங்கேயே உறைபவர்களைச் சந்நியாசிகள் என்றழைக்காமல் சாதகர்கள் என்றழைக்கின்றனர். தங்கள் உடலையே சாதகமாக ஆக்கிக் கொள்வதால் இவர்கட்கு அப்பெயர் நிலைத்து விட்டது.

வாஞ்சிநாதன்

1910இல் நீலகண்ட பிரம்மச்சாரி, 'சர்வோதயம்' (Vernacular Paper) என்னும் இதழை ஆசிரியர் பொறுப் பேற்று நடத்தி வந்தார். இக்காலத்தில் புதுச்சேரியில் வெள்ளையர்க்கு எதிராக, ஓர் இயக்கம் தொடங்கப் பட்டது. இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு இவ்வியக்கத் தில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இவர்கள் காளியின் குங்குமத்தை நீரில் கரைத்து, வெள்ளையன் குருதியாய் எண்ணிக் குடித்தனர். கட்டைவிரல் ரத்தத்தைக் கீறி எடுத்து, வீரத்திலகமாக இட்டுக்கொண்டனர்.[35] இதே நேரத்தில் சுப்பிரமணியசிவம், மாடசாமி, வாஞ்சிநாதன் ஆகியோர் புதுச்சேரிக்கு வந்தனர். புதுவையின் வெள்ளவாரி பகுதியில், பனை மரங்கள் நெருக்கமாக உள்ள பதுங்கிடங் களில் இவ்வியக்க இளைஞர்கட்குத் துப்பாக்கி சுடும் பயிற்சி அளிக்கப்பட்டது. தெய்வசிகாமணிநாயகர் என்பவர் ஆசிரிய ராக இருந்து இப்பயிற்சியை நடத்தினார். பாரதிதாசனும் இப்பயிற்சியில் கலந்து கொண்டார். மணியாட்சி ரயில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிலையத்தில் கலெக்டர் ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்ற வாஞ்சிநாதனுக்கும் இங்குதான் பயிற்சி அளிக்கப்பட்டது.

சைகோன் சின்னையாப் பிள்ளை

முதல் உலகப் போர் முடிவுற்ற போது, ஆங்கிலேய அரசு தம்பாதுகாப்பில் இருந்த அரசியல் கைதிகளை விடுதலை செய்தது. பாரதியார் புதுச்சேரியிலிருந்து, 1920 டிசம்பரில் வெளியேறி, கடலூர் வந்தபோது கைது செய்யப்பட்டார். பின்னர், 1921, செப்டம்பரில் திருவல்லிக் கேணியில் நோயுற்ற நிலையில் பாரதி இறந்தார். 1920 பிப்ரவரியில் புதுச்சேரியை விட்டு நீங்கிய வ. வே. சு. ஐயர் 'தேசபக்தன்' என்னும் இதழைத் தொடங்கி நடத்தினார்.

புதுச்சேரி பெரியகடைப் பகுதியைக் கட்டும் பணியைப் பிரஞ்சியரிடமிருந்து ஒப்பந்தம் பெற்றவரே சைகோன் சின்னையாப் பிள்ளை ஆவார். இந்திய விடுதலையில் ஈடுபாடு கொண்ட இவர் புதுச்சேரியில் அச்சகத் தொழில் நடத்தி வந்தார். பாரதி புதுச்சேரியில் இருந்தபோது அவருக்கு உதவியாக, இந்தியா இதழை அச்சிட்டு, யாருக்கும் தெரியாமல் இரவு நேரத்தில் பிரிட்டிஷ் இந்தியாவிற்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டிருந்தார். 1922இல் சின்னையாப் பிள்ளை 'தேசசேவகன்' என்னும் வார இதழைத் தொடங்கி நடத்தி வந்தார். இவ்விதழ், 'சத்யமே விரதம்' என்னும் குறிக்கோளைத் தலைப்பாகத் தாங்கி வெளிவந்தது.[36] நான்கணா விலையுள்ள இவ்விதழ் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமை தோறும் வெளியிடப்பட்டு வந்தது. பாரதிதாசன் கவிதைகளையும் இவர் தம்மிதழில் வெளியிட்டு வந்துள்ளார். பிரஞ்சிந்தியாவில் இவ்விதழ் நடத்தப்பட்டாலும், பிரஞ்சியராட்சியில் நடைபெற்ற தவறுகளைச் சுட்டிக் காட்டவும் தயங்கவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. பிரஞ்சிந்திய விடுதலைப் போராட்டம்

காந்தி – நேரு தூண்டுதல்

இந்தியா விடுததலயடைந்த நாளான 1947, ஆகஸ்டு 15 பிரஞ்சிந்தியர்க்கு விடுதலை வேட்கையை வளரச் செய்தது. அண்டை மாநிலங்களின் விடுதலைப் போராட்டமும், பாரதி, வ.வே.சு, ஐயர், அரவிந்தர் ஆகியோரது விடுதலை உணர்ச்சிமிக்க கருத்துக்களும், பிரஞ்சிந்தியப் பகுதிக்கு காந்தி, நேரு ஆகியோரது வருகையும், பிரஞ்சிந்தியரிடையே விடுதலை வேட்கையை எழச் செய்தது எனலாம். 1934இல் மகாத்மா காந்தி மாகிக்கு வந்த போது, "பிரஞ்சிந்தியாவிற்கும், பிரிட்டிஷ் இந்தியாவிற்கும் இடையே எந்த வேறுபாடுமில்லை. எமது போராட்டம் இந்தியா முழுமைக்கும் சுதந்திரம் பெற வேண்டியே"[31] என்று பேசியுள்ளார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் பிற்காலத்தில், (1962) ஜவகர்லால் நேரு, "முந்தைய காலத்தில் நாம் சுதந்திரப் போராட்ட இயக்கம் ஆரம்பித்தது, பிரிட்டிஷாருக்கு எதிரானது மட்டுமல்ல; பிரஞ்சிந்தியர்க்கும் போர்த்துக்கீசியருக்கும் கூட எதிரானது தான்"[38] என்று கூறியுள்ளார். இப்படிப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் புதுச்சேரி மக்களிடையே, விடுதலை வேட்கை வளர்ந்து, இந்தியப் பகுதிகளோடு, புதுவை மாநிலத்தை இணைக்க வேண்டிப் போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கினர்.

காங்கிரஸ், கம்யூனிஸ்டு, சோசலிசம், திராவிடக் கழகம் போன்ற கட்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து இப்போராட்டத்தில் பங்காற்றின. 1936இல் புதுவையின் பழம் பெரும் விடுதலை வீரரும், கம்யூனிஸ்டு கட்சியின் தலைவருமான வ. சுப்பையா, ஜவகர்லால் நேருவைச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சந்தித்து, சுதந்திரப் போராட்டத்திற்கு பிரஞ்சிந்தியா முழு ஒத்துழைப்பும் நல்குவதாகக் கூறினார். வாரம் ஒருமுறை புதுவையின் அரசியல் சூழ்நிலைப் பற்றி அறிக்கை அனுப்புமாறு, வ. சுப்பையாவிடம் நேரு கேட்டுக் கொண்டார். 1946, செப்டம்பர் 30-இல் "பிரஞ்சிந்திய காங்கிரஸ்" (All French India Congress) என்னும் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இதன் புதுவை அமைப்பாளராக, ஜே. சவரிநாதன், சேதுராம செட்டியார், அம்பாடி நாராயணன், எம். எஸ். அண்ணாமலை போன்றோர் செயலாற்றினர்.

பிரஞ்சிந்தியாவில் ஆட்சிக்குழு உறுப்பினராகப் பணியாற்றிய வ. சுப்பையா புதுச்சேரியை இந்தியாவுடன் இணைக்கும்படி அறிக்கை விடுத்தார். 1947, ஆகஸ்டில், பிரஞ்சிந்திய தேசிய காங்கிரஸ் (French India National Congress), மாணவர் காங்கிரஸ் (The students Congress), கம்யூனிஸ்டு போன்ற கட்சிகள் ஒருங்கிணைந்து ஒரு கூட்டமைப்பினை உருவாக்கி, பிரஞ்சியர்க்கு எதிரான போராட்டத்தில் மக்களை ஈடுபடத் தூண்டியது. 1947 ஆகஸ்டு 10-இல் புதுவை மக்கள் விடுதலை வேட்கைக் கோஷங்களை எழுப்பிக் கொண்டே, ஊர்வலமாக, நேரு வனத்திற்குச் சென்று பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இக்கூட்டம் பிரஞ்சிந்திய மாணவர் காங்கிரஸ் தலைவர் ராஜன்தாஸ் தலைமையில் நடைபெற்றது.

பஞ்சாயத்துத் தேர்தல்கள்

1948 ஜூன் 8-இல் பிரஞ்சு—இந்திய ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. இதன்படி பிரஞ்சிந்தியாவில் வசிக்கும் மக்களே வாக்கெடுப்பு மூலமாகத் தாங்கள் யாரைத் தேர்வு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்யலாம் எனத் தீர்மானிக்கட்டும் என்று பிரஞ்சிந்திய அரசு அறிக்கை விடுத்தது.[39]''

பிரஞ்சிந்தியாவில் உள்ள 102 இடங்கட்கும் (புதுச்சேரி நகரம்—18 கிராமப் பஞ்சாயத்து-84) தேர்தல் நடத்தப்பட ஆயத்தம் செய்யப்பட்டது. 1948-இல் புதுச்சேரியில், எட்வர்ட் குபேர் (M. Edourd Goubert) தலைமையிலான சோசலிசக் கட்சி வலுவுள்ள அமைப்பாக விளங்கியது. தேர்தலுக்காக வேண்டி பிரஞ்சிந்திய தேசிய காங்கிரஸ் திருத்தியமைக்கப்பட்டு ஆர். எல். புருஷோத்தமரெட்டியார் இக்கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டார். எஸ். ஆர். சுப்பிரமணியன், அன்சாரி துரைசாமி, ஜீவரத்தினம் போன்றோர் இக்கட்சியின் பிற முக்கிய உறுப்பினராவார். இக்கால கட்டத்தில் காமராசர் புதுச்சேரிக்கு வந்து புருஷோத்தம ரெட்டியார், பெருமாள் போன்றோரிடம் தேர்தலுக்காக வேண்டி ஆலோசனை நடத்தி விட்டுச் சென்றார். அப்போது, புதுச்சேரியின் ஆளுநராக விளங்கிய பரோன் (Baron) தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவிட்டு, 1948 அக்டோபர் 24-இல் தேர்தலை நடத்தினார். இத்தேர்தலில் குபேரின் சோசலிசக் கட்சி வெற்றி பெற்று பெரும்பான்மையான இடங்களைக் கைப் பற்றியது. 1948 டிசம்பர் 1-இல் புதுவை ஆளுநராயிருந்த பரோன் பிரான்சுக்குப் புறப்பட்டுச் சென்றார். 1949, பிப்ரவரி 3-இல் சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால்நேரு, 'புதுவை மக்களின் அரசியல் எதிர்காலம், அப்பகுதி மக்களின் ஆலோசனையின் அடிப்படையில் தான் அமுல்படுத்தப்படும்'[40] என்று உறுதிமொழி அளித்திருந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சந்திரநாகூர் இணைப்பு

1949, ஜூன் 19-இல் சந்திரநாகூரை இந்தியாவுடன் இணைக்கக்கோரி அப்பகுதி மக்களே தீர்மானம் இயற்றினார்கள். இத்தீர்மானத்தின் அடிப்படையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இணைப்பிற்கு ஆதரவாக 7473 வாக்குகளும், எதிராக 114 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 1950, மே 2-இல் நடைமுறை ஆட்சி மாற்றம் (De Facto administration of Chrandra Nagore) ஒப்பந்தத்தின் அடிப்படையில் சந்திரநாகூர் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. 1951, பிப்ரவரி 2-இல் சந்திரநாகூர் இணைப்பு தொடர்பாக, பாரிசில் இந்தியா-பிரஞ்சு நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. பின்னர் முழுமையான நடைமுறை அதிகார மாற்ற ஒப்பந்தம் (De Jure transfer of Chandra Nagore) 1951, ஜூன் 9-இல் கையெழுத்திடப்பட்டு சந்திரநாகூர் அதிகாரபூர்வமாக இந்தியாவுடன் இணைந்தது. சந்திரநாகூர் இந்தியாவுடன் இணைந்த நிகழ்ச்சி புதுச்சேரி மக்களிடையே, மிகுதியாக விடுதலை ஊக்கத்தை விளைவித்தது.

குபேரின் தன்னாட்சித் திட்டம்

1949, ஜூலையில் புதுச்சேரிக்குத் தன்னாட்சி வழங்கக் கோரி புதுவையிலிருந்து பாரிசுக்கு, குபேர் தலைமையில் ஒரு குழு சென்றது. 1949, அக்டோபர் 27-இல் குபேரின் தன்னாட்சி முறைப் போராட்டத்திற்கு இந்திய அரசு எதிர்ப்பு தெரிவித்தது. இதனால் 1950-இல் குபேர் கட்சியினருக்கும் இணைப்புக் கட்சியினருக்கும் இடையே கலகம் மூண்டது. இக்கலகத்தில் இணைப்பை ஆதரித்த கட்சியினர் வீடுகளுக்கு (வ. சுப்பையா வீடு உட்பட) தீவைக்கப்பட்டது. இதில் ஏறக்குறைய 125 வீடுகள் சாம்பலாயின.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1915-இல் பிரஞ்சுப் பராளுமன்றத்தின் துணை உறுப்பினர் பதவிக்குத் தேர்தல் நடத்தப்பட்டது. இத்தேர்தலில், மொத்த வாக்குகளான 90,667-இல் குபேர் 90,053 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

விடுதலைப் போராட்டத்தில் புதுவை இதழ்களின் பங்கு

1951-இல் சுப்பையா தலைமையில் கம்யூனிஸ்டு கட்சி பிரஞ்சியர்க்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தியது. சுதந்திரம் என்னும் இதழைத் தொடங்கி அதில் பிரஞ்சியரின் ஆட்சி முறைக் கேடுகள், அடக்கு முறைத்தன்மைகள் பற்றி தலையங்கம், கட்டுரைகள் போன்றவற்றை வெளியிட்டு வந்தார். இக்காலத்தில் பிரஞ்சியரின் விடுதலை வேட்கையைத் தூண்டும் வகையில், மாநிலம், சமுதாயம், ஜனதா, தேச சேவகன், விமோசனம், புதுவை முரசு போலும் இதழ்கள் சுதந்திரக் கருத்துக் களைத் தாங்கி வெளிவந்தன. புதுவை முரசு இதழ், அக்காலத்தில் பாரதிதாசன், 'சுதந்திர எதிர்ப்பியக்கம்' ஒன்றை ஆரம்பித்த செயலை வன்மையாகக் கண்டித் துள்ளது. ''திராவிட இயக்கத்தின் செயலாளர் அண்ணாத் துரை அவர்களே, (புதுவை) இந்தியாவுடன் இணைய வேண்டும் என்று அறிக்கை விடுகின்றபோது புரட்சிக் கவிஞராகிய நீங்கள் இவ்வாறு எதிர் நடவடிக்கையில் இறங்குவது ஒழுங்காகுமா?... இந்த மாறான செயலையும் நீங்கள் புரட்சி என்று கருதி விட்டீர்களா? நீங்கள் பாரதிதாசரா? அல்லது பிரஞ்சுதாசரா?[41] என்று புதுவை முரசு புகலும் கூற்று சிந்திக்கத்தக்கது.

இணைப்புப் போராட்டம்-உச்சநிலை

1954-இல் இணைப்புப் போராட்டம் இறுதிக் கட்டத்தை எட்டிற்று. பிரஞ்சிந்திய சோசலிசக் கட்சியும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எட்டுக் கொம்யூன்களின் பஞ்சாயத்து உறுப்பினர்களும் சேர்ந்து எவ்வித நிபந்தனையுமின்றி, புதுச்சேரியை இந்தியா வுடன் இணைக்கவேண்டி கோரிக்கை ஒன்றைப் பஞ்சாயத்து சபையில் நிறைவேற்றினர். 1954, மார்ச் 27-இல் குபேர் தலைமையில் புதுவையை இணைக்கக் கோரி, அனைத்துக் கட்சிகளின் சார்பில் ஊர்வலம் நடத்தப்பட்டது. இத் தகைய ஊர்வலங்களும், போராட்டங்களும் மடுகரை. மண்ணாடிப்பட்டு, காலாப்பட்டு, நெட்டைப் பாக்கம், ஆகிய நான்கு கொம்யூன்களிலுமுள்ள பதினாறு கிராமங் களிலும் நடத்தப் பெற்றன. ஒவ்வொரு கொம்யூனிலும் இந்திய தேசியக் கொடியை ஏற்றி, இந்திய யூனியனைப் போன்ற ஆட்சி முறையைப் புதுச்சேரியிலும் ஏற்படுத்த வேண்டும் என்று சோசலிசக் கட்சி திட்டம் தீட்டியது.

தடைச்சட்டம்-மீறல்

1954, மார்ச் 30இல் இணைப்புப் போராட்டக் குற்றத் திற்காக, குபேர், முத்துக் குமரப்ப ரெட்டியார் ஆகிய இரண்டு அமைச்சர்களையும் பிரஞ்சிந்திய அரசு பதவி நீக்கம் செய்தது. அடுத்த நாளே குபேர் நெட்டைப் பாக்கம் காவல் நிலையத்தில், இந்திய தேசியக் கொடியை ஏற்றி, சுதந்திர ஆட்சியைத் தொடங்கி வைப்பதாக அறிவித்தார், 1954, ஏப்பிரல் 1 முதல் இந்திய தேசிய வாதிகள் யாரும் புதுச்சேரியில் நுழையலாகாது என்று சட்டம் விதிக்கப்பட்டது. ஏப்பிரல் 3 இல் பிரஞ்சிந்திய சோசலிச விடுதலைப் போராட்ட இயக்கம் பாகூர் உட்பட, பதினேழு கிராமங்களை விடுதலை பெற்றதாக அறிவித்தது. ஏப்பிரல் 5 இல் மணமேடு, கடுவனூர், கிருஷ்ணாபுரம் ஆகிய மூன்று ஊர்களும் விடுதலை பெற்ற தாக அறிவிக்கப்பட்டன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மக்களவையில் நேரு விவாதம்.

1954, ஏப்ரலில் வ. சுப்பையா டெல்லியில் நேருவைச் சந்தித்து, புதுச்சேரியின் இக்கட்டான நிலையை எடுத்துக் கூறினார். இதன் அடிப்படையில் நேருவும் புதுச்சேரியின் மாற்றம் குறித்து இந்திய மக்களவையில், விவாதம் நடத்தினர். விரைவிலேயே புதுவை இந்தியாவுடன் இணைக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தினார். இதைக் கேள்வியுற்ற பிரஞ்சிந்திய மக்கள் விடுதலைப் போராட்டத்தில் தங்கள் தீவிரத்தை மிகுதிப்படுத்தினர்.

பிரஞ்சிந்திய விடுதலை இயக்கம்

1954, ஏப்ரல் 14 இல் துரை முனுசாமி தலைமையில் மாணவர் காங்கிரஸ் அணி, பிரஞ்சிந்திய விடுதலைக்காகப் போராட்டம் ஒன்றை நடத்தியது. இப்போராட்டத்தில் துரைமுனுசாமி கைது செய்யப்பட்டார். 1954 மே 17 இல் பிரஞ்சிந்திய காங்கிரஸ், சோசலிசக் கட்சி, கம்யூனிஸ்டு கட்சி, மத்திய இணைப்புக் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் ஒருங்கிணைந்து, 'பிரஞ்சிந்திய விடுதலை இயக்கம்' என்னும் அமைப்பைத் தோற்றுவித்தன. இவ்வியக்கத்தின் தலைவராக குபேரும், மூன்று செயற்குழு உறுப்பினர்களும், 192 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு செயலாற்றி வந்தனர். சோசலிசக் கட்சியின் பெயர் 'பிரஞ்சிந்திய விடுதலை காங்கிரஸ்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இதன் தலைவராகிய குபேரும் தன் பெயரை (எட்வர்டு) குபேர்ப் பிள்ளை என்று மாற்றி வைத்துக் கொண்டார். இக்கால கட்டத்தில் குபேர், காமராசர், வ. சுப்பையா மூவரும் கூடிக் கலந்து, புதுவை விடுதலை குறித்துத் தீவிரமாக ஆலோசித்தனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரஞ்சு - இந்திய பேச்சுவார்த்தை

1954, ஜுன் மாதம் புதுச்சேரி நிலை குறித்து, இந்தியா — பிரான்சுக்கு மிடையே நடந்த பேச்சு வார்த்தை முறிந்து போகவே, சுதந்திரப் போராட்டத்திற்கு எதிர்ப்பாக, பிரஞ்சு அரசு தனது இராணுவத்தைப் புதுச்சேரியில் இறக்கியது. இதற்கிடையே பிரஞ்சிந்திய விடுதலை இயக்கம், விடுதலை பெற்றதாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் ஒய்வு பெற்ற காவல் அதிகாரிகளையும், கண்காணிப்பாளர்களையும் நியமித்துப் பாதுகாப்பான ஆட்சியை நடத்திற்று பிரஞ்சு நாட்டின் பிரதமர் மென்தெஸ் பிரான்ஸ் (Menez France) அவர்களின் திறமையான அணுகு முறையாலும் இந்திய–பிரஞ்சு நாடுகளின் கூட்டு முயற்சியினாலும், 1954, அக்டோபர் 13இல் புதுவை இணைப்பைப், பிரஞ்சு அரசாங்கம் ஏற்றுக் கொண்டது.

கீழூர் வாக்கெடுப்பு

1954, அக்கோபர் 18இல் காங்கிரசைச் சேர்ந்த பஞ்சாயத்து உறுப்பினர் அடங்கிய பிரதிநிதிசபை (Congress Municipal Counsilors of the Representative Assembly) கீழுரில் ஒன்று கூடிப் புதுவை இணைப்புப் பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றியது. அவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாலசுப்பிரமணியன் முன்னிலையில் வாக்கெடுப்பு நடை பெற்றது. சபையின் மொத்த எண்ணிக்கையாவ 178பேருள், 170 பேர் இணைப்புக்கு ஆதரவாகவும், 7 பேர் எதிர்ப்பாகவும் வாக்களித்தனர். 1954, அக்டோபர் 21 இல் புதுடெல்லியில் இந்திய–பிரஞ்சுப் பிரதிநிதிகள் ஒன்று கூடி 'இணைப்புத் தீர்மான ஒப்பந்தம்' (De-facto Settlements) இயற்றினர். 1954, நவம்பர் 1 இல் பிரஞ்சுப் பிரதிநிதி பியேர்லாந்தியும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(Pierre Landy) இந்தியப் பிரதிநிதி கேவல் சிங்கும் (Kewal Singh) இணைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின்னர், அன்று முதல் புதுவை இந்தியாவுடன் இணைந்ததாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. புதுவை விடுதலையான 1954 நவம்பர் 1 முதல் கேவல்சிங் புதுச்சேரியின் தலைமை ஆணையாளராக நியமிக்கப்பட்டார். புதுச்சேரியை அதிகார பூர்வமாக இந்தியாவுடன் இணைப்பதற்கான ஒப்பந்தம், (De Jure transfer) முறைப்படி 1956 மே 28இல் கையெழுத்தாயிற்று. பின்னர் இவ்வொப்பந்தம் 1962, ஜூலை முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

நேருவின் உறுதி மொழி

1955, ஜனவரி 16இல் இந்தியப் பிரதமர் நேரு புதுச்சேரிக்கு வருகை தந்து, பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது, பிரஞ்சுப் பண்பாடு, பிரஞ்சு மொழி ஆகியவற்றின் அடையாளமாகத்திகழும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகள் இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்தும் வேறுபட்டுவிளங்குகின்றன. பிரான்சுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளின் தனித்தன்மையைப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு புதுச்சேரிக்கு மட்டு மின்றி, இந்தியாவின் கடமையாகவும் விளங்குகிறது.[44] என்று உறுதிமொழி அளித்துப் பேசினார்.

3. பிரஞ்சிந்திய ஆட்சிமுறை

இந்தியாவில் பிரஞ்சுக் குடியேற்றம் முதன் முதலில் 1666இல் சூரத்தில் ஏற்பட்டது, 1673இல் புதுச்சேரியைப் பிரஞ்சிந்திய வணிக நிறுவனமாகப் பெற்றபோது பெல்லான் டூழ தெ லெஸ்பினே அதன் இயக்குநரா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நியமிக்கப்பட்டார். 1701 இல் பிரான்சுவா மர்த்தேன் பிரஞ்சிந்தியப் பகுதி முழுமைக்கும் பொது இயக்குநராகப் பொறுப்பேற்றார். பிரஞ்சிந்தியாவின் ஆட்சிக் குழு நீதித் துறை, நிர்வாகத்துறை என இரு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. இவ்வாட்சிக் குழுவின் தலைவரான ஆளுநர் பிரஞ்சு அரசாங்கத்தால் நியமிக்கப்படுவார். காரைக்கால், மாகி, ஏனம் ஆகிய பகுதியின் ஆட்சித் தலைவர்கள் புதுவை ஆட்சிக்குழுவின் உறுப்பினராக கருதப்படுவர். அனைத்து அரசியல் செய்திகளும் பாரிசிலிருந்து முதலில் புதுச்சேரி ஆளுநரால் பெறப்பட்டு, பின்னர் பிற பிரஞ்சிந்தியப் பகுதிகளுக்கு அனுப்பப்படும்.

1773 வரை பிரஞ்சிந்திய அரசியலில் எவ்வித மாற்றமுமின்றி. அரசரால் நியமிக்கப்பட்ட ஆட்சிக்குழு உறுப்பினர்களே நிர்வாகம் செய்து வந்தனர். 1773இல் ஆட்சிக் குழுவில் சிறு மாற்றம் செய்யப்பட்டு ஆட்சி நிர்வாக அமைப்பு இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஒரு பாதி நிர்வாகம் ஆளுநரிடமும், மறுபாதி நிர்வாகம் ஆட்சிக் குழுவிடமும் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆளுநர் அரசியலையும், இராணுவத்தையும் கவனித்து வந்தார். ஆட்சிக் குழுவோ உள்ளாட்சித் துறை அமைப்புகளைக் (காவல், நிதி, நீதி, கப்பல், வணிகம்) கவனித்து வந்தது. 1785 மே மாதம் முதல் நன்னம்பிக்கை முனையிலிருந்து, கிழக்குப் பகுதிவரை நீண்டுள்ள பிரஞ்சுப் பகுதிகளை ஒன்றாக இணைத்து, ஒரே அரசாக ஆட்சி நடத்த பொது ஆளுநர் (Governor General) என்ற புதிய பதவியை உருவாக்கி, தலைமையிடமாக (பிரான்சின்) செயிண்ட் லூயி கோட்டை செயல்பட்டு வந்தது. பொது ஆளுநரின் கீழ் இரண்டு ஆளுநர்கள் நியமிக்கப்பட்டு, ஒருவர் புர்போனிலும் (Isle of Bourbon) மற்றொருவர் புதுச்சேரியிலும் இருந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிர்வாகம் புரிந்து வந்தனர். அக்காலத்திலிருந்தே, பிரஞ் சிந்தியப் பகுதிகளைக் கட்டுப்படுத்தும் தலைமையிடமாகப் புதுச்சேரி செயல்பட்டு வந்துள்ளது.

பிரஞ்சிந்தியாவைப் பற்றிய செய்திகள் புதுச்சேரியி லிருந்து உடனுக்குடன் பிரான்சுக்குச் செல்வதில் கால தாமதம் ஏற்பட்டது. ஆனால், சந்திரநாகூரிலிருந்து பாரிசுக்குச் செய்திகள் பரிமாறிக் கொள்வதில் சிரமமும், காலதாமதமும் வெகுவாகக் குறைந்தது. எனவே, 1785-இல் அரசியல், ஆட்சி நிலைமையில் புதுச்சேரி தன் முக்கியத் துவத்தை இழந்திருந்தது எனலாம். 1787-இல் புதுவை ஆளுநர் மற்ற பிரஞ்சிந்தியப் பகுதிகளையும் திறம்பட நிர்வாகம் புரிந்திட 'ஆட்சியாளர் குழு' ஒன்றை ஏற் படுத்தினார். 1791, ஜூலை 5-இல் புதுச்சேரியில் இருபத்தொரு உறுப்பினர் (புதுச்சேரி—15, சந்திரநாகூர்—3, காரைகால்—1, மாகி-1, ஏனம்—1) அடங்கிய குடியேற்ற சபை (Colonial Assembly) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. பிரஞ்சிந்தியப் பகுதியில் இரண்டு ஆண்டு குடியிருந்தவரும், இருபத்தைந்து வயது நிரம்பியவரும் வாக்களிக்க உரிமை பெற்றவராகத் திகழ்ந்தனர். குடியிருப்பு சபையில் உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொரு ஆறு மாதமும் தேர்ந்தெடுக்கப் பட்டு, ஆட்சி நடத்தும் உரிமை பெற்றவராக விளங்கினர். சபை உறுப்பினர்கள் அனைவரும் கூடி, தங்கள் பிரதிநிதி களாக இரண்டு பேரைத் தேர்வு செய்து பாரிசு தேசிய சபைக்கு அனுப்பி வைப்பர். 1792, செப்டம்பரில் பாரிசு தேசிய சபை, உள்துறை ஆணையர் (Civil Commissioner) ஒருவரை நியமித்து பிரஞ்சிந்தியப் பகுதிகளின் ஆட்சி முறை, நிர்வாகம் ஆகியவற்றைக் கண்காணித்து வரச் செய்தது. சந்திரநாகூரில் உள்ள பிரஞ்சுக் குடியுரிமை பெற்றோர் தங்களுக்கென்று தனி அரசியல் அமைப்பு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒன்றை ஏற்படுத்திக்கொண்டனர். 1815-இலும், 1829-இலும் ஆட்சி முறைகள் மாற்றியமைக்கப்பட்டு, திருத்தியமைக்கப் பட்ட தனிஆட்சிக் குழு (Privy Council) ஏற்படுத்தப்பட்டது.

பிரஞ்சுக் குடியுரிமை—தகுதிகள்

பிறப்பு அடிப்படையிலான சட்டப்படி இருபத்தைந்து வயது நிரம்பியவராகவும், சொந்தமாய் ஐந்நூறு ரூபாய்க்குக் குறையாத சொத்து மதிப்பு உடையவராகவும், பிரஞ்சிந் தியப் பகுதியில் தொடர்ந்து ஓர் ஆண்டு வசிப்பவராகவோ, அல்லது ஐந்து ரூபாய் வாடகையில் இரண்டு ஆண்டு குடியிருப்பவராகவோ இருப்பவர்க்குக் பிரஞ்சுக் குடியுரிமை பெறும் தகுதி இருந்து வந்தது. 1881 செப்டம்பரில் 'ஐரோப்பியர் முறை ஒழுகல்' (Renounciation) என்னும் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டது. ஐரோப்பியர் முறை யைத் தழுவுவதாகப் பலர் தங்கள் பெயரைப் பதிவுசெய்து கொண்டனர். 1884, பிப்ரவரி 26-இல் இயற்றப்பட்ட சட்டப்படி பிரஞ்சிந்திய மக்களை மூன்று பிரிவுக்குள் அடக் கினர்.[43] 1. முதல் பிரிவில் ஐரோப்பியரும் சட்டைக்காரரும் அடங்குவர் (500 வாக்காளர்கள்) 2. இரண்டாவது பிரிவில் ஐரோப்பியர் முறை ஒழுகலாற்றைப் பின்பற்றிய 'ரெனோன்சான் மார்கள்' அடங்குவர் (2000 வாக்காளர்கள்) 3. மூன்றாவது பிரிவில் இந்துக்கள் (Brahmaniques) அடங்குவர் (6000 வாக்காளர்கள்).

ஆளுநரும் ஆணையரும்

பிரஞ்சிந்தியப் பகுதியின் தலைநகரான புதுச்சேரியி லிருந்து கொண்டு ஆளுநர் ஆட்சி புரிந்து வந்தார். இராணுவத்திற்குத் தலைவராக இருந்து கொண்டு பாது காப்புக்கான ஏற்பாடுகளை ஆளுநர் கவனிப்பார். கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை ஒழுங்காகச் செலவிடப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படுகிறதா என்றும் மத நிகழ்ச்சிகளுக்குச் சுதந்திரம் அளிக்கப்படுகிறதா என்றும் கண்காணிப்பார். பிரஞ்சிந்திய அலுவலக ஊழியர்களை நியமிக்கவும், பதவி விலக்கவும், ஆளுநர்க்கே முழு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. மேலும், ஒவ்வொரு ஆண்டும் பிரஞ்சிந்தியாவின் முன்னேற்றம் குறித்தும், பிரச்சினைகள் குறித்தும் பிரான்சு அமைச்சரவைக்கு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்பும் ஆளுநருக்கு இருந்தது. காரைக்கால், மாகி, ஏனம் நிர்வாகிகள் ஒவ்வொரு ஆண்டும் தங்கள் பகுதி நிலையைக் குறித்து ஆளுநருக்கு அறிக்கை அனுப்புவர். அவற்றை, ஆளுநர் தன் குறிப்புகளோடு இணைத்து பிரான்சு அமைச்சரவைக்கு அனுப்பி வைப்பார்.

பிரஞ்சு அரசு, 1847-இல் பிரஞ்சிந்தியப் பகுதியை நிர்வாகம் புரிய ஆளுநருக்குப் பதிலாக ஆணையர் (Commissioner) என்பவரை நியமித்தது. அதே போன்று ஆளுநரின் தனிக் குழுவைக் (Privy council) கலைத்துவிட்டு, 'அரசுக்குழு' (A Council of Govt.) ஒன்றினை ஏற்படுத்தி ஆண்டுவரச் செய்தது. இப்புதிய குழுவில் ஆறு உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களுள் மூவர் ஆணையராலும் எஞ்சிய மூவர் பிரதிநிதி அவையினராலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இக்குழுவின் தலைவராகப் புதுச்சேரி ஆணையர் இருந்து செயல்பட்டு வந்தார்.

நகராட்சி, கொம்யூன் அமைப்புகள்

பிரஞ்சுப் புரட்சிக்காலத்தில் (1790, செப்டம்பர்) புதுச்சேரியின் பொதுச்சபை கூடி உள்ளூர் நிர்வாகத்திற்காக, ஒரு நகராட்சி அமைப்பை உருவாக்கியது. இச்சபை, நகராட்சி நிர்வாகத்தைக் கவனித்திட ஒரு மேயரையும் ஐந்து உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1791, ஏப்ரலில் 'பொயே' (Boyer) என்னும் மேயர் தலைமையில் மாகி நகராட்சி அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. 1791, மே மாதம் காரைக்காலில் நகராட்சி அமைப்பு தொடங்கப்பட்டது. 1880, மார்ச் 12இல் பிரஞ்சிந்தியப் பகுதி 10 கொம்யூன்களாகப் (புதுச்சேரி, ஒழுகரை, வில்லியனூர், பாகூர், காரைக்கால், திருமலைராஜன் பட்டினம், நெடுங்காடு, சந்திரநாகூர், மாகி, ஏனம்) பிரிக்கப்பட்டன.[44] ஒவ்வொரு கொம்யூனிலும் மேயரே தலைமைப் பொறுப்பேற்று உள்ளூர் நிர்வாகத்தைக் கவனித்து வந்தார்.

நீதித்துறை

1701-இல் தொடங்கப்பட்ட ஆட்சிக்குழு (Sovereign Council) அமைப்பே உள்ளாட்சித்துறை, நீதித்துறை ஆகிய இரண்டையும் கவனித்து வந்தது. 1776-இல் இவ்வாட்சிக் குழு கலைக்கப்பட்டு, உயர்மட்டக்குழு தோற்றுவிக்கப் பட்டது. இக்குழுவின் தலைவர் ஆளுநர் ஆவார். ஏனைய உறுப்பினர்களாக, ஒரு பொது அதிகாரி, ஏழு கவுன்சிலர் கள், ஒரு அரசு வழக்குரைஞர், ஒரு வழக்குரைஞர் உதவியாளர், ஒரு நீதிமன்ற எழுத்தர் ஆகியோர் இருந்து செயல்பட்டு வந்தனர். சாதாரண வழக்குகளுக்குகளுக்காக (Civil Case) ஐந்து நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றம் (Bench Cort) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. பிரஞ்சுப் புரட்சிக்காலத்தில், குடியிருப்பு சபை புதுச்சேரியில் இருந்த போது சாதாரண வழக்குகளுக்காக, நடுவர் ஆய நீதிமன்றம் (Tribunal Court) ஏற்படுத்தப்பட்டது. 1728-இல் புதுவையில் பிரஞ்சிந்தியக் குடியுரிமை பெற்ற மக்களின் நீதிமன்றம் (Tribunal of Choultry) தொடங்கப்பட்டது. 1778-இல் 'சட்ட ஆலோசனைக்குழு' என்னும் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இக்குழுவில் உள்ள பல இனத்தை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேர்ந்தோர், உயர்மட்டக்குழுவிற்கு ஆலோசனை வழங்கி வந்தனர். 1793—1816-ஆம் ஆண்டுக் காலத்தில் புதுச்சேரி ஆங்கிலேயர் வசமிருந்தபோதும் பிரஞ்சியரின் நீதிக் கொள்கைகளின் அடிப்படையிலேயே நீதிமன்றங்கள் இயங்கிவந்தன.

புதுவைப் பகுதியில் நிரந்தர அமைதி வேண்டி, 1827 அக்டோபரில் மூன்று விதமான நீதி மன்றங்களை (Court of Appeal, Court of First Instance, Coure of Justice) பிரஞ்சிந்திய அரசாங்கம் ஏற்படுத்திற்று. 1828-இல் நீதித் துறை ஆலோசனைக் குழு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவில் பல சாதியைச் சேர்ந்த ஊர்ப் பெருமக்களாக ஒன்பது உறுப்பினர்கள் இருந்தனர். (பிராமணர்—2, வேளாளர்—2, தேசாயி—1, இடையர்—1 தாழ்ந்த சாதி—1, கோமுட்டி—1, செட்டி—1). பத்தாண்டுகளுக்கு ஒரு முறை இக்குழு உறுப்பினர்கள் மாற்றப்படுவர். 1847, டிசம்பர் 27-இல் மக்கள் குடியுரிமை நீதி மன்றம்' கலைக்கப்பட்டு, நடுவர் ஆய வழக்குமன்றம் (Tribunal of First Instance) உருவாக்கப்பட்டு, தேங்கிக் கிடந்த வழக்குகள் எல்லாம் முடித்து வைக்கப்பட்டன.

1928, ஆகஸ்டு 22-இல் புதுச்சேரிப் பகுதியில் நீதித் துறை விரிவு படுத்தப்பட்டு, வேறு சில நீதிமன்ற அமைப்பு களும் (1. Superior Tribunal of appeal at Pondicherry (2) Tribunal of First instance-Second class at Pondicherry Tribunal of First Instance — Third class at Karaikal (3) Court of Justice of the Peace - Extension of Mahe yanam) ஏற்படுத்தப்பட்டன.

இந்நீதி மன்றங்களில் வழங்கப்பட்ட தண்டனை களாவன – காதைச் செவிடாக்குதல், அபராதம் விதித்தல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறையிடுதல், சொத்துக்களைப் பறிமுதல் செய்தல், புதுவை மண்ணிலிருந்து விலக்கி வைத்தல், அடிமையாகப் பிரஞ்சு ஆட்சிக்குட்பட்ட தீவுகட்குச் சில ஆண்டுகள் அனுப்பி வைத்தல் போன்றவையாகும்.

பொருளாதாரம்

ஆனந்த ரங்கப்பிள்ளை தம் நாட் குறிப்பில் பிரஞ்சுக் காலத்தில் ஏற்பட்ட மூன்று இயற்கை உற்பாதங்களைக் குறிப்பிட்டுள்ளார். இவை புதுவையின் பொருளாதாரத்தை வெகுவாகப்பாதித்தது என்றும் கூறுகின்றார். 1745, நவம்பரில் வீசிய புயற்காற்றால் ஏற்பட்ட சேதம் பற்றிய குறிப்பும், பிரஞ்சிந்திய அரசு உடனடியாக மேற் கொண்ட நிவாரணங்கள் பற்றிய குறிப்பும் நாட்குறிப்பில் உள்ளன. பிரஞ்சு அரசு தம் ஆட்சிக் காலத்தில் விவசாய அபிவிருத்திக்கே முதலிடம் தந்தது எனலாம். 1788 இல் காரைக்கால் விவசாயிகள் நடத்திய போராட்டத்தைச் சுமுகமான முறையில் முடித்து வைத்தது.

பிரஞ்சியர் வரவுக்கு முன்பே புதுச்சேரி ஒரு துணி வணிக நிறுவனமாகவே விளங்கிற்று. இங்கு தயாரான சிலுக்கு, பருத்தி, பட்டுத்துணிரகங்கள் நெடுந்தூர வியபாரிகளையும் கவர்ந்திழுத்தன எனலாம். பிரஞ்சியர் புதுவையில் காலூன்ற இத்துணி வணிகத்தையும் ஒரு காரணமாகக் கொள்ளலாம்[46]. புதுச்சேரியிலிருந்து பருத்தி, பட்டுத் துணி வகைகளும், காரைக்காலிலிருந்து அரிசியும், மாகியிலிருந்து தேயிலையும், மிளகும், சந்திரநாகூரிலிருந்து ஓபியமும், உப்பும் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் சாராயம், ஒயின், கண்ணாடி, இரும்புப் பொருட்கள் போன்றவையாகும். புதுச்சேரி துறைமுகத்தில் சரக்குகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏற்றி இறக்கப்பட்ட செய்தியை இங்கு வழங்கப்பெறும் ஒரு நாட்டுப்புறப் பாடல்,

"நாற்பதியால் எட்டு
நாட்டம் புதுச்சேரி
நாட்டந் துரைக்கப்பல்
வந்த சரக்கென்ன
வாள்மிளகு சுக்கு
வந்திறங்கும் கப்பல்
ஏலரசி சுக்கு
ஏந்தி வரும் கப்பல் ..."[47]

என்று குறிப்பிடுகின்றது. ஏற்றுமதி பொருட்களால், 1786—1790 ஆம் ஆண்டுகளில் புதுவையின் பொருளாதார நிலை பிற ஆண்டுகளில் இல்லாத அளவுக்குப்பெருமளவு உயர்ந்தது எனலாம்.

1829 இல் சவானா (Sawana) என்பவரால் ஒரு நூற்பாலை. தொடங்கப்பட்டது 1864 இல் குயவர் பாளையத்தில், இரண்டாவது நூற்பாலை ஏ. பாழெ குழுவினரால் (Meses A Paget & Company) தொடங்கப் பட்டது. மூன்றவதாக முதலியார்ப் பேட்டையில், 1892 இல் கெப்ளே ஆலை (Gaebele Mill) தொடங்கப்பட்டது. நான்காவதாக ஆங்கிலேய பிரஞ்சுப் பஞ்சாலை (Anglo—French Textiles) 1898 இல் ஏற்படுத்தப் பட்டது. 1830ஆம் ஆண்டில் (உப்பனாற்றின் வடகரையில்) உப்பளத்தில் ஒரு துணி ஆலை தொடங்கப்பட்டது. இவற்றுள் இன்றுவரை இயங்கிவரும் ஆலைகளாவன, சவானா ஆலை (சுதேசிப் பஞ்சாலை), முதலியார்ப்பேட்டை கெப்ளே ஆலை (பாரதி பஞ்சாலை), ஆங்கிலேய - பிரஞ்சுப் பஞ்சாலை என்னும் மூன்றுமே யாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ரூபாய்-நாணயம் அச்சடிப்பு:

தொடக்க காலத்தில் புதுச்சேரி ரூபாய் நோட்டு ஆற்காடு நாணய அச்சுக் கூடத்தில் (Arcot mint) அச்ச டிக்கப்பட்டது. 1700 இல் பிரான்சுவா மர்த்தேன். ஆற்காட்டுநவாப்பிடம் அனுமதிப் பெற்று, ½ பணம், 1 பணம், 2 பணம் வெள்ளி நாணயங்களை அச்சடித்துக் கொண்டார். துய்ப்ளேக்சு காலத்தில் புதுச்சேரியில் பகோடாக்களும் அடிக்கப்பட்டன. தற்போதைய ரோமன் ரோலண்ட் நூலகம், பொதுப்பணித்துறை அலுவலகம் ஆகிய இடங்களே அக்காலத்தில், தங்க சாலைகளாகச் செயல்பட்டு வந்தன.

நாணயச் செலாவணி

வாணிபம் உள்நாட்டில் வராகன் கணக்கிலும் ரூபாய் கணக்கிலும் நடைபெற்று வந்தது. சில வராகன் மதிப்புக் குறைவாகவும், சில அதிகமாகவும் இருந்தன. புதுச்சேரி நட்சத்திர வராகன் செலாவணியிலிருந்தது. இது எட்டு மாத்திரையளவு பொன்னுடையது. சில வராகன் புதுவையில் மாத்திரம் செலாவணியிலிருந்து. வேறு சில கர் நாடகம் முழுமையும் செலாவணியாயின. இவையன்றி, பூவராகன் என்னும் நாணயமும் புதுவையில் புழக்கத்தி லிருந்தது. முதலில் வராகனுக்கு 26 பணமாகக் கொண் டனர். பின்னர் 24 பணமாக ஆக்கினர். டச்சுக்காரர்கள் புதுச்சேரியிலிருந்தபோது ஒரு பணத்திற்காக 64 காசுகள் என்ற கணக்கில் செப்பு காசு அடித்தனர். பிரஞ்சு ஆளுநர் லெய்ரீத் காலத்தில் 'தோல் நாணயம்' (Parchement Money) புழங்கி வந்தது. ஆனால் மக்கள் தோல் நாயணத்திற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.[48] நாணயம் அடிப்பதாகக் குத்தகைக்கு ஏற்றுக் கொண்ட வார்த்தகர்களை, ரங்கப் பிள்ளை 'டங்கா சாலையார்' என்று குறிப்பிட்டுள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரஞ்சுக்காரர்கள் கொடுக்கும் வெள்ளிக்கும், தங்கத்திற்கும் இவர்கள் நாணயம் வடித்துக் கொடுத்தனர்.

புதுவை வருவாய்

நிலவரியே பிரஞ்சிந்திய அரசின் முக்கிய (அதிக) வருவாயாக வசூலிக்கப்பட்டது. மற்றும், வெற்றிலை, புகையிலை, மதுவகைகள், ஓபியம், உப்பு, பிற ஏற்றுமதி-இறக்குமதிப் பொருட்களுக்கும் வரிவசூல் செய்யப்பட்டன. 1789இல் புதுவையில் வருவாய் 4,83000 லிவராகும் காரைக்காலின் வருவாய்-150000 லிவராகும். மாகியின் வருவாய்-6000 லிவராகும். ஏனத்தின் வருவாய்–8000 லிவராகும். 1789இல் புதுவை மாநிலத்தின் மொத்த வருவாய் 12 லட்சம் லிவராகும். பிரஞ்சிந்தியக் குடியிருப்புப் பகுதிக்கு அவ்வாண்டு ஆன செலவு 70000 லிவர் மட்டுமே. 1895 இல் பிரஞ்சிந்தியப் பகுதியின் நிதி வரவு செலவுக் கணக்குகள் பிராஞ்ங்கில் (Franc) காட்டப்பட்டன. 1896 இல் வரவு-செலவுக் கணக்குகள் ரூபாயில் கணக்கிடப்பட்டன. 1951 இல் பிரஞ்சிந்தியப் பகுதியின் வரவு-ரூ 72,20,000; செலவு ரூ 77,95,000 ஆகும்.

பிரஞ்சுப் போர்கள்

பிரஞ்சியர் புதுச்சேரியைத் தலைமையிடமாகக் கொண்டு, இந்தியாவின் பிறபகுதிகளையும் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கில்தான் போரில் ஈடுபட்டனர். பிரஞ்சுப் போர்களை அவை நிகழ்த்தப்பட்ட சூழல்களை அடிப்படையாகக் கொண்டு நான்காகப் பிரிக்காலம். அவை,

1. பிரஞ்சியர்க்கும் ஆங்கிலேயர்க்கும் இந்தியாவில் நிகழ்ந்த போர்களும், அதனால் ஏற்பட்ட பின் விளைவு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களும் (சென்னை முற்றுகை, புதுச்சேரி முற்றுகை முதலியவை).

2. பிரஞ்சியர்க்கும் ஆங்கிலேயர்க்கும் அயல் நாட்டில் நிகழ்ந்த போர்களும், அதனால் இந்தியாவில் ஏற்பட்ட பின் விளைவுகளும் (ஏழாண்டுப்போர், முப்ப தாண்டுப் போர் முதலியன)

3. இந்திய மன்னர்களிடையே நிகழ்ந்த போர்களில் நேரடியாகவும். மறைமுகமாகவும் தொடர்பு கொண்டு ஆங்கிலயேரும், பிரஞ்சியரும் நிகழ்த்திய போர்கள் (ஆம்பூர்ப் போர், கர்நாடகப் போர், திருச்சிராப்பள்ளி முற்றுகை முதலியன).

4. முதலாம், இரண்டாம் உலகப் போர்களில் பிரான்சின் பங்கு,

என்பனவாகும். பிரஞ்சியர் ஆங்கிலேயருடன் நடத்திய போர்கள் பெரும்பாலும் கப்பற் போர்களே! அது மட்டு மின்றி, சென்னையைக் கைப்பற்றும் பொருட்டு, பிரஞ்சியர் பல முறை கப்பல் போர்களையே நிகழ்த்தியுள்ளனர். "திறமையான படை பலமும், அறிவுக் கூர்மையும் பெற்றிருப்பினும் ஒற்றுமையின்மையாலும், தாய் நாட்டி லிருந்து உரிய நேரத்தில் உதவி கிடைக்காமையினாலும் பிரஞ்சியர் ஆங்கிலேயரிடம் பல முறை தோல்வியுற நேர்ந்தது.'[49]

பிரஞ்சிந்தியக் கல்வி முறை

பிராமணர்க்கும், செல்வந்தர்க்கும் மட்டுமே சொத்தாக இருந்து வந்த கல்வி, பிரஞ்சுப் புரட்சிக்குப் பின்னர் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் பிரஞ்சுக் கொள்கைகளின் அடிப்படையில் அனைவர்க்கும் சமமாக்கப் பட்டது. 1826, அக்டோபர் 25-இல் ரோயல் கல்லூரியும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(Royal College), 1848-இல் கொலோனியல் கல்லூரியும் (Colonial College) தொடங்கப்பட்டன. 1877, மே 2-இல் கலவை சுப்பராய செட்டியார் கல்லூரி தோற்றுவிக்கப் பட்டது. பின்னர் மாகியில் லபூர் தொனே கல்லூரியும் (College Mahe de La Bourdonnais), சந்திர நாகூரில் துய்ப்ளேக்சு கல்லூரியும் (College Dupleix in Chandra nagore) தொடங்கப்பட்டன. பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் முதல் பெண்கள் பள்ளி 1827, பிப்பிரவரி 12-இல் ஆரம்பிக்கப்பட்டது. இடைநிலை வகுப்பு வரை இலவசக் சல்வி வழங்கும் திட்டமும் இருந்து வந்துள்ளது. (பிரஞ்சுக் கல்வி முறை-ஆரம்ப நிலைப் படிப்பு 4 ஆண்டு, நடுநிலைப் படிப்பு - 3 ஆண்டு. உயர்நிலைப் படிப்பு - 4 ஆண்டு, இடைநிலைப் பட்ட வகுப்பு - 3 ஆண்டு) கல்லூரிப் படிப்பை 19 வயதில் முடிக்கும் மாணவர்கள், பின்னர் மேற்படிப்பிற் காகப் பிரான்சு செல்ல வேண்டும்.

அனைத்துப் பாடல்களும் பிரஞ்சு மொழியாலேயே பயிற்றுவிக்கப்பட்டன. வரலாறும் புவியியலும் பெருமளவு பிரான்சைப் பற்றியும், சிறிதளவு இந்தியாவைப் பற்றியும் சொல்லிக் கொடுக்கப்பட்டன. கல்லூரி மாணவர்கட்கு இரண்டாவது மொழியாக, தமிழ், தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம் கற்பிக்கப்பட்டது. 1877 வரை புதுச்சேரியில் ஆங்கிலப் படிப்பிற்கென்று தனியே பள்ளி இல்லை. 1877-இல் தொடங்கப்பட்ட கலவைக் கல்லூரியில் பிரஞ்சு பிரவே, தமிழ் பிரவே, மெட்ரிகுலேசன் என்னும் மூன்றும் தொடங்கப்பட்டன. இவற்றுள் பிரவே படிப்பு இலவச மாகவும், மெட்ரிகுலேசன் படிப்பு கட்டணத்தோடும் கற்றுத் தரப்பட்டன. தமிழ் பிரவே பயின்றவர்கள், பள்ளிகளில் தமிழ்ப் பாடம் நடத்தத் தமிழாசிரியர்களாகத் தேர்வு பெறும் தகுதி பெற்றவராயினர். மாகிக் கல்லூரி சென்னைப் பல்கலைக் கழகப் பாடத் திட்டத்தையும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏனம் கல்லூரி கல்கத்தா பல்கலைக் கழகப் பாடத் திட்டத்தையும் பின்பற்றி வந்தன. ஏனெனில் இரண்டு கல்லூரிகளும் ஆங்கில வழிப் படிப்பையே சொல்லிக் கொடுத்தன. பிரஞ்சிந்தியாவின் கல்வித்தரத்தை மதிப்பிடுகையில், "ஓர் உண்மையான குடியரசாட்சியின் கூறுகளைத் தாங்கி எல்லா மக்களுக்கும் கல்வி என்னும் நோக்கத்தை உள்ளடக்கியதாயிருந்தது" என்று என். சிவப்பிரகாசம் அவர்கள் கூறியுள்ளார்.[50] ஏழை மாணவர்கட்கும் நன்கு படிக்கும் மாணவர்கட்கும் ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தையும் பிரஞ்சிந்திய அரசு பின்பற்றி வந்துள்ளது.

மதங்களும் விழாக்களும்

இந்து மதம் சைவம், வைணவம் என்ற இருபிரிவுகளாகப் பிரிந்திருந்தது. புதுச்சேரியில் வேதபுரீசுவரர் கோவில், காளத்தீசுவரன் கோவில், மணக்குள விநாயகர் கோவில், சித்தானந்த சுவாமி கோவில் முதலியன முக்கியக் கோயில்களாகக் கருதப்பட்டு வழிபாடு நடத்தப்பட்டு வந்துள்ளன. ரங்கப்பிள்ளை தம் காலத்தில் புதுச்சேரியில் நடைபெற்ற பல மதவிழாக்களை நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.[51] அவரே, குயவர் பாளையத்தில் ஒரு கண்ணன் கோவிலையும் கட்டியுள்ளார்.

செஞ்சிப்பகுதி இசுலாமியர் ஆளுகைக்கு உட்பட்டிருந்தபோது, துய்ப்ளேக்சைக் காண்பதற்காக, முசாபர் ஜங்கு, ஹைதராபாத் நிசாம், சந்தா சாகிபு, ஆர்க்காட்டு நவாபு ஆகியோர் புதுச்சேரிக்கு வருகை புரிந்துள்ளனர். இவர்தம் வருகையும் புதுவையில் இசுலாமியர் பெருக்கத்திற்கு வழிகோலியது.

1664-இல் பிரஞ்சுக் கிழக்கிந்திய நிறுவனத்தைத் தோற்றுவிக்கையில், பிரான்சு நிதியமைச்சர் கொல் பேர் (Colbert), 'வாணிகம் மட்டும் நமது நோக்கமன்று,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிறித்துவ மதத்தைப் பரப்புவதும் இந்நிறுவனத்தின் நோக்கமாகும்'' என்று அறிக்கை விட்டிருந்தார்.[52] இதற்காகவே, பிரஞ்சுக் குடியேற்ற நாடுகளில் பல ரோமன் கத்தோலிக்கத் தேவாலயங்களை எழுப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் அடிப்படையில் 1684இல் ஜேசூட் பாதிரிமார்கள் கிறித்துவத்தைப் பரப்பும் நோக்கத்தோடு புதுவை வந்தனர். இப்பாதிரிமார்கள் சமூக, பொதுப்பணிகளில் ஈடுபட்டுக்கொண்டே மதம் பரப்பும் வேலையையும் செய்து வந்தனர். 1699இல் பிரான்சுவா மார்த்தேன், பிரஞ்சிந்திய வணிக நிறுவன இயக்குநர்கட்கு எழுதிய கடிதத்தில் இந்துக்களைக் கவரும் விதத்தில் கிறித்துவ மத முன்னேற்றத்திற்கான வழிமுறைகளையும், ஆலோசனைகளையும் கேட்டிருந்தார்.

பிரான்சுவா மார்த்தேன் காலத்தில் நெசவாளிகளும், பிற இந்துக்களும் தங்கள் திருவிழாக்களையும், மத விழாக்களையும் நகரத்தில் நடத்த அனுமதிகோரி போராட்டம் நடத்தினர். அனுமதி மறுக்கப்பட்டதால், புதுவை மக்கள் நகரை விட்டு வெளியேறத் தொடங்கினர். பின்னர் பிரான்சுவா மார்த்தேன் அவர்களை அமைதிப்படுத்தி, திரும்ப அழைத்து வந்து திருவிழாக்களை நகரில் நடத்த அனுமதி வழங்கினர்.

மதப் பூசல்கள்

1706இல் சில ஜேசூட் பாதிரிமார்கள் (ஏற்றுமதி நெசவாளிகட்குச் சொந்தமான) மணக்குள விநாயகர் கோவிலில் நுழைந்து சிலைகளை உடைத்தும், சுவரை இடித்தும் அட்டூழியம் புரிந்தனர். இதற்கு எதிர்ப்பாக நெசவாள இந்துக்கள் அனைவரும் ஒன்று திரண்டு, கிறித்தவர்க்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கினர். பிரான்சுவா மார்த்தேன் உயர்மட்டத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குழுவுடன் கலந்தாலோசித்து, இந்துக்களுக்கு மத சுதந்திரம் அளிக்கும் உரிமையை வழங்கினார். துய்ப்ளேக்சு காலத்தில்தான் கிறித்தவ — இந்து மதக் கலவரங்கள் மிகுதியாக நடைபெற்றன. 'பராதி' என்னும் பிரஞ்சுப் படைத்தலைவன் தஞ்சை மன்னன் எதிர்ப்பையும் மீறி, காரைக்காலில் தஞ்சை மன்னனால் கட்டப்பட்ட கோவிலைத் தரைமட்டமாக்கினான். 1748இல் மதாம் துய்ப்ளேக்சும், ஜேசூட் பாதிரிமார்களும் பழைய வேதபுரீசுவரர் கோவிலை (சம்பா கோவில்) இடிக்க அனுமதி பெற்றனர். துய்ப்ளேக்சு இதற்கு எவ்வாறு சம்மதித்தார் என்பதும், உடனிருந்த ரங்கப்பிள்ளை ஏன் தடுக்கவில்லை என்பதும் ஆராயப்பட வேண்டிய ஒன்று. கோர்து பாதிரியார் (Father Coeurdoux) முன்னிலையில் இக்கோவில் உடைப்புச் சம்பவம் நடைபெற்றது. வேதபுரீசுவரர் லிங்கத்தை அவரே சுத்தியால் உடைந்து, தன் பூட்சு காலால் உதைத்துத் தள்ளினார்.[54]. கோவில் முழுதும் தரைமட்டமாக இடித்துந் தள்ளப்பட்டு அதன் மீது தேவாலயம் எழுப்பப்பட்டது. தேசசேவகன் இதழ், 'சம்பாமாதாக் கோவில்' என்னும் பெயர் ஏற்பட்ட விதம் குறித்து, 'விகட சமாச்சாரம்' என்னும் தலைப்பிட்டு எள்ளி நகையாடியுள்ளது.[55]

பிற்காலத்தில் இந்துக்களைக் கவரும் நோக்கத்துடன் வில்லியனூரில் கட்டப்பட்ட தேவாலயம் இந்துக்களின் கோவில் மரபை அடியொற்றியே கட்டப்பட்டது. 'தெப்பக் குளம்' கொண்ட ஒரே இந்தியக் கத்தோலிக்க தேவாலயம் இது ஒன்றே 1816-இல் ஆங்கிலேயரிடமிருந்து பிரஞ்சிந்தியப் பகுதிகளைத் திரும்பப் பெற்ற பிரஞ்சியர் நாடு பிடிக்கும் நோக்கத்தையும், மதப் பூசல்களையும் மறந்துவிட்டு தங்கள் பகுதிகுடிமக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபடத் தொடங்கினார். அதன் பின்னரே எல்லாத்தரப்பு மக்களுக்கும் முழுமையான மதச்சுதந்திரம் அளிக்கப்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. பிரஞ்சியர் ஆட்சியில் புதுச்சேரி சமுதாயம்

பிரஞ்சியராட்சியில் சாதிமுறைக்கேற்ற தொழில் கட்டாயமாக்கப்படவில்லை. அவரவர் தேவைக்கும், விருப்பத்திற்கும் ஏற்ற தொழில் செய்யலாம் என்ற நிலை கொண்டுவரப்பட்டது. சாதியில் உயர்வாக மதிக்கப்பட்ட பிராமணர், பிரஞ்சிந்திய நிறுவனங்களில் பணி புரிந்தனர். முக்கிய சாதியினர்க்கென்று தெருக்கள் தனித்தனியாக இருந்தன. (வெள்ளாள வீதி, கோமுட்டி வீதி, குயவர் வீதி, இடையர் வீதி, சாணார் வீதி) பிராமணர், அரிஜன், தமிழ்க்கிறித்தவர் ஆகியோரைவிலக்கிவிட்டு, எஞ்சியுள்ள சாதிகளையே ரங்கப்பிள்ளை 'தமிழர்' என்று குறிப்பிட்டு உள்ளார்.[57]

சாதிப் பூசல்களின் அடிப்படையில் வலங்கை என்றும் இடங்கை என்றும் பாகுபாடு செய்யப்பட்டிருந்தது. இப்பாகுபாடு காரைக்கால் பிற்காலச் சோழராட்சிக்குட் பட்டிருந்த காலத்திலும் இடம் பெற்றிருந்தது. வலங்கைச் சாதியினர் விவசாயம் போலும் உழைப்புத் தொழிலையும், இடங்கைச் சாதியினர் பொற்கொல்லர் போலும் கலைத் தொழிலையும் மேற்கொண்டிருந்தனர். தமிழ்க் கிறித்தவர்களிடையேயும் வலங்கை, இடங்கை பிரிவுகள் இருந்திருக்கின்றன. கீழ்ச்சாதி, மேல்சாதி பிரிவுகளும் சாதிக் கொடுமைகளும் இப்பகுதியில் தொடர்ந்து இருந்து வந்துள்ளன. கீழ்ச்சாதியார் மேல் சாதியரை எதிர்த்து எந்த உரிமையையும் கேட்பதில்லை. பிரஞ்சு இந்திய நிர்வாகம் தாழ்த்தப்பட்டவர்களின் கல்வி முன்னேற்றத்தில் மிகுதியாகப் பங்கெடுத்துக் கொண்டது. பாரதிதாசனின் சீர்திருத்தக் கருத்துக்களும் புதுவை முரசு போலும் இதழ்களும், அரிசன மக்கள் முன்னேற்றத் திற்கு ஊக்கமளித்தன. எவ்வாறாயினும் தமிழ்நாட்டை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விட, புதுச்சேரியில் அரிசன மக்கள் முன்னேறிய நிலை யிலேயே இருந்து வந்துள்ளனர்.

பிரஞ்சிந்தியாவில் இசுலாமியர்கள் (1) லெப்பை (2) பாதன் (3) சோனகர் என்று மூன்று பிரிவாக வாழ்ந்து வந்தனர். இவர்களுள் பெரும்பாலோர் வணிகராகவும் சிறுபாலோர் போர் வீரர்களாகவும் பணியாற்றினர்.

பிரஞ்சியரின் கிறித்துவமத நிறுவனங்கள், உள்நாட்டு மக்களைக் கிறித்தவராக மாற்றுவதில் தீவிரம் காட்டின. புதுச்சேரியில் பிரஞ்சியருக்கு அடுத்த நிலையிலேயே தமிழ்க் கிறித்தவர் எண்ணிக்கை மிகுதியாக இருந்தது. தமிழர் கிறித்தவராக மாறினால் அரசின்பல துறைகளில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டதால், நிறைய தமிழர் கிறித்தவராய் மாறத்தொடங்கினர். பிரஞ்சிந்திய நிறுவனத் தின் முகவராகவும், மொழி பெயர்ப்பாளராகவும் பணியாற்றிய நைனியப்பப்பிள்ளை, பிரஞ்சியர் தமிழ் மக்களைக் கிறித்தவராக மாற்றும் முயற்சிக்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.[58] உயர்பதவியில் விளங்கும் தமிழரையும் கிறித்தவராக மதம் மாற்ற வேண்டி, ஜேசூட் பாதிரியார்கள், ரங்கப்பிள்ளையைக் கிறித்த வராக மாறாவிட்டால், மொழி பெயர்ப்பாளர் பதவியிலிருந்து நீக்கி விடுவோம் என்று மிரட்டினர். ஆனால் ரங்கப்பிள்ளையோ, மொழி பெயர்ப்பாளர் பதவியை விட்டாலும் விடுவேனே தவிர வைணவத்திலிருந்து ஒரு போதும் மாற மாட்டேன் என்று மறுத்துவிட்டார்[59].

மதம் மாறிய கிறித்தவருள்ளும் பள்ளி, பிள்ளை, முதலியார் என்ற சாதிப்பாகுபாடு தொடர்ந்து இருந்து வந்துள்ளது. பிராமணரும், சாதிக் கிறித்தவரும் அரிசனக் கிறித்தவரைத் தீண்டத்தகாதவராகவே மதித்து வந்தனர். சம்பா மாதாக் கோவிலில் (Cathedral Church) அரிசனக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிறித்தவர் வழிபடவேண்டி, இடையே குறுக்குச் சுவர் கட்டி, உயர்சாதிக் கிறித்தவர் தடுப்பு அமைத்தனர். இந்த அவமானத்தை எதிர்த்து தடுப்புச் சுவரை இடித்துவிடுமாறு அரிசனக் கிறித்தவர் பிரஞ்சிந்தியாவின் உயர்மட்டக் குழுவிற்கு விண்ணப்பம் செய்தனர். 1773-இல் லா தெ லோரிஸ்தொன் ஆளுநராயிருந்த காலத்தில், பிரஞ்சிந்தியப் படைப் பிரிவில் அரிசனக் கிறித்தவர்க்கென்று தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டிருந்தது.[60] ஆனால் 1776-இல் இப்பிரிவு கலைக்கப்பட்டு, அனைத்துச் சாதியினர்க்கும் படைப்பிரிவில் சம உரிமை அளிக்கப்பட்டது.

முற்றுகையின் போது மக்களைப் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பி வைக்கும் பழக்கம் பிரஞ்சிந்தியாவிலும் இருந்து வந்துள்ளது. 1748-இல் ஆங்கிலேயர், புதுச்சேரியை முற்றுகையிட்ட போது, நகரத்திலுள்ள பெண்களையும், பிராமணர்களையும் துய்ப்ளேக்சு கிராமங்களுக்கு அனுப்பி வைத்தார்.

அடிமை விற்பனை

ரங்கப்பிள்ளை தம் நாட்குறிப்பில், பிரஞ்சிந்திய அரசு, அடிமை விற்பனைக்காகவே, 'பதிவேடு' ஒன்றினைப் பயன் படுத்தி வந்ததைக் குறித்துள்ளார். 'அடிமைகள் ஏல' விற்பனைக்காக வேண்டி, 7 முதல் 16 வயதிற்குட்பட்ட 166 குழந்தைகள் ஒவ்வொன்றும், ரூபாய் மூன்றிலிருந்து இருபது வரைக்கும் ஏலம் எடுக்கப்பட்டது. ஒரு பழைய தமிழ்ப் பத்திரத்தின் வாயிலாக, "மாரியம்மா என்பவளுக் காகப் பள்ளிச் சாதியான பொன்னன் மனைவி தையிலம்மா என்பவள், ஒரு பெண் குழந்தையை இரண்டு ரூபாய்க்கு ஏலம் எடுத்த செய்தியினை அறிகின்றோம்.[61] 1792-இல் பிரஞ்சிந்திய ஆணையர், லாஸ்கலியே (Lascalier) என்பவர் அடிமை விற்பனைத் தடைச் சட்டம் கொண்டுவந்து இக் கொடுமைக்கு ஒரு முடிவு கட்டினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்கள் முன்னேற்றம்

கி.பி. 18ஆம் நூற்றாண்டில் பிரஞ்சிந்தியாவில் பெண்கள் முன்னேற்றம் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக இல்லை. பிரஞ்சியர் காலத்திலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் தேவதாசி முறை தொடர்ந்து இருந்து வந்துள்ளது. 1940-இல் தான் இதைத் தடுக்கப் பிரஞ்சு அரசு சட்டம் இயற்றியது. 1920-இல் பெண்களுக்கென்று தனிப்பள்ளி தொடங்கப்பட்டது. இதன் பின்னரே, மேலை நாட்டு நடை, உடை, பாவனைகள், பழக்க வழக்கங்கள், நாகரிகம் முதலியவற்றில் ஈடுபாடு கொண்டு பின்பற்றத் தொடங்கினர்.

பிரஞ்சிந்தியத் தேர்தல் முறை கேடுகள்

தேர்தல் வன்முறைகளினால் பிரஞ்சிந்திய மக்கள் பிரிட்டிஷ் இந்தியாவிற்கு ஓடிய செயலை சவராயலுநாயகர்,

''நிலமுடையார் இல்லாதார் அறிந்தவர்கள்
அறியாதவர் நியமம் இன்றிப்
பலமுடைய வாக்களித்து மாம்பர்களை
மேர்களை யேற்படுத்த லாலே
வலமுடையார் தடியடிக்கு மனங்கலங்கி
இவ்வூரில் வாழும் நல்லார்
குலமுடையோர் ஐயோ ஆங்கிலேயர்
ஊர்க்கு ஓடுகின்றார் குவர்னரேறே!''[62]

என்று பாடியுள்ளார். வன்முறை அரசியலால் நேரும் அழிவு குறித்தும், தேர்தலால் பிரஞ்சிந்திய மக்கள் எவ்வித பலனும் பெறவில்லை என்பதையும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"துட்டர் எலக்சிய நாளில் வீடுகளில்
புகுந்தடிக்கச் சோர்ந்த மாந்தர்,
நட்டமிகச் செய்துபெண் டீர்களைக் கெடுக்க
அதிகாரர் நாடி வந்து
சுட்ட குண்டால் குற்ற மற்றோர் பட்டிறக்கப்
பரிகள் வெட்டால் சோர்ந்து வீழக்
கட்டமுடன் வாக்களிக்கும் இச்செயலால்
ஓர் பலனும் கண்டி லேமால்!,"[63]

என்று சவராயலு நாயக்கர் பாடலாக வடித்துள்ளார்.

புதுவை நகர் நிர்மாணிப்பு

பிரஞ்சியர் புதுச்சேரி நகரை அழகுடையதாகவும் தூய்மையுடையதாகவும் வைத்துக் கொள்வதில் பெரு முயற்சி எடுத்துக் கொண்டனர். 1706இல் பிரான்சுவா மர்த்தேன் செயின்ட் லூயி கோட்டையைக் கட்டினார்; ஆங்கிலேயர் புதுவையை முற்றுகையிட்டு அழித்த பின்னர், 1765இல் லாதெ லொரிஸ்தொான் காலத்தில் புதுவை மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. பூர்செ (Bourcet) என்னும் பிரஞ்சுப் பொறியாளர் நகரைப் புதுப்பித்து நிர்மாணிக்கத் திட்டமிட்டார். லாமெரெஸ் (La Mearz) என்னும் பொறியாளரின் செயல் திறனால் முத்திரைப் பாளையத்திலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் 1863 செப்டம்பர் 1 முதல் செயல்படத் தொடங்கியது. காரைக்காலிலும், சந்திரநாகூரிலுல் 1910 முதல் குடிநீர் வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகின்றது.

கட்டிடக் கலை

பிரான்சிலிருந்து நீதி, உண்மை, அறிவுடமை, வணிகம் ஆகியவற்றின் அறிகுறிகளாகக் கொணர்ந்த சிற்பங்களை, துய்ப்ளேக்சு தன் அரண்மனைக் கோட்டையின் கீழ்த்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தளத்தில் நிறுவினார். செஞ்சிக் கோட்டை பிரஞ்சியர் வசமான போது (தற்போது கடற்கரை-காந்தி சிலையைச் சுற்றியுள்ள) தூண்கள் மற்றும் அழகிய சிற்பங்களைக் கொணர்ந்து அரசினர் பூங்காவில் அழகுக்காக வைத்தனர். 1761 இல் புதுவை ஆங்கிலேயர் வசமான போது முகமது அலி புதுச்சேரியிலிருந்து பல சிற்பங்களைத் தன் சேப் பாக்க அரண்மனைக்கு எடுத்துச் சென்றுவிட்டான்.

1870, ஜூலை 16 இல் செஞ்சித் தூண்களை அடித் தளமாகக் கொண்டு துய்ப்ளேக்சு சிலை நிறுவப்பட்டது. பின்னர் இத்தூண்கள் அரசினர் பூங்காவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டன. துய்ப்ளேக்சின் சிலையும் பல முறை இட மாற்றம் செய்யப்பட்டு, இறுதியாகப் புதிய துறைமுகம் அருகே நிறுவப்பட்டுள்ளது. ராஜ்நிவாசின் எதிரேயுள்ள, 'ஆயிமண்டபத்தின்' கலை நுணுக்கம் பிரஞ்சியரின் நன்றி யறிதலைப் புலப்படுத்துகின்றது. மேலும் கதீட்ரல் தேவாலயம், நோத்தர் தாம் தெ லூர்து ஆலயம், பழைய கலங்கரை விளக்கம், பழைய கடற்கரைப் பாலம் போன்றவை பிரஞ்சுக் கட்டிடக் கலைக்குச் சிறந்த சான்று களாகும்.

இலக்கிய வளர்ச்சி

ஆனந்தரங்கப் பிள்ளையைச் சிறப்பிக்கும் நோக்கில் இக்காலத்தில் பல நூல்கள் இயற்றப்பெற்றுள்ளன. 'சீனி வாசகவி' என்பவர் 'ஆனந்தரங்கவிஜயம்', என்னும் நூலை யும் கஸ்தூரி ரங்கையா என்னும் புலவர், 'ஆனந்தரங்க, சந்தனு' என்னும் நூலையும், தியாகராஜ தேசிகர் 'ஆனந்தரங்கன் கோவை' என்னும் நூலையும் இயற்றி யுள்ளனர். மரியதாசுப் பிள்ளையவர்கள் (1701 — 1790) பாகவதம், பஞ்ச தந்திரக் கதைகள் ஆகியனவற்றைப் பிரஞ்சு மொழியில் மொழி பெயர்த்துள்ளார். 1817-இல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தான் பிரஞ்சிந்தியாவில் முதன் முதலில் அரசினரால் அச்சகம் தொடங்கப்பட்டது. பிரஞ்சியர் அச்சகம் தோற்று வித்ததன் அடிப்படை நோக்கம் மதம் பரப்ப வேண்டியே! 1838-இல் தனியார் ஒருவரால் தமிழ் அச்சகம் ஒன்று தொடங்கப்பட்டது[64].

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவராகிய எஸ். சவராயலு நாயகர் (1829—1911) என்னும் புலவர் ஜெயராக்கினி மாதா பஞ்சரத்தினங்கள், நாக பந்தனம், சதுரங்க பந்தனம், கமல பந்தனம் போன்ற நூல்களை இயற்றியுள்ளார். புதுவை சாரத்தில் வசித்து வந்த புலவர் பு. அ. பெரிய சாமிப்பிள்ளை (1848—1920) அவர்கள் மயிலைச் சிலேடை வெண்பா, மயிலைக் கலம்பகம், மயிலத்தந்தாதி, ஸ்ரீமத் ராமாயண சங்கிரகம், புதுவைவெண்பா, புதுவைக் கலம்பகம் போன்ற நூல் களைப் பாடியுள்ளார். பு. அ. பெரிய சாமிப்பிள்ளையின் மாணவராகிய ஜெயினுலா புத்தீன் என்பவர், 'மதிமிகு மகாராஜன் சரித்திரம்' என்னும் நூலை இயற்றியுள்ளார். சி. பங்காரு பத்தர் (1871—1925) என்னும் புலவர் யசோதா காவியம், சுப்பிரமணிய கீர்த்தனங்கள் போன்ற நூல்களை இயற்றியதோடு 'கலைமகள்' என்னும் இலக்கியத் திங்களிதழையும் நடத்தி வந்துள்ளார். மற்றொரு புலவரான வீ. துரைசாமி முதலியார் என்பவர் கண்ணப்பர் கலம்பகம், கண்ணப்பர் பதிகம், வல்லாள மகாராஜன் சரிதம் போன்ற கவிதை நூல்களையும் புதுவை யும் தமிழும், மறந்த வாழ்வு, மனிதர் மதிப்பு போன்ற கட்டுரை நூல்களையும் எழுதியுள்ளார். மேலும், தமிழ் மகவு, பொன் மலர் போலும் இலக்கிய இதழ்களையும் நடத்தி வந்துள்ளார்.

1908 செப்டம்பரில் பாரதியார் புதுவைக்கு வருகை புரிந்தார். 1918 நவம்பரில் புதுச்சேரியை விட்டு அகன்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இடைப்பட்ட பத்தாண்டுகளில் புதுச்சேரியிலிருந்த காலத்தில் முப்பெரும் பாடல்கள், சுதந்திரப் பெருமை, சுதந்திர தேவியின் துதி, சுதந்திரப் பள்ளு, என்று தணியும், சித்தானந்த சாமி திருக்கோவில், மணக்குள விநாயகர் திருக்கோவில் போன்ற பாடல்களைப் பாடியுள்ளார். புதுவையின் முதல் தமிழிதழ் 1900-இல் தொடங்கப்பட்ட 'புதுவை மித்திரன்' என்பதேயாகும். 1904-இல் இவ்விதழ் நின்று போயிற்று. 1913-இல் 'பிரஞ்சு நேசன்' என்னும் வார இதழ் ஒவ்வொரு புதன் கிழமை தோறும் வெளியிடப் பட்டு வந்தது. 1915—25-ஆம் ஆண்டுகளில் 'கற்பகம்' என்னும் (இலக்கியத்) திங்களிதழ் வெளிவந்துள்ளது. பாரதியின் 'இந்தியா'வும் சைகோன் சின்னையாப் பிள்ளை யின் 'தேச சேவகனும்' விடுதலை உணர்வைத் தூண்டிய இதழ்களாகும். S. ரங்கசாமி நாயக்கர் 'குடியரசு' என்னும் இதழையும் ரா. தேசிகம் பிள்ளை ஆயரேறு, கோகுல மித்திரன் போலும் இதழ்களையும் நடத்தியுள்ளனர். பாரதிதாசனின் சுப்ரமணிய பாரதி கவிதா மண்டலம், குயில் போலும் இதழ்கள் இக்காலத்தில் வந்த இலக்கிய இதழ்களில் குறிப்பிடத்தக்கன.

மொழி பெயர்ப்புகள்

தமிழிலிருந்தும் வட மொழியிலிருந்தும், சிறந்த படைப்புகள் பிரஞ்சு மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன. இப்பணியில் இன்றும் பிரஞ்சிந்தியக் கலைக் கழகம் தன் சேவையைத் தொடர்ந்து செய்து வருகின்றது. பிரஞ்சு மொழி இலக்கியங்களும் தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன 'மூலியேன் வின் சோன்' என்பார் தமிழ் இலக்கணத்தைப் பிரஞ்சுமொழியில் பெயர்த்துள்ளார். ஞானுதியாகு முதலியார் திருக்குறள், நாலடியார், ஆசாரக் கோவை, கம்பராமாயணம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(சுந்தர காண்டம்) ஆகியவற்றைப் பிரஞ்சில் மொழி பெயர்த்துள்ளார். மேலும் லல்லி தொலாந்தல் பற்றியும், கர்நாடக மன்னர்கள் பற்றியும் ஞானுதியாகு நூல்கள் எழுதியுள்ளார். ஆனந்தரங்கப்பிள்ளையின் தினப்படி சேதிக்குறிப்பின் முதல் எட்டுத் தொகுதிகள் புதுவை வரலாற்றுச் சங்கத்தின் சார்பாக வெளியிடப் பட்டுள்ளன.

ழூவோ துய்ப்ராய்

'Les Pallavas' என்னும் நூலை எழுதி, முதன்முதலில் பல்லவர் பற்றிய ஆராய்ச்சிக்கு வித்திட்டவர் இவரே யாவார். பல்லவர் காலத்துக் குகைக் கோவில்களையும், பல அரிய சித்திரங்களையும், சிற்பங்களையும் கண்டு பிடித்தார். பின்னர் புதுவை அரிக்கமேட்டின் வரலாற்றுச் சிறப்புணர்ந்து அதை வரலாற்று உலகுக்கு அறிமுகப்படுத்திய பெருமையும் இவரையே சாரும். 1921-இல் அரிக்கமேடு ஆராய்ச்சி தொடர்பாக 'India and the Romane' என்னும் நூலை எழுதியுள்ளார். இவருக்குப் பின்னர், மார்ட்டிமர் வீலர் அரிக்கமேடு பற்றி விரிவான அளவில் ஆய்வு நடத்தி, இவருடைய கூற்றை உறுதி செய்தார். ரங்கப்பிள்ளையின் நாட்குறிப்பை வெளியுலகுக்குக் கொணர்ந்த பெருமை ழூவோ துய்ப்ராய் அவர்களையே சாரும். இவர்தம் அரிய முயற்சியால் 1942, டிசம்பர் 16 - இல் 'புதுவை அருங்காட்சியகம்' உருவாக்கப்பட்டது. இவர் பிரம்மச்சாரியாக இருந்த போதிலும் தொல் பொருள் ஆய்வுத் துறையைத் திருமணம் புரிந்துகொண்டு, அரிய கண்டு பிடிப்புகளையே தம் குழந்தைகளாகப் பாவித்தார். 1945, ஜுலை 14-இல் இவர் இறக்கும் போது கூட, புதுவையைப் பற்றி ஏதாவது கூறுங்கள் [65] என்று, புதுச்சேரி நினைவாகவே உயிர் நீத்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சான்றெண் விளக்கம்

1. தேசிகம் பிள்ளை, ரா., 'தமிழகமும் பிரஞ்சுக் காரரும்,' பக்-6-7.
2. Ramasamy, A., 'History of Pondicherry, P-56.
3. 'Revue Historique De Pondichery, 'Vol: 11, 1973, P· 104.
4. மே. நூல், ப. 105.
5. Revue Historique De Pondicherry, Vol 11, 1973, P. 39.
6. மே. நூல்; ப. 115.
7. Raja, P, 'Folk tales of Pondicherry', Story No: 29.
8. Revue Historique De Pondicherry, Vol: 11, 1973. P-91
9. Ramasamy, A; History of Pondicherry,' P. 67.
10. ஆனந்தரங்கப்பிள்ளை, தினப்படி சேதிக் குறிப்பு, தொ-1, ப. 140.
11. Ramasamy, A; History of Pondicherry, P. 81.
12. தேசிகம்பிள்ளை, ரா. 'ஆனந்தரங்கப்பிள்ளை,' ப: 81.
13. ஆனந்தரங்கப்பிள்ளை, தினப்படி சேதிக் குறிப்பு, தொ. - 4, ப: 469.
14. மே. நூல், V. 75
15. Revue Historique De Pondicherry, Vol: 10, 1972, PP-4-5.
16. மே. நூல், ப: 10.
17. Chopra P. N. Ravindran T. K. and Subramaniyan N. History of South India: Vol: III. P-110.
18. Revue Historique De Pondicherry, Vol: 12, 1974, p. 48.
19. மே. நூல். ப-51.
20. மே. நூல், ப-51.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

21. Sen, S P., The French in India, (1763—1816) p. 33.
22. Ramasamy, A; History of Pondicherry, p. 89,
23. Revue Historique De pondicherry, Vol: 10, p. 29,
24. Ramasamy, A., History of Pondicherry., p-107.
25. Sen, S. P., The French in India (1763-1816) p-49.
26. Ramasamy, A., History of Pondicherry, p-127.
27. Sen, S.P., The French in India (1763-1816) pp. 436 - 437.
28. மே. நூல், ப-600.
29. Reune Historique De Pondicherry, Vol: 12, pp. 6-7.
30. மே. நூல், ப-38.
31. ஸ்ரீசுஜனரஞ்சனி, புதுவை, ஜுன் 19, 1924, ப-2.
32. புதுவைச் செய்திகள், செப்டம்பர், 1966 பக். 5-6.
33. The Indian Review, March, 1978, p-20.
34. பத்மநாபன், ரா. அ. (தொ. ஆ), பாரதி புதையல், இரண்டாம் பாகம், பக். 146 - 147.
35. Chopra, P.N., Ravindran T. K. Subramanian, N, History of South India., Vol: III, p-254.
36. புதுவைச் செய்திகள், நவம்பர், 1980, ப-8.
37 Census of India, 1961, Pondicherry State, Part I., p. 45.
38. Jawaharlal Nehru's Speeches, Vol. IV, Sept. 1957 - April 1963.
39. Ramasamy, A., History of Pondicherry, p.163.
40. Census of India, 1961, Pondicherry State, Part. I., p-44.
41. புதுவை முரசு, 1.5 1954, ப-1
42. Jawaharlal Nehru Speeches, Vol: IV, p-453.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

43. Revue Historique De Pondicherry Vol: 12 pp. 36-37.
44. Census of India, 1961, Pondicherry State Part: I p.57.
45. Joseph Minattur, Justice in Pondicherry, (1701-1968), p-18.
46. Revue Historique De Pondicherry, Vol:10, p-22.
47. அரவிந்தன் மு. வை., தமிழக நாட்டுப் பாடல்கள், ப-200.
48. Revue Historique De Pondicherry, Vol: 10. p.25
49. Sen, S.P., The French in India, p.347.
50. Ramasamy, A., History of Pondicherry. p.196.
51. Revue Historique De Pondicherry, Vol: 10, p.13.
52. Ramasamy, A. History of Pondicherry. p.198.
53. மே. நூல்; ப-199.
54. Revue Historique De Pondicherry, Vol:10 p.7.
55. தேசசேவகன், ஜுலை 3, 1923, ப-4.
56. Navajata, Sri Aurobindo, p.19.
57. Revue Historique De Pondicherry, Vol:11 p.53.
58. புதுவைச் செய்திகள், March, 1972, பக். 16-18.
59. Revue Historique De Pondicherry: Vol:10, P.6.
60. ஆனந்தரங்கப்பிள்ளை, தினப்படி சேதிக் குறிப்பு, தொ-1, ப: 214.
61. Revue Historique De Pondicherry, Vol: 11 PP. 56-57.
62. Revue Historique De Pondicherry, Vol: 12 P.44.
63. மே. நூல், ப:44.
64. புதுவைச் செய்திகள், ஜுலை, 1974, ப.11.
65. Ramasamy, A., History of Pondicherry P.218.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. விடுதலைக்குப்பின் புதுச்சேரி

1954, நவம்பர் 1-இல் புதுவை இணைப்பு ஒப்பந்தம் (De-Facto–merger of Pondicherry) ஏற்படுத்தப்பட்டு இந்தியப் பிரதிநிதி கேவல்சிங்கும், பிரஞ்சுக் குடியரசின் பிரதிநிதி பியேர்லாந்தியும் கையெழுத்திட்டு மாற்றிக் கொண்டனர். அன்றிலிருந்து புதுச்சேரி தலைமை ஆணையராக 'கேவல்சிங்' நியமிக்கப்பட்டார். அன்றைய தினத்தில் ஆளுநர் மாளிகையில் நடந்த புதுவை விடுதலை விழாவில் ஜவகர்லால் நேரு பேசும் போது, 'புதுவை மக்களின் விருப்பத்திற்கிணங்கவே எந்த மாற்றமும் செய்யப்படும்' என்று உறுதிமொழி அளித்தார்.[1] 1947-ல் பிரஞ்சிந்திய அரசு ஏற்படுத்திய 39 உறுப்பினர் அடங்கிய ஆட்சிக் குழுவே, ஆணையர் தலைமையின் கீழ் தொடர்ந்து இயங்கி வந்தது. 1955-இல் புதுச்சேரி வந்த நேரு, எவ்விதமான நெருக்கடி நிலையிலும், புதுவையின் தனித்தன்மை காப்பாற்றப்படும்' என்று உரையாற்றியுள்ளார்.

விடுதலைக்குப் பின் முதல் தேர்தல்

இந்தியாவுடன் இணைக்கப்பட்டபின் புதுவையின் (பிரதிநிதி சபைக்காக) முதல் தேர்தல் 1955, ஜூலையில் நடத்தப்பட்டது. இந்தியக் குடியுரிமை பெற்ற மக்களும் பிரஞ்சுக் குடியுரிமை பெற்ற மக்களும் இத்தேர்தலில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாக்களிக்கும் உரிமை பெற்றிருந்தனர். இத்தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளுள் காங்கிரஸ் கட்சியும், மக்கள் முன்னணியும், முக்கியக் கட்சிகளாகும். தேர்தலில் காங்கிரஸ் கட்சியே அதிக பெரும்பான்மை பலம் பெற்று, வெற்றி பெற்றது.[2] 1955, ஆகஸ்டு 15-இல் புதுவைநகர மன்றத்தில் பாரதிதாசன் தலைமையில் ஆறு உறுப்பினர் அடங்கிய அமைச்சர்குழு பதவி ஏற்றது. இத்தேர்தலுடனேயே, பதினாறு கொம்யூன்களுக்கான (பஞ்சாயத்து), நகராட்சிக்குழு தேர்தலும் நடத்தப் பெற்றது. பதினாறு கொம்யூன்களிலிருந்தும் நகராட்சிக் குழுவிற்காக மொத்தம் இருநூறு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

பின்னர், 1959-இல் நடைபெற்ற இரண்டாவது பிரதிநிதிசபை தேர்தலிலும் காங்கிரஸ் கட்சியே வெற்றி பெற்றது. 1962, ஆகஸ்டு, 16-இல் புதுவையின் பதினாறு கொம்யூன்களுக்கும் இரண்டாவது நகராட்சிக்குழு தேர்தல் நடத்தப்பட்டது.

1962, ஆகஸ்டு 16-இல் பிரஞ்சிந்தியப் பகுதிகள் மாற்றம் தொடர்பாக, இந்தியப் பிரதமரும், பிரஞ்சுத் தூதுவரும், இணைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். அன்றிலிருந்து புதுச்சேரி அதிகார பூர்வமாக, இந்திய யூனியனின் ஒரு பகுதியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இவ்வொப்பந்தத்தின் அடிப்படையில் 1962 டிசம்பர் 28-இல் இந்திய அரசியல் சாசனத்தின் பதினான்காவது மசோதாவில் புதுவை இணைப்புத் தொடர்பாக, புதிய பிரிவுகள் சேர்க்கப்பட்டு புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனாம் பகுதிகள் ஒருங்கிணைக்கப்பட்டு இந்திய யூனியன் பிரதேசம் எனச்செயல்படத்தொடங்கின. பாராளுமன்றத்தில் புதுவை ஆட்சி நிர்வாகத்திற்காக, 1962இல் 'புதுவை நிர்வாகச் சட்டம்' (Pondichery Administration Act) கொண்டு வரப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பட்டது. அதுவரை இயங்கிவந்த பிரதிநிதிசபை சட்ட சபையாக மாற்றம் செய்யப்பட்டது. 1964, ஆகஸ்டு 24 இல், எட்வர்டுகுபேர் முதல் அமைச்சராகவும் ஏனைய அமைச்சர்களாக, வெங்கடசுப்பா ரெட்டியார், குருசாமிப் பிள்ளை, முகமது இசுமாயில் மரைக்காயர், ஜீவரத்தின உடையார், வி.எம்.சி. வரதப்பிள்ளை போன்றோர் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

எட்டுவர்டு குபேர் (Eduard Goubert)

1894, ஜூலை 29 இல் பிறந்த குபேர் பக்கலேரே (Baccalaurat -- French B.A.) வரை புதுவையில் பயின்ற பின்னர், வழக்கறிஞர் படிப்புக்காகப் பாரிசுக்குச் சென்றார். 1914—1918ஆம் ஆண்டுகளில் முதல் உலகப் போரில் பங்கு பெற்றார். 1926 ஆம் ஆண்டு முதல் புதுவை, சந்திர நாகூர், மாகி ஆகியஊர்களில் தண்டணையியல் வழக்கு மன்றத்தில் பதிவாளராக ஏழு ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் புதுவைப் பிரதிநிதி சபைக்கு உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார். 1951 இல் பிரஞ்சு தேசிய சபைக்குத் தேர்வு செய்யப்பட்டு, பாரிசுக்குச் சென்றார். புதுவைப் பகுதிகளை இந்தியாவுடன் இணைப்பதற்கான விடுதலைப் போராட்டத்தில் தலைமையேற்று நடத்திய பெருமையும் இவருக்குண்டு. 1956 - 1959 ஆம் ஆண்டு களில் காங்கிரஸ் கட்சியின் தலைவராக புதுவைப் பிரதி நிதி சபையில் இருந்து கொண்டே செயலாற்றினார். 1961இல் புதுவையின் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். புதுவையின் முதல், முதல் அமைச்சராக, 1963இல் தேர்ந் தெடுக்கப்பட்டார். 1969 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் தி.மு.க.வுடன் இணைந்து போட்டியிட எண்ணினார். ஆனால் தமக்கும் தி.மு.க. மேலிடத்துக்கும் இடையே ஏற்பட்ட மனக்கசப்பால் அவ்வெண்ணத்தைக் கைவிட்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மிக நீண்ட காலம் புதுவையின் மேயராகப் பணியாற்றிய தால் இவரைப் 'புதுவை நகரத்' தந்தை என்றழைக்கும் பேறுபெற்றார். 1979, ஆகஸ்டு 15இல் குபேர் காலமானார்.

வ. சுப்பையா.

1911, பிப்ரவரி 7 ஆம் தேதி பிறந்த இவர் தமது பள்ளி வயதிலேயே பொதுவுடைமைக் கொள்கையில் ஈடு பாடு கொண்டவராக விளங்கினார். 1936 இல் சுதந்திரம் இதழைத் தொடங்கினார். 1944 இல் புதுவை (பிரஞ்சு) அரசுக்குஎதிராகக்குற்றம்சாட்டப்பட்டு ஆளுநர் போன்வின் என்பவரால் நாடுகடத்தப்பட்டார். பின்னர் 1946 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் பிரஞ்சுப் பாராளுமன்றத்தின் உறுப்பினராகத்தேர்ந்தெக்கப்பட்டார். 1947இல் மகாத்மா காந்தியைச் சந்தித்து பிரஞ்சியரின் ஆட்சி விலக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். 1951 ஆம் ஆண்டு மத்தியில் கோட்டக்குப்பம், விழுப்புரம், கடலூர் போன்ற ஊர்களில் முகாம்கள் அமைத்துக் கொண்டு புதுவையின் விடுதலைக்காகப் பலபோராட்டங்களை நடத் தினார். புதுவை சுதந்திரமடைந்த பின்பு பிரதிநிதி சபை யிலும், சட்டசபையிலும் உறுப்பினராகவும், அமைச்ச ராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியுள்ளார்.

(புதுவை மாநிலத்தின்) முதல் பாராளுமன்ற உறுப்பினர்

1962 இல், இந்திய அரசியல் சாசனத்தின் 14வது மசோதாவில் புதிதாகச் சேர்க்கப்பட்ட பிரிவுகளின் படி, புதுவைக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கும், ஒரு ராஜ்யசபை உறுப்பினர் பதவிக்கும் இடங்கள் ஒதுக் கப்பட்டன. 1963, ஜூலை 23 இல் நடந்த ராஜ்யசபை தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக பி. ஆபிரகாம் தேர்வுசெய்யப்பட்டார். 1963, அக்டோபர் 4இல் நடை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் போட்டியிட்ட கு. சிவப்பிரகாசம், 92,477 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.[3] இவரை எதிர்த்து நின்ற மக்கள் முன்னணி வேட்பாளர், சரசுவதி சுப்பையா 56,817 வாக்குகள் பெற்றிருந்தார்.

முதல் சட்டப் பேரவை

1962, ஜூலை வரை புதுவையில் 'பிரதிநிதி சபை' என்ற அமைப்பே இருந்தது. 1962, ஆகஸ்டு 16-இல் 'சட்டப்படி மாற்றுதல் ஒப்பந்தம்' (De-jure transfer) ஏற்பட்டு புதுவை அதிகாரபூர்வமாக இந்தியாவுடன் இணைக்கப்பட்ட பின் பிரதிநிதி சபை சட்டசபையாக மாற்றம் செயயப்பட்டது. இம்மாற்றத்திற்குப் பின் புதுவையின் முதல் முதலமைச்ச ராக (1963 ஜூலை) எட்வர்டு குபேர் விளங்கினார். ஏனைய அமைச்சர்களாக வெங்கடசுப்பா ரெட்டியார், குருசாமிப் பிள்ளை, முகமது இசுமாயில் மரைக்காயர், ஜீவரத்தின உடையார், வரதப்பிள்ளை ஆகியோர் இருந் தனர். இந்த அமைச்சரவையின் பதவிக்காலம் 1964, ஆகஸ்டு 24ஆம் தேதியுடன் முடிவுற்றது.

இண்ரடாவது சட்டப் பேரவைத் தேர்தல்

1964, ஆகஸ்டு 23இல் புதுவையில் நடைபெற்ற இரண் டாவதுசட்டப் பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 30 இடங்களில் தனதுவேட்பாளர்களை நிறுத்தி 22இடங்களைக் கைப்பற்றியது. 17 இடங்களில் நின்ற மக்கள் முன்னணிக் கட்சி 4 இடங்களையே கைப்பற்றியது. 25 இடங்களிலே நின்ற சுயேட்சை உறுப்பினர்கள் 4 இடங்களிலே வெற்றி பெற்றனர். காங்கிரஸ் அமைச்சரவையில் முதல்வராக வெங்கட சுப்பையா தேர்ந்தெடுக்கப்பட்டார். ஏனைய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அமைச்சர்களாக, ஏ. எஸ். காங்கேயன், ப. சண்முகம், வி. எம். சி. வரதப்பிள்ளை, ஆகியோர் விளங்கினர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம்

1965 ஜனவரி 26 இல் இந்தி மொழி இந்தியாவின் ஆட்சி மொழியாகப் பிரகடனப் படுத்தப்பட்டு, தென்னிந்தியாவிலும் திணிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. இதன் அடிப்படையில் 1965 ஜனவரி, பிப்பிரவரி, மார்ச் மாதங்களில் தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வீறு கொண்டெழுந்தது. இதன் எதிரொலியாகப் புதுச்சேரியிலும் போராட்டம் நடத்தப் பெற்றது. 1965, பிப்பிரவரி 11-ஆந் தேதி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆயிரம் பேர் கூடி புதுவை ரயில் நிலையத்திற்குள் புகுந்து போராட்டம் நடத்த முயற்சித்தனர். காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனால் ஆத்திரமுற்ற பொதுமக்களில் சிலர் ரயில்வே நிலையத்தின் சில பகுதிகளைத் தீக்கிரையாக்கினர். அகஸ்டின் பென்னட், கபிலன், வி. எம். சி. சிவக்குமார், நந்திவர்மன், சிவசண்முகநாதன், ராம கிருட்டிணன் போன்ற மாணவர் தலைவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்தினர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்களும் இந்தி எதிர்ப்புக் கோஷங்களை முழங்கிக்கொண்டே ஊர்வலம் சென்றனர். புதுச்சேரியில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்ட வன்முறை, கலவரங்களின்போது நடத்தப் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நால்வர் மரணமடைந்தனர். 1965, மார்ச் 14-இல் கூடிய தமிழ்நாடு இந்தி எதிர்ப்பு மாணவர் பேரணி போராட்டத்தைத் தள்ளி வைப்பதாக அறிவித்ததும், புதுவையிலும் இத்தகு போராட்டங்கள் நிறுத்தப்பட்டன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாகிஸ்தான் ஊடுருவல்

1965, செப்டம்பரில் இந்திய எல்லைப் பகுதிகளில் பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பு காரணமாக இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்குமிடையே 22 நாட்கள் போர் நடைபெற்றது. போர்ச் செலவுக்காக நாடு முழுவதும் நிதி திரட்டப்பட்டது. புதுச்சேரி மக்களும் போர் நிதிக்காக, தங்கமும் பணமும் அளித்தனர். 1966-இல் தாஷ்கண்டில் கோசிஜின் தலைமையில் இந்தியா-பாகிஸ்தான் சமாதான ஒப்பந்தம் கையெழுத்தானது. ஒப்பந்தத்தில் கையெழுத்திடச் சென்ற இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி மாரடைப்பால் மரணமுற்றார். புதிய பிரதமரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு பாராளுமன்ற உறுப்பினர்கட்கு ஏற்பட்டது. இந்திராகாந்தி 355 வாக்குகள் பெற்று பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எதிர்த்து நின்ற மொரார்ஜி தேசாய் 169 வாக்குகளே பெற்றார். இதே சமயம் புதுச்சேரியில் நடந்த இரண்டாவது பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட ந. சேதுராமன், 63, 286 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட மக்கள் முன்னணி வேட்பாளர் கே. சுப்பையாவும் (42,725 வாக்குகள்), சுயேட்சை வேட்பாளர் எஸ். சடகோபனும் (52. 861 வாக்குகள்) தோல்வியுற்றனர்.[4]

பதவிப் போராட்டம்

1967, ஏப்பிரலில் புதுச்சேரி காங்கிரசில் ஏற்பட்ட உட்கட்சிப் பிளவால், வெங்கட சுப்பையா மந்திரிசபையில் மாற்றம் ஏற்பட்டு, எம். ஓ. எச். பாரூக் தலைமையில், ஜீவரத்தின உடையார் மாணிக்கவாசகரெட்டியார் சுப்பிரமணிய படையாட்சி, நாகராஜன் போன்றோர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அமைச்சர்களாக மந்திரி சபை அமைத்தனர். பின்னர் 1968 மார்ச்சில் பாரூக் மந்திரி சபை கலைக்கப்பட்டு, வெங்கடசுப்பா ரெட்டியார் தலைமையில் ஏ.எஸ். காங்கேயன், ப. சண்முகம், வி.எம்.சி. வரதப்பிள்ளை பி. ரத்தினவேலு போன்றோர் மந்திரி சபை அமைத்தனர்.

திராவிடர் கழகம்

1925-இல் ஈ. வெ. ராமசாமி காங்கிரசிலிருந்து விலகி சுயமரியாதைக் கட்சியைத் தொடங்கினார். 1935-இல் அண்ணாத்துரை, பெரியாரின் சீடராக அக்கட்சியில் சேர்ந்தார். 1938-இல் பெரியார் நீதிக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1944-இல் நடந்த சேலம் மாநாட்டில், 'தென்னிந்திய சுதந்திரக் கட்சி' அண்ணாவால் 'திராவிடர் கழகம்' என்று பெயர் மாற்றம் செய்யப் பட்டது. புதுவையில் பகுத்தறிவுக் கொள்கைகளையும், சுயமரியாதைக் கருத்துக்களையும் பரப்புவதற்காக பெரியார், அண்ணா, கலைஞர் மூவரும் சுற்றுப்பயணம் மேற்கொண்டனர். 1945-இல், கலைஞர் புதுவை கெப்ளே தியேட்டரில் 'சாந்தா அல்லது பழனியப்பன்' என்னும் நாடகத்தை இருபத்தைந்து நாட்கள் தொடர்ந்து நடத்தினார். 'தொழிலாளர் மித்திரன்' இதழில் காங்கிரசைக் கிண்டல் செய்து பல அரசியல் கட்டுரை களையும் கலைஞர் எழுதியுள்ளார். புதுவையில் திராவிடர் கழக மாநாடு நடக்கையில் வன்முறைக் கும்பல் ஒன்று கலகத்தில் ஈடுபட்டது. இக்கலகக் கும்பலில் அகப்படாமல் அண்ணாவும், பெரியாரும் பாதுகாப்பாகத் தப்பித்து விட்டனர். ஆனால், தனியாக அகப்பட்டுக் கொண்ட கலைஞரைக் கூலிப்படை துரத்திச் சென்று அடித்துத் துவைத்து, இறந்துவிட்டார் என்றெண்ணிச் சாக்கடையில் எறிந்து விட்டனர். பின்னர் வயதான பெண்மணி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒருத்தியால் கலைஞர் காப்பாற்றப்பட்டு, சென்னை வந்து சேர்ந்தார்.[5] பெரியாருடன் ஏற்பட்ட பிளவால் 1949, செப்டம்பர் 17-இல் அண்ணா, திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்தார்.

புதுவையில் தி.மு.க.

1954, ஆகஸ்டு 1-இல் புதுவை மாநிலத் தி.மு.க. அமைப்பின் தலைவராக டி. ரத்தினமும், செயலாளராக எஸ். சிவப்பிரகாசமும் தேர்வு செய்யப்பட்டனர். 1954, செப்டம்பர் 17-இல் நாவலர் நெடுஞ்செழியன் புதுவை தி.மு.க.வை முறைப்படித் தொடங்கி வைத்தார். பின்னர், புதுவையின் சுதந்திரப் போராட்ட வீரராகச் செயல்பட்ட செ. முத்து, தி.மு.க. தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1955-இல் புதுவையில் பல தி.மு.க. கிளை அமைப்புகள் தோன்றின. புதுவை மாநில தி.மு.க.வின் முதல் மாநாடு 1959, மே 2-3 தேதிகளில் ஏ. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றது. 1960 டிசம்பர் 11-இல் செ. முத்துவின் தலைமையில் தி.மு.க. வர்த்தக சங்கம் தொடங்கப்பட்டது. 1962, ஜூலையில் விலைவாசி உயர்வைக் கண்டித்து, செ. முத்து தலைமையில் புதுவை தி.மு.க. ஊர்வலம் நடத்திற்று. 1964, மார்ச் 27-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் புதுவை தி.மு.க. தீவிரமாகப் பங்காற்றியது தென்மாநிலங்களில் இந்தித் திணிப்புக்காக, 1965 ஜனவரி 26-இல் புதுவை தி.மு.க.வினர் தங்கள் வீடுகள் மற்றும் முக்கிய இடங்களில் கறுப்புக்கொடி ஏற்றித் துக்கம் கொண்டாடினர். 1968-இல் காங்கிரசில் ஏற்பட்ட உட்கட்சிப் பூசல் காரணமாக எம்.ஓ.எச். பாரூக் தி.மு.க.வில் சேர்ந்தார். 1968, செப்டம்பர் 18-இல் சட்டசபை கலைக்கப் பட்டு, அடுத்த ஆறுமாதம் வரை புதுவையில் ஆளுநர் ஆட்சி நடைபெற்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நகராட்சி — பஞ்சாயத்து தேர்தல்

1968, நவம்பர் 7 முதல் டிசம்பர் 23 வரை மூன்றாவது முறையாக 16 கொம்யூன்களுக்கும் நகராட்சி, பஞ்சாயத்துத் தேர்தல் நடத்தப்பட்டன. மொத்தமுள்ள 200 இடங்களில் காங்கிரஸ் 84 இடங்களைக் கைப்பற்றியது. தி.மு.க. வலது கம்யூனிஸ்ட் கூட்டணி 116 இடங்களில் வெற்றி பெற்றது. இந்த 200 இடங்களில் 37 இடங்கள் தாழ்த்தப்பட்ட பிரிவினருக்காக ஒதுக்கப்பட்டிருந்தன.[6]

மூன்றாவது சட்டசபைத் தேர்தல்

1969, மார்ச் 4-இல் மூன்றாவது சட்டசபைத் தேர்தல் நடத்தப்பெற்றது. மொத்தமுள்ள 30 இடங்களில் காங்கிரஸ் 10 இடங்களிலும், தி. மு. க. 15 தொகுதிகளிலும், வலது கம்யூனிஸ்டு 3 இடங்களிலும், சுயேட்சை 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன.[7] எம். ஓ. எச். பாரூக் தலைமையில் தி.மு.க. வலது கம்யூனிஸ்டு கூட்டணி மந்திரி சபை பதவியேற்றது. ஏனைய அமைச்சர்களாக எஸ். ராமசாமி, எஸ். ஆறுமுகம், டி. ராமச்சந்திரன், வ. சுப்பையா (வலது கம்யூனிஸ்டு) ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். 1971, மார்ச்சில் நடைபெற்ற புதுவை பாராளுமன்றத் தேர்தலில் எஸ். மோகன் குமாரமங்கலம் எம்.பி. யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே மாதத்தில் பங்களாதேஷ்—பாகிஸ்தான் பிரிவினை ஆரம்பமாயிற்று. இப்பிரிவினையின் அடிப்படையில் 1971, டிசம்பர் 3-இல் பாகிஸ்தான், இந்தியாவின் மீது போர் தொடுத்து, தோல்வியைத் தழுவிற்று. 1973, டிசம்பரில் எஸ். ராமசாமியும் டி. ராமச்சந்திரனும் தி.மு.க. விலிருந்தும் அமைச்சர் பதவியிலிருந்தும் விலகி அண்ணா தி.மு.க. வில் சேர்ந்தனர். இதன் எதிரொலியாக 1974, ஜனவரி 3-இல் எம் ஓ.எச்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரூக் தலைமையிலான அமைச்சரவை பல மின்மையால் கலைக்கப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி அமுல்படுத்தப் பட்டது. இக்காலத்தில் புதுவையிலிருந்து தேர்வு செய்யப் பட்ட இரும்பு மற்றும் எஃகு உருக்காலை மந்திரியாகப், பாராளுமன்றத்தில் இடம் பெற்றிருந்த எஸ். மோகன் குமாரமங்கலம் 1973, மே 31-இல் (ஒரு விமான விபத்தில்) மரணமடைந்தார்.

நான்காவது சட்டசபைத் தேர்தல்

1974, பிப்பிரவரி 24-இல் நான்காவது பொதுத் தேர்தல் புதுவையில் நடத்தப் பெற்றது. இத்தேர்தலில் அ.தி.மு.க—12, தி.மு.க–2, இந்திய தேசிய காங்கிரஸ்—7, இந்திய கம்யூனிஸ்டு கட்சி—2, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி—1, பழைய இந்திய தேசிய காங்கிரஸ்—5 சுயேட்சை—1 என்னும் அடிப்படையில் இடங்களைக் கைப்பற்றின.[8] எஸ். ராமசாமி தலைமையில் அ.தி.மு.க. இந்திய கம்யூனிஸ்டு கட்சி கூட்டணி, அமைச்சரவை ஏற்படுத்தியது. ஏனைய அமைச்சர்களாக டி. ராமச்சந்திரன், வி.எம்.சி. வரதப்பிள்ளை என். வேங்கடசாமி வ. சுப்பையா (வலது கம்யூனிஸ்டு) போன்றோர் இடம் பெற்றிருந்தனர். ஒரு மாதமே ஆட்சி செய்த இந்த அமைச்சரவை 1974 மார்ச்சில் கலைக்கப்பட்டது.

நெருக்கடி நிலைப் பிரகடனம்

1975 ஜூன் 26-இல் குடியரசுத் தலைவர் இந்தியாவில் நெருக்கடி நிலைச் சட்டத்தை அமுல் படுத்தினார். 1976 மார்ச்சில் முடிவுற வேண்டிய பாராளுமன்றத்தின் பதவிக் காலம் நெருக்கடிநிலை காரணமாக மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டது. 1977 மார்ச்சில் மூன்றாவது பாராளு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மன்றத் தேர்தல் நடத்தப் பெற்றது. அ.தி.மு.க. வின் சார்பில் போட்டியிட்ட அரவிந்த பாலாபழனூர், புதுவை யின் பாராளுமன்ற உறுப்பினராகத்தேர்வு செய்யப்பட்டார். 1977 ஜூன் 14-இல் புதுவையின் ஐந்தாவதுசட்டசபைக்கான தேர்தல் நடத்தப் பெற்றது. இத்தேர்தலில் அ.தி.மு.க.-14, தி.மு.க—3, ஜனதா-7, இந்திய தேசிய காங்கிரஸ்—2, இந்திய கம்யூனிஸ்டு கட்சி—1, சுயேட்சை—3 என்ற கணக்கில் வெற்றி பெற்றன.[9] எஸ். ராமசாமி தலைமையில் இரண்டு அமைச்சர்கள் அ.தி.மு.க சார்பில் பதவியேற்றனர். இவ்வமைச்சரவையில் இடம் பெற்ற மற்றொரு அமைச்சர் டி. ராமச்சந்திரன் ஆவார். 1978 அக்டோபர் 9-இல் டி. ராமச்சந்திரன் கட்சியிலிருந்தும் அமைச்சர் பதவி யிலிருந்தும் ராஜினாமா செய்தார். பின்னர் எஸ். ராமசாமி தலைமையில் என். வேங்கடசாமி, எஸ். சூசைராஜ், எஸ். சிவப்பிரகாசம், வி. எம். சி. வரதப்பிள்ளை (ஜனதா) ஆகியோர் அமைச்சர்களாகத் தொடர்ந்தனர். 1978 நவம்பரில் இப்புதிய அமைச்சரவையும் கலைக்கப்பட்டது. அதன் பின் 1980 வரை குடியரசுத் தலைவர் ஆட்சியில் புதுவை இருந்து வந்தது.

இணைப்பு நடவடிக்கைகள்

1978 இல் மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்த போது, தன் சொந்த எண்ணமாக 'புதுவையும் அதனைச் சார்ந்த பகுதிகளும் அந்தந்த மாநிலத்துடன் இணைக்கப் படவேண்டும்' என்று அறிக்கை விடுத்தார். 1978 அக் டோபரில் வ. சுப்பையா தலைமையில் 'புதுச்சேரி இணைப்பு மறுப்பு இயக்கம்' தோற்றுவிக்கப்பட்டது. தி.மு.க., இந்திய கம்யூனிஸ்டு, ஜனதா, காங்கிரஸ், மார்க் சிஸ்டு கம்யூனிஸ்டு, திராவிடர் கழகம், முசுலிம்லீக், காந்தி காமராஜ் காங்கிரஸ் போன்ற கட்சிகள் இவ்வியக்கத்தில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒருங்கிணைந்து செயலாற்றின. 1979 ஜனவரி, 22 இல் போராட்டமும் ஊர்வலமும் நடத்தப்பட்டன. அரசு ஊழியர்களும் மாணவர்களும் இப்போராட்டத்தில் பெருவாரியாகக் கலந்து கொண்டனர். மத்திய அரசு அலுவலகங்கள் முன்பாக இணைப்பை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. 1979 ஜனவரி 26,27 தேதிகளில் புதுவை வன்முறைக்கு அடிமையாகி எரிகளமாக மாறியது. காவலர்கள் கலவரத்தை அடக்கவேண்டி நடத்திய தடியடியிலும் துப்பாக்கிச் சூட்டிலும் 25 பேர் இறந்தனர்.

புதுவை நிலைமையை நேரில் அறிய வந்த அ.தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர் பாலாபழனூர் வர்த்தக சபையில் மக்களால் சுற்றி வளைக்கப்பட்டு முற்றுகை இடப்பட்டார். அங்கிருந்து அவர் காவல்துறையின் உதவியுடன் வெளியேற வேண்டியதாயிற்று. 1979, ஜனவரி 26 ஆம் தேதியை துக்கநாளாகக் கொண்டாட இணைப்பு எதிர்ப்புக்குழு முடிவு செய்தது. குடியரசு தினவிழாவுக்கு பொதுமக்கள் எவரும் செல்லவில்லை. வ. சுப்பையா பாராளுமன்றத்தின் அனைத்துக் கட்சித்தலைவர்களுக்கும் புதுவையின் நிலைபற்றி அறிக்கை அனுப்பினார். அப்போது பதவி இழந்திருந்த முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியும் புதுவையைப்பிற மாநிலத்துடன் இணைக்கலாகாது எனும் கருத்தையே வலியுறுத்தினார்.

காரைக்காலில் இணைப்பை எதிர்த்துத் தீக்குளிக்க முயன்ற இரண்டு மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். டி. ராமச்சந்திரன், செ.முத்து, எம்.ஒ.எச். பாரூக். பாலமோகன் ஆகியோர் அடங்கிய இணைப்பு எதிர்ப்புக்குழு புதுடில்லி சென்று குடியரசுத் துணைத்தலைவர் பி.டி.ஜாட்டியைச் சந்தித்தனர். ஏ.வி.பி. ஆசைத்தம்பி (தி.மு.க.) பார்வதி கிருஷ்ணன் போன்றோர் புதுவை இணைப்பு எதிர்ப்பாகப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினர்.[10] அதேசமயம் புதுவையின் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட அரவிந்த பாலாபழனூர் புதுவை இணைப்புக்கு ஆதரவாகவே செயல் பட்டார். இதற்கிடையே ஜனதாக் கட்சியில் ஏற்பட்ட உட்கட்சிப் பூசல் காரணமாக புதுவை இணைப்புத் தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டது. மொரார்ஜி தேசாய் தலைமையிலான மத்திய அமைச்சரவை கலைக் கப்பட்டு சரண்சிங்தலைமையில் ஜனதா (எஸ்), காங்கிரஸ் (ஒய்.பி. சவான்) கட்சிகளின் கூட்டணி அமைச்சரவை பதவி ஏற்றது. இதுவும் நீண்டகாலம் நிலைக்கவில்லை 1980 ஜனவரியில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, தேர்தல் நடத்தப் பெற்றது. புதுவையின் பாராளுமன்ற உறுப்பின ராக இந்திரா காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட ப. சண்முகம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.[11]

ஆறாவது சட்டசபைத்தேர்தல்

இத்தேர்தலில் தி.மு.க., 'இந்திரா காங்கிரஸ், முசுலீம் லீக் கூட்டணி பெரும்பான்மையான இடங்களைக் கைப் பற்றியது. தி மு.க. —14, இந்திரா காங்கிரஸ் —10, ஜனதா —3, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு—1, சுயேட்சை —2 என்ற கணக்கில் வெற்றி பெற்றன. தி.மு.க.வும் இந்திரா காங்கிரசும் சேர்ந்து கூட்டணி அமைச்சரவையைத் தோற்றுவித்தன. டி. ராமச்சந்திரன் தலைமையில் ஜி. பெருமாள் ராஜா, வி.எம்.சி. சிவக்குமார், எஸ். சவரிராஜன், வி. கதிர்வேல், ரேணுகா அப்பாதுரை ஆகியோர் அமைச்சர்களாகப் பதவியேற்றனர்.

ஏழாவது சட்டசபைத்தேர்தல்

1983, ஜூன் மாதத்தில் டி. ராமச்சந்திரன் தலைமை யிலான அமைச்சரவை கலைக்கப்பட்டு, 1985 மார்ச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரை புதுவை குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. 1985 மார்ச் 5 இல் புதுவை சட்டசபைக் கான பொதுத் தேர்தல் நடத்தப்பெற்றது. இத்தேர்தலில் இந்திராகாங்கிரஸ், அ.தி.மு.க கூட்டணி வெற்றி பெற்றது. எம். ஓ. எச். பாரூக் தலைமையில் இந்திரா காங்கிரஸ் அமைச்சரவை பதவியேற்றது. ஏனைய அமைச்சர் களாக ப. கண்ணன், வெ. வைத்திலிங்கம், வி. கோவிந்த ராஜன், எல். ஜோசப் மரியதாசு ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இந்திரா காங்கிரசின் சட்டசபை பலத்தை உறுதிப்படுத்திக் கொள்ள புதிதாக மூன்று நியமன உறுப்பினர்களையும் அக்கட்சி சேர்த்துக் கொண்டது.

எட்டாவது சட்டப் பேரவை

புதுவையின் ஏழாவது சட்டசபைக்கான பதவிக்காலம் 1990. பிப்ரவரியுடன் முடிவுற்றது. 1990, பிப்பிரவரி 27இல் புதுவையின் எட்டாவது சட்டப் பேரவைக்கான தேர்தல் நடத்தப்பெற்றது. இத்தேர்தலில் தி.மு.க., ஜனதாதளம், கம்யூனிஸ்டு கூட்டணி வெற்றி பெற்று, 1990, மார்ச் 8-இல் ஆறு உறுப்பினர் அடங்கிய அமைச்சரவை பதவியேற்றது. இந்த அமைச்சரவையில் டி. இராமச்சந்திரன் முதல்வராக வும், ஆர்.வி. ஜானகிராமன், நா. மணிமாறன், வி. பெத்த பெருமாள், பி. இராஜவேலு, ஆர். கமலக்கண்ணன் ஆகி யோர் ஏனைய அமைச்சர் களாகவும் விளங்கினர்.

அரசியல் சாசன அமைப்பும் நிர்வாகமும்

1947, ஆகஸ்ட் 29இல் டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் தலைமையில் ஏழு உறுப்பினர் அடங்கிய குழு ஒன்று இந்திய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரசியல் சாசன அமைப்பை உருவாக்கத் தோற்றுவிக்கப் பட்டது. 1949 நவம்பர் 26இல் இவர்களால் உருவாக்கப்பட்ட புதிய அரசியல் சாசன அமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1950, ஜனவரி 26 முதல் இந்திய அரசியல் சாசன அமைப்பு நடைமுறைப் படுத்தப்பட்டது. இதில் 395 மசோதாக்களும், 9 பிரிவுகளும் உள்ளன. இவை மொத்தம் பன்னிரு பகுதி களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தனிமனித உரிமைகளுக்கு முக்கியத்துவம் அளித்து இம் மசோதாக்கள் தயாரிக்கப் பட்டுள்ளன.பதிமூன்றாவது மசோதாமுதல் முப்பத்திநாலா வது மசோதா வரை ஒவ்வொரு இந்தியனின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கும் விதத்தில் சட்டங்கள் இயற்றப் பட்டுள்ளன. அரசியல் சாசனம் குடியரசுத் தலைவரைத் தலைவராகக் கொண்டு செயல்படும். நெருக்கடி நிலைக் காலத்தில் முழுப் பொறுப்பையும் ஏற்றுச் செயல்படும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்குண்டு. அரசியல் சாசனத் தின்படி குடியரசுத்துணைத்தலைவர் மேலவைத்தலைவராக இருந்து செயல்படுவார். குடியரசுத் தலைவர் இல்லாத போது, அவருடைய அதிகாரத்தைத் துணைக் குடியரசுத் தலைவர் பயன்படுத்துவார்.

இங்கிலாந்துப் பிரதமரைப் போலவே, இந்தியப் பிரதம ருக்கும் அதிகாரங்கள் வரையறை செய்யப்பட்டுள்ளன. பாராளுமன்றம் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டு (1) மக்கள் அவை, என்றும் (2) மாநிலங்கள் அவை என்றும் பெயரிடப்பட்டுள்ளன. மக்களால் நேரடியாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அடங்கிய அவையே மக்களவையாகும். மாநிலங்கள் அவை 250 உறுப்பினர்கள் அடங்கிய நிரந்தர அவையாகச் செயல்படும். இச்சபை யின் உறுப்பினர்கள் ஆறு ஆண்டுக்கு ஒரு முறை மக்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். இவ்வுறுப்பினர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களுள் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை மாற்றப்படுவர். கல்வியில் சிறந்தோராக, கலை வல்லுநராக உள்ள பன்னிரு உறுப்பினர்களை, மாநிலங்கள் சபைக்காக, குடியரசுத் தலைவர் தேர்வு செய்வார். மாநிலங்கள் ஏ, பி, சி, டி என்று நான்கு பிரிவுகளாகப் பாகுபாடு செய்யப்பட்டிருந்தன. இவ்வமைப்பு விரிவாக்க பட்டு, 1956, நவம்பர் 1 முதல் பதினான்கு மாநிலங்களும் ஆறு யூனியன் பிரதேசங்களும் என்ற பாகுபாட்டில் இந்தியா அமைக்கப்பட்டது. குடியரசுத் தலைவரே மாநில ஆளுநரை நியமிப்பார். மாநில ஆளுநரே மாநில முதல்வரைத் தேர்வு செய்யும் அதிகாரம் பெற்றவராவார்.

புதுவை அரசியல் அமைப்பு

புதுவை இந்தியாவுடன் இணைக்கப்பட்ட நாளான 1954, நவம்பர் 1 முதல், புதுச்சேரியில் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட தலைமை ஆணையரே நிர்வாகம் புரிந்து வந்தார். 1947இல் பிரஞ்சு அரசாட்சியின் கீழ் இயங்கி வந்த 39 உறுப்பினர் கொண்ட பிரதிநிதி சபையே விடுதலைக்குப் பிறகும் தொடர்ந்து இயங்கி வந்தது. தொடக்க காலத்தில் தலைமை ஆணையருக்கு அடுத்த நிலையில், தலைமைச் செயலர் பொறுப்பேற்றிருந்தார். தலைமைச் செயலரின், தலைமையில் பொது நிர்வாகம், வளர்ச்சித் துறை, நிதி மற்றும் அரசியல் நிர்வாகம் ஆட்சித்துறை என்று நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நிர்வாகம் செய்யப்பட்டு வந்தது. 1962, ஆகஸ்டு 16இல் 'சட்டப்படி மாற்றுதல் ஒப்பந்தம்' (Documents Transfer) இயற்றப்பட்டு, புதுவைப் பகுதிகள், பிரஞ்சியர் பிடியிலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டு இந்தியாவுடன் நிரந்தரமாக இணைக்கப்பட்டன.[13]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதுவை யூனியன் பிரதேசம்

1962, டிசம்பர் 28இல் இந்திய அரசியல் சாசனத்தின் 14வது மசோதாவின் முதல் பிரிவாக — (புதுவை, காரைக்கால், மாகி, ஏனம் பகுதிகளை இணைத்து) புதுச்சேரி யூனியன் பிரதேசம் (Union Territory of Pondicherry) என்னும் பெயரிடப்பட்டு இந்தியாவின் ஒரு பகுதியாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. 1962இல் பாராளுமன்றத்தில் புதுச்சேரி ஆட்சி நிர்வாகத்திற்கான சட்டம் (Pondicherry Administration Act) கொண்டு வரப்பட்டு, 1963 ஜுலை முதல் நடைமுறைப் படுத்தப்பட்டது. இச்சட்டத்தின் அடிப்படையில் 30 உறுப்பினர்கள் அடங்கிய சட்டசபையும், ஒரு மக்களவை உறுப்பினர் பதவியும், ஒரு மாநிலங்கள் சபை உறுப்பினர் பதவியும் புதுச்சேரிக்கு அளிக்கப்பட்டன. ஏற்கெனவே புதுவையில் இயங்கி வந்த பிரதிநிதி சபை (Representative Assembly) சட்ட சபையாக (Legislative Assembly) மாற்றம் செய்யப்பட்டது. இம்மாற்றத்திற்குப் பின் புதுவையின் முதல் முதலமைச்சராக (1963, ஜுலை) எட்வர்டு குபேர் விளங்கினார்.[14] இவர் தலைமையிலான அமைச்சரவையின் பதவிக் காலம், 1964, ஆகஸ்டு 24ஆந் தேதி முடிவுற்றது.

வருவாய்த் துறை

இணைப்புக்குப் பின் காரைக்கால், மாகி, ஏனம் பகுதிகளை நிர்வகித்திட நிர்வாகிகள் நியமிக்கப்பட்டனர். தலைமை ஆணையரின் ஆளுகைக்கு உட்பட்டு, நிர்வாகியர் அவ்வப்பகுதியின் ஆட்சி நிர்வாகத்தைக் கவனித்து வந்தனர். 1967, ஏப்ரல் 9இல் புதுவையின் வருவாய்த்துறை திருத்தியமைக்கப்பட்டது. புதுச்சேரி யூனியன் பிரதேசம் முழுமைக்கும் 'வருவாய் மாவட்டம்' என்ற அடிப்படையில் வருவாய்த் துறை நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்ள

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'ஆட்சித் தலைவர்' (Collector) நியமிக்கப்பட்டார். புதுவை மாநிலம் முழுமையும் வருவாய்த்துறையின் அடிப்படையில் தாலுகா (தாசில்தார்), துணைத் தாலுகா (துணைத் தாசில்தார்), பிர்க்கா, கிராமம் என்று பிரிக்கப்பட்டு வருவாய் நிர்வாகம் நடத்தப்பட்டு வந்தது.

007478

நகராட்சி-பஞ்சாயத்து நிர்வாகம்

தொடக்கக் காலத்தில் பிரஞ்சியரால் நடத்தப்பட்ட நகராட்சி நிர்வாகம் சிறிது காலமே நடத்தப்பெற்றது. புதுவை மாநிலத்தின் மொத்தப் பகுதியும் 16 கொம்யூன் களாகப் பிரிக்கப்பட்டன. புதுச்சேரியில் உள்ள எட்டு கொம்யூன்களாவன — புதுச்சேரி, முதலியார்பேட்டை, அரியாங்குப்பம், ஒழுகரை, வில்லியனூர், பாகூர், நெட்டப் பாக்கம், மண்ணாடிப்பட்டு என்பனவாகும். காரைக்காலில் உள்ள ஆறு கொம்யூன்களாவன - காரைக்கால், நிரவி, கோட்டுச்சேரி, திருமலைராஜன் பட்டினம், திருநள்ளாறு, நெடுங்காடு என்பனவாகும். மாகிப் பகுதி ஒரு கொம்யூ னாகவும், ஏனம் பகுதி ஒரு கொம்யூனாகவும் பிரிக்கப்பட் டிருந்தது.[15] ஒவ்வொரு கொம்யூனிலும் உள்ளூர் ஆட்சி நிர்வாகத்தைக் கவனிக்க ஒரு மேயரும், இரண்டு துணை மேயரும் தேர்வு செய்யப்பட்டனர்.

புதுவை இணைப்புக்குப் பின் 1955, ஜூலையில் நடந்த நகராட்சி, கொம்யூன் பஞ்சாயத்துத் தேர்தலில் 61 கொம்யூன்களுக்கும் மொத்தம் 200 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர். 1965 முதல் புதுவை பகுதியில் வசிக்கும் இந்தியக் குடியுரிமை பெற்ற மக்களும் நகராட்சி பஞ்சாயத் துத்தேலில் வாக்களிக்கும் சட்டம் கொண்டு வரப்பட்டது. 1973 இல் இயற்றப்பட்ட 'புதுவை கிராமக்கொம்யூன் பஞ்சாயத்துச் சட்டத்தின்' அடிப்படையில் தமிழ்நாடு நகராட்சி அமைப்பைப்போன்றே புதுவையிலும் நகராட்சி-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பஞ்சாயத்து அமைப்புக்கள் மாற்றப்பட்டன. இச்சட்டத்தின் அடிப்படையில் புதுச்சேரி, காரைக்கால், மாகி ஏனம் ஆகிய நான்கும் நகராட்சிகளாகவும், எஞ்சிய பன்னிரு கொம்யூன்களும் பஞ்சாயத்துகளாகவும் பிரிக்கப்பட்டன. இவ்வாறு பிரித்த பின்பு புதுவை நகராட்சி, கொம்யூன் பஞ்சாயத்துகளுக்கான தேர்தல் 1975, பிப்பிரவரியில் நடைபெற்றது.

நீதித்துறை நிர்வாகம்

1962, நவம்பர் 6 முதல் புதுச்சேரிப் பகுதிகள் அனைத்தும் சென்னை உயர்நீதி மன்றத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன.[16] பிரஞ்சு நீதி முறைக்கும், ஆங்கிலேய நீதிமுறைக்கும் சிற்சில வேறுபாடுகளே உள்ளன. 1962 இல் ஏற்படுத்தப்பட்ட புதுச்சேரி நிர்வாகச் சட்டத்தின்படி புதுவை பகுதியில் வசிக்கும் எந்த ஒரு குடிமகனும் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குரைஞர் அமர்த்தி வாதாடும் உரிமை பெற்றவராயினர். பிரஞ்சியராட்சிக் காலத்தில் இயங்கி வந்த உயர் நடுவர் ஆயமன்றத்தைப் (Tribunal Superiur) போன்று, 1963 முதல் 'நடுவர் ஆய முறையீட்டு நீதி மன்றம்' (The Superior Tribunal of Appeal) செயல்படத் தொடங்கியது. 1966 அக்டோபர் மாதத்தில் புதுவைச் சட்டப்பேரவையில் 'புதுச்சேரி தண்டனையியல் வழக்கு மன்றச் சட்டம் (Pondicherry civil court Act—1966) இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் அடிப்படையில் புதுவைப் பகுதியில் உள்ள வழக்கு மன்றங்கள் அண்டை மாநில வழக்கு மன்றச் சட்டங்களைப் பின்பற்றிச் செயல்படலாம். 1968, செப்டம்பர் இல் வெளியிடப்பட்ட அரசு அறிவிப்பின்படி புதுவையில் ஒன்றும், காரைக்காலில் ஒன்றுமாக இரண்டு சார்பு நிலை வழக்கு மன்றங்கள் (Sub Ordinate Judges Court) ஏற்படுத்தப்பட்டன. இவற்றைத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தவிர மாவட்ட முன் சீப் நீதி மன்றங்கள் (District Muicif courts) புதுவை, காரைக்கால், மாகி ஏனம் பகுதிகளில் தோற்றுவிக்கப்பட்டன. 1968 செப்டம்பர் 5 இல் 'புதுவை தண்டனையில் மன்றச் சட்டம்' (Pondicherry civil courts Act—1968) இயற்றப்பட்டதும் இதன் அடிப்படையில் பல புதிய சட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டும், வழக்கு மன்றங்கள் விரிவு படுத்தப்பட்டும் நீதித்துறை வளர்ச்சி யடைந்து வந்துள்ளது.

பொருளாதார வளர்ச்சி —ஐந்தாண்டுத்திட்டங்கள்

புதுச்சேரி இந்தியாவுடன் இணைக்கப்பட்டவுடனேயே முதல் ஐந்தாண்டுத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப் பட்டது. ஒன்றரையாண்டு முடிவுறும் தறுவாயில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் புதுவையின் வளர்ச்சிப் பணி களுக்காக ஐம்பது லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1956 - 57 முதல் 1960–61 வரை)

இத்திட்டத்தில் புதுவை மாநிலத்திற்காக ஒதுக்கப் பட்ட தொகை ரூபாய் 476.5 லட்சமாகும். இதில் ரூபாய் 389 லட்சமே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புதுவையின் வளர்ச்சிப் பணிகளுக்காகச் செலவிடப்பட்டது.[11] இத்திட்டத்தின் ஒரு பணியாக, சென்னை அரசின் ஒத்துழைப்புடன் 'வீடூர் நீர்த் தேக்கம்' கட்டப்பட்டது. 1960-இல் ஒரு சர்க்கரை ஆலை தொடங்கப்பட்டது. கிராம மின்சார வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் 1956-இல் 36 கிராமங்களுக்கும், 1961-இல் 138 கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டது. கூட்டுற வியக்கத்தின் அடிப் படையில் புதுச்சேரியில் தோல் உற்பத்தித் துறை தொடங்கப்பட்டது. 1960 ஜூலை முதல் சிறு தொழில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துறை வளர்ச்சியடையத் தொடங்கியது. இக்காலக் கட்டத்தில் 350 ஓராசிரியர் பள்ளிகளும், 10 உயர்நிலைப் பள்ளிகளும் புதிதாகத் துவக்கப்பட்டன. மத்திய அரசின் நிதி உதவியுடன் மூன்று கோடி ரூபாய்த் திட்டத்தில் கோரிமேட்டில் மருத்துவக் கல்லூரி (JIPMER) தொடங்கப் பட்டது. அரசு பொது மருத்துவமனையை விரிவுபடுத்தும் நோக்கத்தில் காசநோய்ப் பிரிவு ஒன்றும் புதிதாகச் செயல் பட ஆரம்பித்தது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (1960-61 முதல் 1965—66 வரை)

இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ 6.62 கோடியாகும். செலவு செய்யப்பட்ட தொகை ரூ 6.24 கோடியாகும்.[18] இத்திட்டக் காலத்தில் வேளாண்மை வளர்ச்சிக்கென்று பல லட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன. விவசாயப் பண்ணையும், பால் பண்ணையும் அமைக்கப் பட்டன. அனைத்துக் கிராமங்களுக்கும் மின் வசதி செய்யப் பட்டது. புதுவை—தட்டாஞ் சாவடியில் தொழில்துறை மையம் ஒன்று தொடங்கப்பட்டது. காரைக்காலில் ஒன்றும் மாகியில் ஒன்றுமாக இரண்டு நூற்பாலைகள் தொடங்கப் பட்டன. தாகூர் கலைக்கல்லூரிக்கும், மோதிலால் நேரு தொழில் நுட்பக் கல்லூரிக்கும் லாசுப்பேட்டையில் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டன. பன்னிரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டன. இக்கால கட்டத்தில் அட்டவணை இனத்தவர்க்கென்று பல வளர்ச்சித் திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்திற்று.

ஆண்டுத் திட்டங்கள்

1962-இல் சீனாவுடனும் 1965-இல் பாகிஸ்தானுடனும் இந்தியாவிற்கு ஏற்பட்ட போர்த் தகராறு காரணமாக,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாதுகாப்புச் செலவினங்கள் அதிகமானதால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் ஒத்திப் போடப்பட்டது. அதற்குப் பதில் 1967-68—1968-69 முதலாக ஆண்டுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. புதுச்சேரியில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முடிக்கப்படாத பணிகள் ஆண்டுத் திட்டத்தின் மூலமாக முடிக்கப்பட்டன. சொர்ணாவூர் நீர்த்தேக்கக் கட்டுமானப் பணியும், பாசன ஏரி ஆழப் படுத்தும் பணியும் நிறைவேற்றப்பட்டன. 1967-68-ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ. 1.8 கோடி செலவிடப்பட்டது. 1966-இல் 207 ஆக இருந்த சிறுதொழில் வளர்ச்சி மையங் கள் 1968-இல் 236 ஆக உயர்ந்தது. 1968-69-ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ 2 31 கோடி செலவிடப்பட்டது. 1968-இல் தான் புதுவை மாநிலக் கூட்டுறவு வங்கி தொடங்கப் பட்டது. பல, சமுதாய வளர்ச்சிப் பணித் திட்டங்களும் இவ்வாண்டில் நிறைவேற்றப்பட்டன.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் (1969—74)

1969 ஏப்பிரல் முதல் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டது. இத்திட்டத்தில் செலவிடப்பட்ட தொகை ரூ. 14.44 கோடியாகும்.[19] இத்திட்டக்காலத்தில் தான் ஊசுட்டேரி ஆழப்படுத்தப்பட்டது. வேளாண்மையை நவீனப்படுத்தும் திட்டத்தின் (Grow More Food) அடிப் படையில் காரைக்காலில் பாசன வாய்க்கால் செப்பம் செய்யும் பணி தொடங்கப்பட்டது. முத்தரையர் பாளையத்தில் பால்பண்ணை ஒன்று தொடங்கப்பட்டது. கிராமங்களுக்கு மின் இணைப்பு வழங்கியதில் (Rural electrification programme) புதுவை மாநிலம் இத்திட்டக் காலத்தில் இந்தியாவிலேயே இரண்டாவது இடமாகத் திகழ்ந்தது. மாகியிலும் ஏனத்திலும் இளநிலைக் கல்லூரிகள் (Junior college) தொடங்கப்பட்டன. புதுச்சேரியில் சட்டக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கல்லூரியும் காரைக்காலில் மகளிர் கல்லூரியும் ஆரம்பிக்கப் பட்டன.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (1974-79)

இத்திட்டத்தின் மொத்த ஒதுக்கீடு ரூ. 34.04 கோடி யாகும். இந்தியாவிலேயே முதன் முதலில் 'அறிவியல் வேளாண்மை மையம்' புதுவையில் தான் இத்திட்டக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1978 ஜூலை 3-இல் 'ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்' (A Regulated Marketing Society) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. 1978 அக்டோபர் 2-இல் முதியோர் கல்வித் திட்டம் (Adult Education programme) செயல்படுத்தப்பட்டது. புதுவையில் குடிநீர்த் திட்ட மேம்பாட்டிற்காக, ரூ. 1 கோடி செலவில் புதிய திட்டம் தொடங்கப்பட்டது. 1975-இல் நெருக்கடி நிலைக் காலத்தில் இந்திரா காந்தியால் இருபது அம்சத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.[20] 1974-இல் 'நில உச்சவரம்புச் சட்டம்' (Land celling Act) கொண்டுவரப்பட்டபின், புதுவை அரசால் 400 ஹெக்டேர் நிலம் பறிமுதல் செய்யப் பட்டது. இக்காலத்தில் வீடில்லாத தாழ்த்தப்பட்ட சாதியினருக்காக 490 மனைப்பட்டாக்கள் இலவசமாக வழங்கப்பட்டன. கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் மாணவர் நலனுக்காகப் புத்தக வங்கிகள் தொடங்கப்பட்டன. காவல் துறையில் மகளிர் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. தாழ்த்தப் பட்ட சாதியினரும் கோவில் அதிகாரிகளாக நியமிக்கப் பட்டனர். நேரு இளைஞர் நற்பணி மன்றத்தின் மூலம் முதியோர் கல்வித் திட்டம் விரிவு படுத்தப்பட்டது.

ஆண்டுத் திட்டம் (1979-80)

இத்திட்டத்திற்கென்று ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 11.57 கோடியாகும். இக்காலத்தில் கடல்நீர் அரிப்பைத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தடுக்க வேண்டி, கடற்கரைச் சுவர்கள் வலிமைப் படுத்தப் பட்டன. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, ''வேலைக்கு உணவு' என்னும் திட்டம் (Food for work scheme) கொண்டுவரப்பட்டது. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவருக்காக, வில்லியனூரில் 'தங்கும் விடுதி' ஒன்று கட்டப்பட்டது. உப்பளத்தில் புதிய கலங்கரை விளக்கம் கட்டும் பணியும் இத்திட்டக்காலத்தில் நடை பெற்றது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் (1980-85)

இத்திட்டத்தின் முக்கியக் கட்டமாக, வறுமையை ஒழிக்க வேண்டியும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டியும் ரூ. 71.55 கோடி செலவிடப்பட்டது.[21] விவசாயத் துறையில் உணவு உற்பத்தியை மேம்படுத்தும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன. கோட்டுச் சேரியிலும், மண்ணாடிப்பட்டிலும் கால்நடை மருத்துவமனைகள் தொடங்கப்பட்டன. கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர் இறந்து போனால் அவர் குடும்பத்திற்கு ரூ. 5,000 வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது. ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு மின் விளக்குத் திட்டம் (An Electric bulb to each hut) அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைக்கு வந்தது. தட்டாஞ் சாவடியிலுள்ள தொழில்துறை மையத்தின் (PIPDIC) முதலீடு ரூ. 3 கோடியிலிருந்து ரூ. 5 கோடியாக உயர்த்தப்பட்டு, பல தொழிலகங்கள் நடத்தக் கடனுதவி வழங்கப்பட்டது.

1980 மே மாதம் முதல் காரைக்காலில் 'வேலை வாய்ப்பு அலுவலகம்' ஒன்று செயல்படத் தொடங்கியது. மதியஉணவுத் திட்டமும் ஏழை மாணவர்கட்கு இலவசமாக புத்தகங்கள், சீருடைகள், எழுது பொருட்கள் வழங்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திட்டமும் கொண்டுவரப்பட்டது. கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கும் வகையில் கலப்புத் திருமணம் செய்து கொள்வோர்க்கு அரசு ரூ. 5000 வழங்குந் திட்டத்தைக் கொண்டு வந்தது. 'மாங்கல்ய மான்யத்திட்டத்தின்' மூலம் முதல் அமைச்சர் நிதியிலிருந்து 250 ரூபாய் தாலிக்காக வழங்கப்பட்டு வந்தது. இக்காலத்தில் திருபுவனையில் ஒரு நூற்பாலை தொடங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1980, ஆகஸ்டு 11 முதல் புதுவையில் 'தானியங்கி தொலைபேசி இணைப்பகம்' செயல்படத் தொடங்கியது. புதுச்சேரியில் ஒருகோடி ரூபாய் செலவில் 'யானைக்கால் நோய் ஆராய்ச்சி மையம்' நிறுவப் பட்டது.

பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைமையில் ஒரு குழு புதுச்சேரியில் காலாப்பட்டு கிராமத்தைப் பல்கலைக் கழக இடத்திற்காகத் தேர்வு செய்தது. 1983இல் தனியார் வசமிருந்த 600 ஏக்கர் நிலத்தைப் பல்கலைக்கழக இடத்திற்காக ஆக்கிரமிப்பு செய்வதாக அரசு அறிவித்தது. இதுநாள் வரை 765 ஏக்கர் நிலத்தைப் பல்கலைக் கழகம் தனியார் வசமிருந்து பெற்றிருக்கிறது. பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் 1985 அக்டோபர் 16 முதல் புதுவைப் பல்கலைக்கழகம் செயல்படத் தொடங்கியது. புதுச்சேரி மாநிலம், அந்தமான் — நிக்கோபர் தீவுகள், இலட்சத் தீவுகள் போன்ற இடங்களில் செயல்பட்டு வரும் கல்லூரிகள் இப்பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டுக்குள் இயங்குவனவாகும். அண்ணா பல்கலைக்கழகப் பேராசிரியர் சென் குப்தா அவர்களால் தயாரிக்கப்பட்ட, மாதிரி வரைபடத்தின் அடிப்படையில் இன்னும் 15 ஆண்டிற்குள், 150 கோடி ரூபாய் செலவில் புதுவைப் பல்கலைக் கழகத்திற்காகப் காலப்பட்டில் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் (1985—90) இந்தியாவிலுள்ள ஒவ்வொரு தாலுகாவிலும், 'நவோதயா பள்ளி' ஏற்படுத்தப்படவேண்டும் என்ற நோக்கில் புதுவை மாநிலத்தில் நான்கு பள்ளிகள் செயல்பட தொடங்கியுள்ளன. 1986—87 ஆம் கல்வியாண்டில் புதுச்சேரியிலும், காரைக்காலிலும், 1987-88 ஆம் ஆண்டில் மாகியிலும் ஏனத்திலும் நவோதயா பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன.

சுதந்திர புதுவையின் சமுதாய நிலை

விடுதலைக்குப் பின் புதுவை மக்களிடையே தேசியக் கண்ணோட்டமும், புதிய அரசியல் விழிப்புணர்ச்சியும் ஏற்படத் தொடங்கின. கல்வியறிவு மிகுதி காரணமாக, பல்வேறு துறைகளிலும் சமுதாய மறுமலர்ச்சி முகிழ்க்கத் தொடங்கியது. அரசியல் சாசனத்தின் 17-வது மசோதாவான தீண்டாமைத் தடைச் சட்டத்தின் அடிப்படையில் வருணாசிரம தர்ம முறை ஒழிக்கப் பட்டது. தாழ்த்தப்பட்ட சாதியினரின் மேம்பாட்டிற் காகப் புதுச்சேரியில் சமுதாய நலத்துறை தோற்றுவிக்கப் பட்டது. இத்துறையின் கட்டுப்பாட்டில், புதுவை மாநிலத்தில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காக 12 விடுதிகள் (புதுச்சேரி—6. காரைக் கால்—4, ஏனம்—2) இயங்கி வருகின்றன. நிலமில்லாத ஏழை அரிசன மக்களுக்கு அரசு, நிலப்பட்டாக்கள் வழங்கியது. அரிசன மக்கள் மிகுதியாக வசிக்கும் கிராமங் களில் 'சமுதாய நல மண்டபம்' (Community Hall) கட்டப் பட்டது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தீண்டாமை, சாதி ஒழிப்புப் பாடல்கள் மூலமாகச் சமுதாயத்தில் புரை யோடியிருந்த அறியாமையை நீக்கும் முயற்சியில், பல பாடல்களியற்றினார். திராவிடர் கழகம் பகுத்தறிவுப் பிரசாரத்தின் மூலமாக மூடநம்பிக்கைகளை ஒழிக்க அரும் பாடு பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமுதாயத்தில் பெண்கள் பல துறைகளிலும் முன்னேறியவர்களாகத் திகழ ஆரம்பித்தனர். புதுச்சேரியிலும் காரைக்காலிலும் பெண்களுக்கென்று, தனிக் கல்லூரிகள் இயங்கி வந்தன. 1971-இல் 46.02 சதவீதமாக இருந்த படித்தவர் எண்ணிக்கை 1981-இல் 54.23 சதவீதமாக உயர்ந்தது.[22] இலவசக் கண்சிகிச்சை முகாமும், தொழுநோய் மருத்துவனையும் தொடங்கப் பட்டன. சுழற் சங்கம் (Rotary Club), அரிமா சங்கம் (Lions Club), நேரு இளைஞர் நற்பணி மன்றம் முதலியன சமுதாய வளர்ச்சிப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டன. 1968 பிப்ரவரி 28 இல் அரவிந்தரின் கனவை நனவாக்க 'ஆரோவில்' நகரத்திற்காக அடிக்கல் நாட்டப் பட்டது. தெய்வீக அமைதி காரணமாக 'உதய நகர்' (The City of Dawn) என்று ஆரோவில் ,நகர் அழைக்கப் படுகிறது. இந்நகரைப்பற்றி ஆசிரமத்து அன்னை, ''அனைத்துலக நகரான ஆரோவில், அனைத்து நாட்டு ஆடவரும். மகளிரும் இன்பத்தோடும், மனநலத்துடனும், அமைதியோடும் வாழ்வதற்கு உலகிலேயே தகுதியான ஒரே இடம் ஆகும்[23] என்று குறிப்பிட்டுள்ளார். ஆரோவில் நகரம், (1) தங்குமிடம் (2) பண்பாட்டு மையம் (3) பன்னாட்டுத் தொடர்பகம் (4) தொழில் மையம் என்று நான்காகப் பகுக்கப்பட்டுள்ளது.

பிரஞ்சிந்தியப் பண்பாட்டு நிறுவனம்

1955 மார்ச்சில் டாக்டர். ழான் ஃபிலியோசாவைத் தலைவராகக் கொண்டு, பிரஞ்சிந்தியப் பண்பாட்டு நிறுவனம் தொடங்கப்பட்டது. இந்திய - பிரஞ்சு நாடுகளிடையே உள்ள கூட்டுறவையும், பண்பாட்டையும் புலப்படுத்தும் வகையில் இந்நிறுவனம் இயங்கி வருகிறது. இந்தியப்பண்பாடு, அறிவியல், மொழி பற்றி ஆராய்வதே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்நிறுவனத்தின் முக்கியப் பணிகளாகும். பழைய தமிழ், வடமொழி இலக்கியங்களின் களஞ்சியமாகவும் இது விளங்குகிறது. பல, அரிய கையெழுத்துப் பிரதி களும், ஓலைச் சுவடிகளும் இங்கே பாதுகாக்கப் பட்டுள்ளன. திருப்பாவை, சரசுவதி அந்தாதி, சரசுவதி திருப்பாடல்கள், சகலகலாவல்லி மாலை, ஸ்ரீ ஆண்டாள் போன்றவற்றை ரா. தேசிகம் பிள்ளை பிரஞ்சு மொழியில் பெயர்த்துத், தானே வெளியிட்டுள்ளார். திருவிளையாடற் புராணம், கந்த புராணம், காஞ்சிப் புராணம் முதலிய வற்றைப் பிரஞ்சு மொழியில் பெயர்த்து, நிறுவனத்தின் ஆதரவில் வெளியிட்டுள்ளார். இந்நிறுவனத்தின் மூலமாக, தமிழ்—ஆங்கில—பிரஞ்சு அகராதி ஒன்றும் வெளியிடப் பட்டுள்ளது. சுற்றுப்புறச் சூழலுக்கும், அறிவியல் வரை படத் தயாரிப்புக்கும் சோதனைக் கூடம் (Laboratory of Ecology and catography) ஒன்றும் இங்கே செயல்பட்டு வருகின்றது. இந்திய — பிரஞ்சு நாடுகளிடையே ஒரு பண்பாட்டுப் பாலமாக இந்நிறுவனம் இன்றும் செயலாற்றி வருகின்றது.

பாரதிதாசன்

புதுச்சேரியில் 1891, ஏப்பிரல் 9-இல் பிறந்தார். தாய் —லட்சுமி, தந்தை—கனகசபை ஆவார். கவிஞரின் இயற் பெயர் கனக சுப்புரத்தினம். பு.அ. பெரியசாமிப் பிள்ளை, சி. பங்காரு பத்தர் ஆகியோரிடம் தமிழ் பயின்றார். 1909-இல் காரைக்கால் - நிரவியில் தம்முடைய ஆசிரியர் பணியைத் துவக்கினார். இளமைக்காலத்தில் சுயமரியாதை இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். பாரதிதாசனைப் பற்றிக் குறிப்பிடும்போது, ''சுயமரியாதை ஈடுபாடுதான் கவிஞரைப் புரட்சிக் கவிஞராகவும் பகுத்தறி வாதியாகவும் மாற்றியது'' என்று டாக்டர் மா. செல்வ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ராசன் மதிப்பீடு செய்துள்ளார். பாரதிதாசன் படைப்புகள் வெளிவந்த இதழ்களாவன. (புதுவைக்) கலைமகள், தேசசேவகன், சுதேசமித்திரன், குடியரசு, பகுத்தறிவு முதலியனவாகும். 1930, டிசம்பர் 30-இல் புதுவை முரசின் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். 1946, ஜூலை 28-இல் அறிஞர் அண்ணா அவர்கள், பாரதிதாசனின் புலமைக்குப் பரிசாக ரூ. 25,000 அடங்கிய பொற்கிழியினை அன்பளிப் பாக அளித்தார்.

பாரதிதாசன் கவிதைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். (1) காவியங்கள் (குடும்ப விளக்கு-போன்றன.) (2) குறுங்காவியங்கள் (தமிழ்ச்சியின் கத்தி-போன்றன. (3) தனிப் பாடல்கள் (பாரதிதாசன் கவிதைகள்—தொகுதி கள் - 4) என்பனவாகும். சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம், குயில் போலும் இலக்கிய இதழ்களையும் இவர் நடத்தியுள்ளார். 1964 ஏப்பிரல் 21-இல் பாரதிதாசன் மறைந்தார். அவர் எழுதிய 'பிசிராந்தையார்' நாடகத் திற்கு 1969-இல் சாகித்திய அகாடமி விருது வழங்கப் பட்டது. "அறியாமையுடைய மக்களை விழிப்புணர்ச்சி அடையச் செய்தவரும், இருண்ட சமுதாயத்தில் உதய சூரியனாக உதித்தவரும், தீப்பிழம்புகளாகவும், ஒளிரும் சந்திரனாகவும் பாடல்களை இயற்றிய வருமான பாரதிதாசன்[24]" என்று டாக்டர் மா. செல்வராசனால் புகழப்பட்டுள்ளார்.

1971, ஏப்பிரல் 29-இல் பெருமாள் கோவில் தெருவில் அமைந்துள்ள பாரதிதாசன் இல்லத்தை அரசு எடுத்துக் கொண்டு நினைவாலயமாக மாற்றியது. 1972, ஏப்பிரல் 29-இல் பாரதிதாசனின் முழு உருவச் சிலை பாரதி பூங்காவில் நிறுவப்பட்டது. 1972 டிசம்பர் 16-இல் புதுவை யில் பாரதி வாழ்ந்த வீட்டையும், தம் பொறுப்பில் ஏற்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரசு பாரதி நினைவகமாக மாற்றியது. புதுவையில் வாழ்ந்த, வாழ்ந்து வரும் பல புலவர்களைப் பற்றியும், அவர்கள் செய்த தமிழ்ப்பணிகள் குறித்தும் 'புதுவை மாநிலத் தமிழ் வளர்ச்சி' எனும் நூல் விரிவாகக் குறிப் பிட்டுள்ளது.

சான்றெண் விளக்கம்

1. Ramasamy, A., 'History of Pondicherry', P. 221.
2. மன்னர் மன்னன், 'புதுச்சேரியைப் பாருங்கள்' ப. 33.
3. Report on Parlimentary Elections, 1967, Govt of Pondicherry, P. 32.
4. மே. நூல்., ப. 37.
5. கலைஞர் கருணாநிதி, மு., 'நெஞ்சுக்கு நீதி,' பக்-87-90.
6. Report on Municipal Elections, 1968. Govt. of Pondicherry, PP-23-25.
7. Report on the General Elections, 1969, Govt. of Pondicherry, PP-93-95.
8. Report on the General Elections, 1974, Govt. of Pondicherry, PP-25-26.
9. Report on the General Elections, 1977, Govt. of Pondicherry, P. 80.
10. Ramasamy, A. 'History of Pondicherry'-P. 235.
11. Report on the General Elections, 1980, Govt. of Pondicherry, P-2.
12. மே. நூல்., ப. 241.
13. Ramasamy, A., 'History of Pondicherry', P.240.
14. மே. நூல்., ப. 241.
15. புதுவைச் செய்திகள், ஜனவரி-பிப்ரவரி 1974, ப. 21.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

16. Joseph Minattur, 'Justice in Pondicherry', (1701–1968), P-141,
17. புதுவைச் செய்திகள், பிப்பிரவரி 1967, ப. 11.
18. மே. நூல்., ப. 11.
19. புதுவைச் செய்திகள், மார்ச், 1974, ப, 4.
20. புதுவைச் செய்திகள், செப்டம்பர்-அக்டோபர், 1975, பக்-12–13.
21. Sixth Five year plan 1980–85, Planning Commission, Govt. of India, P-11.
22. Census of India, 1981, Union Territory of Pondicherry, Provisional Population tables.
23. Navajata, 'Sri Aurobindo', P-119.
24. செல்வராசன், மா., 'பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர்', ப. 3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6. காரைக்கால் வரலாறு

சோழ மண்டலக் கடற்கரையில் காவிரியின் கிளை நதியான அரசலாறு கடலோடு கலக்குமிடத்தில் அமைந்துள்ள நகரமே காரைக்கால் ஆகும். 'அரிசலாறு' என்பதன் பழைய வடிவம் 'அரிசொலாறு' (அரி+சொல்+ஆறு) என்பதாகும். நிருபதுங்கவர்மன் கி.பி. 860இல் பாண்டியன் ஸ்ரீமாறவல்லபனை அரிசலாற்றங்கரையில் தோற்கடித்த செய்தியைக் கல்வெட்டு குறிப்பிட்டுள்ளது.[1] காரைக்காலின் பழைய பெயர்களாக — சாகம்பரி புரம், காரைக்காடு, காரைவனம், காரா நகரி, குருலா என்றெல்லாம் அழைக்கப் பட்டு வந்துள்ளன.

நெய்தல் நிலப்பகுதியான காரைக்கால் தொடக்க காலத்தில் பரதவர்கள் மிகுதியாக வசிக்கும் பகுதியாக விளங்கியது மீன்பிடிக்கும் தொழிலைச் செய்து வந்த இப்பரதவர்களே, பிற்காலத்தில் கப்பல் கட்டுபவராகவும் மாறினர். கிறித்தவ சகாப்தத்தின் தொடக்கத்தில் காரைக்கால் பட்டினம் மிகச் சிறந்த வணிகத் தலமாக விளங்கியது. காரைக்காலின் சிறப்பைப் புகழ்ந்துரைக்கும் போது, 'பிற்காலச் சோழர் காலத்தில் காரைக்கால் சோழமண்டலக் கரையில் மிகச்சிறந்த துறைமுகப்பட்டினமாக விளங்கி வந்தது, என்று (சிறிய) வெய்டன் செப்பேடுகள் புகழ்ந்துரைக்கின்றன.[0]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இடைக்காலத்தில் காரைக்கால் வரலாறு, பெரிய புராணத்தைத் தவிர பிற நூல்களில் குறிப்பிடப்பட்டதாகத் தெரியவில்லை. சங்க காலத்தில் காரைக்கால் கரிகால் சோழனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. கி. பி. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து களப்பிரரின் இருண்ட காலப் பிடியில் சிக்கித் தவித்தது. பின்னர், பல்லவரே காரைக்கால் பகுதியைக் களப்பிரர் வசமிருந்து மீட்டனர். மூன்றாம் நந்திவர்மனின் வேலூர்ப்பாளையம் செப்பேடுகள், தஞ்சைப் பேரரசுக்கு உட்பட்ட பகுதியாகிய காரைக்கால் பல்லவர் ஆளுகைக்கு உட்பட்ட செய்தியைத் தெரிவிக்கின்றது.[2] மேலும் இரண்டாம் நந்திவர்ம பல்லவனின் (கி.பி. 731-796) காசாக்குடி செப்பேடுகளால் காரைக்கால் பல்லவராட்சியின் கீழ் இருந்து வந்துள்ளது என எளிதில் விளங்கிக் கொள்ளலாம். காரைக்கால் பகுதியான காசாக் குடியில் பல்லவர் செப்பேடுகள் கிடைத்தும், காரைக்காலைப் பற்றிய செய்திகள் அவற்றில் குறிப்பிடப்படாமை வியப்புக் குரியதே!

காரைக்கால் அம்மையார்

கி. பி. 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மூன்றாம் குலோத்துங்க சோழனின் (அநபாயன்) அரசவையில் முதலமைச்சராக வீற்றிருந்த சேக்கிழார் பெரியபுராணத்துள் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராக அம்மையாரின் வரலாற்றைப் புராணமாகப் பாடியுள்ளார். காரைக்காலைப் பற்றி வர்ணிக்கும் சேக்கிழார்,

> '.......................... ஓங்குபதி
> கூனல் வளை திரைசுமந்து கொண்டேறி மண்டுகழி
> கானல் மிசை வுலவ வளம் பெருகுதிருக்காரைக்கால்[3]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று புகழ்ந்துரைத்துள்ளார். காரைக்கால் அம்மையார் காலமான கி. பி. 5 நூற்றாண்டிலும், பிற்காலச் சோழர் காலமான சேக்கிழார் காலத்திலும் காரைக்கால் வளமுள்ள ஊராகவே இருந்து வந்துள்ளது. அம்மையார் வரலாற்றை அறுபத்தாறு பாடல்களில் சேக்கிழார் பெரிய புராணத்துள் விவரித்துள்ளார். முற்காலப் பல்லவர் காலம் (கி.பி. 6 நூ. ஆ) மகளிர் சமயவாழ்வில் ஒரு புதிய விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்த காலமாகும். மகளிர் சமயக் கல்வி பெற்றுத் தீட்சை பெறுதலும் அம்மையார் காலத்தில் நடைபெற்றுள்ளது. காரைக்கால் அம்மையார், சமயக் கல்வியையும், ஒழுக்கத்தையும் 'தத்தன் உடையார்' என்பவரிடம் கற்றுக் கொண்டார்.[4] பெண்களை உடைமைப் பொருளாக எண்ணி வாழ்ந்து வந்த காலத்தில், முதன் முதலில் ஒரு பெண் சமய வாழ்வில் ஈடுபட்டு இன்பநிலை எய்த முடியும் என்ற நிலையைக் கொண்டு வந்தவர் அம்மையாரே! அம்மையாரின் படைப்புகளான அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்தத் திருப்பதிங்கள் ஆகியன பதினோராந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன.

காசாக்குடிச் செப்பேடுகள்

காசாக்குடியில் கிடைத்த இரண்டாம் நந்திவர்ம பல்லவன் காலத்திய செப்பேடுகள் பல்லவர் காலக் கொடைச் சிறப்பைப் பற்றிக் கூறுகின்றன. 138 வரிகள் கொண்ட இச்செப்பேடுகளில் 1—104 வரிகள் வடமொழியிலும் 104—138 வரிகள் தமிழிலும் செய்திகள் பொறிக்கப் பட்டுள்ளன. இச்செப்பேடுகள் கூறும் செய்தியாவது. இரண்டாம் நந்திவர்ம பல்லவனின் 22-வது ஆட்சியாண்டில் (கி.பி. 753) ஜேயேஷ்டபாத சோமயாஜின் என்னும் பிராமணனுக்குத் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உருக்காட்டுக் கோட்டத்திலுள்ள, கொடு கொல்லி அல்லது ஏகாதிராமங்கலம் என்னும் ஊரைப் பிரமதேயமாக அளித்தான்''[5] என்பதாகும். இப்செப்பேடுகளை முதன் முதலில் (1879) கண்டுபிடித்தவர் ழூல்தெலா ஃபோன் (Jules De la Fon) என்பவராவார். பின்னர் ழூலியேன் வின்சோன் இப்பட்டயச் செய்தியை அடியொற்றி பிரஞ்சில் ஒரு ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார்.

1. பிற்காலச் சோழராட்சி

பல்லவர்க்கு அடங்கிய சிற்றரசாக உறையூரில் ஒடுங்கி யிருந்த சோழர், களப்பிரரின் வழிவந்த முத்தரையரை விரட்டி விட்டு, பல்லவரின் உதவியோடு தஞ்சைப் பகுதியை மீட்டனர். பின்னர் பல்லவரையும் பாண்டியரையும் அடக்கி விட்டு, பிற்காலச் சோழர் தமிழகத்தில் தலையெடுக்கத் தொடங்கினர். முதலாம் இராசராச சோழனின் 21-வது ஆட்சியாண்டில் (கி.பி. 1006) வெளியிடப்பட்ட லெய்டன் செப்பேடுகள் மிகவும் புகழ் பெற்றவையாகும். இச்செப் பேடுகளைச் டச்சுக்காரர்கள் கைப்பற்றி நெதர்லாந்தி லுள்ள லெய்டன் பல்கலைக் கழக அருங்காட்சியகத்தில் வைத்திருப்பதால் இவற்றிற்கு லெய்டன் செப்பேடுகள் என்று பெயர் ஏற்பட்டன. 'லெய்டன் செப்பேடுகள், கூறும் செய்தியாவது[6]. ''முதலாம் இராசராசன் ஆட்சிக் காலத்தில் ஸ்ரீவிஜயப் பேரரசின் மன்னனான சூடாமணி வர்மன் (சைலேந்திரப் பேரரசன்) நாகப்பட்டினத்தில் புத்த மதத்தைப் பரப்பும் நோக்கத்தில் 'புத்த விகாரம்' ஒன்றைக் கட்டத் தொடங்கினான். சூடாமணிவர்மனின் இறப்புக்குப் பின், அவன் மகன் ஸ்ரீமாற விஜயோத்துங்கவர்மன் விகாரத்தைக் கட்டி முடித்தான். இவ்விகாரத்திற்கு முதலாம் இராசராசன் ஆனைமங்கலம் என்னும் கிராமத்தை இறையிலியாக அளித்தான். பின்னர் 1017-இல் முதலாம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ராசேந்திரன் காலத்திலும் இக்கொடை தொடர்ந்து நடை பெற உறுதி செய்யப்பட்டது.''

இச்செப்பேட்டில் நாகப்பட்டினத்திலுள்ள சாலை ஒன்றினைக் குறிப்பிடும்போது, 'காரைக்கால் ராஜ பாட்டை' என்னும் தொடர் காணப்படுகிறது. எனவே பிற்காலச் சோழர் காலத்தில் நாகூர், திருமலை ராஜன் பட்டினம் ஆகிய ஊர்களைக் காட்டிலும் 'காரைக்கால் நகரம்' சிறப்புற்றிருந்ததாலே, 'காரைக்கால் ராஜபாட்டை என்னும் செப்பேட்டுத் தொடர் குறிப்பிடுகின்றது காரைக் காலைப் பற்றிய மற்றொரு செய்தி, தஞ்சைப் பிரகதீ சுவரர் ஆலயத்தில் காணப்படுகிறது. இங்குள்ள கல் வெட்டுத் தொடர் ஒன்று காரைக்காலைச் சேர்ந்த நடன மாடும் மங்கை ஒருத்தியைப் பற்றிக் கூறுகின்றது.

இவை தவிர திருநள்ளாறு தர்ப்பாரண்யேசுவரர் கோவில் சுவரில் காணப்படும் 5 கல்வெட்டுகளில் முதலி ரண்டுக் கல்வெட்டுகள் முதலாம் இராசேந்திரன் (கி.பி.1018-1054) காலத்திலும், மூன்றாவது கல்வெட்டு, முதலாம் குலோத்துங்கன் (1070—1122) காலத்திலும், ஐந்தாவது கல்வெட்டு ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் காலத்திலும் பொறிக்க பட்டுள்ளன.[7] நான்காவது கல்வெட்டு யார் காலத்தில் வெட்டப்பட்டது என்பது தெரியவில்லை. முதல் கல்வெட்டு கூறும் செய்தியாவது, 'கந்தன் அரங்கன் என் பவன் ஆலயத்தில் நடைபெறும் விசாகத் திருவிழாவில் ஐவகைக் கூத்து நடைபெறுவதற்காக, நிலம் தானமாக அளித்துள்ளாள். இரண்டாவது கல்வெட்டுச் செய்தி யாவது, 'தர்ப்பாரண்யேசுவரர் ஆலயத்தில் நடைபெறும் நைவேத்தியத்திற்காக, வைப்பு நிதி வழங்கியுள்ள செய்தி பற்றிக் கூறியுள்ளது, மூன்றாவது கல்வெட்டு, கோவிலில் சைவ மண்டபப் பராமரிப்புக்காக 560 கலம் நெல் தான

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மளிக்கப்பட்ட செய்தியைக் கூறியுள்ளது. நான்காவது கல்வெட்டு, தீபங்குடியைச் சேர்ந்த பொன்னாழ்வான் நச்சினார்க்கினியன் என்பவன் ஐப்பசி, சித்திரை, மாதங்களில் வரும் பரணி நாளில் இறைவனுக்காக உணவு படைத்தளிக்க, நெய்வாய்ச்சேரி அநபாய மங்கலத்தில்' உள்ள நிலத்தைத் தானமாக அளித்த செய்திப் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஐந்தாவது கல்வெட்டு, கோவிலில், நிர்வாகம் புரிந்து வரும் சிவ பிராமணர்களுக்காகச், செய்யப்பட்ட சமுதாயப்பணி பற்றிக் குறிப்பிடுகின்றது.

கோயில் மண்டபத்தின் வடக்குச் சுவரில் தர்ப்பாரண்யேசுவரர் மூர்த்திக்கு முன்னர், முற்றுப் பெறாத இரண்டு கல்வெட்டுகள் கிரந்த எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன.[8] அவற்றுள் ஒரு கல்வெட்டு திரிபுவனக் சக்கரவர்த்தி இரண்டாம் இராசராசனின் 11-வது ஆட்சியாண்டில் (கி. பி. 1174) வரையப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில், பிற்காலச் சோழர் பரம்பரை மன்னர்களைப் பற்றிய செய்தி காணப்படுகிறது. மற்றொரு கல்வெட்டு திரிபுவனச் சக்கரவர்த்தி, மூன்றாம் குலோத்துங்க சோழனாகிய 'மதுரை கொண்டான்' காலத்தில் (கி.பி. 1159) வரையப்பட்டுள்ளது.

இனி, காரைக்காலைச் சேர்ந்த நெடுங்காடு கிராமத்தில் மூன்றாம் குலோத்துங்க சோழனின் ஏழாவது ஆட்சியாண்டில் (கி.பி. 1215) வரையப்பட்டுள்ள ஒரு கல்வெட்டு அவ்வூர்க்கோவில் இறைவனுக்கு விளக்கெரிக்க, திருநீலகண்ட இனத்தவர் 300 காசுகளை விளக்குத்தானமாக அளித்த செய்தி பற்றிக் குறிப்பிட்டுள்ளது.[9] கீழக்காசாக்குடியைச் சேர்ந்த ஆடியப்பன் கோவிலின் வடக்குச் சுவரில் மூன்றாம் இராசராசனின் (கி.பி. 1226) கல்வெட்டுகளும், இரண்டாம் இராசேந்திரனின் (கி.பி. 1184) கல்வெட்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களும் காணப்படுகின்றன. இவை கோவிலுக்குத் தான மாக அளிக்கப்பட்ட செய்திகளைப் பற்றியே கூறுகின்றன.

நாயக்கரும் மராட்டியரும்

கி.பி.13 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பிற்காலச் சோழராட்சி முடிவுக்கு வந்தது. மூன்றாம் இராசேந்திரன் கி. பி. 1279 இல் தோற்கடிக்கப்பட்ட பின் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (1268-1310) சோழ மண்டலப் பகுதியைக் (காரைக்கால், புதுவை உள்ளிட்ட பகுதி) கைப்பற்றிக் கொண்டான். குலசேகர பாண்டியன் புதல்வர்களுக்குள் ஏற்பட்ட பதவிச்சண்டை, மாலிக்காப் பூரின் படையெடுப்புக்கு வித்திட்டது. பின்னர் 1360 இல் தஞ்சைப் பகுதி விசயநகரப் பேரரசன் குமாரகம்பண்ணனின் ஆளுகைக்கு உட்பட்டதாயிருந்தது. வடக்கே கிருஷ்ணா நதியிலிருந்து, தெற்கே கன்னியாகுமரி வரை உள்ள பகுதி களைத் தன்னுடைய பிரதிநிதிகளை அதிகாரிகளாக நியமித்து ஆண்டுவரச் செய்தான். (காரைக்கால் உள்ளிட்ட) தஞ்சைப் பகுதியை ஆட்சி புரிந்த நாயக்கருள் கோபண்ணா, சாளுவ மங்கு தேவன், செவப்ப நாயக்கர், அச்சுதப்ப நாயக்கர், இரகுநாத நாயக்கர், விஜயராகவ நாயக்கர் போன்றோர் குறிப்பிடத்தக்கோராவார்கள். 1676 இல் சிவாஜியின் சகோதரன் வெங்காஜி தஞ்சையைக் கைப்பற்றி, மராட்டியப் பேரரசைத் தோற்றுவித்தான். அவ்வாண்டு முதல் தஞ்சைப் பகுதியை ஆங்கிலேயர் கைப்பற்றும் வரை (கி.பி. 18 நூ.ஆ.) மராட்டியர் ஆட்சியே ஆக்கிரமித் திருந்தது. தஞ்சையின் ஒரு பகுதியாக விளங்கிய காரைக்கால், தஞ்சையின் அரசியல் மாற்றத்தாலும், செல்வாக்காலும் பாதிக்கப்பட்டது, தஞ்சைப் பேரரசை ஆட்சி செய்த பல்லவர், பாண்டியர், சோழர், ராயர், நாயக்கர், மராட்டியர் ஆகியோரின் தாக்கமும் காரைக் காலில் படிந்துள்ளது. பிற்காலச் சோழராட்சியில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றில் காரைக்கால் சிறந்து விளங்கியது.

2. காரைக்கால் பிரஞ்சியராட்சிக்கு உட்பட்ட வரலாறு

தோப்பூரில் நடந்த போருக்குப் (கி.பி. 1616) பின் இரகுநாத நாயக்கர் (1597-1640) தஞ்சைப் பகுதியை தன் னாட்சிக்கு உரியதாக ஆக்கிக் கொண்டார். ஐரோப்பி யருள் காரைக்கால் பகுதியில் (திருமலை ராஜன் பட்டினம்) முதன்முதலில் வணிக நிறுவனம் அமைத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டவர் டச்சுக்காரரே! கி.பி. 1610 இல் திருமலை ராஜன் பட்டினத்தில் வணிக நிறுவனம் அமைக்க வேண்டி, தஞ்சை நாயக்கரிடம் அனுமதி கேட்டுத் தோல்வி யடைந்தனர். பின்னர் 1666-இல், தஞ்சையில் நாயக்கப் பிரதிநிதியாக இருந்த, விஜயராகவ நாயக்கரிடம் 2800 பகோடாக்களைக் கொடுத்து மூன்று ஆண்டுகட்குத் திருமலைராஜன் பட்டினத்தில் வணிக நிறுவனம் அமைத்துக் கொள்ள அனுமதி பெற்றனர்.[10] ஆனால் அந்நிறுவனம் டச்சுக்காரர்கள் நினைத்த அளவிற்கு வெற்றி பெற இயல வில்லை.

1622இல் இரகுநாத நாயக்கரின் அன்பான வரவேற்பும், உபசரிப்பும் ஆங்கிலேயரை உற்சாகமடையச் செய்து, காரைக்காலில் ஓர் ஆங்கிலேய வணிக நிறுவனம் அமைத்துக்கொள்ள, அனுமதி கேட்கத் தூண்டியது. ஆனால், தஞ்சை நாயக்கர் அதற்கு வாடகையாகக் கேட்ட பெருந்தொகை, ஆங்கிலேயரை அதிர்ச்சியடையச் செய்து, அம்முயற்சியைக் கைவிடச் செய்தது. காரைக் காலில் வணிக நிறுவனம் அமைக்கும் முயற்சியை விட்டு விட்டுத் தலைமையிருப்பிடமான தஞ்சாவூரிலேயே நிறுவனம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அமைக்கும் முயற்சியில் ஆங்கிலேயர் ஈடுபடத் தொடங்கினர்.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காரைக்கால் ஓர் அமைதியான நகரமாகவே திகழ்ந்தது. 1674—76-ஆம் ஆண்டுகளில் டச்சுக்காரர்களின் ஆக்கிரமிப்பில் இந்நகரம் சிக்கியிருந்தது. பின்னர் 1688, டிசம்பரில் பிரான்சுவா மார்த்தேன் முயற்சியால் பிரஞ்சியர் காரைக்காலில் ஒரு வணிக நிறுவனத்தைத் தொடங்கினர்.[11] ஆனால் நாகப்பட்டினத்திலிருந்த டச்சுக்காரர்களின் பொறாமையினால் அந்நிறுவனம் 1689 ஜூன் மாதத்திலேயே மூடப்பட்டது. பின்னர், 1739-ஆம் ஆண்டு வரை, பிரஞ்சியர் காரைக்காலைக் கைப்பற்றக் காத்திருக்க வேண்டியதாயிற்று.

காரைக்கால் பிரஞ்சிய ராளுகைக்கு உட்பட்ட ஆண்டு பற்றிக் குறிப்பிடுகையில் வரலாற்று அறிஞர்களிடத்தே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. 'இராபர்ட் ஓர்ம்' (Robert Orme) என்பவர் 1736-ஆம் ஆண்டில்தான் பிரஞ்சியர் காரைக்காலைக் கைப்பற்றினர் என்கிறார். ஆனால் ஜி.பி. மல்லீசன், 1738-இல் தஞ்சை மன்னருடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் காரைக்கால் பிரஞ்சியர்க்கு 1739-இல் வழங்கப்பட்டது என்று குறிப்பிடுகின்றார்.[12] ஆனந்தரங்கப் பிள்ளையின் நாட் குறிப்பு ஜி.பி. மல்லீசன் கூற்றையே உறுதி செய்கின்றது.[13]

தஞ்சை மன்னன் சையாஜிக்கு (Saiyaji) ஏற்பட்ட அரசியல் நெருக்கடி நிலை காரணமாக, தஞ்சையை விட்டுப் புறப்பட்டு, அடைக்கலம் வேண்டி, சிதம்பரம் கோவிலில் தஞ்சம் புகுந்தான். அங்கேயே தங்கி, புதுச்சேரி-பிரஞ்சியருடன் கூட்டு வைத்துக்கொண்டு தன் பதவி ஆபத்தைப் போக்கிக் கொள்ள முயற்சித்தான். அதற்காக, இரண்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தூதுவர்களைப் புதுச்சேரி ஆளுநரிடம் அனுப்பி, காரைக் காலையும், அதைச் சேர்ந்த பத்து கிராமங்களையும், கருக்களாச்சேரி கோட்டையையும் பெற்றுக் கொண்டு அவற்றிற்கு ஈடாக, 25,000 பகோடக்களையும், வேறு சில போர்த்தளவாடங்களையும் வழங்கி உதவுமாறு வேண்டிக் கொண்டான்.[14] அப்போது புதுச்சேரி ஆளுநராயிருந்த துய்மா, இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பிரஞ்சியர்க்குச் சாதக மாகப் பயன்படுத்திக் கொண்டார்.

1738, ஜூலை 18-இல் இருதரப்பினரும் சம்மதித்து ஒப்பந்தம் தயாராயிற்று. ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட வுடனே ஆளுநர் துய்மா, புர்போன் (Bourbon), சேன். ஜெராம் (St. Geram) என்னும் இரண்டு கப்பல்கள் நிறைய துருப்புகளை அனுப்பி, காரைக்காலைப் பிரஞ்சி யரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப் பணித்தார். அவர் அனுப்பிய கப்பல்கள் 1738, ஆகஸ்டில் காரைக்காலை வந்தடைந்தன. அச்சமயம் சையாஜி தன் எதிரியான காட்டுராஜாவை வீழ்த்திவிட்டு, தஞ்சையைக் கைப்பற்றி யிருந்தான். அப்போது, காரைக்காலை ஆக்கிரமிக்க இரண்டு பிரஞ்சுக் கப்பல்கள் காரைத் துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சிய செய்தியை அறிந்தான். தஞ்சையின் ஆட்சி அதிகாரம் தன்கைக்கு வந்த மமதையில் பிரஞ்சி யருடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தை மீறி, சையாஜி வஞ்சகமாகச் செயல்பட ஆரம்பித்தான். ''தனக்கு இனி பிரஞ்சியரின் உதவி தேவையில்லை என்றும் உடனடியாக இரண்டு கப்பல்களையும் திருப்பி புதுச்சேரிக்கு அழைத்துக் கொள்ளாவிட்டால், 4000 படை வீரர்களோடு காரைக் காலை நெருங்கிக் கொண்டிருக்கும் தன் படைத் தலைவன் கான் சாகிப்பைப் போரில் சந்திக்க வேண்டியிருக்கும்'' என்று பிரஞ்சியர்க்கு மிரட்டல் கடிதம் எழுதினான்.[15] அப்போது பிரஞ்சுப் படைகள் சந்தாசாகிபுவிற்கு உதவ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருச்சிக்குச் சென்றுவிட்டதால், வேறு வழியின்றிப் பிரஞ்சியர் பின்வாங்க வேண்டியதாயிற்று. 1738, செப்டம்பர் 12–இல் இரண்டு கப்பல்களும் புதுச்சேரிக்கே திரும்பி வந்தன. காரைக்காலை வசப்படுத்த, துய்மா தக்க தருணத்தை எதிர் நோக்கிக் காத்திருந்தார்.

சையாஜியின் நயவஞ்சகத்தை அறிந்த சந்தாசாகிபு பிரஞ்சியர்க்கு உதவியாக, தன் 4000 குதிரைப்படை வீரர்களுடன் பிரான்சிஸ்க் பெரேரா தலைமையில் காரைக்காலை நோக்கிப் படையெடுத்துச் சென்றான். 1739, பிப்பிரவரி 6-இல் கருக்களாச்சேரி கோட்டையில் காவலுக்கிருந்த நானூறு தஞ்சை வீரர்களை விரட்டிவிட்டுக், காரைக்காலைக் கைப்பற்றினர். காரைக்காலைக் கைப்பற்றிய செய்தி அறிந்ததும், துய்மா, சிறிய பிரஞ்சுப் பாதுகாப்புப் படையுடன் காரைக்காலுக்கு விரைந்து 1739, பிப்ரவரி 14-இல் பிரஞ்சுக் கொடி ஏற்றி ஆட்சியைத் துவக்கி வைத்தார். அன்று முதல் கொலார்டு (Golard) என்பவரைக் காரைக்கால் நிர்வாகியாக நியமித்து ஆண்டு வரச் செய்தார்.

காரைக்காலைப் பிரஞ்சியர் கைப்பற்றியதை அறிந்த தஞ்சை மன்னன் சையாஜி, பழைய ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக்கொள்ள விரும்பி இரண்டு கோரிக்கைகளை முன்வைத்தான்.[16] 1. காரைக்காலைப் பிரஞ்சியர் எடுத்துக் கொண்டு அதற்கு விலையாக 50,000 சக்ராக்களை (தஞ்சை நாணயங்கள்) வழங்குதல் வேண்டும். 2. வட்டியில்லாக் கடனாக 1,50,000 சக்ராக்களை தஞ்சை மன்னருக்குப் பிரஞ்சியர் கொடுக்க வேண்டும். இக்கடன் மூன்றாண்டுக்குள் திருப்பிச் செலுத்தப்பட்டு விடும். பிரஞ்சிந்தியாவின் உயர் மட்டக்குழு இவ்வொப்பந்தத்திற்குச் சம்மதித்து, தஞ்சை மன்னன் கோரிய தொகையினை வழங்கியது. இவை மட்டுமின்றி, காரைக்காலைச் சேர்ந்த கிளையூர், ம்லையூர்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருமலைராஜன் பட்டினம், புதுத்துறை, கோவில்பத்து ஆகிய ஐந்து ஊர்களுக்கும் ஆண்டு வருமானமாக 3000 பகோடாக்களையும் தஞ்சை மன்னருக்கு வழங்க ஒப்புக் கொண்டது.

1739இல் காரைக்கால் நிர்வாகியாகப் பொறுப்பேற்ற கொலார்டு கத்தோலிக்க மதத்தைப் பரப்பும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கினார். 1739 முதல் 1760 வரை காரைக்கால் எவ்வித அரசியல் பிரச்சினைகளிலும் தலை யிடாமல் அமைதியாகவே இயங்கி வந்துள்ளது. இக்கால கட்டத்தில் லெ ரீஷ் (Le Riche) லூயி பர்தெலெமி (Louis Barthelemy), பொர்ஷே ஊர்ஷ் (Porcher Ourche) போன்றோர் காரைக்கால் நிர்வாகியாகப் பணியாற்றி யுள்ளனர். புதிய மன்னராகத் தஞ்சையில் பொறுப்பேற்ற பிரதாப்சிங் 1741-இன் தொடக்கத்தில் துய்மாவைச் சந்தித்து, காரைக்காலைச் சுற்றியுள்ள சில கிராமங்களை யும் பிரஞ்சியருக்குவிற்றான். இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பிரஞ்சியரும் அவ்வப்போது தஞ்சை மன்னருக்கு வேண்டிய உதவியும், கடனும் அளித்துக் காரைக்காலைச் சுற்றியுள்ள பெரும்பான்மையான கிராமங்களை உரிமை யாக்கிக் கொண்டனர். அரசியல் அடிப்படையில் காரைக் காலால் புதுச்சேரிக்கு எவ்வித பயனுமில்லாவிட்டாலும், புதுச்சேரியின் நெற்களஞ்சியமாக காரைக்கால் திகழ்ந்து வந்தது. 1760-இல் பிரஞ்சியரின் பல்வேறுபட்ட முயற்சி களால் காரைக்காலைச் சுற்றியுள்ள 113 கிராமங்களைப் பிரஞ்சியர் தம் ஆட்சிக்கு உட்படுத்திக் கொண்டனர்.[17]

கர்நாடகப் போரில் ஆங்கிலேயருக்கும் பிரஞ்சியருக்கும் ஏற்பட்ட போட்டி காரணமாக, திருச்சியைப் பிரஞ்சியர் முற்றுகையிட்டனர். 1751 – 54ஆம் ஆண்டுகளில் காரைக்கால், இம்முற்றுகைக்குப் பிரஞ்சியரின் பாசறை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாகவும், உறுதுணையாகவும் விளங்கிற்று. ஆனால் மேஜர் மேன்சன் (Major Manson) தலைமையிலான ஆங்கிலேயப் படை இம் முற்றுகையை முறியடித்ததோடு, 1760 ஏப்பிரல் 15இல் காரைக்காலையும் கைப்பற்றியது.[18] ஆங்கிலேயர் காரைக்காலைக் கைப்பற்றியதன் அடிப்படைக் காரணம், பிரஞ்சியர் தஞ்சை மன்னருடன் கூட்டுவைத்துக்கொண்டு ஆங்கிலேயரை எதிர்க்காமலிருப்பதற்காகவே யாகும். பின்னர் 1763 பிப்ரவரி 10இல் ஏற்பட்ட பாரிசு உடன் படிக்கையின்படி காரைக்கால் திரும்பவும் பிரஞ்சியரிடமே ஒப்படைக்கப்பட்டது.

1765இல் பிரஞ்சிந்தியாவின் ஆளுநராகப் பொறுப் பேற்ற லா தெ லோரிஸ்தொன் (La De Lauriston) தொடக்கத்தில் (புதுவையை ஆங்கிலேயரிடமிருந்து பெறும் வரை) காரைக்காலையே பிரஞ்சியரின் தலைமையிடமாக அமைத்துக் கொண்டு செயல்படத் தொடங்கினார். புதுச் சேரிக்குத் தலைமையிடத்தை மாற்றிய பின்னர், காரைக்கால் நிர்வாகியாக, பிரான்சுவா ஃபிளேரான் (Francois Fleurin) என்பவர் 1770, செப்டம்பர் 3 வரை நிர்வாகம் புரிந்து வந்தார். இவருக்குப் பின்னர், அர்னூ லெ கோம்த் (Arnou Le Comte), பியேர் ழோசப் தெ புவாஸ்தல் (Pierre Joseph De Boistel), ஹொக்கார் (Hocquart), பெல்கார் துய்ம்ருயே (Bellegard Dumirouet) ஆகியோர் 1778 வரை காரைக்கால் நிர்வாகியாகப் பணியாற்றியுள்ளனர். லா தெ லோரிஸ்தொன் தம் நினைவுக் குறிப்பில் காரைக்காலைப் பற்றிக் குறிப்பிடும் போது, "புதுச்சேரி மக்களின் உணவுத் தேவைகளை நிறைவு செய்யவும், ஆங்கிலேயரின் கவனத்தைத் திசை திருப்பவும், ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்ற அச்சிட்ட துணி வகைகளை ஏற்றுமதி செய்து ஆண்டொன்றுக்கு ஏழிலிருந்து எட்டாயிரம் லிவர்கள் வரை ஈட்டுவதற்கும் மிகவும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பயனுள்ள நகரமாக விளங்குகிறது'',[19] என்று எழுதியுள்ளார். லோரிஸ்தொனுடைய அறிவுரையாலும் பெல்லா கோம்பின் முயற்சியினாலும் பிரஞ்சிந்திய நிறுவனம் காரைக்காலைப் புறக்கணிக்காமல், தொடர்ந்து தன் வசமே வைத்துக் கொள்ள முன்வந்தது.

1778, ஆகஸ்டில் ஆங்கிலேயர் மீண்டும் காரைக்காலைத் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டனர். பின்னர் 1783, செப்டம்பர் 3-இல் ஏற்பட்ட பாரிசு (அமைதி) ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1785, பிப்பிரவரி 26-இல் மீண்டும் காரைக்கால் பிரஞ்சியருக்கே திருப்பி அளிக்கப்பட்டது. தெ புவாஸ்தல் (De Boisttel) என்பவர் காரைக்காலின் ஆட்சிப் பொறுப்பை ஆங்கிலேயரிடமிருந்து பெற்றுக் கொண்டார். நான்கு மாதங்களே நிர்வாகம் புரிந்த தெ புவாஸ்தல் தஞ்சை மன்னரிடம் வழக்கம் போலவே அரசியல் தொடர்பைப் புதுப்பித்துக் கொண்டார். 1785, ஜூன் 23-இல் தெ புவாஸ்தல் இறந்த பின்பு, லெப்டினன்ட் கர்னல் தெ மேன்வீல் (Lt. Col. De Mainville) காரைக்கால் நிர்வாகியாகப் பொறுப்பேற்றார். இவர் காலத்தில்தான் (1790, ஜனவரி) மராட்டியர் படையெடுப்பைத் தடுக்க வேண்டி, எழுபத்திரண்டு எல்லைக் காவல் நிலையங்கள் காரைக்கால் பகுதியில் ஏற்படுத்தப்பட்டன.

1777-இல் பெல்லா கோம்ப் (Bella Combe) ஆளுநராயிருந்த காலத்தில் நிலவரி தொடர்பாகச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. இதன்படி நிலத்தில் வரும் மகசூலில் பாதியை அரசுக்கு வரியாக அளித்திட வேண்டும். இவ்வரியை எதிர்த்து காரைக்கால் விவசாயிகள் சவேரி முத்தாபிள்ளையின் தலைமையில் குத்தகையாகக் கொடுக்கப்படவேண்டிய வாரத்தின் அளவைக் குறைக்கச் சொல்லிப் போராட்டம் நடத்தினர். போராட்டத்தின் உச்சக்கட்டமாக உழவுத் தொழிலைப் புறக்கணித்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரைக்காலை விட்டு வெளியேறவும் முனைந்தனர். இதனால் புதுச்சேரியின் உணவுப் பங்கீடும், பொருளாதாரமும் பாதிக்கப்படும் நிலையுணர்ந்த ஆளுநர் கோன்வே (Conway), கர்னல் தெஃபிரெஸ்னே (Col, De Fresne) என்றும் தூதுவரை அனுப்பி விவசாயிகளின் பிரச்சனையைத் தீர்த்துவைத்தார்.[20] அதன்பின்பே 1788-இல் காரைக்கால் விவசாயிகள் உழவுத் தொழிலை மேற்கொள்ள முன் வந்தனர். 1788 வரை காரைக்காலின் நிலவரி, தஞ்சைப் பகுதியில் வசூலிக்கப்படும் நிலவரி போன்றே வசூலிக்கப்பட்டு வந்தது. அறுவடைக் காலத்தில் நிலச் சொந்தக்காரருக்குப் பாதியும் அரசுக்குப் பாதியுமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டு வந்தது. பிரஞ்சிந்திய அரசுக்கும் காரைக்கால் விவசாயிகளுக்கும் இடையே 'நிலவரி ஒப்பந்தம்' (Crop Settlement) ஏற்பட்ட பின்னர் நன்செய்நிலத்திற்கு 15% நிலவருவாய் தொழிலாளர் கூலியாகவும், எஞ்சிய 85% நிலவருவாய் அரசுக்கும் நிலச்சொந்தக்காரருக்கும் சரிபாதியாகவும் பங்கீடு செய்யப்பட்டது.[21] அதே போன்று புன்செய் நிலத்திற்கு வரியாக ஒரு ஏக்கருக்கு பத்து நெல் கட்டுகள் வீதம் இரண்டு தவணைகளில் வசூலிக்கப்பட்டு வந்தது.

1788 ஜுன் 1-இல் கர்னல் தெ மர்கெனா (Col. De Marguenat) காரைக்காலின் நிர்வாகியாகப் பொறுப்பேற்று, 1790 மார்ச் வரை நிர்வாகம் புரிந்து வந்தார். அவருக்குப் பின் தெ எஸ்பினாஸ் (De Espinaasse) காரைக்கால் நிர்வாகியானார். 1791-ல் நில வரியின் காரணமாக, மீண்டும் விவசாயிகள் போராட்டம் வெடித்தெழுந்தது. தெ தூஃப்ருவீல் (De Touffre ville) நிர்வாகப் பொறுப்பை ஏற்று விவசாயிகள் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர், 1792 முதல் விவசாயிகள் உழவுத் தொழிலை மேற்கொள்ளத் தொடங்கினர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரஞ்சுப் புரட்சியும் அதன் தாக்கமும்

பிரஞ்சுப் புரட்சியின் தாக்கம் காரைக்காலில் (பெரிதாக) எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் அதன் விளைவால் புதுச்சேரி அரசியலில் பல மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன. 1791 ஏப்பிரலில் புதுச்சேரியிலுள்ள இரண்டாவது ஆட்சிக் குழுவிற்காக காரைக்கால் பகுதிக்கான பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. 1791, மே 6-இல் காரைக்காலில் 'நகராண்மைக்கழகம்' (Municipality) அமைக்கப்பட்டு பெனூஸ்த் (Benoousт) மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மே 28-ஆந் தேதி பெனூஸ்த் புதுச்சேரி சபைக்குக் காரைக்கால் பகுதியின் துணை உறுப்பினராக (Debuty) தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப் பட்டார். புதுவை ஆட்சிக் குழுவோ, 'காரைக்கால் நகராண்மைக் கழகம்' சட்டத்திற்குப் புறம்பானது என்றும், அது கலைக்கப்பட வேண்டும் என்றும் அறிவிப்புக் கடிதம் அனுப்பி வைத்தது. மேலும் புதுச்சேரி 'குடியேற்றச் சபைக்கு' (Colonial Assembly) புதிய தேர்தல் நடத்தித் துணை உறுப்பினரைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கும் படி கேட்டுக் கொண்டது. அதற்கேற்பவே காரைக்கால் நிர்வாகியும் நகராண்மைக் கழகத்தைக் கலைத்து விட்டு, அதற்கு மாறாக மூன்று உறுப்பினர் குழு ஒன்றை அமைத்துக் கொள்ள உத்திரவிட்டார். குடியேற்றச் சபைக்கு புதிய துணை உறுப்பினரையும் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தார்.

1792இல் காரைக்கால் மக்கள் தங்கள் பகுதியின் வளர்ச்சிக்கும், தேவைக்கும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்குமாறு, புதுச்சேரி குடியேற்றச் சபையினரைக் கேட்டுக் கொண்டனர். காரை நிர்வாகி தெதூஃப்ருவில் ஆட்சியில் காரைக்கால் அனைத்துத் துறைகளிலும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி பெற்றிருந்தது. 1792-இல் புதிதாக மாற்றியமைக்கப்பட்ட குடியேற்றச் சபைக்கு காரைக்கால் பகுதியிலிருந்து பெஸாக் (Baissac) என்னும் வணிகர் தேர்வு செய்யப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டார்.

ஆங்கிலேயராட்சி

1793-இல் ஆங்கிலேயருக்கும். பிரஞ்சியருக்கும் போர் தொடங்கிய போது, புதுச்சேரியைப் பாதுகாக்க வேண்டி, ஆளுநர் ஷெர்மோன் (Chermont), காரை நிர்வாகி தெ தூஃப்ருவீலுக்கு எழுதிய கடிதத்தில் ''காரைக்காலில் உள்ள அனைத்துத் துருப்புகளையும் திரட்டிக் கொண்டு புதுச் சேரிக்குப் புறப்படவும்'' என்று குறிப்பிட்டிருந்தார்.[22] ஆளுநரின் ஆளுகைக்குக் கட்டுப்பட்டு, காரை நிர்வாகி, பிரஞ்சுத் துருப்புக்களையும், உதவிப் பொருட்களையும் புதுச்சேரிக்கு அனுப்பி வைத்த பின்னர், 1793, ஜூன் 13-இல் காரைக்காலை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார். 1800-இல் காரைக்கால் உட்பட தஞ்சை முழுமையும் ஆங்கிலேயக் கிழக்கிந்திய நிறுவனத்திற்கு மன்னர் சரபோஜியால் அளிக்கப்பட்டது. அதன் பின்னர், 1814, மே 30-இல் பாரிசு ஒப்பந்தம் ஏற்படும் வரை காரைக்கால் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வந்தது. பாரிசு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிரஞ்சிந்தியப் பகுதிகள் திரும்பவும், 1815-இல் பிரஞ்சியரிடம் ஒப்படைக்கப்பட்ட போது, துய்ப்ளேக்சின் உறவினரான 'ழெனரல் ழோசப் தெனோஸ் தெ கெர்ழான்' (General Joseph Desons de Kerjean) புதுவை நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 1817, ஜனவரி 14-இல் கோம்த் தெ பெரான்ழே (Comte de Beranger) என்பவர் காரைக்காலின் நிர்வாகப் பொறுப்பை, தஞ்சைப் பகுதியின் (ஆங்கிலேய) ஆட்சியாளராகிய ஜான் தக்கரே (John Thackeray) யிட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மிருந்து பெற்றுக் கொண்டார். அதன் பின்னர் பிரஞ்சியர் இந்தியாவை விட்டுச் செல்லும்வரை காரைக்கால் பிரஞ்சியர் வசமே இருந்து வந்தது.

நகராட்சி-கொம்யூன் அமைப்புகள்

1880, ஏப்பிரல் 22-இல் நிர்வாக எளிமை கருதி காரைக்கால் பகுதி, காரைக்கால், திருமலை ராஜன் பட்டினம், நெடுங்காடு என்று மூன்று கொம்யூன்களாகப் (Municipality) பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு கொம்யூனிலும் ஒரு உள்ளாட்சி அமைப்பும், அவ்வமைப்பிற்குத் தலைவராக மேயரும் இருந்து செயல் பட்டனர். காரைக்கால் நகராட்சி அமைப்பில் மட்டும் பாதி இடங்கள் பிரஞ்சியருக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. 1898-இல் காரைக்காலுக்கும் பேரளத்திற்குமிடையே ரயில்பாதை ஏற்படுத்தப் பட்டது. இதற்கான முழுச் செலவையும் பிரஞ்சிந்திய அரசாங்கமே ஏற்றுக்கொண்டது.

1854-ஆம் ஆண்டுக்கு முன்புவரை, காரைக்கால் பகுதியின் ஆண்டு வருமானம் ரூ. 70,000மும், அதனைச் சார்ந்த கிராமங்களிலிருந்து நெல்லாகவே வசூலிக்கப்பட்டு வந்தது. பின்னர் 1854-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு கிராமத்திலுள்ள, நிலத்திற்கென்று, (தனித்தனியே) பணமாக நிலவரி வசூலிக்கப்பட்டது. காரைக்காலிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட அரிசியின் விபரம்:-[23]

ஆண்டு	டன்
1871—72	12,343
1872—73	11,978
1873—74	19,027
1874—75	29,736
1875—76	30,571

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற கணக்கில் ஆண்டுக்கு ஆண்டு ஏற்றுமதி உற்பத்தி அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது.

பிற்காலத்தில் காரைக்காலும் அதனைச் சார்ந்த கிராமங்களும், ஆறு கொம்யூன்களாகப் பிரிக்கப்பட்டன. அவை 1. காரைக்கால், 2. கோட்டுச் சேரி, 3. திருமலைராஜன் பட்டினம், 4. நெடுங்காடு, 5. நிரவி, 6. திருநள்ளாறு, என்பனவாகும். காரைக்கால் பகுதியில் மொத்தம் 99 கோயில்கள் உள்ளன. இவற்றுள் அரசுடைமையாக்கப்பட்ட கோவில்கள் 91, தனியார் கண்காணிப்பில் இருக்கும் கோவில்கள் 8 ஆகும். பிரஞ்சியராட்சிக்குட்பட்ட பின், காரைக்கால் கோவில் நிர்வாகப் பிரச்சினைகள், வழக்குகள் போன்றவற்றைக் காரை நிர்வாகியே நீதிபதியாக இருந்து தீர்த்து வைத்து வந்தார். பின்பு 1854-இல் கோவில் கண்காணிப்புக்கும், நிர்வாகத்திற்கும் என்று தனிக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. மதசம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் அதிகாரம் அக்குழுவிற்கு வழங்கப்பட்டது.

காரைக்கால் பகுதியைச் சேர்ந்த சில கிராமங்களின் ஊர்ப் பெயர்கள் இன்று மருவி வழங்கப்பட்டு வருகின்றன. நெடுங்காடு கொம்யூனில் விளங்கும் 'பொன்பேத்தி' என்னும் ஊரின் பழைய வடிவம் 'பொன்பற்றி' என்பதாகும்.[24] வீர சோழியம் என்னும் நூலை இயற்றிய 'புத்தமித்திரனார்' பிறந்த ஊர் இப்பொன்பற்றியாகும். 'இரவி' (சூரியன்) என்னும் பழைய பெயரே, காலப் போக்கில் மருவி இன்று 'நிரவி' என்று வழங்கப்பட்டு வருகின்றது. பிரஞ்சியரால் 'பெரிய நிலப்பரப்பு' (Grand Aldee) என்று அழைக்கப்பட்ட கிராமமே, திருமலைராஜன் பட்டினமாகும். இன்று இவ்வூர் 'திருமலைராயன் பட்டினம்' என்று அழைக்கப்படுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருமலைராஜன் (1457—1468)

'திருமலைராஜன்' என்னும் மன்னன் ஆட்சி செய்த பட்டினமாதலால் இவ்வூருக்குத் 'திருமலைராஜன்பட்டினம்' என்னும் பெயரும், இவ்வூர் ஆற்றிற்கு 'திருமலைராஜன் ஆறு' என்னும் பெயரும் வழங்கப்பட்டு வருகின்றன. திருமலைராஜனுடைய கல்வெட்டுகள் திருவாணைக்காவல், பட்டீச்சுரம், தஞ்சாவூர், பாபநாசம் ஆகிய ஊர்களில் காணப்படுகின்றன.[25] இம்மன்னன் அவைக்களத்தில் 'அதி மதுரகவி' உட்பட அறுபத்திநான்கு அரசவைப் புலவர்கள் இடம் பெற்றிருந்தனர். காளமேகப் புலவர், திருமலை ராஜன் பட்டினத்திற்கு வருகை தந்தபோது, அம்மன்ன னோடு ஏற்பட்ட மாறுபாடு காரணமாக 'கோளரிருக்குமூர்!' என்னும் வெண்பா பாடி, மண்மாரி பொழியச் செய்து அவ்வூர்க் கோட்டையை அழித்து விட்டதாக கூறப் படுகிறது.

3. விடுதலைக்குமுன் காரைக்கால் சமுதாயநிலை

பெண்களுக்குச் சமஉரிமை அளிக்கப்படாமல், அவர் களைத் தம் கைப்பொருளாகவே கருதி வந்தனர். காரைக்கால் அம்மையார் வாழ்க்கையே இதற்கு ஒரு சான்றாக அமைந்துள்ளது. அம்மையார் புராணத்தில் எடுத்தாளப் பெறும் தனதத்தன், பரமதத்தன் என்னும் பெயர்களில் உள்ள 'தத்தன்' — வங்காளப் பெயருடன் தொடர்புடையதென்பர்[27]. ஆனால் 'தத்தன்' என்னும் பெயர் 'தமிழ்ப்பெயரே' என்பதற்குப் பல சான்றுகளைக் காட்டலாம். பெரியபுராணத்தில் மெய்ப்பொருள்நாயனார் புராணத்திலும் 'தத்தன்' என்னும் பெயர் பயன்படுத்தப் பட்டுள்ளது. சங்க இலக்கியத்துள் 'தத்த' என்னும் சொல்– தாவுதல், அசைதல் (பெரும்பாண்: 334, குறுந்தொகை:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

94) என்னும் பொருளில் கையாளப்பட்டுள்ளது. பதினெண் கீழ்க் கணக்கு நூலான ஏலாதியிலும் 'தத்தன்' என்னும் பெயர், பிள்ளைகளில் (தத்துப்பிள்ளை) ஒரு வகையினனாகக் குறிக்கப்பட்டுள்ளது.[28] எனவே, இப்பெயரைப் பிற இனத்தாருடன் இணைத்துக் கூறுவது பொருத்தமில்லை.

பிரஞ்சியராட்சியில் இந்து மதத்திற்கு விதிக்கப் பட்டிருந்த சட்டமே, இசுலாமிய மதத்திற்கும் பயன் படுத்தப்பட்டு வந்தது. 1852-இல் காரை இசுலாமிய கதீப், (Katif) இசுலாமியர்க்கென்று மேலும் சில தனிப்பட்ட உரிமைகளைக் கோரினார். காரைக்காலில் இசுலாமியர்கள், இந்துக்களுக்கு அடுத்த நிலையிலே அதிக எண்ணிக்கையில் வசிக்கின்றனர். புதுவை மாநிலத்தில் வசிக்கும் மொத்த இசுலாமியர்களில் 49.31% இசுலாமியர் காரைக்காலில் மட்டும் வாழ்கின்றனர். ழுலியேன் வின்சோன் 1884-இல் இந்து — இசுலாமியக் கலவரம் ஒன்று நிகழ்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்[29]. ஒரு இந்துவின் இறுதி ஊர்வலத்தை இசுலாமிய தர்கா வழியே நடத்திச் சென்றதற்கு ஆட்சேபித்து இக்கலவரம் நடத்தப்பட்டது.

இந்து மதத்தின் பழைமையான பண்புகளைக் காத்து வந்த காரைக்கால் ஏனைய மதங்களுக்கும் உறைவிடமாகத் திகழ்ந்தது. பிரஞ்சியர் வருவதற்கு முன்பே காரைக்காலில் கிறித்தவம் வேரூன்ற ஆரம்பித்திருந்தது. தென்னிந்தியாவில் ரோமன் கத்தோலிக்க தேவாலயங்கள் திகழுமிடங்களில் காரைக்கால் நகரமும் ஒன்று. 1739 இல் பிரஞ்சியர் இந் நகரைப் பெறுமுன்பே, இங்கே கிறித்தவம் பரவியிருந்தது. புதுச்சேரியிலிருந்து காரைக்காலுக்கு இடம் பெயர்ந்த ஜேசூட் பாதிரியார்கள் கிறித்தவ மதத்தைப் பரப்புவதில் தீவிரம் காட்டினர். சேன். எஸ்தவான் கணக்குப்படி 1776 இல் இந்நகரில் மொத்தம் 2000 கிறித்தவர்கள் வாழ்ந் திருந்தனர்.[30]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சர்ச் தெருவில் விளங்கும் 'நோத்தர் தாம் தெ ஆன்ழ்' (Notre Dame des Anges—Our Lady of Angles Church) கிறித்தவ ஆலயம் முதன் முதலில் 1740 இல் பிரஞ்சியரால் நிர்மாணிக்கப் பட்டது. 1867 இல் இவ்வாலயம் ஃபாதர் லெகியோன் (Father Legion) என்பவரால் புதுப்பிக்கப்பட்டு அழகு படுத்தப்பட்டது. இது தவிர, திருமலைராஜன் பட்டினத்தில், செயின்ட் சேவியர் சர்ச் (1880), கோட்டுச்சேரியில் சகாயமாதா ஆலயம் (1885), திருவேட்டக்குடியில் செயின்ட் சேவியர் ஆலயம் (1930), மேல காசாக்குடியில் செயின்ட் ராயப்பர் ஆலயம் (1853), குறும்பகரத்தில் செயின்ட் பழவேந்திரர் ஆலயம் (கி.பி. 17 நூ. ஆ), தருமபுரத்தில் செயின்ட் செபாஸ்டியன் ஆலயம் (1874) போன்ற தேவாலயங்கள் குறிப்பிடத் தகுந்தவையாகும். நல்லாத்தூரில் உள்ள செயின்ட் அடைக்கல மாதா ஆலயத்தில், ஃபாதர் பெஸ்கி (வீரமா முனிவர்) சில காலம் தங்கியிருந்து கிறித்தவப் பணி புரிந்துள்ளார். இவ்வாலயங்களைத் தவிர பண்டார வாடை, சேத்தூர், வாஞ்சியூர், தக்களூர், நெடுங்காடு ஆகிய கிராமங்களிலும் கிறித்தவ ஆலயங்கள் ஏற்படுத்தப் பட்டன. கோவில்பத்திலுள்ள லூதர்ன் ஆலயம், மதகடியில் உள்ள செவன்த்டே அட்வென்டிஸ்ட் ஆலயம் இரண்டையும் தவிர ஏனைய ஆலயங்கள் அனைத்தும் வாட்டிகன் போப்பாண்டவர் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன.

பிரஞ்சியரிடம் புதுவை மாநில மக்கள் விடுதலை கோரும்வரை பிரஞ்சியர் தம் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு ஆங்கிலேயரைக் காட்டிலும் மிகுந்த வசதிகள் செய்துபோற்றி வந்தனர். 1825இல் கொர்தியே தம் அறிக்கையில் 'தீண்டாமை' இந்துக்களிடையே ஒரு தீய பழக்கமாக ஊறி வந்துள்ளதைக் குறிப்பிட்டுள்ளார்.[31] காரைக்காலில் அக்காலத்தே இந்துக்களிடையே புழங்கிய நாற்பத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேழு சாதிகளுள் வேளாளர், கவரை, யாதவர், கோமுட்டி, செட்டி, பள்ளி, கம்மாளர், தேவதாசி, கோவில் இசைக் கலைஞர், அம்பலத்தார், வண்ணான், பிராமணன், பறையன் போன்றவை குறிப்பிடத் தகுந்தவையாகும். 1933இல் ஆரோக்கியசாமி நாய்க்கரால் 'அரிசன சேவா சங்கம்' தோற்றுவிக்கும்வரை காரைக்காலில் தீண்டாமைக் கொடுமை தொடர்ந்து இருந்து வந்துள்ளது.

மதப் பூசல்கள்

பிரஞ்சிந்தியரின் மதக் கொள்கைகளைப் பற்றிக் குறிப்பிடும் கே. எம். பணிக்கர், "இந்துக்களின் மதவிழாக்களைக் கண்காணித்து, இந்துமத உரிமைகளை அறிந்துகொள்ள பிரஞ்சியர் தனிக்குழு அமைத்திருந்தனர். மேலும் இந்துக்களின் மதவழிபாட்டிற்கும், சடங்கிற்கும், திருவிழாக்களுக்கும் முழுமையான சுதந்திரம் அளித்திருந்தனர்"[32] என்று கூறியுள்ளார். ஆனால் ரங்கப்பிள்ளையின் நாட்குறிப்போ, பிரஞ்சியரின் மதக் கொள்கையை முரண்பட்ட விதத்தில் சித்திரித்துள்ளது. தஞ்சை மன்னனின் ஆணையையும் மீறி, காரைக்கால் தளபதியான பராதி (Paradis) ஓர் இந்துக் கோவிலை இடித்துவிட்டு அங்கே கோட்டை கட்டினான். பிரான்சுவா மர்த்தேன் ஆளுநராயிருந்த காலத்தில் நாணயம் அச்சடிக்கும் உரிமை பெற்று காசு (செப்பு), பணம் (வெள்ளி), பகோடா (தங்கம்) ஆகிய நாணயங்களை அச்சடித்தார் (24 காசு—1 பணம், 7½ பணம்—1 ரூ, 320 ரூ—100 பகோடா). இவற்றுள் பகோடாவில் ஒரு பக்கம் லில்லி மலரும், மறுபக்கம் விஷ்ணுவின் உருவமும் இருக்கும்படியாக அச்சடிக்கப்பட்டது. கப்புய்சேன் பாதிரியார்களும், ஜேசுட் பாதிரியார்களும் ஆளுநரை அணுகி பகோடா நாணயத்தில் விஷ்ணுவின் உருவத்திற்குப் பதிலாக, பதினான்காம் லூயினுடைய உருவத்தைப் பொறித்து அச்சிடுமாறு வற்புறுத்தினர்[33]. ஆனால் அவ்வாறு அச்சிட்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெளியிட்டால் அந்நாணயம் இந்தியாவின் ஏனைய பகுதிகளில் செலாவணியாகாது என்ற காரணத்தால் மர்த்தேன் மறுத்து விட்டார்.

மகளிர் நிலை

பிரஞ்சுக் காலத்திலும் காரைக்கால் கோவில்களில் தேவதாசி முறை இருந்து வந்துள்ளது. கி.பி. 9–ஆம் நூற்றாண்டில் பிற்காலச் சோழர் காலத்தில் கோவில் வழிபாட்டுத் தொண்டிற்கென்று தோன்றிய 'தேவரடியார்கள்' காலப்போக்கில் ஒரு சாதியாகவே மாறிவிட்டனர். காரைக்காலம்மையார் காலச் சமுதாயத்தில் மகளிர் மதிக்கப்பட்ட நிலையைக் காட்டிலும், பிரஞ்சியர் காலத்தில் மகளிர் தாழ்வாகவே மதிக்கப்பட்டனர். மற்ற பெண்களுடன் பேசும்போதுகூட இசுலாமியப் பெண்கள், பர்தாவுடனேயே அனுமதிக்கப்பட்டனர். மகளிர்க்கென்று தனியாகப் பள்ளிகள் தொடங்கப்படவில்லை. ஆண் ஆதிக்கச் சமுதாயத்தில் பெண்கள் பின் தங்கியவர்களாகவே இருந்து வந்துள்ளனர். பெற்றோர் நியமித்த முறையான மண வாழ்க்கையையே மகளிர் ஏற்றுக் கொண்டனர்.

மொழி பெயர்ப்பும், இலக்கியப் பணியும்

பிரஞ்சிந்திய ஆட்சியில் தமிழ் மொழி உயர்ந்த நிலையில் போற்றப்பட்டு வந்துள்ளது. தமிழிலிருந்து பிரஞ்சுக்கும், பிரஞ்சிலிருந்து தமிழுக்கும் இலக்கியப் பரிவர்த்தனைகள் நடந்துள்ளன. காரைப் பகுதியின் மொழி பெயர்ப்பு இலக்கியப் பணிகளில் குறிப்பிடத்தக்கவர் 'காரவேலன்' என்றழைக்கப்படும் 'லியோன் சேன் ழீன் (Leon Saint Jean) என்பவர் முக்கியமானவர். பிறப்பால் கிறித்தவராக விளங்கிய இவர் சிறந்த சிவபக்தராகவும் திகழ்ந்தார். பன்னிரு திருமுறைகளிலிருந்து சில பாடல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களைப் பிரஞ்சில் மொழி பெயர்த்துள்ளார். வழக்குரைஞராகப் பணியாற்றிய இவர், தம் ஓய்வு நேரங்களில் அம்மையாரின் மூத்தத் திருப்பதிகங்கள், தேவாரம், திருவாசகம், சிலப்பதிகாரம் போன்றவற்றிலிருந்து சில பாடல்களை மொழி பெயர்த்துள்ளார். காரைக்காலில் நீதிபதியாகப் பணியாற்றிய 'அதாம்' (Adam) என்பவர் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, நல்வழி, நீதிநெறி விளக்கம் ஆகியவற்றைப் பிரஞ்சில் மொழி பெயர்த்துள்ளார். கோட்டுச்சேரியைச் சேர்ந்த சுப்பிரமணிய ஐயர் என்பவர், கிருஷ்ண லீலா, குமாரக் கடவுள் பிறப்பு ஆகியவற்றைப் பிரஞ்சில் பெயர்த்துள்ளார்.

பிரஞ்சில் ரசீன் (Racine) என்பவர் இயற்றிய பிரித்தானிக்குய்ஸ் (Brittanicus) என்னும் நாடகத்தைத் தமிழ் மொழிபெயர்த்துள்ளார். காரைக்காலில் பிறந்த ழுலியேன் வின்சோன் (Julien Vinson) என்னும் பிரஞ்சு அறிஞர் உ.வே.சாமிநாதையர், மறைமலையடிகள்போன்ற தமிழில் அறிஞர்களோடு தொடர்பு கொண்டிருந்தார். இவர் சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை போலும் காப்பியங்களிலிருந்து சில பகுதிகளைப் பிரஞ்சில் பெயர்த்துள்ளார். தமிழ் மொழியின் அமைப்பு குறித்து 'மனுயியல் தெலாலாங்கு தமுள்' (Maunal de la Langue Tamoule) என்று பிரஞ்சில் நூல் எழுதியுள்ளார். தமிழில் சிறுகதைப் படைப்புகளையும் இவர் படைத்துள்ளார். கம்பராமாயணத்திலிருந்து அகலிகை பாப விமோசனப்படலம், தாடகை வதைப் படலம் போன்றவற்றையும் மொழி பெயர்த்துள்ளார். பாரிசிலிருந்து உ. வே. சாமிநாதையருக்கு 'வில்லைப் புராணம்' கையெழுத்துப் பிர்தியை அனுப்பி வைத்தவர் இவரேயாவர்.

காரைக்காலில் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் நடத்தப்பட்ட காலாண்டு இதழ் "காரைக்கால் முன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

னேற்றம்'' (Le Progre's de Karikal) என்னும் இதழாகும் தமிழிலும், பிரஞ்சிலும் ஆக இருமொழி இதழாக இது வெளியிடப்பட்டு வந்தது. 1883 இலிருந்து, இவ்விதழ் 'பிரஞ்சிந்திய முன்னேற்றம்' (La Progre's de l'Inde Francaise) என்று பெயர் மாற்றப்பட்டு, புதுச்சேரியி லிருந்து வெளியாயிற்று. 19 ஆம் நூற்றாண்டில் காரைக் காலில் இருந்து வெளிவந்த தமிழிதழ் 'சத்யாபிமானி' என் பதாகும். 1950இல் 'காரைமெயில்' என்னும் தமிழ்வார இதழ் வெளிவந்துள்ளது. 1954இல் (Radio and Amplifier') என்னும் மாத இதழ் வெளியாயிற்று. இவ்விதழ்கள் அனைத்தும் மிகக் குறுகிய காலத்திலேயே நின்று போயின.

பிரஞ்சிந்திய காந்தி (எஸ். அரங்கசாமி நாய்க்கர்)

காரைக்காலின் 1884ஆம் ஆண்டு, இளையான்குடி எஸ். அரங்கசாமி நாய்க்கர் பிறந்தார். அரிசன மக்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர் நலனுக்காகப் போராடியவராவார். 1923இல் 'குடியரசு' என்னும் வார இதழைத் தொடங்கி நடத்தி வந்தார். தீண்டாமை, அரிசனக் கொடுமை, தேசிய விடுதலை முதலிய கருத்துக்களை வலியுறுத்தும் கொள்கை விளக்கப் பத்திரிகையாகக், 'குடியரசு' இதழை நடத்தினார்[34]. ஆனால், பிரஞ்சிந்திய அரசு இவ்வித ழுக்குத் தடை விதித்தது. காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு, கயாவில் கடந்த காங்கிரஸ் மாநாட்டில் பிரஞ் சிந்தியாவின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். மகாத்மாகாந்தியும், ஜவகர்லால் நேருவும் காரைக்காலுக்கு வருகை தந்தபோது அவர்களை முன்னின்று வரவேற்றுச் சிறப்பு செய்தார். தன் வாழ்நாள் முழுமையும் காந்தியக் கொள்கைகளையே பின்பற்றி நடந்தார். 25 ஆண்டு களுக்கும் மேலாக, திருநள்ளாறு கொம்யூனின் பஞ்சாயத் துத் தலைவராக விளங்கினார். 1947, ஆகஸ்டு 15 இல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தியா சுதந்திரமடைந்த தினத்தைத் திருநள்ளாறு கொம்யூனில் கொடியேற்றிக் கொண்டாடினார். இதனால் பிரஞ்சிந்திய அரசு அவரைப் பதவியை விட்டு நீக்கிற்று. அதன்பின் பிரஞ்சிந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினார். 'பிரஞ்சிந்தியாவின் காந்தி' என்று புகழப்பட்ட அரங்கசாமி நாய்க்கர் 1948, டிசம்பர் 24இல் மறைந்தார்.

4. காரைக்கால் இசுலாமியர்கள்

இசுலாமியரைப் பொறுத்தவரை 'காரைக்காயல்' என்னும் பெயரே மருவி, காலப் போக்கில் 'காரைக்கால், என்றாயிற்று என்பர். இங்கு வாழ்வோரில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் இசுலாமியர் ஆவார். பிரஞ்சிந்திய நாகரிகக் கலப்போடு இந்து, இசுலாம் பண்பாட்டுக் கலப்பையும் இப்பகுதியில் காணலாம். காரைக்கால் இசுலாமியரைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'இசுலாமானவர்கள்' என்ற சொல் இப்பகுதியில் வழக்கிலிருப்பதால், இதற்கு முன்பு இவர்கள் இந்து சமயத்தைப் பின்பற்றியவராய் இருந்திருக்கலாம்.[35] இசுலாமியக் கொள்கைகளில் ஈர்க்கப்பட்டு, மனம் விரும்பியோ அல்லது வற்புறுத்தப்பட்டோ அல்லது பிற சூழ்நிலைகளினாலோ, இவர்கள் இசுலாத்தைத் தழுவியிருக்கக்கூடும்.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் காயல் பட்டினத்தில் குடியேறிய இசுலாமியர்கள் காரைக்கால் பகுதிக்கும் வந்து திருமண உறவு பூண்டனர். அதனால் இப்பகுதியில் வாழ்ந்த தமிழர் பலர் இசுலாமியராக மாறினர். காரைக்கால் இசுலாமியருள் மிகப் பெரும்பான்மையோர் 'மரைக்காயர்' பிரிவினரே யாவார். கடல்கடந்த அயல்நாடுகளில் வணிகம் புரிந்த மரைக்கலராயரே காலப்போக்கில் 'மரைக்காயர்'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று வழங்கப்பட்டனர். காரைக்காலில், சொந்தமாகப் பாய்மரக் கப்பலில் பயணித்து வணிகம் செய்த மரபினர் பலர் உள்ளனர். இசுலாமியர் வாழும் பகுதிகளில் வீதிக்கு ஒரு வீடேனும் 'கப்பல்கார வீடு' என்றழைக்கப்படும் மரபு இவ்வூரில் இன்றும் உள்ளது.

காரைக்காலில் இஸ்லாமியர் கோவில்களுள் குறிப்பிடத் தக்கதும் மிகப் பெரியதுமான மஸ்தான் சாகிப் தர்கா வாகும். இது தவிர, குல் முகமது ஞானி சாகிப் தர்கா, காபுலா தர்கா, ஜம்மான் சாகிப் தர்கா போன்றவையும் உள்ளன. நிரவியில் ஞானிசாகிப் தர்கா. மன்சூர் சாகிப் தர்காவும் உள்ளன. திருமலைராஜன் பட்டினத்தில் அப்துல் ரகுமான் தர்கா, ஒலி முகமது தர்கா, ஜாதா ஃபாகீர் தர்கா, சையத்கரீம் தர்கா, ஃபாத்திமா தர்கா முதலிய தர்காக்கள் உள்ளன. நல்லம்பல் கிராமத்தில் மணி ஃபாகீர் தர்கா உள்ளது.

காரைக்கால் இசுலாமியர் பெரும்பாலும் தமிழ் மொழியை மட்டுமே பேசத் தெரிந்தவராய் உள்ளனர். இவர்களுள் உருது மொழியை அறிந்தவர் மிகச்சிலரே! உலகெங்கும் வாழும் இசுலாமியரின் பொது மொழியாகவும் மதம், சடங்கு, குரான் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் மொழியாகவும் அரபு மொழி விளங்குவதால் இப்பகுதியில் வாழும் இசுலாமியரின் பேச்சு வழக்கில் நூற்றுக் கணக் கான அரபுச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. இலக்கிய வழக்கிலிருந்து பேச்சு வழக்கை இழந்துவிட்ட பல தனித் தமிழ்ச் சொற்களும் காரைக்கால் இசுலாமியரின் பேச்சு வழக்கில் கலந்துள்ளன.[36]

காரைக்காலம்மையாருக்குப் பின் இங்கு வாழ்ந்த புலவர்களில் சிலரைத் தவிர பெரும்பான்மையோர் இசுலாமியப் புலவர்களே ஆவார்கள். காரைக்காலில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருந்த 'முகமது சமதானி அச்சுக்கூடம்' பல அரபுத் தமிழ் நூல்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளது. கி.பி. 17, 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் காரைக்காலில் வாழ்ந்த இசுலாமியப் புலவர்கள் சமயச் சார்புடைய பல புதிய இலக்கியங்களைத் தமிழில் படைத்துள்ளனர். காரைக் காலில் வாழ்ந்த இசுலாமியப் புலவர்களுள் அமுதகவி சாயபு மரைக்காயர், மு. செ. சுல்தான் அப்துல் காதர், ம. காதிறுகனி, முகமது மீரா லெவ்வை மரைக்காயர் ஆகியோர் குறிப்பிடத்தக்கோராவார்கள்.

5. விடுதலைப் போராட்டம்

காந்தியின் வருகை

இந்தியா விடுதலையடைந்த 1947க்குப் பின்னர்தான் காரைக்கால், அந்நியராட்சியை எதிர்த்து விடுதலை இயக்கத்தைத் தொடங்கியது என்று கூறமுடியாது. ஏனெனில் 1934, பிப்ரவரி 16இல் மகாத்மா காந்தி காரைக்காலுக்கு வருகை புரிந்த போதே விடுதலைக் கான வித்து விதைக்கப்பட்டு விட்டது. அரசியல் அடிப் படையில் காந்தியின் காரைக்கால் வருகை எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாவிட்டாலும், பிரஞ்சிந்தியப் பகுதிகள் விடுதலை இயக்கத்திற்காக இணைய வேண்டி யதன் முக்கியத்துவத்தை உணர்த்திற்று. 'அரிசன சேவா சங்கத் தலைவர்', ஆரோக்கியசாமி நாய்க்கரின் முயற்சி யால் காரைக்கால் வந்த காந்தி, அரிசன மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடு படும்படி கேட்டுக் கொண் டார்.[37] இக்கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் தியாகராஜப் பிள்ளையால் காந்திக்கு1001 ரூபாய் சேவா நிதியாக அளிக்கப்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாக்குவரி (Poll-tax)

1938 இல் காரைக்காலில் 'மகாஜன சபை' தோற்றுவிக்கப்பட்டது. 1939 இலேயே இச்சபை பிரஞ்சியரை எதிர்த்து விடுதலைப் போராட்டத்தைத் துவக்க ஒரு வாய்ப்பு கிடைத்தது. பிரஞ்சிந்தியாவில் வசிக்கும் பிரஞ்சுக்குடியுரிமை பெறாத இந்தியர் ஆண்டொன்றுக்கு இருபது ரூபாய் வாக்கு வரியாக, (Poll tax) பிரஞ்சிந்திய நிறுவனத்திற்கு வழங்கவேண்டும் என்று போன்வின் (Bonvin) சட்டம் இயற்றினார். இச்சட்டத்தை எதிர்த்து மகாஜன சபையின் செயல்திறமிக்க உறுப்பினர் எம். அகமது நைனார் மரைக்காயர் அளித்த பத்திரிகைச் செய்தியில், "இச்சட்டத்தால் பிரஞ்சிந்தியப் பகுதியில் வசிக்கும், இந்தியத் தொழிலாளர்கள் வரிசெலுத்த இயலாவிடில் கட்டாயமாக வெளியேற்றப்படுவார்கள். எனவே, பிரஞ்சுக்குடிகளாகிய நாங்கள் இதனை வன்மையாக எதிர்க்கிறோம்,[33] என்று அறிக்கை விடுத்தார். காரைக்கால் வணிகச் சங்கச் செயலர் ஏ. எம். மதார் சாகிப் மரைக்காயர் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது, வாக்குவரியை நீக்க வேண்டும், என்று வற்புறுத்தினார். பல எதிர்ப்புக் குரலுக்குப் பின்னரே, பிரஞ்சியரால் இவ்வரி நீக்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போர்

இரண்டாம் உலகப் போரில் பிரான்சு தோல்வியைத் தழுவ நேரிட்டது. இத்தோல்விக்குப் பின்பு, பிரஞ்சிந்தியாவில் புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனம், சந்திரநாகூர் ஆகிய பகுதிகள் பிரஞ்சியரால் நல்லமுறையில் நடத்தப்பட்டன. ஏனெனில் பிரான்சு தன் தோல்வியையும், இழப்பையும், ஈடுகட்ட, குடியேற்ற நாடுகளையே நம்பியிருந்தது. பிரஞ்சிந்தியப் பகுதிகள் தமது குறைந்த வருமானத்திலும், இப்போரில் பிரான்சைத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலை தூக்கி நிறுத்த 7,00,00,000 பிராங்கை-பெரிய தொகையாக அளித்துத், தனது பெருந்தன்மையைப் புலப்படுத்திக் கொண்டது. இரண்டாம் உலகப் போருக்கு முன்புவரை பாரிசிலுள்ள தேசிய மேலவைக்கு, ஓர் உறுப்பினரும், கீழ் அவைக்கு ஓர் உறுப்பினரும் ஆக இரண்டு உறுப்பினர்களே பிரஞ்சிந்தியப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். போருக்குப் பின்னர் இவ் வெண்ணிக்கை ஒரு உறுப்பினராகக் குறைக்கப்பட்டது.

காரைக்கால் தேசியக் காங்கிரஸ்

விடுதலை உணர்வை ஊக்கப்படுத்தும் வகையில் 1946 ஜுன் மாதத்தில் 'காரைக்கால் தேசிய காங்கிரஸ்' தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக இருந்த கு. காமராஜ் இக்கட்சியைக் காரைக்காலில் தொடங்கி வைத்தார். 1947, ஜனவரி 31இல் காரைக்கால் மாணவர் காங்கிரஸ் ஏற்படுத்தப்பட்டது. 1947, ஜனவரியில் இயற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் பிரதிநிதி சபையில் முப்பது இடங்களுக்குப் பதிலாக நாற்பத்து நான்கு இடங்களாக உயர்த்தப்பட்டன. இவற்றுள் பன்னிரண்டு இடங்கள் காரைக்காலுக்கு என்று ஒதுக்கப் பட்டிருந்தன. இந்திய சுதந்திரப்போராட்டக் காலத்தில் கப்பலிலிருந்து இறக்கப்பட்ட கடத்தல் பொருட்கள் காரைக்கால் வழியாகக் கடத்தப்பட்டு வந்தன. இக்கடத்தல் பொருட்களுள் தங்கம், துணி வகைகள், வாசனைப் பொருட்கள், பவுண்டன் பேனா, கைக்கடியாரங்கள், மிதி வண்டிகள் முதலியன குறிப்பிடத் தகுந்தவையாகும். 1922 இல் சென்னை ஆளுநராயிருந்த வெல்லிங்டன் (Willington) இந்தியாவின் வைசராய்க்கு எழுதிய கடிதத்தில், பிரஞ்சிந்தியாவிலிருந்து நடத்தப்படும் கடத்தலைக் கண்டித்து எழுதியுள்ளார்.[39]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சந்திர நாகூர் வெற்றி விழா

1949, ஜூன் 19இல் பிரஞ்சிந்தியப் பகுதியான சந்திர நாகூரில் விடுதலை இயக்கத்தின் உச்சக்கட்டமாக வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. தீபென் தாஸ் (Deden Das) தலைமையிலான வங்காளிகள் பிரஞ்சியருக்கு எதிராக வாக்களித்தனர். 1950இல் வங்காளத்தின் ஹுக்லி மாவட்டத்தில் ஒரு ஊராகச் சந்திரநாகூர் இந்தியாவுடன் இணைந்தது. இச் செய்தி ஏனைய பிரஞ்சிந்தியப் பகுதிகளுக்கு விடுதலை உணர்வை மிகுதிப்படுத்தியது. காரைக்காலில் சந்திரநாகூர் வெற்றிவிழா கொண்டாட காரைக்கால் மாணவர் காங்கிரஸ் அமைப்பின் சார்பாக கோரிக்கை அனுப்பப்பட்டது. காரை நிர்வாகி பி. லாம்பெசா (B. Lambezat) 'வெற்றி' என்னும் சொல்லை நீக்கிவிட்டு, 'சந்திர நாகூர் விழா' என்று கொண்டாடும்படி அனுமதி அளித்தார்.[40]

இணைப்பு எதிர்ப்பு

காரைக்காலில் குபேரின் முகவராகச் செயல்பட்டவர் (RMAS) பக்கிரிசாமிப்பிள்ளை என்பவராவர். காரைக்கால் மேயராக விளங்கிய இவர் ஆளுங்கட்சியான பிரஞ்சிந்திய சோசலிசக் கட்சியில் சேர்ந்திருந்தார். இணைப்புக் குழுவிற்கு எதிராக அவர்கள் மீது வன்முறையையும் அராஜகத்தையும் ஏவி விட்டு வேடிக்கை பார்க்கும் பண்புடையராய் விளங்கினார். திருமலைராஜன் பட்டினக் கொம்யூனில் பிரஞ்சிந்திய அரசின் அமைச்சராக விளங்கிய பி. ஆர். சிவசுப்பிரமணியப்பிள்ளை என்பவர், எதிர்த்துக் கேட்பவர் யாருமில்லை என்னும் தைரியத்தில் சர்வாதிகாரம் செலுத்தி வந்தார். இக்கொம்யூனைச் சேர்ந்த சுரக்குடி கிராமத்தில் மீனவ இனத்தைச் சேர்ந்த சிலர் இந்திய தேசியக் கொடியை ஏற்றினர் எனக் கேள்விப்பட்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவர்களைப் பிரஞ்சுக் காவலரைக்கொண்டு அடித்துத் துன்புறுத்தினார். இந்நிகழ்ச்சிக்குப் பின்னரே, திருமலைராஜன் பட்டினத்தில் 'காரைக்கால் தேசிய காங்கிரசின் கிளை' தொடங்கப்பட்டது.

இணைப்புக் காங்கிரஸ்

1948, அக்கோபர் 24-இல் நடந்த நகாரட்சித் தேர்தலில் பிரஞ்சிந்திய அரசு தனது அதிகாரப்பலத்தைப் பயன்படுத்தி ஆளும் கட்சிக்குச் சாதகமாகச் செயல்பட்டது. அரசு ஊழியர்களும் இவ்வூழலுக்குத் துணை போயினர். இத்தேர்தலில் இணைப்பை ஆதரிக்கும் வாக்காளர்களுக்கு அடையாள அட்டை மறுக்கப்பட்டது. இந்திய தேசிய காங்கிரசின் வெளியுறவுச் செயலாளராக விளங்கிய என்.வி. ராஜ்குமார் காரைக்காலுக்கு வருகை புரிந்த பின்னர், ஜோசப்சவேரிப்பிள்ளை தலைமையில் 'இணைப்புக் காங்கிரஸ்' என்னும் புதிய இயக்கம் தொடங்கப்பட்டது. இக்கட்சியில் லியோன் சேன் மீன், ஸ்ரீகண்டராமனுஜம் ஆகிய இருவரும் துணைத்தலைவராகச் செயலாற்றினர். இந்தியாவில் நடைபெற்ற 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தைப் போன்று காரைக்காலிலும் 'பிரஞ்சியனே வெளியேறு' போராட்டமும், பல சத்தியாகிரகங்களும் இணைப்புக் குழுவினரால் நடத்தப்பட்டன. காரைக்காலிலும், புதுச்சேரியிலும் தொடர்ந்து நடைபெற்ற போராட்டங்களினால் அப்பகுதி நிலைமையை அறிய அனைத்துலக நீதிமன்றக் குழு, பிரஞ்சு அரசின் தூண்டுதலால் எச். ஆண்டர்சன், பிரான்சுவா பெவார், மானுவல் ஒசான் என்னும் மூவரையும் அனுப்பி வைத்தது. இவர்களிடம் காரைக்கால் விடுதலைப் போராட்ட வீரர் இராமசீனிவாசன் இணைப்பின் தேவையை வலியுறுத்திப் பேட்டியளித்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இணைப்புப் போராட்டங்கள்

தங்கள் இணைப்பு போராட்டத்திற்குப் பிரஞ்சியர் எவ்வித எதிர் நடவடிக்கையிலும் ஈடுபடாதிருக்கவே, இணைப்புக் குழுக்கள் தங்கள் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தின. இராமசீனிவாசன் 'தேசிய இளைஞர் காங்கிரஸ்' என்ற அமைப்பைத் தோற்றுவித்து அதன் சார்பில் ஓர் அறிக்கையைப் பிரான்சு அமைச்சரவைக்கு அனுப்பி வைத்தார். 1952 ஜூலை 31-க்குள் பிரஞ்சியர் இந்தியாவிலிருந்து வெளியேறாவிட்டால் ஆகஸ்டு மாதம் முதல் 'தேசிய இளைஞர் காங்கிரஸ்' சத்தியாகிரகத்தில் ஈடுபடும்[41] என்பதே அவ்வறிக்கையின் சாரமாகும். ஆனால் பிரஞ்சிந்திய அரசு இம்முயற்சியைத் தடை செய்ததோடு, இராமசீனிவாசனுக்கு ஆறு மாதம் சிறைத் தண்டனையையும் வழங்கிற்று.

1953–இல் கேவல் சிங் இந்திய கவுன்சில் ஜெனரலாகப் பதவியேற்ற பின்னர் இணைப்புப் போராட்டம் உச்சக் கட்டத்தை எட்டியது. இக்காலப்பகுதியில் காரைக்காலிலும் ஏனைய பிரஞ்சிந்தியப் பகுதிகளிலும் பொருளாதார சரிவு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. குபேரும் பிற சோசலிசக் கட்சித் தலைவர்களும் இணைப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட செய்தி பிரஞ்சியர்க்கு பெரும் அதிர்ச்சியை அளித்தது. காரைக்கால் பகுதியிலிருந்து பாரிசு தேசிய சபையில் பிரஞ்சிந்தியாவின் ஆட்சிக்குழு உறுப்பினராகச் செயலாற்றி வந்த (RMAS) பக்கிரிசாமிப்பிள்ளைக்கு, சோசலிசக் கட்சி, 'புதுவை இணைப்புப் பற்றி பிரான்சு அமைச்சரவையில் பேசி அம்முடிவை விரைவிலேயே புதுவை மக்களுக்குத் தெரிவிக்கும்படி' கேட்டுக் கொண்டது. ஆனால் பிரான்சு அமைச்சரவையில் மாற்றம் ஏற்பட்டதேயொழிய, தம்குடியேற்ற நாடுகளின் பிரச்சினையில் எவ்வித மாற்றத்தையும் அந்நாடு ஏற்படுத்தவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1954, மார்ச் 18-இல் புதுவை இணைப்புப் போராட்டக் குழுக்கள் விடுதலை தொடர்பான கோஷங்களை முழங்கிக் கொண்ட ஊர்வலமாகச் சென்றனர். காரைக்காலிலும் இப்படிப்பட்டதொரு வலுவான போராட்டம் நடத்தப்பட வேண்டும் என்று கேவல்சிங், இராமசீனுவாசனுக்குச் செய்தி அனுப்பினார். பிரஞ்சிந்தியாவில் மொத்தமுள்ள பதினேழு கொம்யூன்களில் பதினான்கு கொம்யூன்கள் புதுவை இணைப்புப் பற்றித் தீர்மானம் இயற்றி பிரஞ்சிந்திய அரசுக்கு அனுப்பின. இதில் காரைக்காலிலுள்ள ஆறு கொம்யூன்களும் அடங்கும். (தீர்மானம் அனுப்பாத ஏனைய மூன்று கொம்யூன்கள் மாகி-2, ஏனம்—1). இதற்கிடையில் காரைக்கால் இணைப்புக் காங்கிரசைச் சேர்ந்த ஏ.எம். ஐம்புகேசன், இந்தியாவில் மவுண்ட்பேட்டன் செய்ததைப் போன்று பிரஞ்சியருடன் பேச்சு வார்த்தை நடத்தி, இணைப்புக்குச் சம்மதம் அளிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

பிரஞ்சிந்தியப் பிரதிநிதிசபை 1954, மார்ச் 27ஆந்தேதி கூடுவதாக இருந்தது. இதற்குச் சில நாட்கள் முன்னதாகத் தான் காரைக்கால் தேசிய இளைஞர் காங்கிரஸ் பிரஞ்சிந்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்தது. அதில் பிரஞ்சியர்கள் 1954, மார்ச் 26க்கு முன்பாக இந்தியாவை விட்டு வெளியேறா விட்டால் மார்ச் 27 முதல் காரைக்காலில் சத்தியாகிரகப் போராட்டத்தைத் தொடங்க நேரிடும் என எச்சரித்திருந்தனர். போராட்டத்திற்கு முன்பே இராமசீனிவாசனைக் கைது செய்யும் முயற்சியில் பிரஞ்சுக் காவலர்கள் ஈடுபட்டுத் தோல்வியைத் தழுவினர். திட்டமிட்டபடி மார்ச் 27, காலை 10 மணிக்கு ஊர்வலம் திருநள்ளாறு சாலையிலிருந்து தொடங்கி, கடைவீதி வழியாகத் தொடர்ந்து, மாதாக் கோவில் தெருவில் புகுந்து காரை நிர்வாகி மாளிகையை அடைந்த போது, பிரஞ்சிந்தியக் காவலர்கள் அக்கூட்டத்தின் மீது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தடியடிப் பிரயோகம் நடத்தினர். 'பிரஞ்சு அடக்கு முறை ஒழிக' 'சுதந்திரம் எமது பிறப்புரிமை' என்று முழங்கிக் கொண்டே நெருங்கியக் கூட்டத்தினர் காவலரால் தாக்கப் பட்டனர். காரை நிர்வாகி பூச்னே (Boucheney) இராம சீனிவாசனிடம் 'இணைப்புப் போராட்டத்தைக் கை விட்டால் பிரஞ்சிந்திய அரசு அவர் மீது சுமத்தியிருக்கும் அனைத்துக் குற்றங்களையும் திரும்பப் பெற்றுவிடும் என்று உறுதி அளித்தார். ஆனால் நிர்வாகியின் கோரிக்கை நிராகரிக்கப் பட்டதால் சத்தியாகிரகம், செய்த அனைவரையும், ஒரு பேருந்தில் அடைத்து நாகப்பட்டினம் எல்லையில் உள்ள சன்னாமங்கலத்தில் கொண்டு போய் விட்டு விட்டு வந்தனர்.

அதே நாளில் இணைப்பு முன்னணியின் பொதுச் செயலாளரான லியோன் சேன் ழீன், கேட்டுக் கொண்ட தற்கிணங்க, காரைக்கால் மக்களில் பலர் தங்கள் வீடுகளில் இந்திய தேசியக் கொடியைப் பறக்க விட்டனர். பிரஞ்சியர் இம்மண்ணை விட்டு நீங்கும் வரை தேசியக் கொடியை அகற்ற வேண்டாம் என்று பொது மக்களை அவர் கேட்டுக் கொண்டார்.

மார்ச் 29 இல் பிரஞ்சிந்திய அரசின் தடைகளைமீறி, லியோன் சேன் ழீன் தலைமையில் இந்திய தேசியக் கொடியை ஏந்திய வண்ணம் ஊர்வலம் நடத்தப்பட்டது. (RMAS) வெங்கடாஜலபதி பிள்ளை, (RMAS) பக்கிரிசாமிப் பிள்ளை, இராம சீனிவாசன் போலும் தேசிய வாதிகள் உட்பட பலர் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டனர். ஊர்வலம் கடைவீதியை அணுகும்போது, காரைநிர்வாகி ஆணையால் காவலர்கள் தடியடிப் பிரயோகம் நடத்திக் கூட்டத்தினைக் கலைத்தனர். ஏப்பிரல் 7இல் ஜவகர் இளைஞர் அணித்தலைவர், தங்கராஜுவின் தலைமையில் மற்றொரு அகிம்சாப் போராட்டம் நடத்தப்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரைக்கால் காங்கிரசின் முன்னணித் தலைவர்களான ஷேக் மதார் சாகிப் மரைக்காயர், எம். நாகராஜன், தர்ப்பாரண்யசுந்தரம்பிள்ளை, பிச்சைக்கண்ணுப்பிள்ளை, ஜம்பு கேசன் போன்றோர் மீது இந்திய தேசியக் கொடியைக் காவலரிடம் ஒப்படைக்க மறுத்த காரணத்தால் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

1954, ஏப்ரல் 15இல் 'புதுவை மாநிலத்தின் ஆட்சி நிர்வாகத்தை இந்தியாவும் பிரான்சும் சரி பாதியாக நிர்வாகம் புரியலாம்' என்னும் ஹென்றி ஜாக்குயேர் (Hendri Jaquier) கூறிய தீர்மானத்தைக் காரைக்கால் மேயராக விளங்கிய (RMAS) பக்கிரிசாமிப்பிள்ளை முன்மொழிந்தார்.[42] ஆனால் இத்தீர்மானத்திற்குக் காரைக்காலில் உள்ள அனைத்துக் கட்சியினரும் பலத்த எதிர்ப்பு தெரிவித்து பிரஞ்சியருக்கு எதிரான முழுச்சுதந்திரம் ஒன்றையே முன்வைத்தனர்.

நகரசபையின் பொதுக்குழுவிற்கு முன்னமேயே அறிவித்து விட்டு, இராமசீனிவாசனும் பிற தேசிய வாதிகளும் காரைக்காலின் பொருளாதார நிலைமைக்குத் தடை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். காரைக்காலின் எல்லைப் பகுதியில் இருந்து கொண்டு நகருக்குள் நுழையும், அத்தியாவசியப் பொருட்களைத் தடை செய்தனர். பேருந்துகள் காரைக்காலின் எல்லைப் புறத்திலேயே நிறுத்தப்பட்டன. காரைக்கால் — பேரளம் ரயில் பாதையும் மறியல் செய்யப்பட்டு, போக்குவரத்திற்கு முற்றிலும் தடை விதித்தனர். குறும்பகரம் இராஜா ஐயரின் ஆலோசனையின் பேரில் சத்தியாகிரகிகள் காரைக்காலுக்குப் பாசனநீர் வரும் நட்டாறின் குறுக்கே அணைகட்டி, நீரைத் தடை செய்தனர். இதேசமயம் பிரஞ்சிந்திய அரசு இராமசீனிவாசன், அவர் தம்பி கந்தகுமார் உட்பட பல தேசியவாதிகளைக் கைது செய்ய உத்திரவிட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரைக்காலின் பொருளாதார நிலையைச் சீர்படுத்த நிர்வாகி பூச்னே, தம் சர்வாதிகாரத்தைப் பயன்படுத்தத் தொடங்கினார். பிரஞ்சியரையும் பிரஞ்சு ஆட்சியையும் ஆதரிக்கும் இந்திய மக்களை ஊக்கப்படுத்தி பல சலுகைகள் வழங்கினார். இணைப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட லியோன் சேன் ழீன், அவர் மகன் ரேவதாசிம்மன் ஆகியோரைப் பிரஞ்சுக் காவலர் அடித்துத் துன்புறுத்தி, அவர் வீட்டையையும் தீக்கிரையாக்கினர். பத்திரிகை நிருபர் விஜயராகவனுக்கு இணைப்புப் போராட்டம் பற்றிய ரகசியச் செய்தியைத் திரட்டித்தந்த இராசேந்திரனை வீடு புகுந்து அடித்தனர். இராமசீனிவாசனுக்கு 1954 மே 23 முதல் ஒரு மாதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. முருகய்யா நாயுடு என்னும் தச்சுத் தொழிலாளி தச்சுக் கருவிகளை வைத்துக் கொண்டு இணைப்புப் போராட்டப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டார். 'அபாயகரமான ஆயுதங்களை வைத்திருந்தார், என்று இவர் கைது செய்யப்பட்டு சிறையில் சாகும் வரை அடி உதைக்கு ஆளானார்.

1954, ஏப்பிரல் 4 ஆந்தேதி இணைப்பு எதிர்ப்பாளர் அனைவரும் ஒன்றுகூடி டி. கே. முத்துக் குமாரசாமிப் பிள்ளை தலைமையில் புதிய கட்சி (Partie progressiste) ஒன்றைத் துவக்கினர். இக்கட்சிக்கூட்டத்தில் காரைக் கால் பிரஞ்சியராட்சிக் கீழ்தான் இருக்கவேண்டும் என்றும், பிரஞ்சிந்திய அரசு உடனடியாகப் பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டும் என்றும் தீர்மானம் இயற்றி, காரை நிர்வாகிக்கு அனுப்பி வைத்தனர். காரை நிர்வாகி பூச்னே அத்தீர்மானத்தை நிறைவேற்றுவதாக உறுதியளித்தார். 1954 மார்ச் 22இல் பிரஞ்சிந்திய சோசலிசக் கட்சியின் உயர் மட்டத் தலைவர்கள் ஒன்பது பேர் (RMAS பக்கிரி சாமிப்பிள்ளை உட்பட) கையெழுத்திட்ட தீர்மானம் பிரஞ்சிந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. அத்தீர்மானத்தின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இரண்டு முக்கியக் கருத்துக்களாவன.[43] 1. பிரஞ்சிந்தியப் பகுதி முழுமையும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இந்திய யூனியனின் தனிப்பட்ட நிர்வாக ஆட்சியின் கீழ்கொண்டுவரப் படவேண்டும். 2. புதிய நிர்வாகம் இப்பகுதி மக்களின் அனைத்துத் தேவைகளையும், பூர்த்தி செய்யும் வகையில் ஆட்சி நடத்த வேண்டும், என்பனவாகும். இத்தீர்மானமும் பிரஞ்சியரால் நிராகரிக்கப்பட்டது.

1954, ஜூன் 13இல் ஏனம் மக்கள் பிரஞ்சியர் பிடியிலிருந்து ஏனத்தை விடுவித்தனர். ஏனம் நிர்வாகி சிவா, தாதலா ராமைய்யாவிடம் நிர்வாகப் பொறுப்பை ஒப்டைத்தார். ஜூலை 26இல் மாகியில் மகாஜனசபையின் தலைவராகிய ஐ.கே. குமாரனிடம் மாகி நிர்வாகி தெஷாம் (Deschamps) ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தார். இவ்விரண்டு நிகழ்ச்சிகளும் புதுவை, காரைப்பகுதிகளில் முன்னிலும் அதிகமான விடுதலை வேட்கையைத் தூண்டிற்று. புதுச்சேரியில் நெட்டைப்பாக்கம், திருபுவனை முதலிய ஊர்கள் பிரஞ்சியரின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு இணைப்புக் காங்கிரஸ், பிரஞ்சிந்திய சோசலிசக் கட்சி, கம்யூனிஸ்டு போன்ற கட்சிகளின் பிரதிநிதிகளால் பிரஞ்சிந்திய அரசுக்கு இணையான ஆட்சி நடத்தப்பட்டது.

காரைக்கால் இணைப்பு முன்னணியின் உறுப்பினராக எஸ்.கே. சுப்பராயன் தடையை மீறிக் கிளர்ச்சி செய்ததற்காக, ஒரு மாதம் சிறைத்தண்டனைக்குள்ளானார். ஜூலை 30-இல் மாடர்ன் கல்லூரி (Modern College) மாணவர்கள் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆகஸ்டு 3-இல் செயின்ட்மேரி உயர்நிலைப் பள்ளி மாணவர்களும், மாடர்ன் கல்லூரி மாணவர்களும் வகுப்புகளைப் புறக்கணித்துவிட்டு புதுவை இணைப்பு வேண்டி ஊர்வலம் நடத்தினர். ஆகஸ்டு 3-ஆந் தேதி முதல் காரைக்காலுக்கு வந்த அனைத்துப் பத்திரிகைகளும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரைக்கால் மத்தியக் காவல் நிலையத்தில் தணிக்கை செய்யப்பட்டு இணைப்புப் பற்றிய செய்தி எதுவும் இல்லை என்று உறுதி செய்த பின்னரே, விநியோகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. இச்செயல் காரை மக்களின் சுதந்திர வேட்கையை மேலும் கிளர்ந்தெழச் செய்தது.

இதற்கிடையே, இந்தியா-பிரான்சு ஆகிய இரு நாடுகளுக்குமிடையே பேச்சு வார்த்தை நடைபெற்று, பிரஞ்சிந்தியாவின் எதிர்காலம் அப்பகுதி மக்களே தீர்மானிக்க வேண்டிய ஒன்று, என்று இருநாடுகளும் சேர்ந்து அக்டோபர் 13-இல் இணைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அக்டோபர் 18-இல் பிரஞ்சிந்திய மக்கள் பிரதிநிதிகளான பிரதிநிதி சபை உறுப்பினர்களும் நகர சபை உறுப்பினர்களும் புதுச்சேரி—கீழுரில், கூட்டப் பெற்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. மொத்தமுள்ள நூற்றுத் தொண்ணூற்று மூன்று உறுப்பினர்களில் நூற்றெழுபத்தெட்டு உறுப்பினர்களே இவ்வாக்கெடுப்பில் பங்கேற்றனர். இவர்களுள் நூற்றெழுபது உறுப்பினர்கள் இந்தியப் பகுதியுடன் இணைவதற்கும், எட்டு உறுப்பினர்கள் இணைப்பை எதிர்த்தும் வாக்களித்தனர். இவ்வாக்கெடுப்பு பிரஞ்சுப் பிரதிநிதி பியேர் லாந்தி, இந்திய பிரதிநிதி கேவல் சிங் ஆகியோர் முன்னிலையில் நடத்தப் பெற்றது.

1954, நவம்பர் 1 முதல் காரைக்கால் பிரஞ்சியராட்சியிலிருந்து விடுதலை (மாற்றப்) பெற்று (De-facto transfer) இந்திய யூனியன் பகுதியுடன் இணைக்கப்பட்டது. காரைக்காலின் பிரஞ்சிந்திய நிர்வாகி பூச்னே நிர்வாகப் பொறுப்புகளை 1954, அக்டோபர் 31-ஆந் தேதி காலையில் பிரஞ்சு உயர் பிரதிநிதியிடம் (French consul) ஒப்படைத்தார். அன்று மாலை அரசு மாளிகையில் பறந்து கொண்டிருந்த பிரஞ்சுக்கொடி இராணுவ மரியாதையுடன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இறக்கப்பட்டது. 1954, நவம்பர் 1-இல் விடுதலை பெற்ற காரைக்காலின் முதல் நிர்வாகியாக ஏ.வி. லோகநாதன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

215 ஆண்டுக்கால பிரஞ்சியராட்சிப் பிடியிலிருந்து விடுதலை பெற்ற காரைக்காலில், அன்று மாலை (1954, நவம்பர் 1) 4 மணியளவில் 20,000 மக்கள் முன்னிலையில் இந்திய தேசிய மூவண்ணக் கொடியை காரை நிர்வாகி ஏற்றினார். அதே நாளில் காரைக்கால் மேயர் (RMAS) பக்கிரிசாமிப் பிள்ளையும், நகர மன்றத்தில் இந்திய தேசியக் கொடியை ஏற்றினார். விடுதலையடைந்த பின்னரும், பிரஞ்சுக்குடியுரிமை பெற்ற மக்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த உரிமைகள், சலுகைகள் முதலியன பிரஞ்சு அரசால் தொடர்ந்து வழங்கப்பட்டு வந்தன. காரைக்காலின் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தேசிய வாதிகளுள், வி.ஒ.கே. கணபதி அய்யாப் பிள்ளை, விசுவநாதய்யர், மெரிசவரி, எஸ். வரதராஜுலு செட்டியார், ஏ. ராமநாதன் செட்டியார், அம்பிக சுந்தர மூர்த்தி, என். தங்கராஜு, எஸ். மணிராஜஐயர், ஆர். கந்த குமார், ஆர். கணபதி ஐயர், எஸ். ரங்கசாமிப் பிள்ளை, ஜோசப் சவேரி, ஜி. லோகநாதன், எம். ராமசாமி, மீனாட்சி சுந்தரம், எம். செல்வராஜு, ஏ. பொய்யாத மூர்த்தி, கே. ராகவ சாமி போன்றோர் குறிப்பிடத் தக்கோரா வார்கள்.

6. விடுதலைக்குப் பின் காரைக்கால்

1955, அக்டோபரில் காரைக்கால் வந்த ஜவகர்லால் நேரு, பொதுக் கூட்டத்தில் பேசும் போது, 'நீங்கள் சுகமாக வாழவேண்டி, உங்களை வரவேற்பதற்காக நான் இங்கே வரவில்லை; தொடர்ந்து அரும்பெரும் சாதனைகளை நடத்திக்காட்டி, தம்நாடு முன்னேறபாடு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படவேண்டும் என்று கேட்டுக் கொள்ளவே வந்தேன்[44] என்று கூறினார். நாட்டின் ஒற்றுமைக்காகவும், சோசலிச சமுதாயம் அமைத்திடவும் ஆவன செய்யுமாறு காரைப் பகுதி மக்களைக் கேட்டுக் கொண்டார். இணைப்புக்குப் பின்னர், காரைக்காலில் நகராட்சி அமைப்புகள் கலைக்கப் படாமல் தொடர்ந்து இயங்கி வந்தன. இந்திய அரசியல் சாசன அமைப்பின் இரண்டாவது மசோதாவின் அடிப்படையில், 1954 நவம்பர் 1 முதல் காரைக்கால், நிர்வாகி அடிப்படையிலான ஆட்சி முறையைத் தொடர்ந்து நடத்தும் வாய்ப்பைப் பெற்றது.

ஆட்சி நிர்வாகம்

புதுச்சேரி துணைநிலை ஆளுநரின் அலுவலகப் பிரதி நிதியாகவும், காரைக்காலின் தலைமை அதிகாரியாகவும் காரை நிர்வாகி செயல்பட்டு வந்தார், அனைத்து அரசுத் துறைகளும் ஒரே சீராக இயங்குவதற்கு காரை நிர்வாகி பொறுப்பேற்றுக் கொண்டார். நிர்வாகியைக் காட்டிலும் உயர்ந்த பதவியிலுள்ள அதிகாரிகளும் காரைக்காலில் பணியாற்றி வருகின்றனர். விடுதலைக்குப் பின்னர் காரைக்காலில் பணியாற்றிய நிர்வாகியருள் தயாள், சிதாராமன், சுப்பராயப் பிள்ளை போன்றோர் குறிப் பிடத் தகுந்த முறையில் சிறப்பாகப் பணியாற்றியுள்ளனர்.

காரைக்கால் வட்டாரத்தில் பதினாறு காவல் நிலையங் களும், மூன்று புறக்காவல் நிலையங்களும் உள்ளன. இவை யனைத்தும் மூன்று சரகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் தலைமை அதிகாரி யாக, காவல்துறை கண்காணிப்பாளரே (Superintendent of Police) விளங்கி வருகின்றார், 1969 இல் காரைக்கால் சிறைச்சாலை 'சிறப்புத் துணைச் சிறைச் சாலை' (Special

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Sub-Jail) என்னும் பிரிவுக்குள் கொண்டுவரப்பட்டது. 1963, அக்டோபர் 1 முதல் 'நடுவர் நீதி மன்றம்' (Tribunal of First instance) காரைக்காலில் செயல்படத் தொடங்கியது. நீதியையும் அமைதியையும் நிலைநாட்ட அரசு வழகறிஞரும், முதல் வகுப்பு நீதிபதியும் (First Class Magistrate) காரைப் பகுதியில் நியமிக்கப்பட்டனர். சிவில் வழக்குகளை விசாரிக்கும் நீதி மன்றமும், மாவட்ட உரிமையியல் நீதி மன்றமும், 1968, செப்டம்பர் முதல் இயங்கத் தொடங்கின.

மாகி, ஏனத்தில் உள்ளதைப் போன்றே 1969 இல் பொதுப் பணித்துறை அலுவலகம் செயல்படத் தொடங்கியது. மேலும் தொழில்துறை இயக்ககம், மின் துறை செயற் பொறியாளர் அலுவலகம், குடிமைப் பொருள் வழங்குதுறை அலுவலகம், சம்பளக் கணக்கு அலுவலகம், நலவழித்துறை, மீன்வளத்துறை, வட்டார வளர்ச்சித் துறை போன்ற அலுவலகங்களும் காரைக்காலில் செயல் படத் தொடங்கின. சேதிலால் ஆளுநராக இருந்த போது, காரைக்கால் நகராண்மைக் கழகம் வளர்ச்சியுற்ற நிலையில் இயங்கி வந்தது. 1973 முதல் புதிய நகராட்சிச் சட்டங்களும், கொம்யூன் பஞ்சாயத்துச் சட்டங்களும் இயற்றப்பட்டு நடைமுறைக்கு வந்தன.[45] இச்சட்டத்தின் அடிப்படையில் காரைக்கால் நகராட்சியாகவும், ஏனைய நெடுங்காடு, திருநள்ளாறு, திருமலைராஜன் பட்டினம், நிரவி, கோட்டுச்சேரி ஆகிய ஐந்தும் கொம்யூன் பஞ்சாயத்துக்களாகவும் கருதப்பட்டன. அதுவரை இருந்து வந்த மேயர் பதவி நகராட்சித் தலைவராகவும் (Municipal Chairman), பஞ்சாயத்துத் தலைவராகவும் மாற்றப்பட்டது.

பொருளாதார வளர்ச்சி

காரைக்காலின் பொருளாதாரம், அப்பகுதி விவசாயத்தின் அபிவிருத்தியை முன்னிட்டே வளர்ச்சிபெற்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வந்துள்ளது. காரைப் பகுதியின் சாகுபடி நிலம் மொத்தம் 10,500 ஹெக்டேராகும். இதில் 7,300 ஹெக்டேர் நிலத்தில் சம்பா சாகுபடியும், 3,340 ஹெக்டேர் நிலத்தில் குறுவை சாகுபடியும் செய்யப்பட்டு வந்தது. விடுதலைக்கு முன்பு ஏறக்குறைய 2,000 பண்ணையாட்கள் 3,200 ஹெக்டேர் நிலத்தில் விவசாயம் மேற்கொண்டிருந்தனர். 'காரைக்கால் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்' 1966-இல் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின் அடிப்படையில் பண்ணையாட் களுக்குக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டது. 1970-இல் 'காரைக்கால் விவசாயத் தொழிலாளர் கூலி நிர்ணயச் சட்டம்' கொண்டுவரப் பட்டது.[46] 1958—60ஆம் ஆண்டு களில் நெடுங்காடு, தென்னங்குடி பகுதி வயல்களில் புதிய ரக நெல் விதைத்து (ஜப்பானிய வேளாண்மை முறையை மேற்கொண்டு,) அதிக மகசூல் கண்டனர். 1974-இல் சேதிலால் ஆளுநராயிருந்த சமயத்தில் காரைக்காலில் நடத்தப்பட்ட வேளாண்மைக் கருத்தரங்குகள், உழவர் பயிற்சி முகாம்கள், முதலியன விவசாய—பொருளாதாரத் துறையில் வளர்ச்சியடைய வழிவகுத்தன.

'புதுவையின் நெற்களஞ்சியம்' என்று பிரஞ்சியரால் சிறப்புடன் அழைக்கப்பட்ட காரைக்கால், 1975–76-ஆம் ஆண்டுகளில் மிக உயர்ந்த அளவு, நெல் விளைச்சலைச் சாகுபடி செய்தது. 1976, மே 1 முதல், காரைக்காலில் விவசாயத் தொழிலாளிக்கு நாள் ஒன்றுக்கு, ஆறு ரூபாயாக இருந்த கூலி ஒன்பது ரூபாயாக உயர்த்தப்பட்டது. 1955 அக்டோபரில் மத்திய தொழில், வணிகத்துறை அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி காரைக்காலுக்கு வருகை தந்த போது மக்கள் பிரதிநிதிகள் காரைக்காலில் தொழில் நிறுவனங்கள் தொடங்குமாறு கேட்டுக்கொண்டனர். ஆனால் உடனடியாக, தொழிலகம் தொடங்க எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதற்காகக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரை நகர மக்கள் ஆறு ஆண்டுகள் வரை காத்திருக்க வேண்டியதாயிற்று.

1964இல் நெடுங்காட்டில் சவுந்தரராஜன் நூற்பாலை தொடங்கப்பட்டது. சுமார் 350 தொழிலாளிகளோடு தொடங்கப்பட்ட இந்நூற்பாலை, ஓர் ஆண்டுக்கு ரூபாய் 4,30,00000 ஈட்டுத் தொகையாக (Turn over) வருமானம் காட்டியது. அதே ஆண்டு (1964) எண்ணெய் நில வாயுக் குழு (Oil and Natural Gas Commission) காரைக்காலுக்கு வந்தது. காவிரிப் படுகையில் எண்ணெய் கண்டுபிடிக்கும் பணியை அக்குழு தொடங்கிற்று. காரைக்கால் பகுதியில் மட்டும் பத்து கிணறுகளுக்கான துரப்பணப் பணியை மேற் கொண்டது. இவற்றுள் எண்ணெய் மற்றும் நிலவாயு அடங்கிய கிணறுகள் பல கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் பொருளாதார நோக்கில் இவை பலனளிக்காமல் போய் விட்டன.

7. விடுதலைக்குப்பின் காரைக்கால் சமுதாய நிலை

அரிசன மக்கள் எல்லா வீதிகளிலும், சுதந்திரமாக உலா வருகின்றனர். இருப்பினும், இன்னமும் சில உயர் சாதியினரின் வீட்டில் அரிசன மக்கள் நுழைய, தடை இருந்து வருகின்றது. இப்பகுதியில் பெண்கள் இன்னமும் பின்தங்கியவர்களாகவே திகழ்கின்றனர். பெண்கள் தனி யாகப் படிக்கப் பள்ளிகள், கல்லூரி வசதியிருந்தும் தொடர்ந்து படிக்கும் வாய்ப்பில்லாமல் உள்ளனர். குறிப்பாக இசுலாமியப் பெண்கள் தங்கள் கல்லூரிப் படிப்பைப் பாதியிலேயே நிறுத்துமாறு வற்புறுத்தப்படு கின்றனர். காரைக்காலில் வசிக்கும் இசுலாமியப் பெண் களின் எண்ணிக்கைமிகுதியாக இருந்தும் உயர்கல்விபயிலும் பெண்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவே! கிராமப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதியில் பெண்களின் அறியாமை இன்னும் மோசமான நிலையிலேயே உள்ளது. நாட்டு நலப்பணித் திட்டத்தின் அடிப்படையில் மகளிர் கல்லூரி மாணவிகள் இப்பகுதி களில் முறை சாராக் கல்வி முகாம்கள் நடத்தியுள்ளனர்.

1979-இல் புதுவை மாநிலம் குடியரசுத் தலைவர் ஆட்சிக்குட்பட்டிருந்த போது 'மதுவிலக்குச் சட்டம்' நடைமுறைக்கு வந்தது. காரைக்கால் பகுதி மக்களில் 10% பேர், கள் இறக்கும் தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருந்தனர். திடீரென்று அமுல் படுத்தப்பட்ட மதுவிலக்குச் சட்டத்தால் இவர்கள் மிகுதியாகப் பாதிக்கப்பட்டனர். மேலும் புதுவை அரசின் வருவாயிலும் ஆண்டொன்றுக்கு ரூ. 10 கோடி இழப்பு ஏற்பட்டது. இதை ஈடுகட்ட மத்திய வரவு செலவுப் பட்டியலில் புதுவை யூனியன் பிரதேசத்திற்காக ரூ. 10 கோடி அதிகமாகத் தேவைப்பட்டது. இதைத் தவிர காரைக்காலுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்து போயிற்று. பின்னரே, இம்மது விலக்குச் சட்டம் அரசால் விலக்கிக் கொள்ளப்பட்டது.

காரைக்கால் சுழற் சங்கம் 1974 இலும், அரிமா சங்கம் 1976 இலும் ஏற்படுத்தப்பட்டது. பஞ்சத்தாலும் வெள்ளத்தாலும் இப்பகுதி, பாதிக்கப்பட்டபோது, இச்சங்கங்கள் மீட்புப் பணிகளை மேற்கொண்டன. நன்கு பயிலும் மாணவர்கட்கு உதவித்தொகையும், பரிசு நூல்களும் அளித்து ஊக்குவித்தன. கத்தோலிக்க மத நிறுவன அமைப்புகள் காரைக்காலில் கல்வி, மருத்துவம் தொடர்பான பல சமூக நற்பணிகளைச் செய்து வருகின்றன. நிர்மலா ராணி உயர் நிலைப் பள்ளி, கார்மெல் செயின்ட்ரோச், கோட்டுச்சேரிப் பள்ளி, பள்ளித் தெரு வாசல் பள்ளி போன்றவை கத்தோலிக்கரின் கல்விப் பணிகளுக்குச் சான்றுகளாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதுத்துறையிலுள்ள செயின்ட் ரோச் நிறுவனம் சமூக நலப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளது. 1970-இல் இந்நிறுவனத்தின் சார்பாகத் தொடங்கப்பட்ட மருத்துவமனையில், 1972-ஆம் ஆண்டு முதல், தாய்—சேய் நல விடுதியும் இணைத்துக் கொள்ளப்பட்டது. 1975-இல் கைத்தொழில், இயற்கைக் குடும்பக் கட்டுப்பாடு, சிறு சேமிப்பு, இலக்கிய வகுப்புகள், முறைசாராக் கல்வி போன்ற நலவழித் திட்டங்களைப் பயிற்சி முகாம்களில் இந்நிறுவனம் நடத்தியது. அதே ஆண்டில் மாதர் சங்கம், கடன்வழக்குத் திட்டம், தொழிலாளர் பயிற்சி முகாம்கள் போன்றவற்றைக் கிராமப் புறங்களில் தோற்றுவித்தது. 1981-இல் அரிமா சங்கத்தின் ஆதரவில் ஊன முற்றோருக்கான பல திட்டங்கள் நடத்திக் காட்டப்பட்டன. நிர்மலா ராணி உயர்நிலைப் பள்ளி நிர்வாகம் முதியோருக்கான இல்லம் (HOSPICE) ஒன்றை நடத்தி வருகிறது.

நலவழித்துறை வளர்ச்சி

விடுதலைக்கு முன்பு காரைக்காலில் ஒரே ஒரு மருத்துவமனையே இயங்கி வந்தது. 1855 இல் பிரஞ்சியரால் துவக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின் வளர்ச்சியே இம்மருத்துவமனையாகும். 1935இல் ஒரு மகப்பேறு மருத்துவப் பகுதியும் இதில் இணைக்கப்படடது. காரை இணைப்புக்கு பின்னர் 'மருத்துவமையம்' என்னும் பெயர் 'பொது மருத்துவமனை' என்று மாற்றப்பட்டது இப்போது இங்கு பல மருத்துவத் தொழில் நுட்பச் சாதனங்கள் சேர்க்கப்பட்டு, நவீனப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது நெடுங்காடு, வரிச்சிக்குடி, திருநள்ளாறு, விழிதியூர் ஆகிய ஐந்து இடங்களில் ஆரம்ப சுகாதார மையங்கள் இயங்கி வருகின்றன. இவை தவிர பத்து துணை சுகாதார மையங்களும் இப்பகுதியில் செயல்பட்டு வருகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1950-ஆம் ஆண்டிற்கும் 1970-ஆம் ஆண்டிற்கும் இடையே அம்பகரத்தூர், கோட்டுச்சேரி, நல்லம்பல், நிரவி, நல்லாத்தூர், திருமலைராஜன்பட்டினம் போன்ற ஊர்களில் சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டன. சேதிலால் ஆளுநராயிருந்த காலத்தில் 6.75 லட்ச ரூபாய் செலவில் காச நோய்க் கட்டிடமும், வெளி சிகிச்சைப் பிரிவுக் கட்டிடமும் கட்டப்பட்டன. இக்காலத்தில் அகலங்கண்ணி லிருந்து காரைக்காலுக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டத்திற்காக 25 லட்ச ரூபாய் செலவிடப்பட்டது. அகலங்கண்ணிலிருந்து பம்ப் செய்யப்பட்டு வரும் தண்ணீர், காரைக்கால் தண்ணீர்த் தொட்டியில் சேமிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. 1975-76-ஆம் ஆண்டுகளில் காரைக்காலில் குடும்ப நலத் திட்டம் முழுவீச்சில் வெற்றி கரமாகச் செயல்பட்டது. இத்திட்டம் முழுமையான அளவில் நிறைவேற அரசு ஊழியர்கள் பெரும்பங்கெடுத்துக் கொண்டனர்.

கல்வி வளர்ச்சி

இணைப்புச் சமயத்தில் பிரஞ்சிந்தியப் பகுதியில் கல்வி, மூன்று விதமான முறைகளில் போதிக்கப்பட்டன. பிரஞ்சு, தமிழ், ஆங்கிலம் என்று பயிற்று மொழி முறைகளின் அடிப்படையில் கல்வி நிலை பாகுபாடு செய்யப்பட்டிருந்தது. பிரஞ்சு மொழி போதனா முறைக் கல்வியில் ஆரம்பநிலை ஐந்து ஆண்டு, இடைநிலை நான்கு ஆண்டு, மேனிலை மூன்று ஆண்டு என்று கற்பிக்கப்பட்டது. தமிழ் வழிக் கல்வி முறையில் தொடக்க நிலை ஏழு ஆண்டு, உயர் நிலை நான்கு ஆண்டு என்று கற்பிக்கப்பட்டது. ஆங்கில வழிக் கல்வி முறையில் ஆரம்ப நிலை நான்கு ஆண்டு, இடைநிலை மூன்று ஆண்டு, உயர் நிலை மூன்று ஆண்டு என்று கற்பிக்கப் பட்டு வந்தது. ஆங்கிலம், தமிழ் வழிக் கல்வி முறையைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொறுத்தவரையில், தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்ட பாடத் திட்டமும், தேர்வு முறையுமே இப்பகுதியிலும் பயன்படுத்தப்பட்டு வந்தன. காரைக்காலில் மூன்று மேனிலைப் பள்ளிகளும், பதினாறு உயர்நிலைப் பள்ளிகளும் (3 தனியார் பள்ளிகள் உட்பட), பத்தொன்பது நடுநிலைப் பள்ளிகளும், தொண்ணூற்றிரண்டு தொடக்கநிலைப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இவற்றுள் நிர்மலா ராணி உயர்நிலைப் பள்ளியும், செயிண்ட்மேரி ஆண்கள் பள்ளியும் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டவையாகும். அனைத்துப் பள்ளிகளும் முதன்மைக் கல்வி அதிகாரியின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன.

காரைக்காலில் செயல்பட்டு வந்த 'மாடர்ன் கல்லூரி' பள்ளிக்கூடமேயாகும். இது உயர்நிலையளவில் மாணவர்கட்குப் பயிற்சி தர ஏற்படுத்தப்பட்ட பள்ளியாகும். முதன்முதலில் 1967-இல் தான் காரைக்காலில் (ஆண்களுக்காக), அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி தொடங்கப்பட்டது. 1977இல் காரை — நேரு நகரில் கல்லூரிக்கான புதிய கட்டிடம் கட்டும் வரையில் மாடர்ன் கல்லூரி கட்டிடத்திலேயே அண்ணா கல்லூரி செயல்பட்டு வந்தது. 1972-இல் புதுவை முதல்வர் எம். ஓ. எச். பாரூக் மரைக்காயரின் முயற்சியால் காரைக்காலில் ஔவையார் அரசு மகளிர் கலைக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. 1985ஆம் ஆண்டு வரை இக்கல்லூரிகள் இரண்டும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்தன. 1986ஆம் ஆண்டு முதல் புதுவைப் பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன. காரைக்காலில் 1952இல் ஆரம்பிக்கப்பட்ட பொது நூலகத்தில் பிரஞ்சு, தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சுமார் ஏழாயிரம் நூல்கள் இருக்கின்றன. இது தவிர பதினைந்து கிளை நூலகங்களும் இப்பகுதியில் செயல்பட்டு வருகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1968இல் திருமலைராஜன் பட்டினத்தில் தொழில் நுட்பப் பயிற்சி மையம் தொடங்கப்பட்டது. 1973இல் தொடங்கப் பட்ட 'காரைக்கால் தமிழ்ப் பேரவை' இலக்கியம் மற்றும் பண்பாட்டு அடிப்படையில் பல நற்பணிகளைப் புரிந்து வருகின்றது.

பிரஞ்சுக் கல்வியும் பண்பாடும்

ஜவகர்லால் நேரு புதுவை மாநிலத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, "பிரஞ்சுப் பண்பாடு, பிரஞ்சு மொழி ஆகியவற்றின் தாக்கத்தைத் தொடர்ந்து, காப்பாற்றி வருகின்றது"[47] என்று கூறியுள்ளார். புதுச்சேரியைக் காட்டிலும் காரைக்காலில் பிரஞ்சியரின் தாக்கம் குறைவாகவே காணப்படுகின்றது. பிரஞ்சிந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் புதுச்சேரியில்தான் பிரஞ்சுக் கல்லூரி (College Francaise de Pondicherry) தோற்றுவிக்கப்பட்டது. 1955இல் தோற்றுவிக்கப்பட்ட பிரஞ்சிந்திய பண்பாட்டு நிறுவனம் வடமொழி, தமிழ், பிரஞ்சு அறிஞர்களைக் கொண்டு பல பண்பாட்டு ஆய்வுகளை நிகழ்த்தி வருகின்றது. இக்கழகத்தின் வெளியீடாகப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. மேலும் உயிர்நிலவியல் (Bio-geography) தொடர்பான ஆய்வுகளும் இந்நிறுவனத்தில் நிகழ்த்தப் பெறுகின்றன.

காரைக்காலில் பிரஞ்சு பயிற்று மொழி உயர்நிலைப் பள்ளியில் (CollegeD' Ensigheement Secondaire), பிரவே (Bravet) வரை கல்வி கற்பிக்கப்படுகின்றது. ஆங்கிலத்தில் மெட்ரிகுலேஷனுக்குச் சமமான படிப்பே பிரவேயாகும். பிரஞ்சு மொழியைப் பரப்பும் வகையில் 'பிரஞ்சு மொழிப் பயிற்றகம் (Allignce Francaise) ஒன்றும் காரைக்காலில் செயல்பட்டு வருகின்றது. இடையில் சில காலம் செயலிழந்து போன இப்பயிற்றகம், மீண்டும் 1978, பிப்ரவரி 1 முதல் தொடர்ந்து இயங்கி வருகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரைக்கால் கல்லூரிகளில் பட்டவகுப்பு நிலையில் பிரஞ்சு மொழி, (பகுதி ஒன்று) மொழிப்பாட அளவில் (Part - I Language) தமிழுக்குப் பதிலாக விருப்பப் பாடமாகப் பயிற்றுவிக்கப்படுகின்றதேயொழிய, தனிப்பட்டப் படிப்பாகச் சொல்லித் தரப்படவில்லை. இப்பகுதியில் பிரஞ்சுப் பண்பாட்டின் தாக்கம் மெல்ல, மெல்ல மறைந்து வருகின்றது. பிரஞ்சுப் பண்பாட்டைப் புதுப்பிக்கும் வகையில் காரைக்காலில் பிரஞ்சிந்தியப் பண்பாட்டு நிறுவனத்தின் கிளை ஒன்றைத் தோற்றுவித்து மத இலக்கிய பண்பாட்டு ஆய்வுகளை நிகழ்த்தினால் புதிய முடிவுகள் வெளியாகும். 1974 ஆகஸ்டு 9இல் புதுச்சேரி ஆளுநர் தலைமையில் 'காரைக்கால் இசைச் சங்கம்' தோற்றுவிக்கப்பட்டு, பல முன்னணிக் கலைஞர்களைக் கொண்டு இசை விழாக்கள் நடத்தப்பட்டன. நிரந்தரமான கட்டிட வசதியும் கலையரங்கமும் இல்லாத காரணத்தால் இச்சங்கம் தொடர்ந்து நடைபெற இயலவில்லை.

சான்றெண் விளக்கம்

1. Nilakanta Sastri, K.A. 'A History of SouthIndia,' P. 160.
2. Mahalingam, T. V. 'Kanchipuram in Early South Indian History,' P. 54.
3. பெரியபுராணம்,'காரைக்கால் அம்மையார் புராணம்,' ப. 1.
4. Rajamanickam, M., Development of Saivism in South India Under the Pallavas of Kanji and Imperial cholas, Thesis submitted for Ph. D., University of Madras, 1950, PP. 166-167.
5. Rangacharya, V., 'A Topographical list of the Inscriptions of the Madras Presidency, Vol: III. P. 694.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6. Nilakanta Sastri, K. A., 'A History of South India', P. 182.
7. Saroja Sundararajan, 'Glimpses of the History of Karaikal,' P-11.
8. 'South Indian Inscriptions,' Vol: VIII. Nos: 1026 (394 of 1902)
9. Indian Archaeology - A Review, 1965-66, Serial No. 37, P. 66.
10. Baliga, B. S., The Tanjore District Gazetter, Handbook, P. 59.
11. 'Gazetteer,' Pondicherry, Vol: 1, P. 163.
12. Saroja Sundararajan, 'Glimpses of the History of Karaikal,' P. 16.
13. ஆனந்தரங்கப் பிள்ளை, 'தினப்படி சேதிக் குறிப்பு,' தொ: 1, பக். 82-83.
14. Saroja Sundararajan, 'Glimpses of the History of Karaikal,' P. 17.
15. மே. நூல். ப. 19.
16. மே. நூல். ப. 21.
17. Robert Orme, 'History of the Military Transactions of the British Nation in Industan' Vol: I, P. 623.
18. மே. நூல், Vol: II, P. 330.
19. Sen, S. P., 'The French in India,' P. 108.
20. Saroja Sundararajan, 'Glimpses of the History of Karaikal,' P. 30.
21. மே. நூல். ப. 37.
22. மே. நூல். ப. 34.
23. Manual of Tanjore District, P. 395.
24. 'Revue Historique De Pondicherry,' Vol: 12, 1974-75, P. 24.
25. 'புதுவைச் செய்திகள்,' மார்ச் 1979, பக், 11-12.
26. மாணிக்கம், அ (ப. ஆ), 'தனிப்பாடல் திரட்டு,' தொகுதி : 1, ப. 169.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

27. Saroja Sundararajan, 'Glimpses of the History of Karaikal,' P. 113.
28. ஏலாதி, பா: 31
29. 'Gazetteer,' Pondicherry, Vol: 1, P. 337.
30. மே. நூல், பக். 337-338.
31. Saroja Sundararajan, 'Glimpses of the History of Karaikal,' P. 125.
32. மே. நூல், ப, 130.
33. மே. நூல, ப. 132.
34. Ramasamy, A., 'History of Pondicherry,' P. 159.
35. சாயபு மரைக்காயர், மு., "காரைக்கால் முஸ்லீம்களின் பண்பாடும் தமிழ்த் தொண்டும்" — (சர்வ தேச திராவிட மொழியியல் மாநாட்டுக் கட்டுரை புதுச்சேரி) அக்டோபர் 2,3,4, 1984., ப. 1.
36. மே. கட்டுரை, பக் 4-5.
37. Saroja Sundararajan, 'Glimpses of the History of Karaikal,' P. 144.
38. மே. நூல்,ப. 146.
39. மே. நூல், ப. 150.
40. மே. நூல், ப. 154.
41. மே. நூல், ப. 166.
42. மே. நூல், பக். 374-15.
43. மே. நூல், ப. 181.
44. 'Speeches of Jawaharlal Nehru,' Vol: III, PP. 461-462.
45. 'Gazetteer,' Pondicherry, Vol: II, P. 1166.
46. மே. நூல், PP. 973-976.
47. Saroja Sundararajan, 'Glimpses of the History of Karaikal,' P. 219.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7. "மய்யழி" என்னும் மாகி வரலாறு

ஒருபுறம் கடலாலும், மற்றொருபுறம் குன்றுகளாலும் நதியாலும் சூழப்பட்ட சிற்றூரே 'மாகி'யாகும். இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் கேரள மாநிலத்தில் அமைந்துள்ள மாகியின் பழைய பெயர் 'மய்யழி' என்பதாகும். 'மய்யழி' என்று வழங்குவதன் முன்பாக 'மய்யிலக் கரை' என்றும் இவ்வூர்ப் பெயர் வழங்கி வந்திருந்தது. 'படகரா' (Badagara) பகுதியை ஆண்டு வந்த பையனூர் (Boyanor) மன்னரிடமிருந்து கி.பி. 1721-இல் ஆந்ரே மொல்லாந்தேன் (Andrew Mollandin) என்னும் பிரஞ்சுக்காரர் மாகி ஆற்றுக்கு அருகே ஒரு கோட்டை கட்டிக் கொள்ள அனுமதி பெற்றார். கி.பி. 1724-இல் இக்கோட்டை கட்டப்பட்டது. கி.பி. 1725–இல் பையனூர் மன்னனை வற்புறுத்தி, ஆங்கிலேயர் பிரஞ்சியரை மாகியை விட்டு விரட்ட முனைந்தனர். ஆனால் கி.பி. 1725, டிசம்பரில் புதுச்சேரியிலிருந்து ஆறு கப்பல்கள் நிறைய பிரஞ்சுப் படை வீரர்கள் மாகியை முற்றுகையிட்டு, பிரான்சிஸ் மாகி லபூர் தொனே தலைமையில் மாகி பிரஞ்சியரால் மீட்கப்பட்டது. மய்யழியைத் தந்திரமாய், பிரஞ்சியர் ஆட்சிக் கீழ் கொண்டு வந்த மாகி லபூர் தொனேயின் திறமையை நினைவு கொள்ளும் பொருட்டு பிரஞ்சியர் மய்யழியை 'மய்யே' (Mahe') என்று பெயர் மாற்றம் செய்தனர். 'மய்யே' ஆங்கிலேயர் ஆட்சி மாற்றத்தால் 'மாகி' என்றாகியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாகியின் பழமை

பழங்காலத்தில் மாகி அழியூர் என்னும் ஊருடன் இணைந்திருந்தது. முற்காலத்தில் கண்ணம் வள்ளி நம்பூதிரி என்பவர் அழியூரை ஆண்டு வந்தார். இந்த நம்பூதிரி தண்டரப்பள்ளியைச் சேர்ந்த 'குரூப்பு' இனத்திலுள்ள ஒரு பெண்ணை மணந்தார். ஒரு நாள் அவர் தன்னுடைய நாட்டைத் துறந்து சந்நியாசம் பூண்டு சென்றுவிட்டார். அதன் பின் அந்நாடு குரூப்பின் ஆட்சிக் கீழ் வந்தது. 'குரூப்பு' இனத்தார் அந்நாட்டை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியைத் தன் புதல்வர்களுக்கும், மறுபகுதியைத் தன் மருமகன்களுக்கும் கொடுத்தனர். இவ்வாறாக அழியூர் முதலில் நம்பூதிரியின் ஆட்சியின் கீழும், அதன் பின் குரூப்பின் ஆட்சியின் கீழும் இருந்து வந்தது.

ஐரோப்பியர் வருகையின்போது 'மாகி' சிறந்ததுறை முகமாக விளங்கியிருந்தது. இதற்கான சான்றுகள் போர்த்துக் கீசியர் எழுதியுள்ள பயணக் குறிப்புகளில் காணப்படுகின்றன. 'மாகி'யை அடுத்துள்ள 'சோம்பாயி' என்னும் ஊர் சிறந்த வணிகத் தலமாக விளங்கியது. தேங்காய்தான் இங்கு முக்கியமாக ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. பழங் காலந் தொட்டே பல சிறப்புகளைப் பெற்றிருப்பினும், பிரஞ்சியரின் வரவிற்குப் பிறகுதான் மாகி வரலாற்றுப் புகழ் பெற்றது எனலாம். பிரஞ்சியர் இவ்வூர்க்கு வருகை தந்ததன் மூல காரணம், அங்கு பெருமளவில் கிடைத்த மிளகே!

பிரஞ்சியரின் வருகை

பிரஞ்சியரின் வருகைக்கு முன்பே எகிப்தியர், இத்தாலியர், அரேபியர், போர்த்துக்கீசியர் முதலியோர் மிளகை வாங்குவதற்காக இங்கு வந்து சென்றுள்ளனர். இவர்களை அடுத்து வந்த டச்சுக்காரர்கள் இங்கிருந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மிளகைக் குறைந்த விலைக்கு வாங்கிச் சென்று வெளி நாடுகளில் அதிக லாபத்திற்கு விற்றனர். இவ்விலை யேற்றதைத் தடுப்பதற்காகவும், நேரடிக் கொள்முதல் செய்வதற்காகவும், ஆங்கிலேயர் தலைச் சேரியில் கிழக் கிந்தியக் கம்பெனி ஒன்றை நிறுவினர். இதைக்கண்ணுற்ற ஆங்கிலேயரின் தொழில் முறை எதிரியான பிரஞ்சியர் ஆங்கிலேயருக்குப் போட்டியாக, சூரத்தில் ஒரு கம்பெனியை நிறுவினர். ஆனால், அக்கம்பெனி நஷ்டமடைந்தாலும், சூரத்தின் அக்காலத்திய மொகலாய மன்னர் ஔரங்கசீப் அவர்களை அவ்விடத்தை விட்டுத் துரத்தியதாலும், புதுச் சேரிக்கு இடம் பெயர்ந்தனர். இருப்பினும் பிரஞ்சியருக்கு மேற்குக் கடற்கரையில் ஒரு வணிகத்தலம் தேவைப் பட்டது. எனவே, மாகியைப் பிரஞ்சியர் தேர்ந்தெடுத்தனர்.

அப்பொழுது மாகியை ஆட்சி புரிந்த மன்னனிடம் ஒரு கோட்டையும், வியாபாரத் தலம் ஒன்றும் அமைக்க பிரஞ்சியர் அனுமதி கேட்டனர். அம்மன்னன் சில நிபந் தனைகளின் பேரில் அவர்களுக்கு அனுமதி வழங்கினான். அந்த நிபந்தனைகளாவன—

1. தன் நாட்டில் விளையும் மிளகைப் பிரஞ்சியர்க்கு விற்பனை செய்தது போக மற்றவர்க்கு விற்றல்.
2. பெண்களையோ, பசுக்களையோ, பிராமணர் களையோ, துன்புறுத்தல் கூடாது.
3. அம்மன்னன் வேறுநாடுகளுக்குப் படை எடுத்துச் செல்லும் போது பிரஞ்சியர் படை உதவி செய்ய வேண்டும்.

இந்த ஒப்பந்தம் 18-9-1722 இல் பிரஞ்சுப் பிரதிநிதியான மொல்லாந்தேனுக்கும், மாகி மன்னனுக்கும் இடையில் ஏற்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆங்கிலேயர் - பிரஞ்சியர் முரண்பாடு

தலைச்சேரியில் ஆங்கிலேயர் கம்பெனி நிறுவியது, அந்நாட்டு மன்னன் குறுங்கோது நாயருக்குச் (Kurungothu Nair) சம்மதமில்லை. அதே சமயம் ஆங்கிலேயர் மாகி மன்னரிடம் சென்று மாகி தங்களுக்கே வணிகத் தலமாக அமையவேண்டும் என்று வாதம் புரிந்தனர். அதன்பின் மாகி மன்னன், தான் கப்பம் கட்டி வந்த கோலத்திரி மன்னனின் ஆணையின் காரணமாக ஆங்கிலேயருடன் ஒரு புது ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டியதாயிற்று. அவ்வொப்பந்தத்தில் மாகி மன்னன் தன் நாட்டில் விளையும் மிளகை ஆங்கிலேயரிடம் விற்பனை செய்வதாகக் குறிப்பிட்டிருந்தான். இது அவன் பிரஞ்சியருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறுவதாகும். அதனால் பிரஞ்சியர் அம்மன்னன் மீது ஆத்திரம் கொண்டனர். அதே காலகட்டத்தில் மாகியின் அருகிலுள்ள கடத்தனாடு என்ற ஊரில் வாழ்ந்த நாயர் இனத்தைச் சேர்ந்த மக்கள் பிரஞ்சியர் ஆதிக்கத்தை வெறுத்தனர். எனவே பிரஞ்சியருக்கும் நாயருக்குமிடையில் கலகம் ஏற்பட்டது. இக்கலகத்தின் காரணமாக பிரஞ்சியருக்கு மிகுந்த சேதம் ஏற்பட்டது. இதனால் பிரஞ்சியர் கோழிக் கோட்டிற்கு இடம் பெயரவேண்டியதாயிற்று. பிரஞ்சியர் கோழிக் கோட்டை மையமாக வைத்துக் கொண்டு மாகியை முற்றுகையிட்டனர். மாகியின் இயற்கை அமைப்பு போரிடுவதற்கு ஏற்ற சூழல் இல்லாமையால் ஆங்கிலேயர் பிரஞ்சியருடன், கோழிக் கோட்டு அரசர் 'சாமுத்திரி'யின் முன்னிலையில் 8-11-1726 இல் ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டனர். இங்கிலாந்து, பிரான்சு ஆகிய இரு நாடுகளும், தங்கள் இந்தியக் குடியிருப்புப் பகுதிகளில் யாதொரு பகையுமின்றி வாழ்தல் என்பதே இவ்வுடன்படிக்கையின் சாரமாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இச்சமாதான உடன்படிக்கை 'ஐரோப்பியப்போர்' ஏற்படும் வரையே நீடித்தது. இவ்வுடன்படிக்கையின்படி பிரஞ்சியர் மாகி மன்னனுக்கு ரூ. 1½ லட்சம் கொடுத்து அங்கு ஒரு வணிகத்தலம் அமைத்துக் கொண்டனர்; மிளகின் விலையை ஆங்கிலேயரும், பிரஞ்சியரும் சேர்ந்தே நிர்ணயிக்க வேண்டும். இதனால் மாகி மறுபடியும் ஒரு முக்கிய துறைமுகமாக மாறியது. அக்காலத்தில் பிரான்சிலிருந்து வரும் கப்பல்கள் மாகி துறைமுகத்துக்கு வந்த பின்பே புதுச்சேரிக்குச் சென்றன.

ஐரோப்பாவில் பிரஞ்சியருக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே போர் மூண்டது. அப்போரின் எதிரொலியாக தலைச்சேரியிலிருந்த ஆங்கிலேயர் மாகியின் மீது படையெடுத்தனர். இப்போரில் ஆங்கிலேயர் வெற்றிபெற்று 1761 பிப்பிரவரி 13இல் மாகியைக் கைப்பற்றினர். கி.பி. 1763இல் பிரஞ்சியருக்கும், ஆங்கிலேயருக்கும் பாரிசில் ஒரு சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. இவ்வுடன்படிக்கையின்படி இந்தியாவில் மாகி மறுபடியும் பிரஞ்சியர் வசமாயிற்று. மீண்டும் ஐரோப்பாவில் நடந்த போரின் காரணமாக மாகியை மறுபடியும் ஆங்கிலேயர் கைப்பற்றினர். இதைத் தொடர்ந்து 'மாகி' பலமுறை இருவர் கைக்கும் மாறிக் கொண்டேயிருந்தது இறுதியில் 1817இல் மாகி பிரஞ்சியர் ஆட்சியின் கீழ் வந்தது. 1445 ஏக்கர் நிலப் பரப்புள்ள மாகியில் 1329 ஏக்கர் நிலம் விவசாயத்திற்கும், 116 ஏக்கர் பொது நிலமாகவும் பயன்படுத்தப்படுகிறது.

பிரஞ்சியர் காலூன்றல்

மலபார் பகுதியில் போர்த் தொடுத்த காலத்தில் – ஹைதர்அலியும், அவர் மகன் திப்புசுல்தானும் மாகியைப் பாசறையாகப் பயன்படுத்தினர். போர்த் தளவாடங்கள் சேகரிப்பதற்கான ஆயுதக்கிடங்கு ஒன்றினையும் மாகியில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏற்படுத்தினர். ஹைதரலிக்குப் படையுதவி புரிய பிரஞ்சியர் கட்டிய கோட்டை "மருந்தறைக் குன்று" (Fort Dufain) என்று இன்றும் அழைக்கப்படுகிறது. 'கறுப்புத் தங்கம்' என்றழைக்கப்படும் மிளகைத் தேடி வந்த வெளிநாட்டார் (பிரஞ்சியர்), மாகி மன்னர்கள் இலவசமாக அளித்த இடத்தில் வணிகம் செய்யத் தொடங்கி ஆங்காங்கே ஆட்சியையும் மெல்ல, மெல்ல கைப்பற்றி வந்தனர். மைசூர் மன்னர்களிடம் நட்புறவு கொண்ட பிரஞ்சியர் மட்டுமே, மக்களையும் தம்முடைய ஆட்சியில் பங்குகொள்ளச் செய்தனர். தொடக்க காலத்தில் பல படையெடுப்புகள் காரணமாக மாகியின் பொருளாதாரத்தில் சீர்குலைவு ஏற்பட்டது. பின்னர் பிரஞ்சியர் உதவியுடன் மக்கள் விவசாயத்தை அபிவிருத்தி செய்து, நாட்டை வளப்படுத்திப் பெரும் பொருள் ஈட்டினர். பிரஞ்சியரும் இந்தியாவில் தாங்கள் பிடித்த பகுதிகளில் மக்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டு தங்கள் குடியிருப்புப்பகுதிகளைப் பல வகையிலும் முன்னேற்றினர்.

பிரஞ்சியராட்சியும் சமுதாய நிலையும்

பிரஞ்சியர் தங்களுடைய ஆட்சிக் காலத்தில் கிறித்தவ மத வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளனர். தொமினிக் செயின்ட் ஜான் (Dominique St. John of the Cross) என்னும் பாதிரியார் 1723இல் மாகியில் முதன்முதல் ஒரு கிறித்தவ மடத்தை உருவாக்கினார். கி. பி. 1736ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அன்னை தெரசாவின் (St. Therasa) சிலையை அங்கு நிறுவினர். கிறித்தவ தேவாலயங்களைப் புதிதாக நிர்மாணிக்கவும், பழைய ஆலயங்களைப் பழுது பார்க்கவும் பிர்ஞ்சியர் தங்கள் பொருளாதாரத்தின் பெரும் பகுதியைச் செலவிட்டனர். மாகியில் உள்ள கிறித்தவ ஆலயம் கி. பி. 1700இல் கொடுங்கல்லூர் பாதிரிமார் கட்டுப்பாட்டிலும், பின்னர் புதுவை ஆர்ச் பிஷப் (Pondi-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

cherry arch Bishop) வசமும் தற்போது கோழிக்கோடு பாதிரிமார் கட்டுப்பாட்டிலும் இருந்துவருகிறது.

மங்காலாபுரத்திலிருந்து ஆங்கிலோ — இந்தியர்களும், கொல்லத்திலிருந்து மலையாளக் கிறித்தவர்களும், மாகியில் குடியேறினர். மாகி, கோவா, மங்கலாபுரம் ஆகிய பகுதிகள் தமக்குள் நல்லுறவு கொண்டு விளங்கின. இப்பகுதியினரிடையே திருமண உறவும் இருந்து வந்திருக்கின்றது. இங்கு வசித்து வந்த பிரஞ்சியர், போர்த்துக்கீசியர், ஆங்கிலேயர் முதலியோர் தங்களுக்குள் சுமூகமான உறவு கொண்டிருந்தனர் என்று மாகியில் கிடைத்த பழைய குறிப்புகள் கூறுகின்றன. இதனால், பிரஞ்சியர் வருகைக்கு முன்பே போர்த்துக்கீசியர் இங்கு வந்திருக்கலாம் என்று நம்பப்பட்டாலும், அதற்குச் சரியான சான்றுகள் கிடைக்கவில்லை. கொல்லத்திலிருந்து வந்து மாகியில் குடியேறிய கிறித்தவர்கள் ஆரம்பத்தில் செல்வந்தர்களாக இருக்கவில்லை ஏனெனில் ஆங்கிலோ இந்தியர்கள் அவர்களைவிட பலவகையிலும் முன்னேற்றம் பெற்றிருந்தனர். இதனால் மலையாளக் கிறித்தவரின் முன்னேற்றம் தடைப்பட்டது. பிரஞ்சியராட்சி முடிவடைந்தபின் ஆங்கிலோ இந்தியரின் செல்வாக்கு குறைய ஆரம்பித்ததால், மலையாளக் கிறித்தவர் முன்னேற்றம் அடையத்தொடங்கினர். 'கோயில்கள் ஒரு நாட்டின் ஆன்மாவாக விளங்குகின்றன' என்ற கூற்று மாகியைப் பொறுத்தவரை உண்மையாகும். இங்குள்ள பல தரப்பட்ட கோயில்களே இதற்குச் சான்றாகும்.

வடகேரளாவில், ஒரு காலத்தில் 'அடிமை வணிகம்' நடந்து வந்திருக்கின்றது. டச்சு, போர்த்துக்கீசிய, பிரஞ்சு அரசுக் குறிப்புகளில் 'அடிமை வணிகம்' பற்றிய செய்திகள் பல இடங்களில் காணக்கிடைக்கின்றன. பிரஞ்சுக்காரரும் மாகியில் 'அடிமை வணிகம்' நடத்தி வந்திருக்கின்றனர். அடிமை வணிகத்தில் சிறுவர்களையேபிரதமானமாக விற்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வந்தனர். ஏழு வயது முதல் பன்னிரண்டரை வயது வரையுள்ள குழந்தைகள் மூன்றரை ரூபாயிலிருந்து இருபது ரூபாய் வரை விலை போனதாக அறியப்படுகிறது. இந்த அடிமை வணிகத்தில் தலைச்சேரி ஆங்கிலேயருக்கும், மாகி பிரஞ்சியருக்குமிடையே ஓர் ஒப்பந்தம் பின்பற்றப்பட்டது. இவ்வொப்பந்தத்தின் அடிப்படையில், மாகியிலிருந்து தப்பி, தலைச்சேரி வரும் அடிமைகளை ஆங்கிலேயர் திரும்பவும் பிரஞ்சியரிடம் ஒப்படைக்க வேண்டும். அவ்வாறே, தலைச்சேரியிலிருந்து தப்பி மாகி வரும் அடிமைகளைப் பிரஞ்சியர் ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கவேண்டும். பெருவாரியான அடிமைகள் தப்பி வரும் நிகழ்ச்சிகள் நடைபெற்றதால் அடிமைகளைப் பதிவு செய்ய வேண்டியது அவசியமாயிற்று. பதிவு செய்யப்படாத அடிமைகள் அவர்களின் முதலாளிகளிடமிருந்து விடுதலை பெற்றவராகக் கருதப்பட்டனர்.

மாகியில் பிரஞ்சியராட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட 'நீதி மன்றம்' (Place de Justice) இன்றும் தொடர்ந்து தனது சேவையை நிகழ்த்தி வருகிறது. இக்காலத்தில் இந்நீதி மன்றம், 'துணை நீதி மன்றம்' (Sub-Court) என்றும், 'துணைப் பிரிவு நீதிமன்றம் (Sub-divitional Magistrate Court) என்றும் இரு பிரிவுகளாகச் செயல்பட்டு வருகின்றது. தவறு செய்பவர்கள் உயிருள்ள வரை அடிமைகளாக இருப்பதற்குச், சட்டத்தில் இடம் அளிக்கப்பட்டது. பொதுவாக எல்லாக் குற்றத்திற்கும் வழங்கப்பட்ட தண்டனைகள் மிகக் கடுமையானதாகவே இருந்தது.

வணிகப் பின்புலத்தின் அடிப்படையில் இந்தியாவில் காலூன்றிய வெளிநாட்டார், தங்கள் இடத்தைப் பத்திரப்படுத்தியதோடு இந்தியாவின் அரசியலிலும் ஈடுபடத் துவங்கினர். இதில் ஆங்கிலேயர் முழுமையான அளவில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெற்றி கண்டனர். இறுதிக் கட்டத்தில் பிரஞ்சியர், இந்தியாவில் புதுச்சேரி. காரைக்கால், மாகி, ஏனம் பகுதி களில் மட்டுமே தங்களுடைய ஆட்சியைச் சுருக்கிக்கொள்ள வேண்டியதாயிற்று.

கி.பி. 1791, ஏப்பிரல் மாதம் மாகியில் நகராட்சி (Municipality) அமைப்பினை நிறுவி, அதற்கு 'ழாம் ழாக்கு தானியல் பொய்யே' என்பவர் தாமே தலைமை மேயராக இருந்து செயல்பட்டார். 'பொய்யே' தம்மைத் தாமே மேயராக்கிக் கொண்டது, பிரஞ்சுக் காலாட் படையின் அதிகாரி 'மெனேசுக்கும்', அவர் நண்பர் 'லேங்லாதுக்கும்' பிடிக்கவில்லை பொய்யேவுக்கும், மெனேசுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டு நீதிமன்றம் வரை சென்றனர். நீதி மன்றத்தில் மெனேசுக்குச் சாதகமாகவே தீர்ப்பு வழங்கப் பட்டது.

கி.பி. 1791, ஜூன் மாதத்தில் புதுச்சேரியிலும், 1792 ஜூன் மாதத்தில் மாகியிலும், பிரஞ்சியர் குடியேற்ற சபை (Colonial Assembly) அமைப்பு ஆட்சி முறையைத் துவக் கினர். இதற்கிடையில் மாகி மறுபடியும் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ்கொண்டு வரப்பட்டது. பின்னர் பிரஞ்சியர் வசமானது. மாகியையும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளை யும் ஆண்டு வந்த மன்னர் பரம்பரையினர் தங்கள் ஆட்சி யைப் பறி கொடுத்தனர். 'தியர்' இனத்தைச் சேர்ந்த மாகி மக்கள் சிலர் பிரஞ்சியருடன் நல்லுறவு கொண் டிருந்தனர்.

கி.பி. 1789-இல் பிரஞ்சுப் போர் ஒரு நூற்றாண்டு கண்டபோது மாகியில் 'பிரஞ்சுக் குடியரசு' தோற்றுவிக்கப் பட்டது. இதை நினைவுபடுத்தும் வகையில் மாகியில் 'சுதந்திரம் – சமத்துவம் - சகோதரத்துவம்' என்று பொறிக்கப்பட்ட 'ஸ்தூபி' ஒன்றினை நிறுவி, அதன்மேல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மரியாளின் சிலையை அமைத்தனர். 'லா மர்ஸெயிலேஸ்' என்ற பிரஞ்சுப் பாடல் மாகியில் கி.பி. 1795-இல் தேசிய கீதமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. தியர், முக்குவர் (அரயர்) ஆகிய இன மக்கள் பிரஞ்சியராட்சியில் பலவகையிலும் முன்னேற்றம் அடைந்திருந்தனர்.

மாகியில் இருந்த ஆரம்பப் பள்ளிக்கூடம் கி.பி. 1938 இல் பிரஞ்சியரால் லபூர் தொனேயின் பெயரிடப்பட்டு உயர்கல்வி வரை பயிற்றுவிக்கப்பட்டு வந்தது. பிரஞ்சு மொழிக் கல்விக்காக ஆண்களுக்கு (Ecole de garson) என்றும் பெண்களுக்கு (Ecole de fille) என்றும் பள்ளிகள் தனித்தனியாக நிறுவப்பட்டன. பெண்கள் (Ecole de fille) பள்ளி 1972-ஆம் ஆண்டு முதல் அரசு எல்.பி. பெண்கள் பள்ளி (Govt. Girls L. P. School) என்று அழைக்கப்பட்டு வருகிறது. இத்தகு கல்விக் கூடங்கள் மாகி மக்கள் பிரஞ்சு, ஆங்கில மொழியைக் கற்றுக் கொள்ள உதவியதோடு பிரான்சுக்குச் சென்று அலுவல் பார்க்கவும் உதவியதால் அவர்கள் மேன்மேலும் முன்னேற்றம் அடைந்து வந்தனர்.

பிரஞ்சு மொழி ஆட்சி மொழியாகவும், அலுவல் மொழியாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது. பிரஞ்சுக் குடிமக்கள் பிரவே படிப்பில் (Bravet) தேர்ச்சி பெற்றால் பிரான்சு சென்று உயர் கல்வி பெறவும் பிரஞ்சியர் வாய்ப்பு வசதியைச் செய்து தந்தனர்.

பிரஞ்சியர் மாகி மக்களைச் சாதாரண எழுத்தர் பதவி முதல், நாட்டு நிர்வாகம் வரை பல அலுவல்களிலும் பங்கு பெறச் செய்தனர். தலைச்சேரியிலிருந்த ஆங்கிலேயருடன் நல்லுறவு கொண்டு நாட்டில் நிரந்தர அமைதி நிலவச் செய்தனர். புதிய சாலைகள் அமைப்பு, அனைவருக்கும் கல்வி, மக்கள் பாதுகாப்பு போன்ற திட்டங்களைத் திறம்பட நடைமுறைப் படுத்தினர். 1962

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆம் ஆண்டு முதல் மாகி நகர் முழுமைக்கும் குடிநீர் வசதியை நகராட்சியே செய்தது. பிரான்சிலிருந்து கொண்டு வந்த பழ மரங்களைப் பல இடங்களில் நட்டனர்.

மாகி நகராட்சிக்கு, தியர் இனத்தைச் சேர்ந்த முதல் மேயராக 'வருவன் குட்டி' தேர்ந்தெடுக்கப் பட்டமை தியர் இனத்திற்குப் பெருமையான செயலாகக் கருதப்பட்டது. ராமோட்டி கோபாலன், கக்காட்டு சுகுமாரன், சகாதேவன் போன்றோரும் மேயர் பதவி வகித்துவந்துள்ளனர். பிரஞ்சியரின் நகராட்சியில் மேய ருக்குப் பெரும்பான்மையான அதிகாரங்கள் வழங்கப் பட்டிருந்தன. மாகியில் கி.பி. 1881, மார்ச் 12 முதல் செயல்பட்டு வந்த பிரஞ்சு நகராட்சி, 1974-ஆம் ஆண்டு இந்திய நகராட்சிச் சட்டத்தால் (Indian Municipal Act) செயலிழந்தது.

மாகி விடுதலைப் போராட்டம்

மகாத்மா காந்தி 1934, ஜனவரி 13-ஆந் தேதி, நாட்டுப் பற்றைப் பற்றி ஒரு சொற்பொழிவாற்றிய பின் மாகி மக்களின் மனதில் சுதந்திர வேட்கை பெருக்கெடுத்தது. இவ்வேட்கையால், பிரஞ்சு அரசுக்கு எதிராக மாகி இளைஞர்கள் ஒன்று கூடி 'இளைஞர்கள் சங்கம்' (Youth League) என்ற அமைப்பை நிறுவினர். மாகியில் உள்ள பல கட்சித் தலைவர்களின் ஒத்துழைப்பும் இதற்குக் கிடைத்தது. இதற்கு முன்பு 'விளையாட்டுச் சங்கம்' (Circle de Sportif) ஒன்றைப் பிரஞ்சியர் நடத்திவந்தனர். அந்த விளையாட்டுச் சங்கத்தில் வரி கட்டாத காரணத்தால் உறுப்பினர்களிடையே தகராறு உண்டாகியது. இதனால், உறுப்பினர்களில் சிலர் வெளியேறி, 'மாகி விளையாட்டுச் சங்கம்' (Sports Club of Mahe) என்ற புது அமைப்பினை ஏற்படுத்தினர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதற்கிடையில் புதுச்சேரியில் பஞ்சாலைத் தொழிலாளர்களைப் பிரஞ்சு அரசு சரிவரக் கவனிக்காததனால் தொழிலாளர் குடும்பங்கள் துன்பப்பட்டன. இதனால் தொழிலாளர்கள் ஒன்றுகூடிப் போராட்டம் நடத்தினர். அப்போராட்டத்தில் பிரஞ்சு அரசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 12 பேர் இறந்தனர். இதைக் கண்டித்து, தொழிலாளர் தலைவர் வ. சுப்பையா பிரான்சு சென்று பிரஞ்சுத் தொழிலாளர்களைப் போலவே எங்களையும் நடத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். இவ்வேண்டுகோளைப் பிரஞ்சியர் ஏற்கவில்லை. அதனால் புதுச்சேரியில் பிரஞ்சியருக்கு எதிராக, தொழிலாளர் நல உரிமைக்குப் போராட்டம் நடத்த "மகா ஜனசபை" என்ற அமைப்பு தோன்றியது. 1937-இல் தோன்றிய மகா ஜனசபையின் புதுச்சேரிப் பகுதி தலைவராக எல். எக்ஸ். துரைசாமி என்பவர் தலைவராக நியமிக்கப்பட்டார். இவ்வமைப்பிற்கு ஜவஹர்லால் நேருவின் ஆதரவும் கிடைத்தது.

007478

இதன் எதிரொலியாக மாகியிலும் 'மகா ஜனசபை' யின் அமைப்பு ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. இச்சபையின் தலைவராக ஐ. கே. குமாரன் நியமிக்கப்பட்டார். கி.பி. 1936, செப்டம்பர் மாதத்தில் பிரஞ்சியரின் நல்லாதரவுடன், புதுச்சேரி மேயர் தலைமையில் 'பிரஞ்சு—இந்தோ கட்சி' (French - Indo Party) துவக்கப்பட்டது. புதுச்சேரி இணைப்புப் போராட்டத்தின் காரணமாக மகாஜன சபையும், பிரஞ்சு—இந்தோ கட்சியும் பல தடவை மோதிக் கொண்டன. இம் மோதலில் அதிகமாக நட்டமடைந்தவர் மகா ஜன சபையினரே!

இதே காலகட்டத்தில் பிரஞ்சியர் தம் ஆட்சிக்குட்பட்ட பிரஞ்சுக் குடிமக்களை இரண்டு வகையினராகப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரித்தனர். 1. பிரஞ்சுப் பெற்றோருக்குப் பிறந்தவர். 2. பிரஞ்சுக் குடியுரிமை பெற்ற ஆணுக்கோ, பெண்ணுக்கோ பிரஞ்சிந்தியாவில் பிறந்தவர். இந்தியக் குடியுரிமையை உதறி விட்டு, முழுதும் பிரஞ்சுக்காரராக மாறியவர்கள் முதல் தரக் குடிமக்களாகக் கருதப்பட்டனர். மற்றவர்கள் இரண்டாந்தரக் குடிகளாகக் கருதப்பட்டனர். இப் பிரிவினையினால் 'மகா ஜன சபை' யினர் கோபம் கொண்டனர்.

ஏறக்குறைய இதே காலகட்டத்தில் புதுச்சேரி பிரஞ்சுப் பள்ளி ஆசிரியர் இராஜ மாணிக்கம் என்பவர் கோட்டும் சூட்டும் உடுத்தாமல் கதர் வேட்டியும் ஜிப்பாவும் அணிந்து வந்தமைக்காக அவரைத் தற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்தனர். இச் சம்பவத்தின் எதிரொலியாக மாணவர்களும் போராட்டம் நடத்தினர். இப்போராட்டத்தில் மாணவர்களை ஈடுபடுத்தியமைக்காக ஐ. கே. குமாரன், கோவி ஆகியோருக்குச் சிறைத் தண்டனை கிடைத்தது.

கி. பி. 1929 ஆம் ஆண்டு லாகூரில் கூடிய இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டுப் பிரதிநிதிகள் வெள்ளையரை இந்தியாவை விட்டு வெளியேறுமாறு விண்ணப்பித்துக் கொண்டனர். உப்புச் சத்தியாக்கிரகம், வெள்ளையனே வெளியேறு இயக்கம், அந்நிய பொருள் மறுப்பு இயக்கம் போன்ற போராட்டங்கள் வெள்ளையருக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தன. இறுதியாக ஆங்கிலேயரிடமிருந்து, 1947, ஆகஸ்ட் 15-இல் இந்தியா விடுதலை பெற்ற பிறகுதான், புதுச்சேரியில் ("பிரான்சிஸ் குவித் லேந்து") 'பிரஞ்சுக்காரர்களே வெளியேறு இயக்கம்' மேலோங்கத் தொடங்கியது. இதைத் தொடர்ந்து இந்திய அரசும் பிரஞ்சுக்காரர்களை அவர்களுடைய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மரியாதையைக் காப்பாற்றிக் கொண்டு வெளியேறுமாறு கேட்டுக் கொண்டது. ஆனால் பிரஞ்சியர், பிரஞ்சிந்தியப் பகுதிகளை விட்டுப் போக மறுத்தனர். அதற்குப் பதிலாக தங்கள் பிரஞ்சுக் கொடி இந்தியாவில் பறக்க வேண்டும் என்றே விரும்பினர். இதன் விளைவாக இந்தியர்களைத் திருப்திபடுத்த, கோழிக்கோடு, மசூலிப்பட்டினம் ஆகிய இடங்களில் தங்களுக்குச் சொந்தமான வணிக நிறுவனங்களை, பிரஞ்சியர் இந்திய அரசுக்கு அளித்தனர்.

கி.பி. 1948 ஆம் ஆண்டு ஜுன் மாதம் பாரிசில், பிரஞ்சுப் பாராளுமன்றம் கூடியது. அதில், பிரஞ்சியர் தமக்குச் சொந்தமான இந்திய இடங்களைப் பற்றி விவாதித்தனர். அந்தந்த இடங்களில் தேர்தல் வைப்பதற்கு இந்திய அரசின் அனுமதியையும் பெற்றனர். மகா ஜன சபையைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு, இந்தியாவில் பிரஞ்சு அரசு தேர்தல் நடத்துவது பற்றிக் கருத்து வேறுபாடு இருந்தது. ஆயினும், இந்திய அரசு அனுமதி வழங்கியிருப்பதால், தேர்தல் முடிவை எதிர்பார்த்து பொறுமையுடன் காத்திருந்தனர்.

கி.பி. 1948 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம், சந்திரநாகூரில் இத்தேர்தல் நடந்தது. மொத்தமுள்ள 24 இடங்களில் 22 இடங்களை இந்திய தேசியக் காங்கிரசார் கைப்பற்றினர். இத்தேர்தல் முடிவுகள் சந்திரநாகூரை இந்தியாவுடன் இணைக்க வேண்டும் என்னும் விருப்பத்தை வெளிப் படையாகவே காட்டியது. இதே மாதிரியான தேர்தல் முடிவுகள் தான் புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனம் பகுதிகளில் ஏற்படும் என்றஞ்சிய பிரஞ்சியர்' தேர்தல் நாளை அக்டோபர் 24 ஆம் தேதி அன்று மாற்றி வைத்தனர்.

பள்ளூரில் கூடிய மகாஜன சபை உறுப்பினர்கள், பிரஞ்சியரின் அநியாயங்களையும், அக்கிரமங்களையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்டனம் செய்தனர். இதன் எதிரொலியாகப் பிரஞ்சுப் போலீசார் மகாஜன சபையினர் மீது வழக்குத் தொடுத்தனர். இவ்வழக்கின் அடிப்படையில் ஐ. கே. குமாரன், பி.கே. ராமன், சி.இ. பரதன், பி.சிசுபாலன், எம். பரதன் போன்றோரைக் கைது செய்ய ஆணை பிறப்பித்தனர். இதனால் மாகி மக்கள் பிரஞ்சியர் மீது ஆத்திரப்பட்டுக் கொதித்தெழுந்தனர். ஐ.கே. குமாரனும் அவரது கூட்டாளியினரும் மாகி முனிசிபாலிடி முன்னர் சத்தியாக் கிரகம் செய்வதற்காகப் புறப்பட்டுச் சென்றனர். பிரஞ்சு அரசின் கைக்கூலிகள் சிலர் ஐ.கே. குமாரனைத் தடுத்து நிறுத்தித் தாக்க ஆரம்பித்தனர். ஆனால் ஐ.கே. குமாரனின் கூட்டாளிகள் கைக் கூலிகளை அடித்து நொறுக்கிவிட்டு மாகி நகராட்சியின் உள்ளே வலுவில் நுழைந்து அலுவலகக் குறிப்பேடுகளை வெளியே கொண்டு வந்து பகிரங்கமாக எரியூட்டினர். இச்சம்பவம் பிரஞ்சு ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டிய ஓர் எண்ணத்தை மாகி மக்களிடையே எழுப்பியது.

எழுபது பேர் அடங்கிய கூட்டம் ஒன்று திடீரென்று மாகிக் காவல் நிலையத்தைத் தாக்கிக் கைப்பற்றியது. அங்கிருந்த காவலர்களைக் கீழ்ப்படியுமாறு கேட்டுக் கொண்டது. காவலர்களும் வேறு வழியில்லாமல் சரணாகதி அடையும் நிலைக்கு ஆளாயினர். பின்னர் மாகி நிர்வாகி பெரிய்யேயும் அவர் குடும்பத்தினரையும் சிறைவைத்துவிட்டு அரசாங்க மாளிகையைத் தங்கள் உரிமையின் கீழ்கொண்டு வந்தனர். பிரஞ்சியராட்சி இவ்வாறு மாகியில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக மாகியில் பறந்த பிரஞ்சுக் கொடி அக்டோபர் 22ஆம் தேதி இறக்கப் பட்டது. இந்தியாவின் (மூவண்ண) தேசியக் கொடி ஐ.கே. குமாரன் தலைமையில் ஏற்றப்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு ஐ. கே. குமாரன் தலைமையில் 'பாதுகாப்புக் குழு' (Defence Council) ஒன்று ஏற்படுத்தப் பட்டது. அக்குழு மாகியின் அரசியல் நிர்வாகத்தை மேற்பார்வை செய்து வந்தது. நீதி மன்றம், போக்கு வரத்து, கூட்டுறவு நிறுவனம், கருவூலம், வங்கி, வருவாய் அலுவலகம் முதலியனவெல்லாம் எப்போதும் போலவே இயங்கி வந்தன. பாதுகாப்புக் குழுவின் ஆணைகட்குக் கட்டுப்பட்டு பணியாற்றுவோம் என்று காவலர்கள் உறுதி மொழி அளித்தனர். மாகியில் பிரஞ்சியராட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்த நிகழ்ச்சியை இந்திய தேசிய வாதி கள் வரவேற்றனர். மாகிப் பகுதியின் ஆட்சியை இந்திய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மக்கள் கேட்டுக் கொண்டனர். ஆனால் இந்திய அரசு உடனடியாக மாகிப்பகுதியைத் தன் ஆட்சியின் கீழ் கொண்டுவர விரும்பவில்லை. ஏனெனில், மக்கள் ஆதரவு பிரஞ்சி யருக்கா, அல்லது இந்தியாவுக்கா என்று அறிந்து கொள் வதற்கு வாக்கெடுப்பு ஒன்றை வைத்துக்கொள்ள பிரஞ்சி யருக்கு முன்னதாகவே இந்தியா அனுமதி அளித்ததே இதற்குக் காரணமாகும்.

இதற்கிடையில் கொழும்பிலிருந்து சைகோனுக்குப் பயணம் செய்து கொண்டிருந்த 'கொம்மந்தாம்பரி' என்ற பிரஞ்சுக் கப்பலுக்கு, 'மாகிக்குச் சென்று மறுபடியும் பிரஞ்சியராட்சியை ஏற்படுத்தவும்' என்று ஒரு வான்வழிச் செய்தி (Radio Message) கிடைத்தது. பிரஞ்சுக் கப்பலும் இவ்வாணையை ஏற்று மாகிக்குச் சென்று நங்கூரமிட்டது. பிரஞ்சுக் கப்பலையும், பிரஞ்சியரையும் பார்த்த மக்கள் ஏதோ பெரிய போர் நடக்கப் போகிறது என்று அச்சப் பட்டு மாகியை விட்டு வெளியேறத் தொடங்கினர். தங்களைக் கேள்வி கேட்க யாருமில்லை என்ற துணிவில், பிரஞ்சியர் மறுபடியும் மாகியில் பிரஞ்சுக் கொடியை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாட்டினர். புதுச்சேரி ஆளுநர் 'பரோன்' (Baron) என்பவர் முன்னூறு பேர் அடங்கிய இராணுவப் பிரிவு ஒன்றினை 'திகோத்ருவேன்' என்னும் கப்பலில் ஏற்றிக் கொண்டு மாகியை அடைந்தார். புதுச்சேரி ஆளுநர் பரோனும், மாகி நிர்வாகி பெரிய்யேயும் ஆலோசித்து, மாகியில் பிரஞ்சியராட்சியை மறுபடியும் துளிர்க்கச் செய்து விட்டுப் புதுச்சேரி திரும்பினர். மாகியில் பிரஞ்சியர் ராணுவத்தை வரவழைத்த இந்நிகழ்ச்சி புதுச்சேரி மலையாளிகட்குப் பிடிக்கவில்லை.

மக்கள் தீர்ப்பை அறிந்து கொள்வதற்காக, மாகியில் மட்டும் முன் கூறிய காரணங்களால் தேர்தல் நடத்தப் பெறவில்லை. ஆனால் புதுச்சேரி, காரைக்கால், ஏனம் பகுதிகளில் தேர்தல் நடத்தப்பட்டது. பிரஞ்சியரின் சூழ்ச்சியால் இத்தேர்தல் வெற்றிகள் அவர்கட்கு அனுகூல மாகவே முடிந்தன. இவர்தம் சூழ்ச்சியை அறிந்த இந்திய தேசிய வாதிகள் தேர்தல் வெற்றியை எதிர்த்தனர். தேர்தலைப் பார்வையிட வந்த பிரஞ்சுப் பிரதிநிதி 'லாம்ழனி' இந்திய அரசும், பிரஞ்சு அரசும் கூடி ஆலோசித்து பேச்சு வார்த்தை மூலம்தான் ஒரு முடிவு காணமுடியும் என்று கூறினார். ஆனால் சந்திரநாகூரில் நடந்த தேர்தல் முடிவுகள் இந்தியாவுக்குச் சாதகமாக இருந்ததால் 1949, மே 2-ஆந் தேதி சந்திரநாகூர் இந்திய அரசுடன் இணைந்தது.

மாகியில் பிரஞ்சியர் அவர்கட்கு எதிராகப் போராடிய மகாஜன சபையினரை மிகவும் கொடுமைப் படுத்தினர். அவர்களோடு தொடர்பு கொண்ட மற்றவர்களையும் பிரஞ்சியர் சிறையில் அடைத்தனர். இதற்கிடையில் சுதந்திர இந்திய மக்கள் கம்யூனிஸ்ட்காரர்களின் ஆதிக் கத்தை விரும்பவில்லை. அதனால் கம்யூனிஸ்ட்காரர்கள் மாகியைப் பாதுகாப்பு இடமாகக் கருதி அங்கே தஞ்சம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புகுந்தனர். மாகியில் பிரஞ்சியரை எதிர்த்தால் தங்களுக்குத் தங்குமிடமில்லாமல் போய்விடுமோ என்றஞ்சி, கம்யூனிஸ்ட்காரரர்கள் மகாஜன சபையினரை எதிர்க்க ஆரம்பித்தனர்.

கி.பி. 1950-இல் மகாஜன சபையினர் பிரஞ்சியருக் கெதிராக மறுபடியும் போராடத் தொடங்கினர். மாகி மக்கள் ஒவ்வொருவர் மனத்திலும் பிரஞ்சியரை வெளியேற்ற வேண்டும் என்ற எண்ணத்தை விதைத்தனர். இதனால் மகாஜன சபையினர் சிலருக்குக் கொடுந்தண்டனை களைப் பிரஞ்சியர் விதித்திருந்ததால் அவர்கள் மாகிக்கு வெளியே அழியூர், செறுக்கல்லாயி ஆகிய இடங்களில் இருந்து கொண்டு பிரஞ்சியர்க்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மகாஜன சபையின் மற்ற உறுப்பினர் களுடைய சொத்துக்களைப் பிரஞ்சு அரசு பறிமுதல் செய்தது. வீடுகளில் கொள்ளை அடித்தல், தீ வைத்தல் முதலிய கொடுமைகளையும் மகாஜன சபையினருக்கு எதிராகப் பிரஞ்சியர் புரிந்தனர். மாகியை இந்திய அரசுடன் இணைக்க விரும்பிய ஊழியர்களை இடமாற்றமும், வேலைநீக்கமும் செய்தனர். வேலையிழந்தோரைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பினையும் மகாஜன சபை யினரே ஏற்கவேண்டி வந்தது.

ஏறக்குறைய இதே கால கட்டத்தில் புதுச்சேரி, காரைக்கால், ஏனம் பகுதி மக்களும் பிரஞ்சியராட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப் பல நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்தனர். இது வரை பிரஞ்சு அரசை ஆதரித்து வந்த புதுவைப் பிரஞ்சிந்திய சோசலிசக் கட்சியினரும் இந்தியாவுடன் இணைவதே நல்லது என்ற முடிவுக்கு வந்தனர். இந்த மாற்றத்தை மகா ஜனசபையினர் மிகவும் மகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாகியின் அருகிலுள்ள முண்டோக்கு தேசம் என்னும் ஊருக்குச் செல்ல, இந்திய அரசுக்குச் சொந்தமான இடத்தைக் கடந்துதான் செல்ல வேண்டியிருந்தது. 'மய்யழி புழா' என்னும் நதி மாகியையும், முண்டோக்கு தேசத்தை யும் பிரிக்கக் கூடியதாயிருந்தது. இந்நதியின் மீது பாலம் ஒன்றைக் கட்டினால் இந்தியப் பகுதியைக் கடக்காமல் முண்டோக்கு தேசத்திற்குச் செல்லலாம் என்று பிரஞ்சியர் திட்டம் போட்டிருந்தனர். இத்திட்டத்திற்கு மலபார் கலெக்டர் மறுப்பு தெரிவித்ததால் இதனை நிறைவேற்ற முடியவில்லை.

பின்னர் 1953-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 'இரயில் மேம்பாலம்' (Railway over Bridge) ஒன்றைக் கைப்பற்றும் முயற்சியில் பிரஞ்சியர் ஈடுபட்டனர். இம்முயற்சியை இந்திய அரசு எதிர்த்தது. பிரஞ்சுப் பகுதியைச் சேர்ந்த கிராமங்களாகிய சாலக்கரை, செறுக்கல்லாயி போன்ற ஊர்களை இணைப்பதனால் இப்பாலம் தங்களுக்கே சொந்தம் என்று எண்ணி இப்பாலத்தைப் பிரஞ்சியர் பழுது பார்க்கத் தொடங்கினர். இந்திய அரசு இச்செயலை வன்மையாகக் கண்டித்துப் பாலம் தமக்கே சொந்தம் என்று வழக்கு தொடர்ந்தது. இவ்வழக்கைத் தொடர்ந்து பாலத்தின் ஒரு பகுதியில் இந்தியக் காவல் படையும், மற்றொரு பகுதியில் பிரஞ்சுக் காவல் படையும் நிறுத்தப் பட்டிருந்தது. வழக்கின் முடிவில் ஆவணக் குறிப்புகளின் அடிப்படையில் இப்பாலம் இந்திய அரசுக்கே சொந்தம் என்று தீர்ப்பானது. எனவே, பிரஞ்சுக் காவல் படை ஆகஸ்டு 28-ஆந் தேதி பின் வாங்க வேண்டியதாயிற்று.

1953-ஆம் ஆண்டு மே மாதம் முதல் மாகியின் எல்லைப் புறங்களில் சுங்கச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டன. இச் செயல் மகா ஜனசபையினரின் விடுதலை வேட்கைக்குச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சாதகமாக அமைந்தது. இந்திய அரசு, மாகிக்குத் தபால் மூலம் வரும் பார்சல்களுக்குச் சுங்கவரி விதித்த பின்னரே மாகிக்கு அனுப்பி வைத்தது. இந்திய அரசின் இச்செய்கை பிரஞ்சு அரசுக்குப் பிடிக்கவில்லை. இதனால் அவர்கள் இந்திய அரசின் மீது குற்றம் சாட்டினார்கள். மாகியை அடுத்துள்ள அழியூரில், 1954–ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 8-ஆம் நாளன்று, ஐ. கே. குமாரன், சி. இ. பரதன், பி. கே. ராமன், பி. குமாரன் ஆகியோரின் தலைமையில் மகா ஜனசபையினரின் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில், மாகியில் சத்தியாக்கிரகம் ஒன்று நடத்தத் தீர்மானம் இயற்றப்பட்டது. இதன்படி பி.கே. உஸ்மான். என்.சி. கண்ணன் ஆகியோர் இந்திய மூவண்ணக் கொடி தாங்கி, நிர்வாகி அலுவலகம் முன்பு சத்தியாகிரகம் செய்தனர். ஆனால் மனிதத் தன்மையற்ற பிரஞ்சியர் ஓநாய்கள் மாதிரி அவர்களை இழுத்துச்சென்று பிரஞ்சுப் போலீசாரிடம் ஒப்படைத்தனர். போலீஸ்காரர்கள் அவர்களுக்கே உரிய முறையில் சத்தியாக்கிரக வீரர்களை நையப் புடைத்தனர். அதோடு மட்டுமின்றி அவர்கள் ஏந்திச் சென்ற இந்திய மூவண்ணக் கொடியையும் எரித்தனர்.

இதன் பின்னர் 1954, ஏப்ரல் 11-ஆம் நாள் சோசலிசக் கட்சியைச் சேர்ந்த கோளோத்து மாதவ குருப்பு, போந்தயாட்டு பாலன்நாயர் போன்றோர் தலைமையில் பலர் இந்திய மூவண்ணக் கொடியேந்தி பள்ளூரில் சத்தியாக்கிரகம் நடத்தினர். இவர்களையும் பிரஞ்சுக் காவலர் கைது செய்து கடுமையாகத் தண்டித்தனர். இவை போன்ற சத்தியாக்கிரக நிகழ்ச்சிகள் மகாஜனசபையினரின் விடுதலைப் போராட்டத்திற்கு மேலும் வலு சேர்த்தன. பெரும் போராட்டங்களுக்குப் பிறகு 1954, ஏப்ரல் 27ஆம் நாள் செறுக்கல்லாயி என்னும் இடம் பிரஞ்சியர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெரும்பாலும் மாகிக்கு வெளியிலிருந்து கொண்டே மகாஜனசபையினர் மாகி விடுதலைக்காகப் போராடினர். பள்ளூர், பந்தக்கல் போன்ற கிராமங்களுக்கு உணவுப் பொருட்களை எடுத்து செல்ல முடியாதபடி பிரஞ்சியர்க்கு இடையூறு செய்தனர். கிராமத்து மக்களின் உணவுப் பற்றாக் குறையைப் போக்குவதற்கு, அங்குள்ள பிரஞ்சுக் காவலராலோ, பிரஞ்சியரை ஆதரித்தவராலோ இயல வில்லை. எனவே, 1954, மே மாதம் 1ஆம் நாள் மாகி முனிசிபாலிடி கவுன்சிலர்கள், தங்களுக்கேற்பட்ட நெருக்கடியை உணர்ந்து மாகிப் பகுதியை இந்திய அரசுடன் இணைக்கச் சம்மதம் தெரிவித்தனர். இச்செயல் மகாஜன சபையினருக்குப் பெரும் மகிழ்ச்சி அளித்தது. ஆனால் பிரஞ்சியர்க்குப் பலத்த இழப்பை உண்டாக்கியது.

மாகி வழியே செல்லும் போக்குவரத்து வாகனங்கள் அனைத்தும் பிரஞ்சியருக்குச் சுங்கம் கட்ட வேண்டிய கட்டாயத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. மக்கள் இந்திய அரசுடன் இணைய வேண்டும் என்று போராடத் தொடங் கியதிலிருந்து பிரஞ்சியர், போக்குவரத்திற்குச் சுங்கம் விதித்தது மட்டுமின்றி, பயணிகளை மிரட்டுவது போன்ற செயல்களிலும் இறங்க ஆரம்பித்தனர். ஒருமுறை மாகி நிர்வாகி பாஸ்கல் (Pascal) என்பவர் இந்திய அரசுக்குச் சொந்தமான பகுதிகளில் பயணம் புரிகையில், இந்திய சுங்கத்துறை அதிகாரிகள், அவருடைய உயர் பதவியை மதியாமல் சோதனையிட்டனர். இதற்கு எதிர்ப்பு தெரிவிக் கும் வகையில் மாகியுடன் இந்திய அரசு தொடர்பு கொண்டுள்ள போக்குவரத்துச் சாலைக் கதவுகளை மூடச் செய்தார். இதனால் தென்னிந்தியாவிலிருந்து மாகி வழியே வடஇந்தியா செல்லும் போக்குவரத்துகள் மிகவும் பாதிக்கப் பட்டன. இந்திய தேசியவாதிகளோ மாகியின் எல்லைப் புறத்திலே புதிய சாலைகளை உருவாக்கினர். இதன் பின்னர் எல்லா வண்டிகளும் புதிய சாலை வழியே போக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆரம்பித்தன. வண்டிகள் தடம் மாறியதால் மாகியின் சாலைகள் பயனற்றதாயின. சாலைவழிச் சுங்கவரி கிடைக்காததால் பிரஞ்சியர் பொருளாதாரக் குறைவுக்கு உள்ளாயினர்.

மாகி விடுதலை

1954, ஜுன் 30ஆம் நாள் மாகி மேயர் சகாதேவன், விடுதலையை விரும்பி, தான் இந்திய யூனியனில் சேர்ந்து கொள்வதாக உறுதிமொழி எடுத்துக் கொண்டார். இந் நிகழ்ச்சி பிரஞ்சியருக்குப் பேரிடியாய் அமைந்தது. ஜுலை 3ஆந் தேதி கூடிய தேசியவாதிகள் கூட்டத்தில் மகாஜன சபையினர் ஒரு தீர்மானத்தை இயற்றினர். அதன்படி, 'எந்த ஒரு நபரும் பிரஞ்சு அரசுப் பதவியை உதறி எறிந்து விட்டு வந்தால், அவர்கள் பெற்றுவந்த அதே ஊதியத்தில் இந்திய அரசுப் பகுதியில் வேலை வாங்கித் தருவதாக விளம்பரப்படுத்தினர். இதனை அடியொற்றி மாகியில் பல இடங்களில் விடுதலைப் போராட்டங்கள் நடந்தன.

ஜுலை 7ஆந் தேதி மகாஜனசபைத் தலைவராகிய ஐ.கே.குமாரன், மாகி நிர்வாகி 'தெசாம்' (De chame) என்பவருக்கு, எச்சரிக்கை மடல் ஒன்று எழுதினார். அக்கடிதத்தில், 'மாகி மக்கள் இந்திய அரசுப்பகுதியுடன் இணைய விரும்புவதாகவும் அதனால் பிரஞ்சியர் தாமாகவே மாகியை விட்டு வெளியேறி விடுவது நல்லது என்றும் குறிப்பிட்டிருந்தார். இக்கடிதத்திற்கு எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. ஐ.கே. குமாரன் தலைமையில் மாகி மக்கள் திரண்டெழுந்து, மாகி நிர்வாகி அலுவலகத்தை முற்றுகையிட்டனர். சில மணி நேரப் பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு 'தெசாம்' மாகியின் விடுதலைக்குச் சம்மதம் தெரிவித்தார். 1954, ஜுலை 16ஆம் தேதியன்று மாகியை, மாகி மக்களுக்கே வழங்கி விட்டுத் தெசாம் கப்பலேறினார். அன்றே மாகி நிர்வாக அலுவலகத்தில் ஐ.கே. குமாரன் இந்திய மூவண்ணக் கொடியை ஏற்றினார். ஏனைய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரஞ்சிந்தியப் பகுதியிலிருந்தும் பிரஞ்சியர் வெளியேறி. 1954, நவம்பர் 1ஆம் நாள் பிரான்சு நாட்டிற்குக் கப்பலேறினர். இருந்த போதிலும் இந்திய அரசுக்கும் பிரஞ்சு அரசுக்கும் இடையே நிலையான ஒப்பந்தம் ஒன்று 1962 ஆகஸ்ட் 16 ஆம் தேதி அன்று கையெழுத்திடப்பட்டது. இந்நாளைத்தான் புதுவை சுதந்திர தினம் ("De Jour Transfer") என்று ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 16 ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.

பிரஞ்சியர் இந்தியாவை விட்டு வெளியேறினாலும் தாம் ஆட்சி புரிந்த இந்திய மக்களில் விரும்புவோர்க்கு 'பிரஞ்சுக்' குடியுரிமையை வழங்கிச் சென்றனர். இவர்களும் இவர்களின் வழிவந்தோருமே இன்றும் புதுச்சேரி மாநிலப் பகுதிகளில் பிரஞ்சிந்திய நாகரிகத்தின் நினைவுச் சின்னங்களாகக் காணப்படுகின்றனர். மாகியின் விடுதலைக்குக் காரணமான 'மகா ஜனசபை கட்சி' 1957, இல் கலைக்கப்பட்டது. இக்கட்சி உறுப்பினர்கள் பலர் காங்கிரசில் சேர்ந்தனர். மகா ஜனசபை உறுப்பினர்களான பத்மநாபன், சி.இ. பரதன், பி.கே. ராமன், ஐ.கே.குமாரன், வி. என். புருஷோத்தமன், கேசவன் போன்றோர் சுதந்திர மாகியின் சட்டசபை உறுப்பினராக விளங்கி வந்துள்ளனர்.

பார்வை நூல்கள்

1. Gangadharan. C. H., Mayyazhi History' (in Malaylam).
2. Gazetteer, Pondicherry, Vol: I & II.
3. Sen. S.P., The French in India (1763-1816.)
4. Malleson, G.B., 'History of the French in India.'
5. Ramasamy. A., History of Pondicherry.
6. Saroja Sundararajan, Glimpses of the History of Karaikal.'
7. மணிமேகலை பிரசுர ஆசிரியர் குழு, லேனா தமிழ்வாணன், (ப. ஆ.) 'பாண்டிச்சேரி மாநிலம்.'
8. Union Territory of Pondicherry, "A Compendium of Pondicherry", 1954-1987.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8. ஏனம் வரலாறு

இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் உள்ள ஆந்திர மாநிலத்தின் கிழக்குக் கோதாவரி மாவட்டத்தில் ஏனம் அமைந்துள்ளது. சுமார் முப்பது சதுரகி.மீ. பரப்புள்ள ஏனம், கோதாவரி நதியின் கிழக்குப் பகுதியில் பாயும் கிளை நதியாலும், கோரிங்கா (Coringa) நதியாலும் சூழப்பட்ட பகுதியாக அமைந்துள்ளது. கோரிங்கா நதியே ஏனம் நகரினை இரண்டாகப் பிரித்துள்ளது.

ஏனம் நகராண்மையைச் சேர்ந்தவையாக, 1. கனகலா பேட்டா(Kanakalapeta) 2. ஜம்பவான்பேட்டா(Jambavan peta) 3. அக்ரஹாரம் (Agraharam) 4. மெட்டாக்கூர் (Mettakur) 5. குரசாம்பேட்டா(Kurasam peta) 6. ஃபாரம் பேட்டா (Faram peta) 7. தாரியல் திப்பா (Darial tippa) 8. குரேம் பேட்டா (Guerem peta) என்னும் எட்டு கிராமங்கள் குறிக்கப்பட்டுள்ளன. சக்கிலிய (Cobbler) இனத்தவரே ஜம்பவான் பேட்டாவில் மிகுதியாக வசிக்கின்றனர். அக்ரஹாரம், மெட்டாகூர், குரசாம் பேட்டா, குரேம் பேட்டா போன்ற கிராமங்களில் மீனவ இனத்தவர் அதிகம் உள்ளனர்.

ஏனம் பகுதி விவசாயத்திற்குக் கோதாவரி நதியிலிருந்து நீர் வரும் பழைய வாய்க்காலின் பெயர் 'பிரஞ்சுக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கால்வாய்' (French Kalva) என்பதாம். 1949-ஆம் ஆண்டில் பிரஞ்சு–இந்திய உடன்பாட்டின் அடிப்படையில் கோதாவரிநதியிலிருந்து ஏனம் பகுதிக்கு நீர்ப்பாசன வசதிக்காக இக்கால்வாய் ஏற்படுத்தப்பட்டது. ஏனத்தின் மண்வளம் விவசாயத்திற்கு ஏற்புடையதாயிருப்பினும், தண்ணீர்ப் பற்றாக்குறையின் காரணமாக மிகுதியான மகசூல் பெற வாய்ப்பில்லாமல் போகிறது. உட்பகுதியில் நெல் விளைச்சல் மிகுதியாகவும் கடற்கரையை ஒட்டியுள்ள பகுதிகளில் மிளகாய், நிலக்கடலை போன்றவையும் பயிராகின்றன.

ஏனம்—பெயர்க் காரணம்

இந்தியாவில் பிரஞ்சியரால் கைப்பற்றப்பட்ட மூன்றாவது இடமாகத் திகழ்கிறது ஏனம் நகரம். சந்திர நாகூர் கி.பி. 1673-லும், புதுச்சேரி 1673-லும், ஏனம் 1723-லும், மாகி 1725-லும், காரைக்கால் 1739-லும் கைப்பற்றப்பட்டன. 'ஏனம்' பெயர்க் காரணம் குறித்து பலவிதக் கருத்துக்கள் நிலவி வருகின்றன. 'இனாம்' என்பதன் திரிந்த வடிவமே 'ஏனம்' என்பர் சிலர். தக்காணத்து நவாப் இனாமாக அளித்ததன் காரணமாக 'ஏனம்' என்ற பெயர் வந்தது என்று கூறப்படுகின்றது. ஆனால் நவாப்பால் இனாமாக வழங்கப்படுவதற்கு முன்பே இப் பகுதிக்கு 'ஏனம்' என்ற பெயர் வழங்கப்பட்டு வந்திருக்கின்றது. விஜயநகரத்துக் கிளைமொழி ஒன்றில் 'ஏனம்' என்னும் சொல் 'கடற்கரை' என்னும் பொருளில் வழங்கப் படுகின்றது. அவ்வாறே, ஏனம் பகுதியும் கடற்கரையாதலால் இப்பெயர் காரணப் பெயராகவே தொடக்க கால முதற்கொண்டே வழங்கி வந்திருக்க வேண்டும்.

ஏனம்-பிரஞ்சியர் வசமாதல்

துய்ப்ளேக்சு ஆளுநராகப் புதுச்சேரி வருவதற்குச் சிறிது காலம் முன்பு கி.பி. 1723-இல் தான் ஏனம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரஞ்சியர் வசமாயிற்று. அதற்கு முன்னர் ஏனம் இராஜமுந்திரி அரசரின் ஆட்சிக்குட்பட்ட பெத்தபூர் (Peddapur) பகுதியில் அடங்கிய ஒரு சிற்றூராகவே இருந்தது. இப்பகுதியில் தக்காண சுபேதார் கப்பம் கட்டிக்கொண்டு, இராஜமுந்திரி அரசரின் மேற்பாவையில் நிர்வாகம் செய்து வந்தார். ராஜமுந்திரி மன்னரிடமும் நிஜாம் அலியிடமும் ஏனம் பகுதிகளில் பிரஞ்சியர் வணிகம் நடத்த முழுமையான சுதந்திரம் பெற்றனர். தொடக்கத்தில் பிரஞ்சியர் எவ்விதமான ஆயுதக்கிடங்கும் வைத்துக் கொள்ள அனுமதிக்கப் பெறவில்லை. வணிக நோக்கிற்காகப் பல புதிய கட்டிடங்களை மட்டும் கட்டிக் கொண்டனர். ஏனம் கடற்கரை, சிறிய கப்பல்கள் மட்டுமே வந்து செல்லும் படியான ஆற்றுத்துறை முகமாக அமைந்திருந்ததால், பெரிய துறைமுகமாக வளர்ச்சி பெற வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

பிரஞ்சுக் கிழக்கிந்திய வணிக நிறுவனம்

கி.பி 1723-இல் பிரஞ்சுக் கிழக்கிந்திய நிறுவனம் தனது வணிக அமைப்பை ஏனத்தில் நிறுவியது. தொடர்ந்து நான்காண்டுகளில் பிரஞ்சியருக்குத் தாம் எண்ணிய பலன் கிட்டாததால் ஏனத்தை விட்டு நீங்க வேண்டிய சூழலுக்கு உள்ளாகினர். பின்னர் மீண்டும் கி. பி. 1731-இல் துய்ப்ளேக்சின் காலத்தில்தான் ஏனத்தில் பிரஞ்சியர் தங்கள் வணிக நிறுவனத்தை ஏற்படுத்தினர். கி.பி. 1735-இல் பிரஞ்சு வணிக நிறுவனம் நவாப் ரூஸ்தும்கானுடன் (Roustoum Khan) வணிக அடிப்படையிலான ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. கி.பி. 1742-இல் வணிக நிறுவனம் திருத்தியமைக்கப்பட்டு, தெ சோயிசிஸ் (De Choisis) என்பவர் நிர்வாகியாக நியமிக்கப்பட்டார். அவருக்குப் பின்னர், கி.பி. 1747, அக்டோபர் 27-இல் சின்ஃபிரே (Sinfray) என்பவர் நிர்வாகியானார். கி.பி. 1743-இல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏனம் பகுதிக்குப் பிரஞ்சியரால் கொடுக்கப்பட்டு வந்த வாடகை நிறுத்தப்பட்டது. மீர் முகம்மது அலிகான் (Mir Mohammed Alikhan) கி.பி. 1747–இல் ஏனத்தின் நில உரிமை அனைத்தையும் பிரஞ்சியருக்கே வழங்கினார். கி.பி. 1750-இல் ஹைதராபாத் நிசாம் முசாபர் ஜங்கு ஏனம் பகுதியின் ஆட்சி உரிமையைப் பிரஞ்சியருக்கே வழங்கினார்.

கி.பி. 1753-இல் அவுரங்காபாத்தில் சலாபத்ஜங்குக்கும் பிரஞ்சியருக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. தக்காணத்துச் சுபேதாராக விரும்பிய சலாபத் ஜங்கு இவ்வுடன் படிக்கையின் அடிப்படையில் புஸ்ஸியின் உதவியை நாடினார். தன்னுடைய தக்காணப் பகுதிகளில் (Chicacole, Nellore, Rajamundry) பிரஞ்சுப் படைகளைத் தங்க வைத்து, அப்படைகளுக்குச் செலவாக ஆண்டொன்றுக்கு ரூபாய் இரண்டு லட்சம் வரை செலவுசெய்தார். சலாபத் ஜங்கு தக்காணத்தின் சுபேதாராவதற்குப் புஸ்ஸியும் உதவினான். இதனால், வடக்கு சர்க்கார் பகுதியில் பிரஞ்சியரின் ஊடுருவலுக்கு ஏனம் இன்றியமையாத இடமாக விளங்கியது.

முதல் தோல்வி

கி.பி. 1747 – 1754 ஆகிய ஏழாண்டுக் காலமாக ஆங்கிலேய—பிரஞ்சுக் குடியேற்ற நாடுகளில் நிகழ்ந்த போர்களில் இந்தியாவின் பிரஞ்சுப் பகுதிகள் பல ஆங்கிலேயர் வசமாயிற்று. கர்நாடகப் போரில் பலம் சேர்ப்பதற்காக, புஸ்ஸியைத் தக்காணப் பகுதியிலிருந்து லல்லி தொலாந்தல் (Lally Tolladalale) வரவழைத்தான். இதன் காரணமாகப் பிரஞ்சியர் செல்வாக்கு வடக்குப் பகுதியில் குறையத் தொடங்கியதால் மசூலிப்பட்டினம், ஏனம் ஆகிய இரு பகுதிகளையும் ஆங்கிலேயர் வசம் இழக்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேண்டியதாயிற்று. கி.பி. 1753 முதல் 1765 வரை ஏனம் ஆங்கிலேயர் வசமிருந்ததால் அக்காலத்திய செய்திகள் பற்றித் தெளிவாக அறிந்துகொள்ள இயலவில்லை. கி.பி. 1765, மே 15-ந்தேதி ஆங்கிலேயருடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கபுல பாலம் (Kapula palem), ஏனம் (Yanam) போன்ற கிராமங்களைப் பிரஞ்சு ஆணையர் 'பேனன்' (Yoan Yacques Panon) என்பவர், ழீன் ஒயிட் கில் (Jean White Hill) ஜார்ஜ் டால்பென் (George Dolben) என்போரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

வணிக உடன்படிக்கைகள்

ஏனம் பகுதியின் உரிமையைப் பெற்ற பிரஞ்சு ஆணையர் பேனன், ராஜமுந்திரி ஆட்சியாளருடனும், 'நவாப் நிசாம்' அலியுடனும், ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். இவ்வுடன்படிக்கையின் அடிப்படையில் பிரஞ்சு வணிக நிறுவனத்தார் முழுமையான சுதந்திரமுள்ள வணிக முறையை மேற்கொண்டனர். திம்மராஜாவின் ஆட்சிக்குட்பட்டிருந்த பெத்தபூர் (Peddapur) ஊரின் ஒரு பகுதியாக இருந்த ஏனத்தில், பிரஞ்சியர் கோரிங்கா நதிக்கரை ஓரமாகத் தங்கள் பண்டகசாலையை நிறுவிக்கொண்டனர். கடலிலிருந்து படகுகள் சரக்குகளை ஏற்றிக்கொண்டு இவ்வாற்றின் வழியாகப் பண்டக சாலையை அடைவதற்கு வசதியான துறைமுகமாக ஏனம் பயன்பட்டது.

வாரச் சந்தை

கி.பி. 1765 ஆம் ஆண்டிலிருந்து ஏனத்தில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை தோறும் வாரச் சந்தை செயல்பட்டு வந்தது. மக்கள் தங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் இச்சந்தையிலேயே வாங்கினர். ஏனத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திலிருந்து மூன்று கி. மீ. தூரத்திலுள்ள நீலப்பள்ளி (Neelapalli) என்னும் கிராமம் அப்போது ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. நீலப்பள்ளி கிராமத்திலும் செவ்வாய்க்கிழமையன்றே வாரச் சந்தை செயல்பட்டு வந்ததால் இவ்விரண்டு கிராமத்தாருக்குமிடையே அடிக்கடி தகராறுகள் ஏற்பட்டு வந்தன. இதனால் ஏனத்தில் உள்ள பிரஞ்சியர், சென்னையில் உள்ள ஆங்கிலேய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, நீலப்பள்ளி வாரச்சந்தையைச் சனிக்கிழமைக்கு மாற்றினர்.

இரண்டாவது தோல்வி

ஒரிசா — ஆந்திரா கடற்கரைப் பகுதியில் ஏனம் சிறந்த வணிகத் துறைமுகமாக விளங்க வேண்டும் என்பதற்காகவும், முழுமையான வணிகச் சுதந்திரம் பெறவேண்டியும் ஆங்கிலேயருக்கு, மசூலிப்பட்டினம், மற்றும் அதனைச் சூழ்ந்த கஞ்சம் (Ganjam), மோட்டுப் பள்ளி (Motupalli) போன்ற கிராமங்களையும் அளிக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளாயினர். ஆனால், எதிர்பாராதவிதமாக ஆங்கிலேயருடன் ஏற்பட்ட போரில் ஏனத்தையும் இழந்துவிட்டனர். கி.பி. 1783, ஜூலையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, போரில் தோற்ற ஏனம் பகுதி பத்தொன்பது மாதத்தின் பிறகே, 1785 மார்ச்சில், ஆங்கிலேயரிடமிருந்து பிரஞ்சியர் பெற்றனர். பிரஞ்சியர் சார்பாக மார்ட்டின் என்பவரே ஆங்கிலேயரிடமிருந்து ஏனத்தைப் பெற்றார். பின்னர் இப்பகுதி மொல்லாந்தெர் (Mollandre) என்பவராலும், புளுத்தெர் (Bluter) என்பவராலும் நிர்வகிக்கப்பட்டு வந்தது. இவர்கள் மிகக் குறுகிய கால நிர்வாகியாகவே செயல் புரிந்தனர்.

பிரஞ்சிந்திய நிர்வாகம்

கி.பி. 1787, பிப்பிரவரி 14 இல் 'காஸ்திரி' (Castries) என்பவர் தெரிவித்த ஆலோசனையின்படி, புதுச்சேரி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரைக்கால், மாகி, ஏனம், சந்திரநாகூர் ஆகிய ஐந்தும் பிரஞ்சு அரசர் ஆட்சிக்குட்பட்டவையாகவும், பிறபிரஞ்சிந் தியப் பகுதிகள் வணிக நிறுவனத்தின் புதிய காலனியாகவும் அமைக்கப்பட்டன. மாகி, ஏனம், காரைக்கால் பகுதிகளில் தலைமை நிர்வாகியாகப் பொறுப்பேற்றிருப்பவர் புதுச்சேரி உயர்மட்டக் குழுவின் (Counseil Supe'rieur) உறுப்பினராக இருந்து செயல்படுவார். மற்ற உறுப்பினர்கள் உள்ளூர் ஆட்சிக் குழுவில் பிரஞ்சிந்திய நிறுவன ஊழியராக வேலை பார்த்து வருவர். பிரான்சிலிருந்து வரும் எந்தச் செய்தியும் முதலில் புதுச்சேரிக்கே வரும். புதுச்சேரி ஆளுநரே அச் செய்தியினை ஏனைய பிரஞ்சிந்திய நிர்வாகியரின் பார் வைக்கு அனுப்பி வைப்பார்.

ஏனத்தின் சிறப்புகள்

பிரஞ்சுப் புரட்சி அதன் குடியிருப்பு நாடுகளிலும் பரவி பல சமுதாய மாற்றங்களையும், சீர்திருத்தங்களையும் மக்கள் வாழ்வில் ஏற்படுத்திற்று. இக்காலத்தில் ஏனம் பகுதியில் பிரஞ்சிந்திய நிறுவனத்தின் வணிகம் பெருமளவு உயர்ந்தது. ழீன் லா தெ லோரிஸ்தொன் (Jean Law De Lauriston) என்னும் பிரஞ்சு அதிகாரி தன்னுடைய நினைவுக் குறிப்பில் (Memoire of 1767), "ஏனத்திலிருந்து நாம் நல்ல தரமுள்ள துணிகளைப் (Guiness) பெறுகின் றோம். இப்போதுள்ள சூழ்நிலை தொடர்ந்து நீடித்தால் நாம் ஆண்டொன்றுக்கு, வணிகத்தின் மூலமாகவே ஒரு மில்லியன் லிவர்களை வருமானமாகப் பெறலாம். மேலும், இங்கிருந்து அரிசி, எண்ணெய், தேக்கு முதலியன மட்டுமின்றி மனிதனுக்கும், மிருகத்திற்கும் பயன் படும் பல பொருட்களை ஏற்றுமதி செய்து வருகின்றோம். அதற்கேற்றாற் போல் இங்குள்ள துறைமுகம் வசதியாய் அமைந்திருக்கின்றது. போர்க் காலங்களில் ஆங்கிலேயர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களிடம் மாறுபட்ட மன்னர்களுடன் கூட்டு சேர்ந்து கொண்டு ஆங்கிலேயரை எதிர்க்கவும் ஏனம் பயனுள்ள இடமாகத் தெரிகிறது. சிறு சிறு பகுதிகளை ஆண்ட குறுநில மன்னர்களை ஆங்கிலேயர் கட்டுப்படுத்தி வைத் திருந்தாலும், உள்நாட்டு மன்னர்களுடன் இரகசியத் தொடர்பு வைத்துக் கொள்வதற்கு ஏனம் இன்றியமை யாத இடமாகத் திகழ்கிறது'', என்று எழுதியுள்ளமை எண்ணிப் பார்க்கத்தக்கது.

உப்பு உற்பத்தியில் ஏனம் மற்றொரு முக்கிய வணிகத் தலமாக விளங்கியது. இங்கு விளையும் உப்பு வங்காளத் திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. பிரான்சிலிருந்து இந்தியா விற்கு வரும் கப்பல்கள் இங்கிருந்து திரும்புகையில் மிக உயர்ந்த பருத்தித் துணிவகைகளை ஏற்றிச் சென்றுள்ளன. பிரஞ்சுக்குடியுரிமை பெற்ற ஏனத்துமக்கள் தங்கள் வாழ்க்கை அமைதியாகக் கழிய வேண்டி விரும்பினரே ஒழிய பிரஞ்சியரின் அரசியலிலோ, நிர்வாகத்திலோ தலையிட விரும்பவில்லை.

சோனரத் (Sonnerat)

புளுத்தெர்க்குப் (Bluter) பின்னர் கி. பி. 1790 இல் ஏனம் நிர்வாகியாக சோனரத் (Sonnerat) என்பவர் பதவி யேற்றார். உயிரியல் துறையில் தேர்ந்த அறிவு பெற்ற வரும், சிறந்த கடற்பயணியுமான இவர் தெலுங்கு மொழி யிலும் இசையிலும் ஈடுபாடு மிக்கவர். இவர் எழுதிய நூல் "சீன இந்தியப் பயணம் (Voyage Aux Indes Orientales Et En Chine") என்பதாகும். பிரஞ்சுப் புரட்சிக் காலத்தில் இவர் ஏனத்தின் நிர்வாகியாகப் பணிபுரிந்தமை சிறப்புக் குரியதாகும்.

ஏனம் நிர்வாகி சோனரத், மற்ற வணிகர்களைப் போன்றே தானும் வணிகம் செய்ய விரும்பினார், இவருடைய வணிகத் தலையீடு காரணமாக, தன் பதவி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதிகாரத்தை ஏனைய வணிகர்களிடம் முறைகேடாகப் பயன்படுத்தினார். இதனால் பாதிக்கப்பட்ட பிரஞ்சு வணிகர்கள், சோனரத் மீது புகார் சுமத்தி, புதுச்சேரி ஆளுநர் தெபிரெஸ்னேவுக்கு (De. Fresne) அனுப்பினர். 5—6—1790இல் திமார்ஸ் (Mr. Demars) என்னும் பிரஞ்சுக் காரர் சோனரத் மீது எழுதிய புகாரின் வாசகம்—, "வங்காளத்துடன் உப்பு வணிகம் புரியும் என்னைப் போன்ற பத்து வணிகர்களுக்குத் தன் பதவி அதிகாரத்தைப் பயன் படுத்தி, பல இன்னல்கள் செய்துவரும் ஏனம் நிர்வாகி சோனரத்தை, உடனடியாகப் புதுச்சேரிக்குத் திருப்பி அழைத்துக் கொள்ளவேண்டும்" என்பதாகும். அப்போது புதுச்சேரி பிரஞ்சுப் புரட்சியின் பாதிப்பில் ஈர்க்கப்பட் டிருந்ததால், இப்புகாருக்கு நடவடிக்கை எடுப்பதில் புதுச்சேரி ஆளுநர் கவனம் செலுத்தவில்லை. இந்நிகழ்ச்சி ஏனத்துப் பிரஞ்சுக் குடிகளிடத்தே, புதுச்சேரி பிரஞ்சிய ராட்சியின்மீது வெறுப்புகொள்ள வைத்தது.

பின்னர் கி.பி. 1791, பிப்பிரவரி மாதத்தில் லக்கானே (Mr. Laccanne) என்னும் பிரஞ்சுக்காரர் சோனரத் மீது கொடுத்த புகாரையும் புதுச்சேரி அரசாங்கம் புறக் கணித்தது. கி. பி. 1791, ஏப்பிரலில் புதுச்சேரியிலிருந்து ஏனத்திற்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. ஏனைய பிரஞ்சுப் பகுதிகளைப் போலவே ஏனம் பகுதியிலிருந்தும் இரண்டாவது பிரதிநிதியாக ஒருவரைத் தேர்வு செய்து பிரஞ்சு-தேசிய சபைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று அச்சுற்றறிக்கை கூறியது. பிரஞ்சுக் குடியுரிமை பெற்ற ஏனம் மக்கள் சோனரத்திற்கு எதிரான நடவடிக்கை எடுப்பதற்கு இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொள்ள முற்பட்டனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிர்வாகப் பூசல்கள்

கி. பி. 1792 ஏப்பிரல் 22இல் மரித்தி (Mariethe), சவாகெ (Sauvageot), புய்ரெத்தி (Buirette) என்னும் மூவருடன், சோனரத்தின் பழைய எதிரிகளான திமார்ஸ், லக்கானே ஆகிய இருவரும் சேர்ந்து ஏனத்தில் ஒரு நிர்வாக அமைப்பைத் தோற்றுவித்தனர். மேலும் ஃபரே (Faure), அதே (Audet), பிதாய்ஸ் (Pithois) என்னும் மூவரையும் தங்கள் அமைப்பிற்கு வலுசேர்க்கும் விதத்தில் அழைத்துக் கொண்டனர். இவர்கள் அனைவரும் ஒன்றுகூடி ஏனத்தில் புதிய 'காலனி நிர்வாக சபை' ஒன்றைத் தோற்றுவித்தனர். இச்சபையில் மரித்தி தலைவராகவும், திமார்ஸ், பிதாய்ஸ் என்னும் இருவரும் உதவியாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

சோனரத்தின் அனைத்து உரிமைகளையும், அதிகாரங் களையும் புதிய அரசியல் அமைப்பிற்கு மாற்றித்தரும்படி வற்புறுத்தினர். சோனரத்தும் அதற்கிசைந்து தனது அதிகாரம் முழுமையும் புதிய காலனி சபைக்கு மாற்றிக் கொடுத்துவிட்டுத் தனது இறுதிக் காலத்தை அறிவியல் படிப்பிற்காக அர்ப்பணிக்கத் தொடங்கினார். புதிய குடியேற்ற சபையின் மூன்று உறுப்பினர்களும் நகராட்சி, நீதி, நிர்வாக உரிமைகளைக் கவனித்துக் கொண்டனர். இவ்வுரிமைகளை ஏற்றதும் இவர்கள் செய்த முதற்காரியம் சோனரத்தின் வருவாயைக் குறைத்ததுதான். இறுதியாக இக்குழு புதுச்சேரியிலுள்ள இரண்டாவது பிரதிநிதி அமைப்பிற்கு தான்சஸ் (Danzas) என்பவரைத் தேர்வு செய்து அனுப்பி வைத்தது. ஏனத்தின் பிரதிநிதியாக புதுச்சேரி சென்ற தான்சஸ் அங்குள்ள சூழ்நிலையை விளக்கி, தன்னால் சட்டத்திற்கு புறம்பாக நடக்க இயலாது என்றும், ஏனம் நிர்வாகத்தை மறுபடியும் பழைய நிர்வாகி யிடம் ஒப்படைத்துவிட்டு மன்னிப்புக் கேட்டாலொழிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தன்னால் ஏனத்தின் பிரதிநிதியாகச் செயல்பட முடியாது என்றும், கடிதம் எழுதினார். இக்கடிதம் ஏனம் பிரஞ்சியரிடையே ஒரு பிளவினை ஏற்படுத்திற்று.

பிதாய்ஸ், அதே, ஃபரே என்னும் மூவரும் புதிய காலனிசபை அமைப்பிலிருந்து விலகி ஏனத்தின் நிர்வாகத்தைப் பழைய நிர்வாகியிடமே ஒப்படைக்க வேண்டும். என்று வற்புறுத்தினர். ஆனால் எஞ்சிய ஐவரோ, இதற்கு மாறாக நடந்ததால் காவல் நீதித்துறையினரால் கட்டுப் பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டனர். இருப்பினும் இக்குழு, தங்களுடைய சில மாத ஆட்சி முறையைப் புதுச்சேரி சபையினரிடம் எடுத்துரைத்துக் கொண்டே இருந்தது. கி.பி. 1792 ஜூலையில் புதுச்சேரியில் அமையவிருக்கும் புதிய குடியேற்ற சபைக்கு ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கச் சொல்லி ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஏனம் மக்கள் 'ஃபெர்னியர்' (Fernior) என்பவரைத் தமது பிரதிநிதியாகத் தேர்வு செய்து அனுப்பினாலும் சிறுபான்மை, பெரும்பான்மை என்னும் 'பிளவு இருந்துகொண்டே வந்தது. கி.பி. 1792 ஆகஸ்டில் இரு குழுக்களும் (சிறு பான்மை, பெரும்பான்மை) ஒன்று சேர்ந்து தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்து ஒன்றிணைக்க ஒரு ஆணையரை அனுப்பி வைக்கும்படி புதுச்சேரி குடியேற்றச் சபையைக் கேட்டுக் கொண்டனர்.

இப்பிரிவினையின் காரணமாக காவல் துறையும், நீதித் துறையும் தன்னிச்சையாகச் செயற்பட முடியாமற் போயின. ஏனத்திலுள்ள இந்தியரிடம் பிரஞ்சியரின் இப் பிளவு ஏளனத்திற்குள்ளாகியது. இருப்பினும் இந்தியக் குடிகளும் இருபிரிவாகப் பிரிந்து பெரும்பான்மை பக்கம் பலரும், சிறுபான்மை பக்கம் சிலரும் தமது சார்பினை நல்கினர். கி.பி. 1792, செப்டம்பரில் இரு குழுவினையும் இணைப்பதற்காக மெர்சி தெ அர்சி (Mercy de Arcy),

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லாஃபையே (La Faye) என்னும் இரு ஆணையரைப் புதுச்சேரி நிர்வாகம் ஏனத்திற்கு அனுப்பிற்று. இவர்களிருவரும் சிறுபான்மை, பெரும்பான்மை பிரிவினரிடமும், சோனரத்திடமும் பதினேழு முறை கூடி, சமரசப் பேச்சு நடத்தியும் பயன் இல்லாமற் போயிற்று.

எதிர்பாராத மாற்றம்

கி.பி. 1792, அக்டோபர் 16-ஆந் தேதி, இந்நிலையில் ஒரு திடீர் மாற்றம் ஏற்பட்டது. பிராமண வணிகன் ஒருவன் 'பிதாய்ஸ்' என்னும் பிரஞ்சியரிடம் ஓர் உதவி வேண்டிச் சென்றான். ஆனால் பிதாய்ஸ் அவ்வணிகனை மிகவும் கேவலமாக நடத்தி வெளியேற்றினான். உள்ளூரில் மிகவும் செல்வாக்குள்ள, அப்பிராமண வணிகன் நானூறுக்கும் மேற்பட்ட ஆயுதந் தாங்கிய ஆட்களைத் திரட்டிக் கொண்டு வந்து, திமார்ஸ் முன்னிலையில் தனக்கு நீதி வழங்குமாறு கோரினான். இத்தகு இக்கட்டான சூழ்நிலையில், இருகுழுவினையும் இணைப்பதற்காக ஏனம் வந்திருந்த இரண்டு ஆணையர்களும் அந்தப் பிராமணனின் கோரிக்கையை ஏற்று, பரிசீலிப்பதாக உறுதி செய்து அவனைத் திருப்பி அனுப்பி வைத்தனர்.

மிகக் குறைந்த அளவு எண்ணிக்கையிலான பிரஞ்சியர்கள் இத்தகு ஆபத்தான சூழ்நிலையில் தங்களுக்குள்ளே இருந்த பிரிவினைகளை மறந்துவிட்டு ஒன்றாயினர். அன்றைய தினமே பிரஞ்சியரின் பொதுக்குழு கூட்டப்பெற்று, அனைத்து அதிகாரங்களையும், உரிமைகளையும் ஏனம் நிர்வாகியிடமே ஒப்படைத்துவிட்டு, இந்திய மக்களால் ஏற்படும் இன்னல்களை நீக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர், ஏனத்துப் பிரஞ்சுக் குடிகள் அரசியலில் அதிக ஆர்வம் காட்டாமல், புதுச்சேரி காலனி சபைக்குத் தாங்கள் அனுப்பிய பிரதிநிதிகளைத் திருப்பி அழைத்துக் கொள்ளும் முடிவுக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வந்தனர். புதுச்சேரி குடியேற்ற சபை, 'ஏனத்து மக்களிடையே எவ்வித வேறுபாடும் வளர்த்துக் கொள்ள வேண்டாம்' என்று கேட்டுக் கொண்டது. கி.பி. 1792 வரையிலும் ஏனத்து மக்களிடையேயும், பிரஞ்சிந்திய நிர்வாகத்தினரிடையேயும், ஒரு முரண்பட்ட நிலையே நிலவி வந்தது.

கி. பி. 1793 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஏனத்துப் பிரஞ்சுக் குடியினர் தங்கள் மாறுபாட்டைக் காட்டத் தொடங்கினர். கி. பி. 1793, ஜனவரி மாதத்தில் தங்கள் துணைவராகச் செயல்பட ஃபுல்ழென்ஸ் (Fulgence) என்பாரைத் தேர்வு செய்தனர் ஆனால் ஃபுல்ழென்ஸ் துணைவராகச் செயல்பட மறுத்துவிட்டார். பின்னர் லாழ்ரன்ஸ் (Lagrence) ழெஸ்லின் (Geslin), புவார்ட் (Bouvard), ஃபிரமென்த் (Foremnt), மெதார் (Medar) என்னும் ஐவரையும் தேர்ந்தெடுத்து அனுப்பினர். இவர்கள் ஐவருமே தங்கள் செய்கையினாலும் நடவடிக்கையினாலும் மாறுபட்டவராயிருந்ததால் பதவிக்குத் தகுதியற்றவராயினர். இறுதியாக, 1798 மே மாதத்தில் லான்சி (Lancy) என்பவரைத் துணைவராகவும் அவருக்கு உதவியாளராக லெமைதேர் (Lemaitre) என்பவரையும் தேர்ந்தெடுத்தனர்.

இக்காலத்தில் 'பிரஞ்சிந்தியப் பகுதிகளில் பிரஞ்சியர் தனி மனித வணிகம் செய்யலாகாது' என்று பிரஞ்சிந்திய நிறுவனம் புதிய சட்டம் ஒன்று இயற்றியது. இதற்கு முக்கியக் காரணம் மாகி, ஏனம் பகுதிகளில் பிரஞ்சியர் தனிப்பட்ட முறையில் செய்த வணிகத்தின் காரணமாக பிரஞ்சிந்திய நிறுவன வணிகம் பாதிக்கப்பட்டு பொருட்களின் விலை குறையலாயிற்று.

மூன்றாவது தோல்வி

கி. பி. 1793க்குப் பிறகு ஏனம் பிரஞ்சுக் குடிகளிடையே அரசியலைப் பற்றி ஒரு மேம் போக்கான எண்ணமே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருந்து வந்தது. இக்காலக் கட்டத்தில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டதாலும் ஆங்கிலேய—பிரஞ்சுப் போர் ஏற்பட்டதாலும் ஏனம்மிகுதியான அவதிக்குள்ளாகியது. சோனரத் மீது பிரஞ்சுக் குடிகளுக்கு ஏற்கெனவே நீறு பூத்த நெருப்பாக இருந்த கசப்புணர்ச்சி மீண்டும் தலைதூக்கியது. வணிக நடவடிக்கைகளில் இடையூறு விளைவித்ததால் சோனரத் மீது இருந்த பழைய புகாரைப் புதுப்பித்தனர். சோனரத்தைத் திருப்பி அழைத்துக் கொண்டு, வணிகத்திலும் உள்நாட்டுச் செயல்களிலும் தலையிடாத புதிய நிர்வாகியை ஏனத்திற்கு நியமிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர்.

இப்பிரச்சினைக்கு முடிவு காண்பதற்காக ஏனத்துப் பிரதிநிதிகளைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்தது புதுச்சேரி நிர்வாகம். ஆனால் எதிர்பாராத விதமாக கி.பி. 1973, ஜுன் மாதம் ஏனம் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர் தொடர்ந்து இருபத்து மூன்று ஆண்டுகள் ஏனம் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. கி பி. 1814, மே 30ஆந் தேதி பிரான்சில் ஆங்கிலேயர்க்கும், பிரஞ்சியர்க்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின் படி ஏனம் கி.பி. 1816, ஏப்பிரல் 12ஆந் தேதி, பிரஞ்சியரிடமே மீண்டும் ஒப்படைக்கப்பட்டது. இதன் பின்னர் 1954 அக்டோபர் வரை ஏனம் பிரஞ்சியராட்சிக் குட்பட்டிருந்தது.

பிரஞ்சுத் துருப்புகள் காரைக்கால், மாகி, புதுச்சேரி, ஏனம், சந்திரநாகூர் என்று பல பகுதிகளிலும் சிதறிக் கிடந்ததால் ஆங்கிலேயரின் தாக்குதலை ஒரு முகமாகப் பிரஞ்சியரால் எதிர் கொள்ள முடியவில்லை; மேலும் அனைத்து உதவிகட்கும் தாய் நாட்டையே எதிர்பார்த்திருந்ததால் பிரஞ்சியர் அடிக்கடி தமது இந்தியப் பகுதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களை இழந்து திரும்பப் பெறுகின்ற சூழ்நிலைக்கு ஆளாயினர்.

ஏனம் — சமுதாய மேம்பாடுகள்

கி.பி. 1842 ஆம் ஆண்டு முதல் முதல் பிறப்பு, இறப்பு, திருமணம் முதலியன பதிவு செய்யப்பட வேண்டி, முதல் முறையாக ஓர் அலுவலகம் செயல் படத்தொடங்கியது. இசுலாமியருக்கென்று தனிப்பட்ட முறையில் இப்பதிவுகள் செய்யப்பட்டன. லயோனைச் (Lyon) சேர்ந்த செயின்ட் ஜோசப் ஆலயத்தின் பெண் பாதிரிமார்கள் பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் ஒரு பெண்கள் பள்ளியைத் தொடங்கினர். ஏனம் நிர்வாகத்தினரும் இது போன்ற சமுதாய முன்னேற்றச் செயல்களுக்குத் தங்கள் ஒத்துழைப்பினை நல்கினர். அடிவிபோலம் (Adivipolam) என்னும் காட்டைச் சேர்ந்த ஒரு நிலப்பகுதியை கி.பி.1872 ஆகஸ்டில், இருபத்தெட்டு நிலப்பட்டாக்களாக மாற்றி அரிசன மக்களுக்கு வழங்கி ஒரு கிராமத்தையே உருவாக்கினர். தற்போது அக்கிராமம் அடிவிபோலம்(Adivipolam) அல்லது ஃபாரம்பேட்டா (Faram peta) என்று வழங்கப் படுகிறது.

கி.பி. 1879-ல் உள்ளூர் நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்ள ஏனம் பகுதியில் ஒரு கவுன்சில் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. கி.பி.1880-இல் முனிசிபாலிடி ஒன்றும் உருவாக்கப்பட்டது.

தலைமையிடமான புதுச்சேரியிலிருந்து ஏனம் நீண்ட தூரத்தில் இருப்பதால் பிரஞ்சுக் காலத்தில் குறிப்பிடத் தக்க வளர்ச்சி பெற இயலவில்லை. பெரும்பாலைமையான மக்கள் விவசாயத்தை நம்பியே வாழ்ந்து வந்தனர். பாசன வசதியும் இக்காலத்தில் மேம்படவில்லை. ஏனம் பிரஞ்சியரிடமிருந்து விடுதலை பெறும் வரையில் இரண்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நடுநிலைப்பள்ளிகளே செயல்பட்டு வந்தன. மாணவர்கள் பிரஞ்சுச் சான்றிதழ் (Certificate Francais) படித்த பின்னர், தங்கள் மேற்படிப்பிற்காகப் புதுச்சேரி செல்ல வேண்டிய நிலையிலேயே இருந்தனர்.

தெலுங்கு இலக்கிய வளர்ச்சி

ஏனம் பகுதியில் பேசப்பட்டு வரும் தெலுங்கு மொழி கிழக்குக் கோதாவரி மாவட்டத்தில் பேசப்பட்டு வரும் கொச்சை கலவாத தெலுங்கின் கிளைமொழியே. பண்பாட்டிலும், இலக்கிய வளத்தாலும் சிறப்புற்று விளங்கும் அமலபுரம் (Amalapuram), ராஜமுந்திரி (Raja mundry), பெத்தபுரம் (Peddapuram), காக்கிநாடா (Kakhi nada) போலும் ஊர்கள் ஏனத்தைச் சுற்றி அமைந் திருப்பதால் அவற்றின் தாக்கம் இவ்வூரில் இருப்பதற்கான சான்றுகள் பல கிடைத்துள்ளன. 'தெலுங்கு மொழி அகராதி' (Andra Vachaspatyam) வெளியிட இவ்வூர் மக்கள் பலர் நிதிஉதவி அளித்துள்ளனர். செல்லப் பிள்ளை வேங்கடகவி (Chella Pillai Venkata Kavi) என்னும் ஏனத்துக் கவிஞர் இயற்கை பற்றிய கவிதைகள் புனை வதில் வல்லவர். இவரைத் தவிர, வி. ரெட்டி நாயுடு (V. Raddi Naidu), வி. வேங்கடசாமி நாயுடு, (V. Venkata Swamy Naidu), சாமடம் கிருஷ்டையா (Samatam Kristya) போலும் பல கவிஞர்கள் இங்கே வாழ்ந்து பல கவிதை நூல்களை இயற்றியுள்ளனர்.

ஏனத்துடன் பிரஞ்சியர் கொண்ட தொடர்பு காரண மாகப் புதுச்சேரியில் தெலுங்கு அச்சகம் ஒன்று அக் காலத்தில் செயல்பட்டு வந்தது. ஆந்திர சாகித்திய அகாதெமியில் கிடைத்த தகவலின்படி, 'பியோரே மொத்தெல்' என்னும் பிரஞ்சியரால் தொகுக்கப்பட்ட 'பிரஞ்சு-தெலுங்கு அகராதி' மிகவும் சிறப்புக்குரியதாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆனந்தரங்கப் பிள்ளையைப் பாட்டுடைத் தலைவனாக வைத்து இயற்றப்பட்ட ஆனந்தரங்க ராட்சந்தமு (Anadaranga-Ratchandamu) என்னும் கவிதை நூலை இயற்றிய 'ரங்ககவி' தெலுங்குப் புலவரே! துய்ப்ளேக்சு காலத்தில் தெலுங்கு நடன நாடகங்கள் புதுச்சேரியில் நடிக்கப் பெற்று, பாராட்டப்பட்டன.

சமயப் பொது நிலை

ஏனத்தில் உள்ள பழைய கிறித்துவ ஆலயம் இன்னமும் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதனுள் அமைந்திருக்கும் பூங்காவில் பல அரிய தாவர வகைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இவ்வாலயத்தைப் பராமரித்து வந்த ஃபாதர் கங்காலோப் (Father Ganga lope) தெலுங்கு, வடமொழி, ஆங்கிலம், பிரஞ்சு ஆகிய நான்கு மொழிகளிலும் பல அரிய நூல்களைச் சேகரித்து வைத்துள்ளார். இசுலாமியர் தொழுகைக்கென்று மசூதி ஒன்று தனியாக உள்ளது. இந்துக்கள் கோயிலாக இராஜ ராஜேஸ்வரா, வேங்கடேஸ்வரா, பிள்ளையாரய்யா என்னும் மூன்று கோவில்கள் உள்ளன. பிரஞ்சியர் காலத்தில் ஏனம் பகுதியில் சமயப் பூசல்கள் நடந்ததற்கான சான்றுகள் கிடைக்கவில்லை.

ஏனம்—விடுதலைப் போராட்டம்

இந்தியா சுதந்திரம் அடைந்த 1947 முதல் 1954-ஆம் ஆண்டு வரையில் ஏனம் பிரஞ்சியரின் ஆட்சிக் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. இக்கால கட்டத்தைப் பிரஞ்சிந்தியாவின் சுதந்திரப் போராட்டக் காலம் எனக் குறிப்பிடலாம். ஏனத்தை இந்தியாவுடன் இணைப்பதற்கான முயற்சியில் காங்கிரஸ் கட்சி உட்பட பல இயக்கங்கள் இதில் பங்காற்றியுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கி.பி. 1948, ஜூன் 8-ஆந் தேதி கையெழுத்தான ஒப்பந்தப்படி ஏனம் முனிசிபாலிடிக்குத் தேர்தல் நடத்த பிரஞ்சு அரசு முன் வந்தது. இத்தேர்தல் 1948, அக்டோபர் 24-ஆந் தேதி நடக்கும் என்று ஒப்பந்த அறிக்கை தெரிவித்தது. சுமார் ஆயிரத்தைந்நூறு வாக்காளர்கள் பன்னிரு உறுப்பினர்களை ஏனம் முனிசிபாலிடிக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்தல் நடப்பதற்குச் சில நாட்கள் முன்பாக பிரஞ்சுக் காவலர் பிரஞ்சிந்திய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் வீட்டில் பறந்த இந்திய தேசியக் கொடியை அகற்றினர். இக்கட்சியின் ஏனம் பகுதித் தலைவர் கே. வீராசாமி 'முனிசிபல் தேர்தலில் தாங்கள் போட்டியிட்டால் தங்களைப் பிரஞ்சுக் காவலர்கள் அச்சுறுத்துவதாக' மேலிடத்திற்குப் புகார் செய்தார். இறுதியில் பிரஞ்சிந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி தேர்தலில் போட்டியிட இயலாமற் போனது. காமிச் செட்டி பரசுராமநாயுடுவின் தலைமையிலான பொதுவுடைமைக் கட்சியும், ஏரா ஜெகனாதராவ், மதிம்செட்டி சத்யானந்தம் ஆகிய இருவர் தலைமையிலான மகாஜனக் கட்சியும் தேர்தலில் போட்டியிட்டன.

மகாஜனக் கட்சி இந்திய யூனியனுடன் ஏனத்தை இணைக்கக் கோரிக்கை விடுத்தது. ஆனால் பொதுவுடைமைக் கட்சியோ ஆளும் கட்சியின் நிர்வாகத்திற்கு உட்பட்டிருந்தது. முனிசிபல் தேர்தலுக்கு முன்பு, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் சார்பாக ஜி. ஜெகனாதராஜு என்பவர் நோக்கராக ஏனம் வந்தார். முனிசிபல் தேர்தல் முழுமையுமே ஒரு கண்துடைப்பு என்பதைக் கண்டு கொண்டு, பிரஞ்சியருக்கு எதிராகப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். இதற்கிடையில் நிர்வாகம், சட்ட ஒழுங்கீனம் காரணமாக முரட்டுத்தனம் அவிழ்த்து விடப்படவே மகாஜனக் கட்சியால் தேர்தலுக்குச் சரிவரப் பணியாற்ற இயலவில்லை. அதனால் சிரமம் எடுத்துக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொள்ளாமலே, மிக எளிதாகவே பொதுவுடைமைக் கட்சி முனிசிபல் தேர்தலில் வெற்றி பெற்றது.

கி.பி. 1948, அக்டோபர் முதல் 1954 ஏப்பிரல் வரையிலான காலகட்டத்தில் அரசியல் அடிப்படையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. இக்காலப் பகுதியில் புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த மேயர்கள், கவுன்சிலர்கள் இணைப்புக்கு ஒருமனதாகக் குரல் கொடுக்கத் தொடங்கினார்கள். ஏனம் நிர்வாகி அவ்வூர்த் தலைவர்களை அழைத்து இணைப்புக்கு ஆதரவான போராட்டங்களை நடத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார். ஆனால் இதைப் பொருட்படுத்தாமல், பிரஞ்சிந்திய மத்திய இணைப்புக் காங்கிரசின் செயலராக விளங்கிய ஆர். தாதலா (R. Dadala) என்பவர் ஏனம் மக்களின் நெஞ்சினில் சுதந்திரக் கனலை எழுப்பத் தொடங்கினர். "இந்திய சுதந்திரப் போராட்டத்திற்காக ஆந்திர பூமி பல அரிய செயல்களை, தியாகங்களைப் புரிந்துள்ளது. அதே மாநிலத்தைச் சேர்ந்த நாமும், பிரஞ்சியராட்சிக்கு எதிராக விடுதலை வேண்டி ஏன் போராட்டம் நடத்தக் கூடாது?" என்று அவர் பொதுமக்கள் முன்னிலையில் போராட்ட உணர்வைத் தூண்டினார்.

இதற்கிடையே காக்கி நாடாவில் ஏனம் இணைப்புக்கு ஆதரவாக செயற்குழு ஒன்று கூடியது. இக்குழுவின் தலைவராக, பைத வேங்கட நாராயணாவும் (Pydah Venkata Narayana) செயலராக பி. பயங்கராச்சாரியும் (P. Bhayankarachari) இருந்து செயல்பட்டனர். இவர்கள் ஏனம் பாலத்திற்கு அருகிலேயே இணைப்புக்கு ஆதரவாகப் பல கூட்டங்களைத் தொடர்ந்து நடத்தி, மக்களைப் பிரஞ்சியர்க்கு எதிராகச் செயல்படத் தூண்டினர். இக்குழுவின் செயற்குழு உறுப்பினர்களும் பிரஞ்சியரின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எல்லைக் காவல் பணியைப் புறக்கணித்து, ஏனத்திற்கு வண்டிகளிலும், படகுகளிலும் பொருட்கள் ஏற்றிக் கொண்டு வந்தனர். ஆந்திரப் பிரதேச அரசும் இணைப்புக்கு ஆதரவாக நடக்கும் போராட்டங்களால் ஊறு நேரா வண்ணம் ஏனத்தின் எல்லைப்புறப்பகுதிகளில் காவலை மிகுதிப்படுத்தியது. கம்யூனிஸ்ட் கட்சி உட்பட பல அரசியல் கட்சிகள் இணைப்புக்கு ஆதரவாக ஏனத்தின் பல பகுதிகளிலும் தினந்தோறும் பொதுக் கூட்டம், போராட்டம் என்று நடத்திய வண்ணம் இருந்தன.

கி.பி. 1954, ஏப்பிரல் 29 ஆந்தேதி ஏனம் பகுதியைச் சேர்ந்த ஐந்து முன்னணித் தலைவர்கள் ஏனம் நகர மண்டபத்தில் கூடிக் கலந்தாலோசித்து, இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவுக்கு கோரிக்கை மனு ஒன்றை அனுப்பினர். அம்மனுவில், 'உடனடியாக ஏனத்தை இந்தியாவுடன் இணைப்பதற்கு ஆவன செய்யுமாறு' அத்தலைவர்கள் கேட்டுக் கொண்டனர். இம்மனுவில் மேயர் மதிம்செட்டி சத்யானந்தம், முனிசிபல் கவுன்சிலர் உள்ளிட்ட பல சட்ட சபை உறுப்பினர்கள் கையெழுத்திட்டிருந்தனர். மேலும், இணைப்பை வலியுறுத்தி பாராளுமன்றத் தலைவருக்கும், குடியரசுக் கவுன்சிலுக்கும், பிரஞ்சு யூனியன் சட்டசபைக்கும் தனித்தனியாக ஒவ்வொரு தந்திச் செய்தியினையும் அனுப்பி வைத்தனர்.

இதற்கிடையில் இணைப்புக் கட்சிகள் தங்கள் ஆதரவையும், கருத்துக்களையும் வெளிப்படுத்த பல ஊர்வலங்களை நடத்தினர். 1954, மே 1 ஆந் தேதி ஏனம் பாலத்தருகில் மேயர் மதிம்செட்டி சத்யானந்தம் தலைமையில் இணைப்புக்குச் சார்பான கூட்டம் ஒன்று நடத்தப் பெற்றது. இக்கூட்டத்தில் பேசிய தலைவர்கள் பிரஞ்சியரின் அடாவடித்தனம் பற்றியும், கண் துடைப்பு நிர்வாகத்தையும் தெள்ளத் தெளிவாக மக்களுக்கு விளக்கினர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முன்னாள் மேயராகவும், சட்டபபை உறுப்பினராகவும், ஏனம் பகுதியின் பெருந்தலைவராகவும் விளங்கிய காமிச் செட்டி வேணுகோபாலராவ் நாயுடு, சுதந்திரத்தின் மேன்மை, அவசியம் குறித்தும் அந்நியராட்சியின் ஆக்கிர மிப்பு குறித்தும் பாமர மக்களின் மனங்களில் பதியும் வித மாக இக்கூட்டத்தில் பேசினார்.

சில நாட்களுக்குப் பின்னர் ஏனத்தின் பிரஞ்சு ஆணையர், மேயர் மதிம்செட்டி சத்ய நாராயண மூர்த்தியைப் பதவி நீக்கம் செய்தார். மேயரின் நடவடிக்கை களும், செயல்களும் அப்பகுதி மக்களின் பாதுகாப்புக்கு எதிராக இருப்பதால்தான் இப்பதவி நீக்கம் செய்யப் பட்டது என்று பிரஞ்சு ஆணையர் குறிப்பிட்டிருந்தார். இதனை அறிந்த ஏனம் மக்கள் பெரும்பாலோர் தங்கள் குடும்பத்துடன் கூட்டம் கூட்டமாக 'காக்கி நாடா' விற்குச் செல்லத் தலைப்பட்டனர். பிரஞ்சியரின் அடக்கு முறைக்கு அஞ்சி ஏனத்தை விட்டு வெளியேற முற்பட்ட மக்கள் பலர், இணைப்புக் குழுவைச் சார்ந்த கட்சித் தலைவர்களின் வீடுகளில் அடைக்கலமாக தஞ்சம் புகுந்தனர். சுதந்திர உணர்ச்சி மேலீட்டால் ஏனம் வீதிகளில் கூட்டமாகப் போராட்டம் நடத்தியவர் மீது அராஜம் கட்டவிழ்த்து விடப்பட்டது. இதைச் சமாளிக்க பிரஞ்சு நிர்வாகம் போராட்டக் கூட்டத்தார் மீது தடியடிப் பிரயோகம் நடத்தியது.

ஏனத்திலிருந்து பெருவாரியான மக்கள் இப்போராட் டத்தின்போது அகதிகளாக, ஆந்திராவின் மற்றபகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர். இந்திய அரசும் ஏனத்தில் நடக்கும் வன்முறையினையும், மக்கள் அடக்கு முறையினையும் எதிர்த்து, பிரஞ்சிந்திய அரசிடம் பலமான முறையீடு செய்தது. இம்முறையீட்டின் காரணமாக, புதுச்சேரியி லிருந்து பிரஞ்சு இந்திய அரசியல் பொதுச்செயலர் 'எஸ்கர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கில்' (Escargueil) என்பவர் ஏனம் வந்து வன்முறைகளால் நடந்த சீரழிவுகளை நேரடியாகப் பார்த்தார். உள்ளூரில் இணைப்புத் தலைவர்களைச் சந்தித்து நடந்த செயல்களின் உண்மைக் காரணங்களை அறிந்து கொண்டார். பின்னர், உள்ளூர் நிர்வாக முறை கேட்டிற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் புதுச்சேரியிலிருந்து இதற்கென்று ஓர் உயர் அலுவலரை நியமித்து விசாரணை செய்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஈட்டுத்தொகை அளிப்பதாகவும் உறுதிகூறினார். சில நாட்களுக்குபின்னர் கி.பி. 1954, ஜுன் 11ஆந் தேதி ஏனம் நிர்வாகி 'செலா' (Sela) என்பவர் புதுச்சேரிக்கு அழைக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக ஏனம் நீதிபதி எம். சிவா என்பவர் ஏனத்தின் தற்காலிக நிர்வாகியாக அமர்த்தப்பட்டார்.

1954, ஜுன் 12 ஆந்தேதியன்று, அராஜகக் கும்பல் ஒன்று இந்தியப் பகுதியில் உள்ள அகதிகள் முகாமிற்குத் தீயிட்டுக் கொளுத்திச் சூறையாடிதில் பத்து போராட்டத் தொண்டர்களும், ஊர்க்காவல் படையைச் சார்ந்த இரண்டு காவலர்களும் காயமடைந்தனர். இச்செயலால் சீற்றமுற்ற ஏனம் மக்கள் அகதிகள் முகாமிற்கு வந்து இணைப்புப் போராட்டத் தலைவர்களைச்சந்தித்து உடனடியாக ஏனத்திற்குள் புகுந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்தினர்.

1954 ஜுன் 13-ந் தேதி இணைப்புப் போராட்டத்திற்கு தலைமையேற்ற ஆர். தாதலாவும், எம். சத்யானந்தம், மேயர் கே. தாதய்யா, பிரஞ்சிந்திய சட்டசபை உறுப்பினர்கள், முன்னாள் மேயர்களான கே. வி. கோபால ராவ், கே. பரசுராமன், ஒய். சத்யநாராயண மூர்த்தி போன்றோரும் மற்ற முனிசிபல் கவுன்லர்களும், பிற அகதிகளும், மக்களின் பின்னணியுடன் ஏனத்தினுள் நுழைந்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தனர். ஏனம் நகர மக்களிடத்தே விடுதலை உணர்ச்சி பீறிட்டு எழுந்தது. பொதுஅலுலகங்களில் மக்கள் நுழைந்து அவற்றைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வந்தனர். ஏனத்தின் தற்காலிக நிர்வாகி, மக்களே நிர்வாகத்தை எடுத்துக் கொண்ட இந்நிகழ்ச்சியினைப் புதுச்சேரி ஆளு நருக்குத் தெரிவித்தார்.

ஆளுநருக்கு நிர்வாகி அடித்த தந்தியில், "ஏனம் நிர்வாகத்தை மக்கள் இன்று காலை ஆறு மணிக்குப் பறித்துக் கொண்டனர். அனைத்து அலுவலகங்களையும் மக்களே இயக்கி வருகின்றனர். யாரும் இந்நிகழ்ச்சியில் இறக்கவில்லை. சிலர் காயமடைந்தனர், மக்கள் எங்களை ஏனத்திலேயே பணியாற்றலாம் அல்லது புதுச்சேரிக்கும் திரும்பிவிடலாம் என்று எங்கள் விருப்பத்திற்கே விட்டு விட்டனர்" என்று குறிப்பிட்டிருந்தார். சில நாள் கழித்து ஏனத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய மேயர் சத்யானந்தம், "ஏனம் சுதந்திரம் அடைந்து விட்டதாகவும், இந்திய அரசே ஏனம் பகுதியின் ஆட்சிப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்,' என்று கோரிக்கை விடுத்தார்.

ஆர். தாதலா (R. Dadala) என்பவர் புதிய நிர்வாகி யாகப் பொறுப்பேற்றுக் கொண்டார். எம். சத்யானந்தம் தலைமையில் நிர்வாகக்குழு (Council of Administration) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவின் துணைத் தலைவ ராக ஆர். தாதலாவும், உறுப்பினர்களாக கே. பரசுராமன், ஏரா சத்ய நாராயணமூர்த்தி, கோன நரசய்யா போன் றோர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஏனம் நிர்வாகத்தைத் திறம் பட நடத்தி வந்தனர். இந்நிகழ்ச்சி, நூற்று எண்பத்து மூன்று ஆண்டுகளாக ஏனத்தில் நடைபெற்று வந்த பிரஞ்சியராட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரஞ்சியராட்சியில் ஏனத்தின் தற்காலிக நிர்வாகியாகப் பணியாற்றிய 'சிவா' என்பவர் பிரஞ்சியராட்சி பற்றியும், அவர் நம் அணுகுமுறை பற்றியும் கூறும் கருத்து சிந்திக்கத்தக்கது. "பிரஞ்சு ஏகாதிபத்தியத்தின் அடிப்படையில் பிரஞ்சிந்தியப் பகுதிகளை ஒருமுகப் படுத்தி, தம் தாய் நாட்டுடன் இணைத்துக் கொள்ள நினைத்தாலும், குடியாட்சி அடிப்படையில் மக்கள் விருப்பத்தை அறிய முன் வந்தமைக்கு நாம் அவர்களைப் பாராட்டலாம். பிரஞ்சியர் முழுமையான அதிகாரப் பிரயோகத்தைத் தம் காலனி நாடுகளில் ஒரு போதும் திணிக்க முயலவில்லை. ஆனால் இத்தேர்தலுக்கு முன்பாக, பதற்றநிலை ஏற்பட்டதற்குக் காரணம் பிரஞ்சியரன்று; பிரஞ்சியராட்சியில் உள்ள சில குறுகிய மனம் படைத்த குள்ள நரிகளே! இப்பதற்றமான சூழ்நிலையில் பிரஞ்சு அரசுடன் ஒத்துப் போகாமல், நான் என்னுடைய நீதிபதி பதவியையும், ராஜினாமா செய்து விட்டு தாய் நாட்டை மீட்க வேண்டி, சுதந்திர இயக்கத்தில் பங்கு கொள்ளலானேன்." என்று கூறுகின்றார்.

ஏனம் பகுதி மக்களும், அதைச் சேர்ந்த பல கிராம மக்களும் 1954, ஜூன் 27ஆந் தேதி ஒன்று கூடி தங்கள் விடுதலை மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, கொண்டாட்டம் நடத்தினர். அன்று காலை ஆறு மணியளவில் இருபத்தொரு பீரங்கி வெடிகள் முழங்க மேயர் சத்யானந்தம் இந்திய தேசிய மூவண்ணக் கொடியை ஏற்றி, காவலர் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். கி.பி. 1954, ஜூலை 1ஆந் தேதி எரா சத்ய நாராயணமூர்த்தி என்பவர் தாதலாவிடமிருந்து ஏனம் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இந்தியப் பகுதியுடன் ஏனம் அதிகார பூர்வமாக 1954, நவம்பர் 1இல் இணைக்கப்பட்ட பின்னர், ஏ. வேதா (A. Veda) என்பவர் ஏனம் நிர்வாகியாகப் பொறுப்பேற்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விடுதலைக்குப் பின்பு ஏனம்

அதிகார பூர்வமாக இந்தியாவுடன் ஏனம் இணைக்கப் பட்ட பின்னர், குறிப்பிடத்தக்க விதத்தில் பல துறை களில் வளர்ச்சி அடைந்துதுள்ளது. சமுதாய மேம்பாட்டில் பின்தங்கியிருந்த ஏனம் விடுதலைக்குப் பின்னர் விரைவான முன்னேற்றம் பெற்றுள்ளது. தேங்காய் ஏற்றுமதியும், பருத்தி உற்பத்தியும், மீன்பிடி தொழிலும் இப்பகுதியின் முக்கியத் தொழிலாக செய்யப்படுகின்றன. தொழில் துறையும், கூட்டுறவுத் துறையும் வளர்ந்து வரும் பகுதி யாக ஏனம் இன்று விளங்கிவருகிறது.

கல்வித்துறையில் குறிப்பிடத் தக்க அளவில் ஏனம் வளர்ச்சி பெற்றுள்ளது. தற்போது மூன்று உயர்நிலைப் பள்ளிகளும், ஒரு நவோதயா பள்ளியும், ஓர் இளநிலைக் கல்லூரியும், ஒரு பட்டவகுப்புக் கல்லூரியும் (S.R.K. college) செயல்பட்டு வருகின்றன. ஏனைய பிரஞ்சிந்தியப் பகுதிகளில் விடுதலைக்குப் பின்னரும் பிரஞ்சுப் பாடம் கற்பிக்கப்பட்டதைப் போன்று, ஏனத்தில் கற்றுத்தர வில்லை. தற்போதுதான் அதற்கு வழிவகுத்துள்ளனர். மத்திய தொலைக்காட்சி ஒளிபரப்பு இணைப்பகம் ஒன்றும் ஏனத்தில் இப்போது நிறுவப்பட்டுள்ளது.

பிரஞ்சுக் காலத்தில் புதுச்சேரி பிரதிநிதி சபைக்காக, ஏனம் பகுதியில் இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந் தெடுத்து அனுப்பும் உரிமை இருந்து வந்தது. ஆனால் தற்காலத்தில் ஏனம் பகுதியின் சட்டசபை உறுப்பினராக ஒரே ஒரு உறுப்பினரே தேர்ந்தெடுத்து அனுப்பப்படுகிறது.

இந்துக்களுள் சைவர்களைக் காட்டிலும் வைணவர் களே ஏனத்தில் மிகுதியாக வசின்றனர், இருப்பினும், பிள்ளையார், சிவன், ஸ்ரீவிஷ்ணு ஆகியோர் உறையும் மூன்று கோவில்களும் சைவ வைணவ வழிபாட்டுக்குரிய தாகவே உள்ளன. கிராமப்புற மக்களின் வழிபாட்டுக்குரிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெய்வமாக மகாலட்சுமியம்மா, பொலேரம்மா, போன்றோர் விளங்குகின்றனர். தமிழகத்தைப் போலவே, பல்வேறுபட்ட சாதிப் பிரிவுகள் (தாழ்த்தப்பட்ட சாதிப் பிரிவு உட்பட) ஏனத்தில் இன்றும் நிலவி வருகின்றன. தற்காலத்தில் இசுலாமியரும், கிறித்தவரும் இப்பகுதியில் மிகக் குறைவாகவே வசித்து வருகின்றனர்.

பாசனவசதியும், குடிநீர் வசதியும் விடுதலைக்குப் பின்னர், மேம்பாடு அடைந்துள்ளது, 'பிரஞ்சுக் கால்வாய்த்திட்டம்' நடைமுறைப் படுத்தப் பட்ட பின்னர் இருநூற்று இருபத்தாறு ஹெக்டேர் நிலம் சாகுபடி செய்த நிலைமாறி ஐநூற்று அறுபது ஹெக்டேருக்கும் மேற்பட்ட நிலம் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. இராஜமுந்திரியிலுள்ள தெள்லேஸ்சுவரர் அணைக்கட்டிலிருந்து, கோதிபல்லி கால்வாய் மூலம் வரும் பாசன நீரும், இப்பகுதி வயலுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

பிரஞ்சுப் பண்பாட்டின் தாக்கமும், பிரஞ்சுப் புரட்சியின் தாரக மந்திரமான, 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' மூன்றும் ஏனம் மக்களின் மனத்தில் நீங்காத இடம் பெற்று விட்டன. பிரஞ்சு-தெலுங்குப் பண்பாட்டின் நினைவுச் சின்னமாக இந்தியாவில் ஏனம் திகழ்ந்து வருகின்றது.

பார்வை நூல்கள்

1. Bolloju Basavalingam, "A Historical Perspective-YANAM," S.R.K. College Magazine of Yanam,
2. Revue Historique De Pondicherry, Vol: III.
3. Sen. S.P., 'The French in India.'
4. 'Gazetteer,' Pondicherry, Vol: I
5. Ramasamy. A., 'History of Pondicherrry.'
6. Melleson, G B., "French struggles in India"
7. மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு, லேனா தமிழ்வாணன் (ப.ஆ), 'பாண்டிச்சேரி மாநிலம்'
8. Union Territory of Pondicherry. 'A Compendium of Pondicherry,' 1954-1987.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

9. பின்னிணைப்பு—I

பிரஞ்சிந்தியாவின் ஆளுநர்கள்

தேதி	ஆண்டு	ஆட்சித் தலைவர்கள்
பிப். 4,	1673	பெல்லான் ழே தெ லெஸ்பினே (Bellanger de Lespinay)
செப். 29,	1674	பரோன் (Baron)
மே 5,	1675	பிரான்சுவா மர்த்தேன் (Francois Martine)
மே 26,	1681	டெல்தோர் (Deltor)
மே 20,	1686 முதல்	பிரான்சுவா மர்த்தேன் (Francois Martine)
செப் 8,	1693 முடிய	
		ஆளுநர்கள்
செப். 13,	1699	பிரான்சுவா மர்த்தேன் (Francois Martine)
டிச. 30,	1706	துய்லிவியே (Dulivier)
ஜூலை 13,	1708	ஹெபர் (Hebert)
அக் 7,	1713	துய்லிவியே (Dulivier)
ஜூலை 22,	1715	ஜெனரால் ஹெபர் (General Hebert)
ஆக 20,	1718	தெ லா பெர்வஸ்தியேர் (De la Pervastiere)
அக் 11,	1721	லெனுவார் (Le Noir)
அக் 6,	1723	பொவலியே தெ குர்ஷான் (Bauvalier de Courchant)
செப் 12,	1726	லெனுவார் (Le Noir)
செப் 19,	1735	துய்மா (Dumas)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஜன 15,	1742	துய்ப்ளேக்சு Dupleix)
ஆக 13,	1754	கொதேயே (Godeheu)
பிப் 16,	1755	பர்தலெமி (Barthelemy)
ஏப் 8,	1756	துய்வால் தெ லெய்ரீத் (Duval de Leyrit)
ஏப் 28, முதல் ஜன 15, முடிய	1758 1761	தெ லல்லி தொலாந்தல் (De Lally Tollendal)
ஏப் 11,	1765	லா தெ லோரிஸ்தொன் (Law de Lauriston)
மே	1765	நிக்கோலா (Nicolas)
ஏப் 1,	1766	பொயாலான் (Boyellean)
பிப் 10,	1767	லா தெ லோரிஸ்தொன் (Law de Lauriston)
ஜன 15, முதல் அக் 18, முடிய	1777 1778	தெ பெல்லா கொம்ப் (De Bella Combe)
மார்ச் 10,	1783	தெ புஸ்ஸி (De Bussy)
பிப் 1,	1785	கோந்தேன்சா (Contenceau)
மே	1785	தெ சுய்யாக் (De Souillac)
செப்	1785	தெ கோசிஞி (De Cossigny)
செப் 11,	1787	தெ கோன்வே (De Conway)
அக் 5,	1789	தெ ஃபிரெஸ்னே (De Fresne)
பிப் 5,	1793	தெ தூஃப்ருவீல் (De Touffreville)
பிப் முதல் ஆக 23, முடிய	1793 1793	தெ ஷெர்மோன் (De Chermont)
செப் 26,	1816	லெ கோம்தே துய்ப்புய் (Le Comte Dupuoy)
அக் 13,	1825	கொர்தியே (Cordier)
ஜூன் 19,	1826	ரிஷ்மோன் (Richemont)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆக 27,	1827	லெ மேம் (Le Meme)
ஆக 2,	1828	சிபியோன் (Scipion)
ஆக 14,	1828	கொர்தியே (Cordier)
ஏப் 10,	1829	தெ மெலே (De Malay)
மே 3,	1835	லெ மெர்கிய் தெ சேன் சிமோன் (Le Marguis de Saint Simon)
ஏப் 27,	1840	தெநுர்கே தெகோம்ப் (De Nourguer de Camps)
நவ 16,	1844	புழோல் (Pujol)
ஜன 5,	1849	தெலலாந்ததெ கலான் (DeLalande de Calan)
ஜூன் 14,	1850	மலாசி (Malassis)
ஜன 6,	1851	பெஃதியே (Bedier)
டிச 1,	1851	மலாசி (Malassis)
ஏப் 1,	1857	துய்ரான் தெ உப்ராய் (Durand d' Ubraye)
ஜன 18,	1863	போன்தாம் (Bontemps)
மார்ச் 27,	1867	திரிலார் (Trillard)
ஜூன் 2,	1871	மிஷோ (Michaux)
நவ 13,	1871	ஃபரோன் (Faron)
மே 14,	1875	தெல்ரியோ (Delrieu)
ஜூலை 1,	1775	தெ பர்மார்தி தெ சிகோயே (De Barmardy de Sigoyer)
ஆக 23,	1875	நெஸ்தி (Nesty)
நவ 7,	1875	துரோலார் (Trollard)
அக் 26,	1878	நெஸ்தி (Nesty)
பிப் 23,	1879	லோகியே (Laugier)
ஏப் 6,	1881	ஹாஸ் (Heas)
ஏப் 12,	1881	துருஹே (Drouhet)
ஏப் 3,	1882	போர்தியே (Porties)
ஜன 11,	1883	செலெரோன் தெ பிளேன் வீல் (Celeron de Blain Ville)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அக் 21,	1884	ரிஷோ (Richaud)
ஏப் 29,	1886	செலெரோன் தெ பிளேன் வீல் (Celeron de Blain Ville)
நவ 17,	1887	மனேஸ் (Manes)
ஏப் 25,	1888	ஃபோதியே (Fawtier)
ஆக 11,	1888	வசால் (Vassal)
ஆக 21,	1888	மத்திவே (Mathivet)
நவ 14,	1888	பிக்கெ (Piquet)
மே 18,	1888	மத்திவே (Mathivet)
ஜுலை 25,	1889	நுவே (Nouet)
டிச 27,	1890	மத்திவே (Mathivet)
பிப் 1,	1891	கிளேமான் தோமா (Cle'ment Thomas)
நவ 2,	1893	தெ லோன்கிளு (De Loncle)
ஜுன் 16,	1894	கிளேமான் தோமா (Cle'ment Thomas)
ஏப் 24,	1896	தல்சேன் சிபூர் (Dalcin Sibour)
மே 22,	1896	ருசேன் (Roussin)
மே 31,	1896	ழிரோ (Girod)
ஜன 27,	1898	போர்னே (Borne)
பிப் 5,	1898	ரொதியே (Rodier)
ஏப் 17,	1900	தெ லா லொகேர் (De La Logere)
மார்ச் 2,	1901	ரொதியே (Rodier)
பிப் 18,	1902	லூயி பல்லேதான் (Louis Palletan)
அக் 24,	1902	லோரேசாக் (Laurezac)
ஆக 13,	1904	லெ மேர் (Le Maire)
ஏப் 22,	1905	ழோசப் பிரான்சுவா (Joseph Francois)
அக் 6,	1906	அங்கோன்வான் (Angonlvant)
டிச 3,	1907	சார்ல் ருங்னோன் (Charles Rougnon)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஜூன் 13,	1908	அத்ரியே போன்பியூர் (Adrieu Bonbure)
பிப் 10,	1909	∴பெர்னான் லெவேக் (Fernand Leveque)
ஜூலை 1,	1910	ரெய்னா தெ லீக் (Raynaud de Lyques)
ஜூலை 9,	1910	மர்த்தினோ (Martineau)
ஜூன் 27,	1911	லெழேன்னு (Lejeune)
ஜூலை 8,	1911	தெப்ரா (Deprat)
மார்ச் 4,	1913	லெழேன்னு (Lejeune)
ஜூன் 29,	1918	எத். கிளேசான் (Et. Clayssen)
பிப் 21,	1919	எல். ழெர்பினி (L. Gerbinis)
செப் 15,	1922	எம். லபாலு (M. Lapalud)
ஜூலை 1,	1923	எல். ழெர்பினி (L. Gerbinis)
பிப் 10,	1926	ஆஷ். லக்ருயா (H. Lagroua)
ஆக 5,	1926	திதெலொ (Didelot)
ஜன 14,	1928	ஈ. லனேஸ் (E. Lanes)
பிப் 29,	1928	ஆர். தெகீஸ் (R. DeGuise)
பிப் 16,	1930	மக்னியே (Magnieu)
மே 24,	1930	அத்ரியேன் ழுவானோ (Adrien Juvanou)
நவ 1,	1933	ழோர்ழ் புரே (Georges Bourret)
ஆக 15,	1934	லியோன் சொலோமியாக் (Leon Solomiac)
அக் 9,	1936	ஆஷ். வீ. குரோக்சீஷியா (H. V. Crocicchaia)
டிச 12,	1937	ஆஷ். வீ. குரோக்சீஷியா (H. V. Crocicchaia)
ஆக 11,	1938	பிளிபோன் (Philipon)
செப் 26,	1938	லூயி போன்வேன் (Louis Bonvin)
	1938 — 1945	போன்வேன் (Bonvin)
	1945 — 1946	ழான்தேன் (Jeandin)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மார்ச் 20,	1946	பரோன் (Baron)
அக்டோபர்,	1946	பரோன் (Baron)
அக் 1946 –	1948	பாஷா (Pacha)
நவம்பர்,	1948	ஷாம்போன் (Champon)
ஏப்பிரல்,	1950	ஷாம்போன் (Champon)
ஏப்பிரல்,	1950	மெனார் (M'enard)
ஆகஸ்டு,	1954	மெனார் (M'enard)

பின்னிணைப்பு—II

புதுச்சேரி துணைநிலை ஆளுநர்கள்

பெயர்	காலம்
1. கே. ஜே. சோமசுந்தரம் (நிர்வாகி) (K. J. Somasundaram)	1-7-1963— 13-10-1963
2. சையாஜி லக்ஷ்மன் சைலம் (Sayaji Laxman Sailam)	14-10-1963— 31-10-1966
3. தும்கூர் சிவசங்கர் (Tumkur Shivasankar)	1-11-1966— 30-11-1966
4. சையாஜி லக்ஷ்மன் சைலம் (Sayaji Laxman Sailam)	1-12-1966— 14-10-1968
5. பி. டி. ஜாட்டி (Basappa Danappa Jatti)	14-10-1968— 7-11-1972
6. சேதிலால் (Cheddilal)	8-11-1972— 30-8-1976
7. பிதேஷ் துக்காராம் குல்கர்னி (Pidesh Dukaram Kulkarni)	30-8-1976— 7-7-1978

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8.	பிரபுதாஸ் பட்வாரி (Prabhudas Patwari)	8-7-1978— 22-7-1978
9.	பிதேஷ் துக்காராம் குல்கர்னி (Bidesh Tukaram Kulkarni)	22-7-1978— 4-4-1979
10.	எல். எஸ். லுல்லா (L. S. Lulla)	20-4-1979— 10-6-1979
11.	பிதேஷ் துக்காராம் குல்கர்னி (Bidesh Tukaram Kulkarni)	11-6-1979— 31-10-1980
12.	ராம் கிஷோர் வியாஸ் (Ram Kishore Vyas)	11-1-1980— 16-4-1981
13.	சாதிக் அலி (Sadiq Ali)	17-4-1981— 26-7-1981
14.	ராமதாஸ் நாராயண் ஹல்திபூர் (Ramadas Narayan Haldipur)	27-6-1981— 14-5-1982
15.	கே. எம். சாண்டி K.M. Chandi)	15-5-1982— 1-9-1983
16.	கோனா பிரபாகர ராவ் (Kona Prabhahara Rao)	2-9-1983— 8-6-1984
17.	எஸ். எல். குரானா (S.L. Kurana)	3-6-1984— 30-9-1984
18.	திரிபுவன் பிரசாத் திவாரி (Thiribhuvan Prasad Tiwary)	1-10-1984— 21-7-1988
19.	ரஞ்சித் சிங் தயாள் (Ranjit Singh Dhayal)	22-7-1988— 18-2-1990
20.	சந்திராவதி (Chandrawathy)	19-2-1990— முதல் தற்காலம் வரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு—III

புதுச்சேரி அமைச்சரவை

1. முதல் சட்டப் பேரவை (ஜூலை 1963 முதல் ஆகஸ்டு 1964 வரை)

    E. குபேர் (முதலமைச்சர்)
    V. வெங்கட சுப்பா ரெட்டியார்.
    K.M. குருசாமிப் பிள்ளை,
    முகமது இசுமாயில் மரைக்காயர்.
    M.K. ஜீவரத்தின உடையார்.
    V.M.C. வரதப் பிள்ளை.

2. இரண்டாவது சட்டப் பேரவை (ஆகஸ்டு 1964 முதல் செப்டம்பர் 1968 வரை)

    (i) செப்டம்பர் 1964 முதல் ஏப்பிரல் 1967 வரை
    V. வெங்கடசுப்பா ரெட்டியார் (முதலமைச்சர்)
    A.S. காங்கேயன்.
    P. சண்முகம்.
    V.M.C. வரதப்பிள்ளை.

    (ii) ஏப்பிரல் 1967 முதல் மார்ச் 1968 வரை
    M.O.H. பாரூக் மரைக்காயர் (முதலமைச்சர்)
    M.K. ஜீவரத்தின உடையார்.
    மாணிக்கவாசக ரெட்டியார்.
    சுப்பிரமணிய படையாச்சி.
    G. நாகராஜன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(iii) **மார்ச் 1968 முதல் செப்டம்பர் 1968 வரை**

V. வெங்கட சுப்பா ரெட்டியார் (முதலமைச்சர்)
A.S. காங்கேயன்.
P. சண்முகம்.
V.M.C. வரதப்பிள்ளை.
P. இரத்தினவேலு.

3. மூன்றாவது சட்டப் பேரவை (மார்ச் 1969 முதல் ஜனவரி 1974 வரை)

M.O.H. பாரூக் மரைக்காயர் (முதலமைச்சர்)
S. இராமசாமி.
V. கைலாச சுப்பையா (மார்ச் 1973 வரை)
S. ஆறுமுகம்.
D. இராமச்சந்திரன்.

4. நான்காவது சட்டப் பேரவை (மார்ச், 1974)

S. இராமசாமி (முதலமைச்சர்)
D. இராமச்சந்திரன்.
V. சுப்பையா.
V.M.C. வரதப்பிள்ளை.
N. வேங்கடசாமி.

5. ஐந்தாவது சட்டப்பேரவை (ஜூலை 1977 முதல் நவம்பர் 1978) வரை)

S. இராமசாமி (முதலமைச்சர்)
D. இராமச்சந்திரன் (9-10-1978 வரை)
S. சிவப்பிரகாசம். (9-10-1978 முதல்)
V.M.C. வரதப்பிள்ளை. ,,
N. வேங்கடசாமி, ,,
S. சூசை ராஜ். ,,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6. ஆறாவது சட்டப்பேரவை (ஜனவரி 1980 முதல் ஜுன் 1983 வரை)

D. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)
S. சவரி ராஜன்.
G. பெருமாள் ராஜா.
ரேணுகா அப்பாதுரை
V.M.C. சிவக்குமார்.
V. கதிர்வேல்.

7. ஏழாவது சட்டப் பேரவை (மார்ச் 1985 முதல் 1990 பிப்ரவரி வரை)

M.O.H. பாரூக் மரைக்காயர் (முதலமைச்சர்)
P. கண்ணன்
V. வைத்தியலிங்கம்.
V. கோவிந்தராஜன்
L. ஜோசப் மரியதாசு

8. எட்டாவது சட்டப் பேரவை (மார்ச் – 1990 முதல்)

D. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)
R.V. ஜானகிராமன்.
V. பெத்தபெருமாள்.
N. மணிமாறன்,
P. இராஜவேலு,
R. கமலக்கண்ணன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு—VI

புதுவை - சட்டசபைத் தொகுதிகள்

1.	முத்தியால் பேட்டை	புதுச்சேரி
2.	காசுக்கடை	
3.	ராஜ்பவன்	
4.	புஸ்ஸி	
5.	உப்பளம்	
6.	உருளையன்பேட்டை	
7.	நெல்லித் தோப்பு	
8.	தட்டாஞ்சாவடி	
9.	இலாசுப் பேட்டை	
10.	ரெட்டியார் பாளையம்	
11.	முதலியார் பேட்டை	
12.	அரியாங்குப்பம்	
13.	பாகூர்	
14.	குருவி நத்தம்	
15.	திருபுவனை	
16.	மண்ணாடிப்பட்டு	
17.	ஊசுடு	
18.	நெட்டப்பாக்கம்	
19.	வில்லியனூர்	
20.	ஒழுகரை	
21.	ஏம்பலம்	காரைக்கால்
22.	காரைக்கால் - தெற்கு	
23.	காரைக்கால் - வடக்கு	
24.	நெடுங்காடு	
25.	நிரவி	
26.	திருமலைராஜன் பட்டினம்	
27.	திருநள்ளாறு	
28.	மாகி	மாகி
29.	பள்ளூர்	
30.	ஏனம்	ஏனம்

067478
पुस्तकालय
पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

—x—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

UNION TERRITORY OF PONDICHERRY



GURUKUL KANGRI LIBRARY
Accession
Class on
Cat on
Tag etc.
Checked
Any Other

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri
CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



	AREA IN SQ.KM.	POPULATION 1981 CS
PONDICHERRY	..293	4,44,417
KARAIKAL	...160	1,20,080
MAHE	... 9	28,413
YANAM	... 30	11,631
TOTAL	492	6,04,471

Forwarded free of cost and with the compliments of the Dept. of Education Govt. of India New Delhi

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சு. தில்லைவனம்

புதுச்சேரி மாநில வரலாறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar